மகாகவி

இக்பால்

FEB 1958

எச். பி. எம். கனி பி. எ., பி. எல்., எழுதியது

உலக மகாகவிகளில் இக்பால் ஒருவர். உலகத் தத்துவ ஞானியர், சிந்தனையாளர் வரிசையில் அவர் முன்னணியில் நிற்பவர்.

"மகாகவி இக்பால்" கவிஞரின் ரஸமான வாழ்க்கைச் சம்பவங்களையும் கவிதைகளில் சிறந்தவற்றையும் அவற்றின் நயத்தையும் இனிமை தவழ எடுத்துக் காட்டுகிறது.

உலகம் உன்னதமுற செயல் முறைக்கு உரிய ஒரு மார்க்கத்தைச் சுட்டிக் காட்டி விளக்கிய இப் பெருங் கவிஞரைப் பற்றிய இந்நூல் தமிழில் புதியதோர் இலக்கியத்தை அறிமுகப் படுத்துவதாகும்.

ரூ. 3/-

மகாகவி

இக்பால்

CONNEMARA PUBLIC LI...

ஆர். பி. எம். கனி, பி.ஏ.,பி.எல்.,
எழுதியது.

முதல் பதிப்பு: டிஸ். 1953.
உரிமை பதிவு செய்யப்பட்டது.

விலை மூன்று ரூபாய்.

கிடைக்குமிடம்:

ஆர். பி. எம். கனி, பி. ஏ., பி. எல்.,

128, மூர் தெரு, சென்னை-1.

முன்னுரை

சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன் இக்பாலைப் பற்றி நான் எழுதி வெளியிட்ட "அல்லாமா இக்பால்", "இக்பால் கவி அமுதம்" ஆகிய இரு நூற்களும் அறிஞர்களின் பாராட்டுதலையும், இலக்கிய ரஸிகர்களின் நல்லாதரவையும் ஒருங்கே பெற்றன. இப்போது சில வருஷங்களாகவே அவ்விரு நூற்களையும் மறு பதிப்புச் செய்யுமாறு அன்பர்கள் பலர் கேட்டு வந்தனர். அதற்காக அவ்விரு நூற்களையும் பரிசீலனை செய்தபோது, அவற்றைவிடப் பன்மடங்கு சிறந்த, விரிவான ஒரு புதிய நூலையே எழுதிவிடலாம் என்ற துணிவு பிறந்தது; "மகாகவி இக்பால்" தயாராயிற்று. முந்திய எனது இரு நூற்களிலும் இல்லாத மிகப் பல விஷயங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இக்பாலின் கவிதைகளையும், தத்துவத்தையும் என் சக்திக்கும் வசதிக்கும் இயன்ற அளவு அறிமுகப்படுத்தியுள்ளேன்.

இதிலுள்ள கவிதை மொழிபெயர்ப்புகள் சிறிய எழுத்துக்களில் வரிசையாக அடுக்கப்பட்டுத் தரப்பட்டிருப்பினும், அவை எவ்விதச் செய்யுள் ரூபத்திலோ, வசனகவிதையாகவோ தரப்பட்டில்லை. அவை கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் என்று காட்டவே இவ்விதம் தரப்பட்டுள்ளன.

"மகாகவி இக்பால்" இன்னுங்கூடச் சிறப்பாக எழுதப்பட்டிருக்கலாம்; இதிலேயே குறைகளும் இருக்கலாம். ஆனால், தமிழில் நல்ல ஒரு புதிய இலக்கியத்தை அறிமுகப்படுத்த வேண்டும், நமது யுகத்தில், நமது நாட்டில் வாழ்ந்த ஒரு மகாகவியின் செய்தியைத் தமிழில் வெளியிட்டுத் தரவேண்டும் என்ற உளப்பூர்வமான ஆர்வத்தால் இதை வெளியிடுகிறேன். அவ்விதமே இதை ஏற்றுக்கொள்ளும்படி அன்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ர. பா. மு. கனி.

சமர்ப்பணம்

தென் கிழக்கு ஆசியாவின் மிகப் பெரும் தத்துவ ஞானியும், மக்கள் சேவைக்காகவே தன்னை அர்ப்பணித்தவரும், அதனால் பல சோதனைகளுக்கு ஆளாகி இன்னல்களை அனுபவித்தவரும், பல நூற்களின் ஆசிரியரும், தமிழ், ஆங்கிலம், உர்தூ, மலாய் முதலிய மொழிகளில் பத்திரிகைகள் வெளியிட்டு மக்களைத் தட்டி எழுப்பியவருமான

அறிஞர். மு. கரீம் கனி

அவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

— ஈ. பா. மு. கனி.

மகாகவி இக்பால்

வாழ்க்கை

மகாகவி இக்பால்

வளரும் கவிஞர்

தன்னை ஒரு கவிஞர் என்றே அழைக்க விரும்பாதவர் இக்பால். ஆனால் உலகப் பற்றில் கால் ஊன்றாத 'பக்கீர்' ஆக வாழ்ந்து, உலகின் உன்னதமான ஒரு தத்துவ ஞானத்தை விளக்கி வைத்து, இறவாத புகழுடைய கவிதைகளை ஆக்கித் தந்து, மறைந்த மகாகவி அவர். அவருடைய கவிதைகள் மத்திய கிழக்கிலும், ஐரோப்பாவிலும் அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்று, ஆங்காங்குள்ள நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் போற்றப்படுகின்றன. அவருடைய கவிதைகளும் அவை வெளியிடும் தத்துவமும் உலகம் உய்ய, மக்கள் குலம் உன்னதம் பெற, மானிடன் சம்பூர்ணத்துவ மடைய மார்க்கங் கூறுபவை. எனவே, அவரை உலக மகா கவிகளின் வரிசையில் நிறுத்திச் சிந்தனையாளர்கள் போற்றுகின்றனர்.

பள்ளிப் படிப்பின்போதே பாட்டெழுதத் தொடங்கிய இக்பாலுக்கு மக்களிடையே மதிப்பு வளரலாயிற்று. ஆனால், மயக்கம் தரும் பாடல்களைத் தந்து மாந்தர்களின் மதியை மயக்க அவர் விரும்பினாரில்லை. எனவே தமது வாழ்க்கையின் முக்கியமான ஒரு கட்டத்தில் தான் இனிப் பாட்டெழுதப் போவதில்லை, என்றும் முடிவு கட்டிவிட்டார்.

ஓர் இனத்தின் செயலாற்றும் திறமை வளரக் கவிதை துணை செய்யாது என்று அவர் கருதினார். "செயலாற்றும் திறமை எந்த இனத்திடம் இருக்கிறதோ, அது வெறும் கவிதைக்கு மதிப்புத் தராது" என்று அவர் கூறி

ஞர். ஆனால் அவருடைய இம்முடிவை அவர் நண்பர்கள் மாற்றிவிட்டனர். மீண்டும் அவரைக் கவிதை எழுதத் தூண்டிவிட்டனர். "கவிஞன் பிறக்கிறான், உண்டாக்கப் படுவதில்லை" என்ற உண்மையை அவரும் நிரூபித்தார். கவிதையை உன்னத லக்ஷியங்களை வெளியிடும் ஓர் உபகரணமாக ஆக்கி அதன் மூலம் அவர் இலக்கிய உலகில் தனக்கு நிலையான புகழைத் தேடிக்கொண்டார்.

கவிதை எழுதும் ஆற்றல் யாப்பையும், செய்யுள் இலக்கணங்களையும் கற்றுத் தேர்ந்துவிடுபவர்களுக்கெல்லாம் வந்துவிடுவதில்லை. அது கருவிலேயே அமைந்த திரு. எனவேதான் இக்பாலின் தந்தை ஷேக் நூர் முஹம்மது, தன் இளைய தனையன் இக்பால் பிறப்பதற்குச் சற்றே முன்பு இக்கனவைக் கண்டார் போலும்: ஓர் அழகிய வெண் புறா வானத்தில் வட்டமிடுவதையே அவர் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார். அது மெதுவாகக் கீழே பறந்து வந்து தன்னுடைய மடியில் அமர்கிறது. இக்கனவைக் கண்டு விழித்த ஷேக் நூர் முஹம்மதின் மடியிலே 'குவா, குவா' என்று கத்திய அவரது ஆண் மகவைக் கொண்டுவந்து வைத்தாள் மருத்துவமாது. உடனே தன் புதல்வன் சாந்தியைப் பாடிப் பெரும் புகழ் பெறுவான் என்று நம்பினார் பக்திமானான அப்பெரியார். அப்புதல்வனுக்கு ஷேக் முஹம்மது இக்பால் எனும் நாமத்தை அவர் சூட்டினார். பாலன் இக்பால், இந்நம்பிக்கையைப் பூர்த்தி செய்வது போல இளமையிலேயே தன் மார்க்க ஞானப் பாடங்களில் தேர்ச்சி பெற்றுவிட்டார். பன்னிரண்டாம் வயதில் உபகாரச் சம்பளத்தோடு உயர்தரப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு நாள் அவர் காலதாமதமாக வகுப்புக்கு வந்தார். "ஏன், இக்பால் இத்தனை காலதாமதம்?" என்று அவரது ஆசிரியர் வினவினார். "இக்பால் காலதாமதமாகத்தானே வரும்" என்றார் இக்பால். இக்

யால் என்ற வார்த்தைக்குப் புகழ் என்று பொருள். புகழ் காலதாமதமாகவே வரும் என்று சந்தர்ப்பத்துக்கு ஏற்ற படி அவரைப் பேசச் செய்த சக்தி அவரிடை வளர்ந்து, அவருடைய பதினேழாவது வயதில் கவி மழை பொழிய வைத்தது. 'முஷாயிராக்கள்' என்ற கவி அரங்கங்களில் அந்த இளங் கவிஞனுடைய கவிதைகள் அவையினரிடை உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கின. பல கவியரங்கு களைத் தாண்டி அக்காலையில் மிகவும் பிரபலமாக விளங் கிய அஞ்சுமனே ஹிமாயத்துல் இஸ்லாம் என்ற சங்கத் தின் மேடையிலும் இக்பால் கால் வைக்க முடிந்தது. வேதனையை ஜீவத் துடிப்புடன் வெளியிடும் அவருடைய ஆரம்பகாலப் பாடல்கள் அறிஞர்களின் நல்லாதரவைப் பெற்றன.

ஏனைய பஞ்சாபியச் சிறுவர்களைப் போல் நல்ல தேகதிடன் படைத்திருந்த இக்பால், அறிவுத்திறனி லும் முன்னேறி வந்தார். வகுப்பில் பாடத்தில் கவனஞ் செலுத்தாவிடினும், பரீக்ஷையில் முதன்மை யாக நின்று யாவரையும் திகைக்க வைத்தார். அரசாங்க உபகாரச் சம்பளத்தையும் தொடர்ந்து பெற்றார். அவரது மார்க்கப் பற்றுதலோ மிகவும் குறிப்பிடத் தக்க தாக இருந்தது. நூற்றைம்பது வருடத்துக்கு முந்திய இக்பாலின் மூதாதை ஒரு காஷ்மீரப் பிராமண பண்டிதர். அவர் ஒரு முஸ்லிம் ஞானியிடம் பற்றுதல் கொண்டி ருந்து, அவர் உபதேசப்படி இஸ்லாத்தைத் தழுவினார். இன்றும் அப்பெரியாரைச் சேர்ந்தவர்களின் சந்ததியின ரான பிராமணப் பண்டிதர்கள் காஷ்மீரில் இருந்தே வரு கின்றனர். இக்பால் விசேஷமான அறிவுத் திறன் மிக்கவ ராக இருந்ததற்கு அவருடைய பிராமண மரபும் ஒரு காரணம்தான். தலைமுறை தலைமுறையாக முஸ்லிம் களாக இருந்து வருபவர்களும், நபி பெருமான் (ஸல்) அவர்களின் பரம்பரையினர் என்று பாத்தியம் பாராட்டு

பவர்களும்கூட இஸ்லாத்தின் உண்மைத் தத்துவங்களை உணராதும், உணர முயலாதும் இருந்த காலையில், நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாத்தைத் தழுவிய ஒரு குடும்பத்தில் உதித்த இக்பால், இஸ்லாமியத் தத்துவார்த்தங்களை ஆராயலானார்; அதன் அந்தரங்கங்களை அறியலானார்.

மீரும் மீர்ஸாவும்
தம் உள்ளத்தையும் சமயத்தையும்
அரசியலில் மூழ்கடித்து விட்டனர்.
இந்தப் பிராமணச் சிறுவன் மட்டுமே
அந்தரங்கங்களை அறிந்தவனாக இருக்கிறான்.

என்று அவர் பாடினார். இஸ்லாத்தின் அசல் தத்துவங்களோடு மௌலானா ரூமி, ஷம்ஸே தப்ரீஸ் போன்ற பாரஸீக மகா ஞானியரின் தத்துவங்களையும் தான் அறிந்திருப்பதைப் பெருமையாக அவர் குறிப்பிட்டார்.

ஸியால்கோட் ஸ்காட்டிஷ் மிஷன் கல்லூரியில் படித்த இக்பால், அரபி பாஷையில் மிகுந்த தேர்ச்சியும், அரபி ஞானத்தில் குறிப்பிடத்தக்க அனுபவமும் உடைய அறிஞர் மீர் ஹஸனின் பாதத்தடியில் பாடங்கேட்டதும், அவர் உள்ளத்தில் இஸ்லாத்தின் தத்துவங்கள் வேரூன்ற உதவின. "அவருடைய சுவாசமே என் ஆசை மொக்கை மலரச் செய்தது" என்று இக்பால் பின்னர் குறிப்பிட்டுள்ளார். இந்த அடிப்படையை, இக்பால் பி.ஏ. படிப்புக்காகத் தமது பிறப்பிடமான ஸியால்கோட்டிலிருந்து லாகூர் சென்ற சமயம், ஆங்கிலேய அறிஞரும், இஸ்லாத்தைப்பற்றி வாழ் நாள் முழுவதும் ஆராய்ச்சி செய்து, இஸ்லாம் உலகத்தில் பரவிய விதத்தை உன்னதமாக எடுத்துக் காட்டிப் பெரிய நூல் எழுதியவருமான பேராசிரியர் டி. டபிள்யூ. ஆர்னால்டின் சகவாசம் வளர்த்தது. இந்த அறிஞரின் நேரடியான தொடர்புடன் தத்துவ சாஸ்திரப் பாடத்தை விசேஷமாகப் பயின்று

1899-ல் எம். ஏ. பட்டம் பெற்றார் இக்பால்; தன் திற மைக்காக ஒரு தங்க மெடலையும் பரிசு பெற்றார்.

திரு. ஆர்னல்ட் இக்பாலிடம் அதிகமான பரிவு காட்டி வந்தார். ஒரு நாள் நல்ல கல்வி வன்மை படைத்த ஒரு மௌலவி சாஹிப், இக்பாலின் நன்மதிப்பைப் பெற்ற வர், ஒரு பொய்யான கூற்றை வெளியிட்டார். இது இக்பாலுக்கு வெறுப்பையும் ஏமாற்றத்தையும் உண் டாக்கிற்று. சில நாட்கள் அவர் இதே கவலையாக இருந்தார். இத்தனை பெரிய மௌலவி சாஹிப் எப்படி இத்தகைய அபத்தமான தவற்றைச் செய்யலாம் என்று இக்பால் மனம் வருந்தினார். திரு. ஆர்னல்ட், அவ ருடைய கவலை தோய்ந்த வதனத்துக்குக் காரணம் என்ன என்று கேட்டார். இக்பால் விஷயத்தைக் கூறி னார். "இதற்காகவா கவலைப்படுவது! உன் வாழ்க்கையில் இது போல் பல ஏமாற்றங்களை நீ அடைய நேரிடும்" என்று கூறி இக்பாலை அவர் தேற்றினார்.

இத்தகைய பரிவு மிக்க ஆசிரியர் இந்தியாவை விட்டுத் தம் தாயகம் சென்றபோது, இக்பாலினால் அவர் பிரிவைச் சகிக்க இயலவில்லை. இக்பால் அப்போது இது குறித் துத் துயரத்தோடு எழுதிய ஒரு பாட்டில் சொல்கிறார்.

என் இதயக் கிரணங்கள்
சூரியனுடன் தொடர்பு கொள்ள இருந்தன.
உடைந்த கண்ணாடி
உலகைப் பிரதிபிம்பிப்பதாக ஆக இருந்தது.
என் ஆசைச் செடி
உயிர் பெற்றெழ இருந்தது.
அந்தோ, நான் எத்தனை பெரியவனாக ஆவதற்கிருந்தேன்
(என்பதை) யாரும் அறியார்!
கருணை மேகம், தோட்டத்திலிருந்து
தன் மேலாக்கை இழுத்துக் கொண்டு மறைந்தது.
அது என் ஆசை அரும்பில்
சிறிதே தூற்றிவிட்டுச் சென்றது.

மேல் நாட்டில்

ஆனால் விரைவிலேயே இந்த ஆசிரியரை மீண்டும் காணும் சந்தர்ப்பம் இக்பாலுக்குக் கிட்டிற்று. 1905-ல் இக்பால் தம் மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்றார்.

இதற்கு முன்பே இக்பால் ஒரு கவிஞர் எனத் தன் சொந்த மாகாணமான பஞ்சாப் முழுவதும் பெயர் பெற்றுவிட்டார். முஷாயிராக்களில் இவரை வற்புறுத்தி இழுத்து நிறுத்திக் கவிதை பாட வைத்ததும் உண்டு. தான் கண்ட முஷாயிராக்கள் பற்றி ஸர் ஸெல்பிகர் அலி கான் என்ற நவாப் சாஹிப் எழுதியுள்ளதாவது: "பிரமாதமாகப் பாராட்டும் பெரிய ரசிகர் கூட்டத்தினிடையே ஒரு மேடைமீது இக்பால் நிற்பார். இனிமையான குரலில் அவர் இசைக்கும் கவிதைகள் அடிக்கடி கரகோஷத்தை எழுப்பும். சில சமயங்களில் பாராட்டுப் புயலிடையில், நல்ல பண்பாடு வாய்ந்த ரஸிகர்களின் கூட்டத்தைத் திருப்தி செய்யும் முயற்சியில் இக்பால் மயங்கி விடுவதுகூட உண்டு." இக்பாலின் குரல் இனிமை காரணமாக, ரஸிகர்கள் அவர் தம் கவிதைகளைப் பண்ணோடு பாட வேண்டும் என்று வற்புறுத்துவார்கள்.

இக்பால் எம். ஏ. பாஸ் பண்ணியதுமே ஒரு பேராசிரியராகப் பதவி ஏற்றிருந்தார். லாகூரில் ஒன்றன் பின் ஒன்றாய் அரசாங்கக் கல்லூரிகள் இரண்டில் அவர் பேராசிரியராக விளங்கினார். அச்சமயம் அரசியல் பொருளாதாரம் பற்றி 'இல்முல் இக்திஸாத்' என்றோர் உர்து நூலும் எழுதினார்.

இங்கிலாந்து சென்ற கவிஞர் பாரிஸ்டர் படிப்பிலும் தத்துவ ஞான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். அப்போது இங்கிலாந்தில் இஸ்லாத்தைப் பற்றிப் பெரிய தப்பபிப்பிராயம் நிலவி வந்தது. 'பான்-இஸ்லாம்'(அகில இஸ்லாம்) இயக்கம் என்று அக்காலையில் நெடுகிலும் பேசப்பட்டுவந்தது. பல்வேறு முஸ்லிம் நாடுகளைத்

தன் காலின் கீழ் வைத்திருந்த பிரிட்டன், இஸ்லாத்தின் பெயரால் தோன்றும் எந்த இயக்கத்தையுமே கண்டு மிரண்டு கொண்டிருந்தது. எனவே லண்டனிலேயே 'பான் இஸ்லாமியச்' சங்கம் ஒன்றை உண்டாக்கப் பல இளைஞர்கள் முயன்றனர்.

ஏற்கனவே அங்கிருந்த "அஞ்சுமனே இஸ்லாம்" என்ற சங்கத்தைப் "பான் இஸ்லாமியச் சங்கம்" என்று மாற்றிவிட முயற்சிகள் நடந்தன. இதற்குக் காலஞ் சென்ற ஸர் அப்துல்லா சுஹ்ரவர்த்தி ஆதரவளித்தார். ஆனால், ஸர் ஆர்னால்டும் ஜனுப் அமீர் அலியும் இப்பெயர் வேண்டாம், வெறும் "இஸ்லாமிய சொஸைட்டி" என்று இருந்தால் போதும் என்றனர். இங்கிலாந்தில் இச்சங்கத் தைப் பற்றித் தப்பபிப்பிராயம் ஏற்பட்டுவிடக்கூடாது என்றனர். இச்சங்கத்தின் காரியதரிசியான ஹாபீஸ் மஹ்மூது ஷைரானி என்பவர் இக்பாலிடம் வந்து யோசனை கேட்டார். இக்பால், "பான் இஸ்லாமிய சொஸைட்டி" என்ற பெயரையே ஆதரித்தார். கடை சியில் பெருவாரியானவர்கள் இக்பாலைப் பின்பற்றவே அந்தச் சங்கம், "பான்-இஸ்லாமிய சொஸைட்டி" என்று பெயர் மாற்றப்பட்டது.

இக்பால் முன்னதாகவே தயார் செய்யாது- சொற் பொழிவை எழுதிப் படிக்காமல்- "இஸ்லாத்தின் சில அம்சங்கள்" என்பது பற்றி நிகழ்த்திய முதல் பிரசங் கத்தை 'டைம்ஸ்' உள்ளிட்ட எல்லாப் பிரபல பிரிட் டிஷ் பத்திரிகைகளும் முழுவதும் வெளியிட்டன. அவர் சொற்பொழிவு கேட்டோர் பிணைக்கும் தகையதாய் விளங் கியதால், யாவரையும் வசீகரித்துவிட்டது. அதைத் தொடர்ந்து மேலும் ஐந்து சொற்பொழிவுகள் நிகழ்த்த வும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்பால் தமது நண்பர்களிடையில் பெரிதும் மதிக் கப்பட்டார். அவர் தங்கியிருந்த விடுதியில் அவரோ

டிருந்த நாற்பது சக மாணவர்களும் அவரைத் தமது விசேஷ நண்பராகக் கருதினர். சாப்பிடும் இடத்திலும் அவர் பிரதானமாகக் கவனிக்கப்பட்டார். தம் நண்பர் குழாத்திடை அவர் இனிய குரலில் தமது கவிதைகளைப் படித்துக் காட்டுவார். சீட்டுக் கட்டை வைத்துக் கொண்டு ஒவ்வொருவருடைய அதிர்ஷ்டத்தையும் சொல்லுவார். இவை அவருடைய நண்பர்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டன.

இக்பால் கேம்ப்ரிட்ஜ் சென்று அங்குள்ள டிரினிடி கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். இரண்டு ஆண்டுகள் தங்கினர். பி. எச். டி. பட்டம் பெற்ருர். பின்னர் அவர் ஆராய்ந்து எழுதி முடித்த ஆராய்ச்சிப் புஸ்தகமான, "பாரஸீகத்தில் தத்துவ சாஸ்திர வளர்ச்சி" என்ற ஆங்கில நூல் மூனிச் (ஜெர்மன்) சர்வ கலாசாலையில் சமர்ப்பிக்கப்பட்டு, அதை ஏற்ற அக் கல்வி நிலையம் அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங் கிற்று. இந்நூல் உர்தூவில் மொழிபெயர்க்கப்பட்டு, "பல்ஸபா-யே-அஜம்" என்ற பெயரில் வெளிவந்துள் ளது. இதன்பின் அவர் லண்டன் வந்து பாரிஸ்டர் பட்டமும் பெற்ருர். லண்டன் சர்வகலாசாலையில் திரு. ஆர்னல்டின் ஸ்தானத்தில், இக்பால் மூன்று மாதங் கள் இருந்து, அரபிப் பேராசிரியராய்ப் பணியாற்றினர்.

இக்பால் ஏற்கனவே அரபி, பஞ்சாபி, உர்தூ, பார ஸீகம் ஆகிய மொழிகளில் நல்ல தேர்ச்சியும், சமஸ்கிரு தத்தில் போதிய பரிச்சயமும் அடைந்திருந்தார். அவ ருடைய மேல்நாட்டு வாசத்தால் ஜெர்மன், லத்தீன் பாஷைகளையும் அவர் கற்றுக் கொண்டார். 1908-ஆம் ஆண்டில் அவர் இந்தியா திரும்பினர்.

இதயம் விரிந்தது

மூன்று ஆண்டுகளை மேல் நாட்டில் கழித்ததால், இக்பால் பலவித அனுபவங்களைப் பெற்ருர். தீவிரச்

செயலாற்றலின் மூலமே ஒரு சமுதாயம் முன்னேற முடியும் என்பதை அவர் அங்குக் கண்டார். யாரும் தன் விதியைத் தானே மாற்றிக் கொண்டாலன்றி, இறைவன் அவருடைய விதியை மாற்ற மாட்டான் என்ற இஸ்லாமியத் தத்துவம் அவருக்கு அங்குத்தான் நன்கு தெளிவு படலாயிற்று.

> **வாழ்க்கை எனப்படுவது மறதி,**
> **உறக்கம், ஆர்வமற்றிருத்தல்,**
> **போதை, நினைவிழத்தல் ஆகும்**

என்று இதற்கு முன்பு தான் பாடிய பாணியை நினைத்து அவரே வெட்கப்பட்டார். அவர் இனிக் கவிதையே எழுதுவதில்லை என்று முடிவு செய்தது இச்சமயத்தில்தான். அவருடைய மதிப்புக்கு உரிய நண்பர்களின் வேண்டுகோளால் மீண்டும் கவிதை எழுதத் தொடங்கினார். எனினும், அவர் போக்கில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருந்தது. 1907-ல் அவர் அலிகார் மாணவர்களுக்காக லண்டனிலிருந்து ஒரு பாட்டு எழுதி அனுப்பினார். அதில் செயலாற்றல் வேண்டும், மத அனுஷ்டானம் வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

> **'செயலற்றிருப்பதே வாழ்க்கையின் மர்மம்'**
> **என்று மலையிலிருந்து ஒரு குரல் கேட்டது.**
> **சிற்றெறும்பு சொல்லிற்று ;**
> **'சுறு சுறுப்பின் இன்பமே தனி' என்று.**
> **மது இன்னும் நன்கு பக்குவமாகவில்லை ;**
> **ஆசை இன்னும் முதிரவில்லை.**
> **மதுக் குடத்தை மதம் என்ற மூடியால்**
> **இன்னும் நன்கு மூடி வைப்போம்.**

என்று அந்தப் பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

ஐரோப்பாவிலிருந்து கொண்டு ஆசியாவை நோக்கிய போது, அங்கே நிலவிய காரிருள் அவர் கண்களுக்கு நன்கு

புலப்படலாயிற்று. அங்கே ஒளியை உண்டாக்க வேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்தார். தமது மதிப்புக்குரிய நண்பர் ஸர் அப்துல் காதிருக்கு எழுதிய ஒரு பாடலில் இக்கருத்தை வெளியிட்டார் :

எழுங்கள், கிழக்கின் அடிவானில்
இருள் கப்பிக் கொண்டுள்ளது.
நம் நெருப்பெழும் குரலால்
(தூங்கும்) சபையில் விளக்கேற்றுவோம்.
சீனக் கோபுரத்திலிருந்து
ஆத்மத் தேவைகளோடு கிளம்புவோம்.
ஸௌதா, ஸல்மாவின் வதனங்களைக் கண்டு
யாவரும் பிரேமை கொள்ளச் செய்வோம்.
யத்ரபில் லைலா அமர்ந்து செல்லும் ஒட்டகம்
கிழடாகிவிட்டது.
கைஸின் இதயத்தில் ஒரு புதிய ஆசையைத்
தூண்டுவோம்.

'பழங் கதைகள் பேசிப் பேசித் தூங்காதீர்கள்; காலத்திற்கேற்றவாறு உங்கள் சத்தியத்தை எடுத்து இயம்புங்கள். இருளைப் போக்குங்கள்' என்று அவர் இப்பாட்டில் வேண்டுதல் விடுத்தார். மேல்நாட்டு வாழ்க்கையின் பயனாக அவர் பாரஸீக பாஷையில் பாட்டெழுத வேண்டும் என்ற ஆர்வமுடையவராகவும் ஆனார். அவர் பஞ்சாப் திரும்பிய பிறகு ஒரு நண்பர் வீட்டில் நடந்த விருந்துக்குப் போயிருந்தார்.* அங்கே அவரைப் பாரஸீகக் கவிதையொன்று படிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அவரே பாரஸீகக் கவிதை ஏதாவது எழுதியுள்ளாரா என்றும் வினவினர். தான் அவ்விதம் எழுதவில்லை என்பதை அவர் வெட்கத்தோடு ஒப்புக்கொள்ள நேர்ந்தது. ஆனால் அன்று இரவிலேயே உட்கார்ந்து அவர் இரண்டு பாரஸீகக் கவிதைகளை ஆக்கி முடித்துவிட்டார்! பாரஸீக மொழி பல பெரிய கவிஞர்களால் வளம்படுத்தப்பட்டது; மெருகு ஏறிய வார்த்தைகள் நிறைந்த பாஷை;

தத்துவார்த்தக் கருத்துக்களை அழகு ததும்பக் கூற மிக வும் பொருத்தமான உபகரணம். இதை அவர் உணர்ந்து தும் பாரஸீகக் கவிதைகள் புனைவதில் அதிகக் கவனஞ் செலுத்தலானார். உலகப் புகழ் பெற்ற அவருடைய '**அஸ்ராரே குத்இ**'யும், அதனுடன் தொடர்புள்ள '**ரமூஸி பேகுத்இ**'யும் இச்சமயம் எழுதப்பட்ட பாரஸீகக் கவிதைகள் தாம்.

வழக்கறிஞர்

மேல்நாட்டுப் படிப்பை முடித்துக்கொண்டு திரும்பி யதும் அவர் ஒரு வழக்கறிஞராகத் தொழில் தொடங்கி னார். வழக்குகளின் சிக்கல்களில் அவருடைய கவிதை யுள்ளம் அதிகம் கவர்ச்சியடையவில்லை. ஆயினும் தம் தேவைக்குப் போதிய அளவு மட்டும் இத்தொழிலில் அவர் வருமானம் தேடிக்கொண்டார். தொழிலில் கவன மும் நேர்மையும் காட்டி வந்தார்.

தம் சொந்தச் செல்வாக்கால் நீதிபதியை வசப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கையில் நேர்மையற்ற வழக்குகளை அவர் ஏற்பதே இல்லை. ஏற்கும் வழக்குக்காக இடை யறாது பாடுபடுவார்.

ஒரு தடவை பாட்னா ஹைகோர்ட்டில் "தும்ராவ் ராஜ்" வழக்கு என்ற ஒரு பிரபலமான வியாஜ்யம் நடந்து கொண்டிருந்தது. அது சம்பந்தப்பட்ட ஒரு வார்த் தைக்கு விளக்கந் தருமாறு, அப்போது பிரஸித்தி பெற் றிருந்த வழக்கறிஞரான திரு. ஸி. ஆர். தாஸ், இக்பாலை அழைத்திருந்தார். இக்பாலும் பாட்னா சென்றார். இதற்குத் தினசரி அவருக்கு ஆயிரம் ரூபாய் படியுண்டு; அவர் குமாஸ்தாவுக்குத் தினமும் நூறு ரூபாய் படி. இக்பா லுடைய பக்கத்தில் அவர் லண்டன் நண்பர் டாக்டர் அப் துல்லா சுஹ்ரவர்த்தியும், ஸி.ஆர். தாஸும் இருந்தனர். எதிர்க்கட்சிக்குப் பண்டித மோதிலால் நெஹ்ரு ஆஜ

ராகியிருந்தார். இக்பால் பிரஸ்தாப வார்த்தைக்கு இன்ன அர்த்தம் என்பதை உடனேயே எழுதிக் கொடுக்கத் தயாராகி விட்டார். எனவே மறு நாளே தம் அறிக்கையைக் கோர்ட் முன் சமர்ப்பித்துவிட்டு லாகூர் செல்ல விரும்புவதாக ஸி. ஆர். தாஸிடம் தெரிவித்தார். அந்த வியாஜ்யம் அரசாங்கம் சம்பந்தபட்டதென்றும், அதனுல் இக்பால் வழக்கு முடியும்வரை பாட்ணுவிலேயே தங்கலாமென்றும், தினமும் ஆயிரம் ரூபாய் படி பெற்றுக்கொள்ளலாமென்றும் ஸி. ஆர். தாஸ் கூறினுர். ஆனுல் இக்பால் பணத்திற்காக அனுவசியமாக அங்கே தங்கியிருக்க விரும்பவில்லை. மறு நாளே கொடுக்க வேண்டிய விளக்கத்தைச் சமர்ப்பித்துவிட்டுத் தனக்குச் சேரவேண்டிய பணத்தையும் பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

இக்பாலுடைய 'அஸ்ராரே குத்இ' பாரஸீக மொழி வல்லுனரும், மௌலானு ரூமியின் மத்னவி முழுவதையும் விளக்கத்துடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் புகழ் பெற்றவருமான டாக்டர் நிக்கல்ஸனுல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அதிலுள்ள கருத்தாழத்தையும் தத்துவ ஞானத்தையும் பார்த்த மேற்கு நாட்டு அறிஞர்கள் இக்பால் கீழ்நாட்டின் இணையற்ற தத்துவ சாஸ்திரக் கவிஞர் என்று பாராட்டினர்.

'ஸர்' பட்டமும் சட்டசபையும்

அவருடைய இலக்கிய சேவையைக் கௌரவிக்கும் அறிகுறியாகப் பிரிட்டிஷ் மன்னர் சர்க்கார் அவருக்கு 'ஸர்' பட்டம் வழங்கியது. ஆனுல் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சாதாரண மக்கள் இத்தகைய பட்டங்களை இழிவானவையாகக் கருதினர். பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பரணி பாடி, பிரிட்டிஷாரின் தாஸர்களாய்க் கைகட்டி நின்றவர்களே மன்னரின் கௌரவப் பட்டங்களைப் பெற்று வந்தார்கள். ஆதலால், சாதாரண மக்களால்

தங்கள் கவிஞர் என்று போற்றப்பட்ட இக்பாலுக்கே 'ஸர்' பட்டம் கிடைத்ததும் அவர்களால் அதைச் சகிக்க இயலவில்லை. இனி இக்பாலும் ஆளும் வர்க்கத்துக்கு அடிவருடியாகிவிடுவாரோ என்று பொது ஜனங்கள் ஐயுற்றனர். பல பத்திரிகைகள் இது குறித்துக் கவலை தெரிவித்தன. "அப்ஸோஸ், கே அல்லாமா ஸே ஸர் ஹோகயே இக்பால்!" என்று கைசேதமுற்ற ஓர் உர்தூ பத்திரிகை இக்பாலின் 'ஸர்' பட்டம் குறித்து இவ்விதம் பாட்டில் எழுதிற்று:

ஐயோ, கல்வியின் இருப்பிடம்
சர்க்காரின் அரண்மனையாகியதே!
அந்தோ, அல்லாமாவிலிருந்து இக்பால்
ஒரு 'ஸர்' ஆக உயர்கிறாரே!
சமூகத்தின் மணிமுடி புனைந்த சிரமாய் இருந்தவர்,
அரச மணிமகுடத்தின் வீரர் (ஸர்) ஆகிறாரே!
வண்டிப்பேட்டையில் நேற்று
ஓர் அதிகப் பிரசங்கிப் பயல் சொல்கிறான்:
அரசாங்கத்தின் சந்நிதியில்
இக்பால் மிகவும் தாழ்ந்து பணிந்துவிட்டார் என்று.

இக்பால் வந்த கௌரவத்தை உதறித் தள்ளவில்லையாயினும், அரசினருக்கு 'ஆமாம்' போடும் தாஸர் ஆகிவிடவுமில்லை என்பதைப் பொதுஜனங்கள் விரைவில் கண்டு கொண்டனர்; உயர்ந்த லக்ஷியங்கள் நிறைந்தவர் அவர் என்பதை மீண்டும் உணர்ந்துவிட்டனர். இதே ஆண்டில் அவருடைய "**பயாமே மஷ்ரிக்**" என்ற உர்தூக் கவிதைத் தொகுதி வெளியாயிற்று. இதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் '**ஸபூரே அஃஜம்**' என்ற பாரஸீகக் கவிதைத் தொகுதி வெளியாயிற்று.

1926-ஆம் ஆண்டில் இக்பால் பஞ்சாப் சட்டசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பஞ்சாப்

விவசாயிகளின் கஷ்டங்களைப் போக்க இக்பால் அங்கே பெரிதும் போராடினர். நில வரியை ஏன் குறைக்கவேண்டும், நிலம் எப்படி அரசாங்கத்தின் உடைமையன்று என்பன குறித்து அவர் தெளிவான கருத்துக்கள் தந்தார். மத சம்பந்தமான தீர்மானங்கள், மதுவிலக்கு, குற்ற பரம்பரைச் சட்ட ஒழிப்பு, மருத்துவ வசதி ஆகியவை குறித்தும் இக்பால் செய்த பிரசங்கங்கள் பெரிதும் பாராட்டுக்கு உரித்தாயின. எனவே அவருடைய அங்கத்தினர் பதவி காலம் முடிந்த பின்னரும் மீண்டும் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்கும்படி பலர் அவரை வேண்டினர். ஆனல், அவர் மீண்டும் அந்த அரசியல் சூதாட்ட அரங்கத்தில் கால் வைக்க விரும்பவில்லை. சட்டசபை, அரசியல் என்பன எத்தகையன என்பதை அவர் தெரிந்துகொண்டுவிட்டார். "ஒவ்வொருவரும் ஏதாவது ஓர் அந்தரங்க சுயநல நோக்குடன் சட்டசபைக்கு வருகின்றனர். எனக்கு அவ்வித நோக்கு ஒன்றுமில்லை ; அதனல் நான் சட்டசபையில் மீண்டும் புகவும் விரும்பவில்லை" என்று இக்பால் கூறிவிட்டார்.

சென்னைச் சொற்பொழிவுகள்

1928-ஆம் வருஷம் டிஸம்பர் மாதக் கடைசியில் அல்லாமா இக்பால் சென்னை வந்தார். தென்னட்டு வள்ளலார் ஜனப் ம. ஜ. ஜமால் முஹம்மது சாகிப், ஆங்கிலம் கற்ற இளைஞர்களுக்கு இஸ்லாத்தைத் தக்க விதத்தில் போதிக்க ஆண்டுதோறும் ஓர் அறிஞரைச் சென்னைக்கு வரவழைத்து இஸ்லாத்தைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு ஏற்பாடு செய்தார். இதற்காக அவர் பல்லாயிரக் கணக்கில் பணம் செலவு செய்தார். இத்திட்டப்படி 1927-ஆம் ஆண்டில் ஜனப் செய்யிது சுலைமான் நத்வி, நபி பெருமான் குண ஒழுங்கங்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். அடுத்த ஆண்டில் ஆறு சொற்பொழிவுகள்

நிகழ்த்தவே இக்பால் வரவழைக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஜனுப் மார்மடியூக் பிக்தால் வந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர்.*

இக்பாலின் ஆறு சொற்பொழிவுகளுக்கும், அவர் வருகைக்காகவும்கூடத் தென்னுட்டு வள்ளலார் பதினுயிரம் ரூபாய் வரை செலவு செய்திருக்கிருர். எனினும் இந்தப் பிரசங்கங்களின் 'காப்பிரைட்' உரிமையை அவர் வற்புறுத் தாததால், 'ஆக்ஸ்போர்ட் யுனிவர்ஸிடி பிரஸ்' காரர்கள் இதை **"இஸ்லாத்தில் சமயக் கருத்தைப் புனர் நிர்மாணம் செய்தல்"** (The Reconstruction of Religious Thought in Islam) என்ற பெயரில் நூலுருவில் வெளியிட்டுள்ளனர். இதில் இக்பாலுடைய ஏழாவது சொற்பொழிவு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இச் சொற்பொழிவுகளில், **"ஞானமும் சமய அனுபவமும்"** என்பது முதலாவதாகும். இதில் அவர் சமயத்துக்கும், தத்துவத்துக்கும், உயர்தரக் கவிதைக்கும் இடையில் உள்ள பொதுவான சில அடிப்படை அம்சங்களைக் குறிப்பிட்டுப் பல்வேறு மூலங்களிலிருந்து வரும் பல்வகை ஞானங்களின் தன்மையை விளக்கியுள்ளார். இடைக்காலத்தில் முஸ்லிம் அறிஞர்கள் கிரேக்கத் தத்துவ ஞானத்தில் தம்மை மூழ்க வைத்துக் கொண்டது எப்படித் தவருனது என்பதையும், திரு குர்ஆன் தரும் ஞானத்தின் தன்மையையும் இச்சொற்பொழிவில் அவர் காட்டியுள்ளார். அடுத்த சொற்பொழிவு **"சமய அனுபவத்தால் உண்டாகும் வெளியீடுகளின் தத்துவார்த்த உரைகல்"** என்பது. இப்பிரபஞ்சத்தைப் பற்றித் திரு குர்ஆன் கூறுவதென்ன என்பதையும் அது எப்படிச் சரி என்பதையும் இங்கு அவர் விளக்கியிருக்

---

* ஜனுப் பிக்தாலின் சொற்பொழிவுகளின் தொகுப்பு "இஸ்லாமியக் கலைப்பண்பு" என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, நூலுருவில் வெளி வந்துள்ளது.

கிறார். இக்பாலின் மூன்றாவது சொற்பொழிவான **"கடவுள் தத்துவமும், தொழுகையின் தாத்பரியமும்"** என்பதில் அகம் எனத்தகும் கிரியா சக்தி, இறுதி அகத்திற்கு நடத்தாட்டிச் செல்லக்கூடியது, இது இட வரம்பற்றது மன்று; இடக்கட்டுப்பாட்டுக் குட்பட்ட மனித அகத்தின் அளவில் வரம்பு உடையதுமன்று; இறுதி அகத்தின் எல்லையிலா நிலை, இறைவனுடைய கிரியா சக்தியின் எல்லையற்ற அகச் சாத்தியப்பாடுகளை ஓரளவே நாம் புரிந்துகொள்ள வைக்கிறது; இறுதியான சத்தியம் (இறைவன்) ஓர் அகமேயாகும். அதிலிருந்தே சகல (மானிட) அகங்களும் வெளியாகின்றன என்பது போன்ற தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன. நான்காவது சொற்பொழிவு **"மனித அகமும், அதன் சுதந்திரமும், அமரத்துவமும்"** என்பதாகும். இதில் திரு குர்ஆன் காட்டும் மனிதனின் தனிப் பண்பையும், ஒப்பற்ற தன்மையையும், ஒருவரின் சுமையை இன்னொருவர் சுமக்க முடியாத நிலையையும் விளக்கி, திரு குர்ஆனின் போதனைப்படி மனிதன் அமரத்துவம் அடைவது எப்படி என்றும் எடுத்தியம்புகிறார். **"முஸ்லிம் கலைப்பண்பின் ஜீவ சக்தி"** என்ற ஐந்தாவது சொற்பொழிவில் நபித்துவம் பற்றியும், முஸ்லிம்கள் அறிவு வளர்ச்சி செய்யப் பாடுபட்டது பற்றியும் பேசுகிறார். **"இஸ்லாத்தின் செயலாற்றல் தத்துவம்"** என்ற ஆறாவது சொற்பொழிவில் செயலாற்ற வேண்டிய அவசியத்தை இஸ்லாம் வற்புறுத்துவதை விளக்குகிறார். இந்நூலிலுள்ள கடைசிக் கட்டுரையான **"மதம் சாத்தியமானது தானா?"** என்பதில் இன்றைய யுகத்துக்கு மதம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை விளக்கியுள்ளார்.

சென்னையில் அஞ்சுமனே தரக்கி உர்தூவும், தென்னிந்தியப் பிராமண அறிஞர்களும் இக்பாலுக்குத் தனித் தனியே வரவேற்புக்கள் அளித்தனர். பின்னர் அவர் பங்களூர், மைசூர், ஹைதராபாத், அலிகார் ஆகிய இடங்

களுக்குச் சென்றார். தமது சென்னைச் சொற்பொழிவு களில் ஒன்றிரண்டை இவ்விடங்களிலும் நிகழ்த்தினார். மைசூரிலும், ஹைதராபாத்திலும் முறையே மஹாராஜா வினுடையவும், நிஜாமினுடையவும் விருந்தினராகத் தங்கி யிருந்தார். மைசூரில், பேராசிரியர் வாடியாவின் தலைமை யில் நடந்த கூட்டத்தில் இக்பால் பேசினார். தத்துவ சாஸ்திரப் போதகாசிரியரான வாடியா, தமது முடிவுரை யில், இக்பாலுடைய சொற்பொழிவை முதலில் மனப் பாடம் பண்ணினால்தான் அதைப்பற்றி அபிப்பிராயந் தருவது சாத்தியம் என்றார். கடைசியாக அவர் சொன் னார்: "டாக்டர் இக்பாலை முஸ்லிம்கள் தங்கள் சொந்தச் சொத்து என்று லக்ஷந் தடவை கொண்டாடட்டும். ஆனால் அவர் நம் யாவருக்கும் சொந்தமானவர். எந்த மதத்தவருக்கோ, வகுப்பினருக்கோ மட்டும் அவர் உரிய வரல்லர். இக்பால் தம் சமூகத்தவர் என்று முஸ்லிம்கள் பெருமைப்பட்டால், அவர் இந்தியர் என்று அவர்களை விட நாம் அதிகப் பெருமையடைகிறோம்."

அரசியலில்

அல்லாமா இக்பால் 1930-ல் அகில இந்திய முஸ் லிம் லீகின் தலைவராகவும், முஸ்லிம் மகாநாட்டுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாண்டு அல்லாஹபாத்தில் நடந்த லீக் மகாநாட்டில் அவர் செய்த சொற்பொழிவு சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்றுவிட்டது. "பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்கு உட் பட்டோ உட்படாமலோ முஸ்லிம்கள் பெரும்பான்மை யாக உள்ள வடமேற்கு மாகாணங்கள் ஒரு தனி நாடாக ஆக்கப்பட வேண்டும்" என்ற கருத்தை முதன் முதலில் இக்பால்தான் வெளியிட்டார். இம்மகா நாட்டில் வெளியிடப்பட்ட இக் கருத்து, பின்னர் முஸ் லிம்களின் தலைவராக வந்த காயிதே ஆஜம் ஜின்னாஹ்வின் மனத்தை நிறைத்தது.

1931-ஆம் வருஷம் லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்கு இக்பாலும் ஒரு பிரதிநிதி யாக அழைக்கப்பட்டிருந்தார். அங்கே போகும் வழி யில் அவர் பாலஸ்தீனத்தில் நடந்த இஸ்லாமிய மகா நாட்டிலும் சென்று கலந்துகொண்டார். அவர் பைத் துல்-முகத்தஸ் முப்தியின் விருந்தாளியாய்த் தங்கியிருந் தார். அங்கிருந்து லண்டன் புறப்படுமுன், அவர், மதீனா சென்று நபி பெருமானின் சமாதியைத் தரிசித்துத் திரும்ப விரும்பினார். இரவில் எட்டு மணி சுமாருக்கு இதை அவர் முப்தியிடம் தெரிவித்தார். முப்தி, இக்பால் புறப்படுவதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டிருந்தார். இரவில் பத்து மணிக்கு இக்பால் தமது முடிவை மாற்றிக் கொண்டார். தாம் மதீனா வுக்கு அப்போது செல்லப் போவதில்லை என்று தெரி வித்துவிட்டார். "லண்டன் செல்லும் பாதையில் நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'ரவ்லா ஷரீபை' (சமாதியை)த் தரிசிக்கப் போவது சரியன்று; இந்தியா வுக்குத் திரும்பிய பிறகு,அவர்கள் அழைத்தார்களானால், இன்ஷா அல்லாஹ், நான் போவேன்" என்று அவர் கூறிவிட்டார்.

வட்டமேஜை மகாநாட்டில் அவர் மேன்மைதங்கிய ஆகாகானுடனும், ஜனாப் ஜின்னாஹ்வுடனும் சேர்ந்து கொண்டு திட்டங்கள் தயாரித்தார். இவ்விருவரின் இதயமாக அவர்தான் விளங்கினார் என்று அக்காலையில் பேசிக்கொள்ளப்பட்டது.

1933-ல் ஆப்கானிய அரசாங்கம் தன் சர்வகலாசாலை யின் கல்வி முறையில் மாறுதல்கள் செய்து திருத்தி அமைப்பதற்காக யோசனை கூறும் பொருட்டு மூன்று அறிஞர்களை இந்தியாவிலிருந்து வரவழைத்தது. அவர் கள் அல்லாமா இக்பால், செய்யிது சுலைமான் நத்வி, ஸர் ராஸ் மஃஸூத் ஆகியோராவர்.

ஆப்கானிய மன்னரான நாதிர் ஷா இக்பாலின் அத்தியந்த நண்பர். அவர் மன்னராகு முன்பு இக்பாலோடு நெருங்கிப் பழகி இருக்கிறார். அச்சமயம் காபூலில் குழப்பமேற்பட்டு, அதை அடக்க அவர் (அப்போது ஜெனரல் நாதிர் கான் ஆக இருந்தார்) விரைந்துகொண்டிருந்தார். அல்லாமா இக்பால் அவரை லாகூர் ரயில் நிலையத்தில் சந்தித்து அளவளாவினார். ரயில் புறப்படுவதற்குச் சற்று முன்பு அவரை, இக்பால் தனியே அழைத்துச் சென்று அவர் செல்லும் வேலைக்குத் தம்மால் இயலும் பண உதவியை ஏற்றுக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டார். ஜெனரல் நாதிர் கான் அப்போது இக்பாலை நோக்கி, "நீங்கள் ஒரு பக்கீர் ஆயிற்றே, உங்களிடம் இப்போது எவ்வளவு பணம் இருக்கப்போகிறது ?" என வினவினார். தம்மிடம் சில ஆயிரம் ரூபாய்கள் இருப்பதாகவும், அதை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இக்பால் வேண்டினார். அச்சமயத்தில் ஜெனரல் நாதிர் கானிடம் சில நூறு ரூபாய்கள்கூட இருக்கவில்லை. இக்பாலின் மனத் தயாளம் அவரைப் பெரிதும் கவர்ந்து விட்டது. எனினும் அவர் இக்பாலிடம் பணம் பெற்றுக்கொள்ளவில்லை.

இத்தகைய அத்தியந்த நண்பர்கள் மீண்டும் சந்தித்த போது ஜெனரல் நாதிர் கான், அரசர் நாதிர் ஷா ஆகியிருந்தார். அவர் பாசத்தோடு இக்பாலைத் தழுவி வரவேற்று அவரோடு அளவளாவினார். இக்பால் அவருக்கு அன்பளிப்பாக அழகிய வேலைப்பாடுடன்கூடிய திரு குர்ஆன் பிரதியொன்றைப் பச்சை வெல்வெட் உறையிட்டுக் கொண்டு வந்திருந்தார். அதை அரசரிடம் கொடுத்து இக்பால் சொன்னார்: "இத்திருமறையை, இறைவனின் திருவாக்கியங்கள் அடங்கிய இவ்வொப்பற்ற நூலை, தனது ஒவ்வொரு பக்கத்திலும் பிரகிருதியின் இரகசியங்களை அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் இக் குர்ஆன் ஷரீபை உங்களுக்கு அன்பளிப்பாகத் தருகிறேன். இது

தான் என்னிடமுள்ள பெரிய சொத்து, நான் ஒரு பக்கீர்.'' இக் கடைசி வார்த்தைகளைக் கூறியபோது இக்பாலின் குரல் கம்மிற்று; அவர் கண்களில் நீர் பெருக் கெடுத்தது. நாதிர் ஷாவின் கண்களிலும் நீர் நிரம்பிற்று.

இக்பாலின் யோசனைப்படி காபூலில் முதன்முதலாக திரு குர்ஆன் அச்சிட்டு வெளியாக்கும் நிலையத்தை அரசாங்கம் ஏற்படுத்திற்று. காபூலின் கல்வி முறையில் செய்ய வேண்டிய மாறுதல்கள் குறித்துச் சிபாரிஷ் செய்துவிட்டு இக்பால் லாகூர் திரும்பினார். அவர் திரும்பிய சில நாட்களுக்கெல்லாம் நாதிர்ஷா கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேள்வியுற்றார்.

இதற்குப் பிறகு இக்பால் எழுதிய **"ஜாவீது நாமா"** என்ற பாரகாவியமும் **"பாலே ஜிப்ரீல்", "ஸர்பே கலிம்"** என்ற உருதுக் கவிதைத் தொகுதிகளும், கடைசியாக **"அர்முகானே ஹிஜாஸ்"** என்ற உர்து, பாரஸீகக் கவிதைகள் சேர்ந்த தொகுதி ஒன்றும் அடுத்தடுத்து வெளியாயின.

முஸ்லிம் அறிஞர்களையும், ஞானியர்களையும் அக்காலையில் ஆதரித்து வந்த சமஸ்தானம் இந்தியாவில் போப்பால் ஆகவே இருந்தது. மௌலானா முஹம்மது அலி, மௌலானா ஆஜாத் போன்ற பெரியார்களுக்கெல்லாம் போப்பால் நவாப் நல்ல சன்மானங்கள் வழங்கி வந்திருக்கிறார். இத்தகைய நவாப் இக்பாலிடத்திலும் பற்று தல் கொண்டதில் வியப்பில்லை. 1935-லிருந்து இக்பாலுக்கு அவர் ஆயுள் பரியந்தம் மாதந்தோறும் ஐந்நூறு ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுத்து வர போப்பால் நவாப் ஏற்பாடு செய்தார். மற்றும் பல மரியாதைகளையும் அவர் கவிஞருக்குச் செய்து வந்தார்.

சுகக்கேடு

1924-லிருந்து இக்பாலுக்கு மூத்திரக்காய்க் கோளாறு ஏற்படலாயிற்று. பின்னர் வாத சேஷ்டையும் சேர்ந்து

கொண்டு அவரைக் கஷ்டப்படுத்திற்று. இதற்காகச் சிகிச்சை பெற அவர் வீயன்னு நகரம் சென்று வரவேண்டும் என்றும் அதற்கான செலவைத் தாம் தருவதாகவும் போப்பால் நவாப் எழுதியிருந்தார். ஆனால் இக்பால் யூனனி வைத்திய முறையைப் பெரிதும் நம்பினார். அப்போதைக்கு அந்தச் சிகிச்சை முறையில் பயனும் கிட்டிற்று. 1938-ல் அவர் உடல் நிலை மீண்டும் மிகவும் மோசமாயிற்று. அவர் கண் பார்வையும் மங்கிற்று.

அவர் மூன்று மனைவியரை மணந்திருந்தார். முதல் மனைவிக்கு அப்தாப் இக்பாலும் ஒரு பெண் மகவும் பிறந்தனர். அவள் இறந்தபின் மணந்த இரண்டாம் மனைவிக்கு ஜாவீது இக்பாலும் முனீரா பானுவும் பிறந்தனர். மூன்றாந்தாரமாக மணந்திருந்த அம்மையார் குழந்தை பெறுமலே மணமான ஐந்தாண்டுகளில் காலமாகி விட்டாள். இக்பாலின் இரண்டாவது மனைவி தான் 1935-ம் வருஷம் வரை ஜீவித்திருந்தாள். இந்த அம்மையார் இறந்த சமயம் ஜாவீதுக்குப் பதினேரு வயது; முனீராவுக்கு ஐந்து வயது. இவ்விரு குழந்தைகளையும் பராமரிக்க ஒரு ஜெர்மானியத் தாதியை இக்பால் ஏற்பாடு செய்தார். அவருடைய மூத்த மகன் அப்தாப் பிரிட்டனில் படித்துக் கொண்டிருந்தார். ஜாவீதும், முனீராவும் தமது தொழுகையைச் சரிவர நடத்துகிறார்களா என்று கவனித்து வரும்படி இக்பால் அந்தத் தாதி அம்மாளுக்குக் கட்டளை இட்டிருந்தார். அந்தத் தாதிதான் சமையல் வேலைகளையும் மேற்பார்வை செய்துகொண்டிருந்தாள். இக்பால் அத் தாதியிடம் ஜெர்மானிய பாஷையில் பேசுவார். தன் சிறுமி முனீராவும் ஜெர்மானிய பாஷை கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்துவார். உலகிலேயே தனக்கு உள்ள ஒரே நண்பன் தன் முனீராதான் என்று அவர் அடிக்கடி கூறுவதுண்டு. ஆனால் அவள் இரட்டை

ஜடை பின்னிக் கொண்டிருந்தால் மட்டும் அவருக்குக் கோபம் வந்துவிடும். "யூதச்சி மாதிரி இது என்ன கோலம்!" என்று அவர் மென்மையாகக் கடிந்து கொள்வார்.

தமது உடல் நிலை மோசமாகிக் கொண்டு வருவதை உணர்ந்த இக்பால் ஒரு மரண சாஸனம் தயார் செய்து விட்டார். அதில் ஜாவீதுக்கும், முனீராவுக்கும் விடப்பட்ட சொத்துக்கள் பற்றியும், அவர்களுடைய பாதுகாப்புப் பற்றியுமே பெரிதும் கூறப்பட்டிருந்தது.

தமது உறவினர்களில் நல்ல நிலையிலுள்ள மூவரை அக்குழந்தைகளின் நலனைக் கவனித்துவரும் கண்காணிப்பாளர்களாகவும் அவர் ஏற்படுத்தியிருந்தார். அந்த மரண சாஸனத்தில் மற்றும் பல சொந்த விஷயங்களுடன், மதம் பற்றிய தமது கருத்தையும் வெளியிட்டிருந்தார். அதாவது:

"நான் ஆரம்ப கால முஸ்லிம்கள் சென்ற வழியைப் பின்பற்றுபவன். எனக்குத் 'தக்லீ' தில் (குருட்டுத்தனமாக முன்னோர் வழியைக் காப்பியடிப்பதில்) நம்பிக்கை இல்லை. அனுஷ்டானத்தில் நான் இமாமே அஃலம் ஹனபி இமாம் அபூ ஹனிபாவைப் பின்பற்றுபவன். இஸ்லாத்தினுள் நுழைந்து நான் நடத்திய ஆராய்ச்சிகளின் முடிவாகவே நான் இதை ஏற்றேன். முஸ்லிம் என்ற பெயருக்கு, முற்றும் தகுதியுள்ள ஒருவரை நீங்கள் காண நேர்ந்தால் அவருடைய வழியைப் பின்பற்றுங்கள்.

"ஞானவானின் நட்புக் கிட்டவில்லையானல்
நான் என் முன்னோர்களிடமிருந்து
பெற்று அடைந்துள்ளவற்றை எல்லாம்
என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்."

இந்த மரண சாஸனத்தை அவர் ரிஜிஸ்திரார் காரியாலயத்துக்கு உடனே அனுப்பிவைத்துவிட்டார்.

அந்திம காலம்

இக்பால் பல ஆண்டுகளாகவே வயிற்றைக் கட்டுப் படுத்தப் பழகிக் கொண்டிருந்தார். அவர் தினமும் ஒரு வேளை உணவு மட்டும் உட்கொண்டு வந்தார். குளிர் காலத்தில் மட்டும் இரவில் உப்புப் போட்ட தேயிலை அருந்துவார். திடீரென அவருடைய குரல் கெட்டுப்போயிற்று. ஷாஹி மஸ்ஜிதில் குளிரில் நின்று நீண்ட நேரம் தொழுத பின் அவருக்குச் சளி பிடித்ததாகவும் அதிலிருந்து தொண்டை கெட்டுவிட்டதாகவும் சொன்னார்கள். அவரால் சரியாகப் பேசவும் இயலாதுபோய்விட்டது. பின்னர் அவர் முகமும் கால்களும் வீக்கங்கொண்டன. அவருக்குச் சிகிச்சையளித்துவந்த சிறந்த யூனானி வைத்தியர்கள் அவருடைய இருதயமும் விரிந்து இருப்பதைக் கண்டனர். இக்பால் மேல்நாட்டு மருந்து வகைகளை மனமார வெறுத்தார். வற்புறுத்தலின்மீது அதை உட்கொண்டாலும் அவர் வாந்தி எடுத்து விடுவதுண்டு. எனவே, இறுதிவரை யூனானி வைத்தியர்களே அவரைக் கவனித்துக் கொண்டனர். உணர்ச்சி மிக்கவரான இக்பால் தமது இறுதிக் காலத்தில் தனக்கேற்பட்ட வேதனையை மிகவும் சகிப்புத்தன்மையுடன் பொறுத்துக் கொண்டார். அத்துடன், அவர் நினைவு குன்றாமல், வெகு தீக்ஷண்யமாக ஆகிக்கொண்டுவந்தது. தம்மைப் பார்க்க வருபவர்களோடு அவர் நல்லவிதமாகப் பேசிக்கொண்டிருந்தார். வந்தவர்களில் ஒருவர், அவர் உடல் சீக்கிரமே குணமடைந்து எழுந்து விடுவார் என்று அவரிடம் சொன்னார். இதைக் கேட்ட அல்லாமா புன்னகையுடன், "நான் மரணத்துக்குப் பயப்படவில்லை; நான் அதை மகிழ்ச்சியோடு வரவேற்பேன்" என்று கூறிவிட்டுத் தமது பாட்டொன்றின் இந்த அடியையும் சொல்லிக் காட்டினார்:

> உண்மை விஸ்வாசியின் அடையாளத்தை
> நான் சொல்கிறேன்

மரணம் வரும் காலையில்
அவன் வதனம் மலர்ச்சியுற்றிருக்கும்.

தமது மரணப் படுக்கையிலிருந்து கொண்டே அவர் "இஸ்லாமும் தேசியமும்" என்ற ஒரு கட்டுரையையும் வாய்மொழியாகச் சொல்லி எழுதச் செய்தார். டார்வின், நீட்சே ஆகியவர்களின் தத்துவங்களை இக்காலையில் மிகவும் தெளிவாக அவர் விளக்கிவைத்தார். இச்சமயம் அவரைப் பார்க்க வந்த ஒருவர், அவர் இன்னும் மக்காவுக்குச் சென்று வரவேண்டியது பாக்கியுள்ளது என்றார். இதைக் கேட்டதும் இக்பால் உணர்ச்சியுடன் சொன்னார், "ஹிஜாஸுக்குச் செல்ல இனிச் சந்தர்ப்பமில்லை; எல்லாம் அல்லாஹ்வின் திருவுளச் சித்தம்" என்று. தமது பிந்திய காலத்தில் அல்லாமா இக்பால் மக்காவையும் மதீனாவையும் பார்த்து வர எவ்வளவோ அவாவினார். ஆனால் அவர் உடல்நிலை அதற்கு இடங்கொடுக்கவேயில்லை.

அவருக்கு மருந்து கொடுத்து வந்த ஹக்கீம் சாகிப் ஒரு நாள் காலையில் அவர் நாடியைப் பரிசோதித்துப் பார்த்தபோது அது மிகவும் தளர்ந்து காணப்பட்டது. முதல் நாள் இரவு நல்ல நிலையில் இருந்த நாடி ஏன் இப்படிப் பதுங்குகிறது என்று அவர் வினவினார். அன்று இரவில் இக்பால் முஸ்லிம்களை நினைத்து நினைத்து, மிகவும் கசப்பாக அழுதுகொண்டிருந்தார் என்று இரவில் அவருக்கருகில் இருந்தவர்கள் தெரிவித்தார்கள்.

அவர் மரணத்துக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு இன்று இந்தியாவின் பிரதம மந்திரியாக இருக்கும் திரு. ஜவாஹர்லால் நெஹ்ரு, அவரைக் காண வந்திருந்தார். அவரோடு அளவளாவிக் கொண்டிருக்கையில் இக்பால் அரசியல் விஷயமாகவும் பேசினார். அவர் ஜவாஹர்லால் நெஹ்ருவிடம் கேட்டார்: "நீங்கள் எந்த வகை அரசாங்கம் ஏற்படவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?"

" ஏன், சோஷலிஸ்டு அரசாங்கம்தான் " என்றார் நெஹ்ரு.

"உங்களைப் பின்பற்றுவோர் தொகை எவ்வளவு ?"

" மிகவும் கொஞ்சம்தான். "

" தெளிவற்ற அரசியல் மனப்பான்மை கொண்ட இந்தச் சிறு கூட்டத்தாருக்காக எட்டுக் கோடி முஸ்லிம் களின் நலனை நாம் எப்படித் தத்தம் செய்ய இயலும்? உண்மையாகவே நீங்கள் இந்தியா சுதந்திரமடைவதை விரும்பினால், முஸ்லிம்களின் அனுதாபமின்றி அதை அடைய முடியும் என்று நினைக்கிறீர்களா ? ஐரோப்பா வுக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள பரந்த நிலப் பரப்பை நீங்கள் மறக்க முடியுமா ? தன்னைச் சுற்றியுள்ள நாடுகளைக் கவனியாது, ஒரு நாடு தானுகவே முன் னேறிவிட முடியாது என்பது அரசியல் அரிச்சுவடி யல்லவா ! புஷைர், பஸ்ராஹ், பக்தாத், அதன், அகாபா, முகல்லா, சூயஸ் யாவும் முஸ்லிம் நகரங்கள் ; இந்தியாவுக்கு வரும் ராஜபாட்டையில் உள்ளவை. இந்தியாவின் விஷயத்தில் முஸ்லிம்களின் ஒத்துழைப்பு மிகவும் பயன் தரத்தக்கது என்பதை நீங்கள் மறக்க முடியுமா ? மேற்கு ஆசியாவிலுள்ள முஸ்லிம் நாடு களோடு சிநேகப்பான்மை பாராட்டி வாருங்கள், ஜவா ஹர்லால்!" என்று இக்பால் கூறினர். இன்று நெஹ்ரு வின் வெளி நாட்டுக் கொள்கையில் இக்பாலின் இந்த யோசனை எத்தனை அதிகமாகக் கௌரவிக்கப்பட்டிருக் கிறது என்பதைக் கவனிப்பவர்கள் வியப்படையாமல் இருக்க முடியாது.

பாலஸ்தீன முஸ்லிம்களின் நிலைமையும் இக்பால் மனத்தை அதிகம் வருத்தி வந்தது. இச்சமயம் பஞ்சா பில் ஷாஹித் கஞ்ச் மஸ்ஜித் தகராறு விஷயமாக முஸ்லிம் களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளும், அதை அடக்க ராணு

வும் வந்ததும் இக்பாலைப் பெரிதும் மனச் சங்கடப்படும்படி செய்தன. எழுந்திருக்க இயலாத நிலையில் படுத்திருந்த அல்லாமா, "என்னை இக் கட்டிலோடு தூக்கிக் கொண்டு போய், கல்வரங்கள் நடக்கும் இடத்தில் வையுங்கள். துப்பாக்கிக் குண்டு முதலில் என் நெஞ்சில் தைத்து நான் சாகிறேன். அப்படியாவது ஒற்றுமை உண்டாகட்டும்!" என்று உணர்ச்சி ததும்பக் கூறினார்.

1873-ம் வருஷம் பெப்ரவரி மாதம் இருபத்து இரண்டாம் தேதி ஸியால்கோட்டில் பிறந்த கவிஞர், 1938-ம் வருஷம் ஏப்ரல் மாதம் இருபத்து ஒன்றும் தேதியன்று அதிகாலை 5-15 மணிக்குத் தமது அறுபத்தைந்தாம் வயதில் லாகூரில் ஜாவீது மன்ஸிலில் இவ்வுலக வாழ்வை நீத்து அமரரானார்.

"குல்லு-மன்-அலைஹா-பான். வ-யப்கா-வஜ்ஹு-ரப்பிக்க-துல்-ஜலாலி-வல்-இக்ராம்."

(அதன் மீதுள்ள ஒவ்வொருவரும் மறைந்து போவார்கள்; சர்வ சக்தியும் பெருமையும் பொருந்திய உமது இறைவன் திருச் சமூகமே நிலைத்திருக்கும்—திரு குர்ஆன் 65: 26, 27.)

இக்பால் தமது கடைசி காலத்தில் 'ஜாவீது மன்ஸில்' என்ற தமது வீட்டிலேயே வசித்து வந்தார். இந்த வீடு அவர் புத்திரரான ஜாவீதுக்காக அவரால் கட்டப்பட்டது. அதனால் அவர் இவ்வீட்டின் மூன்று அறைகளை மட்டும் தமது உபயோகத்துக்காக வைத்துக் கொண்டு அதற்கு வாடகையாக, மாதம் ஐம்பது ரூபாய் தன் புத்திரர் ஜாவீது பெயரால் பாங்கியில் கட்டி வந்தார். ஒவ்வொரு மாத வாடகையையும், அம்மாத ஆரம்பத்திலேயே அவர் கொடுத்துவிடுவார். அதாவது இக்பால் மாத வாடகை முன்னதாகக் கொடுத்து வந்த தேதி ஆங்கில மாதத்தின் 21-வது நாள் ஆகும். இதன்படி தமது இவ்வுலக ஜாகையின் கடைசி

மாத வாடகையை மார்ச் இருபத்தொன்றும் தேதியன்று அவர் கட்டிவிட்டார். இந்த வாடகை ஏப்ரல் மாதம் இருபத்தொன்றும் தேதியுடன் சரியாகிவிட்டது. அதே தினத்தில் அவர் காலமாகிவிட்டார்!

கிப்லாவின் பக்கம் முகத்தைத் திருப்பியபடி இறைவனின் நாமம் நாவில் தவழ அவரது உயிர் நீங்கிற்று. அவர் முகம் சாந்தமானதாகவும், அமைதி நிறைந்ததாகவும் விளங்கிற்று.

தனக்குப் பதிமூன்று வயது நடக்கும்போது மரணமான தன் தந்தையின் அந்திய நாளைப் பற்றி அவர் புத்திரர் ஜாவீது சொல்லுவது நமது கவனத்துக்கு உரியது: "என் தந்தை இறந்த அந்த இரவை நான் ஒருக்காலும் மறக்க இயலாது. மாலையில் நான்கு மணி சுமாருக்கு நான் அவர் படுத்திருந்த அறையுள் நுழைந்தேன். அவரைப் பார்க்க வந்திருந்தவர்கள் அங்கே சூழ்ந்திருந்தனர். நான் அவர் அருகில் போய் நின்றேன். நீ யார் என்று அவர் வினவினார். "நான் தான் ஜாவீத்" என்று என்னை மறந்து கத்தினேன். அவர் புன்னகை தவழ, "அதை நிரூபி! நீ ஜாவீத் என்பதை நிரூபித்துக் காட்டு!" என்றார்.

"பிறகு அவர் தம் பிரிய நண்பர்களில் ஒருவரான சௌத்திரி முஹம்மது ஹஸன் பக்கம் திரும்பி, 'ஜாவீது நாமாவின் கடைசியில் நான் ஜாவீதுக்கு எழுதியுள்ள புத்திமதிகளை இவன் படித்து அதன்படி நடக்கிறானா என்று கவனித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"வைத்தியர்கள் செய்த முடிவை என் தந்தைக்குச் சொல்லவில்லை. வீட்டில் யாவருமே முணு முணுத்துக் கொண்டிருந்தனர். தந்தையின் சிரிப்பும், கவலையற்ற பேச்சும் அவர் அபாய நிலைமையில் இருக்கிறார் என்றே நான் உணரவிடாது செய்துவிட்டன. நான் என் அறையில் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தேன். பொழுது புலர்

வத்திற்குச் சற்று முன்பு அலீ பக்ஷ் என்னை எழுப்பி "உன் தந்தைக்கு நேர்ந்துவிட்டதைப் போய்ப் பார்!' என்றார்.

"பரபரப்புடன் நானும் முனீராவும் தந்தையின் அறையுள் போனோம். தூய வெள்ளைத் துணியால் மூடப்பட்டு என் தந்தை படுத்துக் கிடந்தார். அடக்க முடியாத அழுகை வந்தது.—என் தாய் இறந்த அன்று நானும் முனீராவும் அழுது கொண்டே அவரிடம் சென்றோம். அவர் என் தோட்களைத் தட்டிக் கொடுத்து, 'நீ ஆண் பிள்ளை; ஆண் பிள்ளைகள் அழமாட்டார்கள்!' என்றார். இந்த நினைவு எனக்கு இப்போது வந்துவிட்டது—தந்தை திடீரென எழுந்து, 'நீ ஆண்பிள்ளை; ஆண்பிள்ளைகள் அழமாட்டார்கள்' என்று சொல்லுவாரோ என்ற பயம் எனக்கு வந்த அழுகையைத் தடுத்து நிறுத்திவிட்டது."

இக்பாலின் ஆவி பிரியும்போது அவரோடு இருந்தவர் அவருடைய அன்புக்குரிய பணியாள் அலீ பக்ஷ் மட்டுமேயாவார். அவர் பிரிவு பற்றி அலீ பக்ஷ் சொல்லுவதாவது: தமது பலம் குறைந்து வருவதை உணர்ந்த இக்பால் தன் கால்களை நீட்டி, முகத்தை மேலே உயர்த்தினார். என்னை அழைத்தார். தன் நெஞ்சில் கைவைத்துக் கொண்டு, 'அல்லாஹ், இங்கே வலிக்கிறது' என்றார். உடனே அவர் தலை விழுந்துவிட்டது. நான் அவர் தலையை வலது கரத்தால் பிடித்துத் தாங்கியபடி, இடது கரத்தை அவர் மார்பின்மீது வைத்துப் பார்த்தேன். அவர் ஆவி பிரிந்துவிட்டதை அறிந்தேன். அவர் முகம் கிப்லாவின் பக்கம் திரும்பியிருந்தது. உடனே கூக்குரலிட்டுக் கதறியபடி வெளியில் கண்ணயர்ந்தவர்களை எழுப்பினேன். டாக்டர் அப்துல் கையூம் விரைந்து வந்து பார்த்தார். "டாக்டர் (இக்பால்) மௌத்தாகிவிட்டார், கலிமா ஷஹாதத் சொல்லுங்கள்" என்று அவர் கூறினார்.

அவர் காலமான அன்று இரவு பத்து மணிக்கு. லாஹூர் ஷாஹி மஸ்ஜிதில் அந்த மகாகவியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவருடைய இறுதிச் சடங்குத் தொழுகையில் கலந்து கொண்டவர்கள் தொகை மட்டும் எழுபதினாயிரத்துக்கும் அதிகமாக இருந்தது. அரசாங்கப் பிரதிநிதிகளும், பல்வேறு நாடுகளின் ராஜப் பிரமுகர்களும் இக்பாலுக்குத் தமது கடைசி மரியாதையைத் தெரிவித்துக்கொள்ள வந்து குழுமியிருந்தனர்.

உலக மகாகவி

மகாகவி இக்பால் உலகப் பிரஜை. உலக மக்கள் யாவருமே நலனோடு வாழவேண்டும் என்று அவர் அவாவினார். உலகம் உய்வதற்குத் தான் சிறந்தது என்று கண்ட மார்க்கத்தை, தத்துவத்தை, வாழ்க்கை அனுஷ்டானத்தைத் தன் கவிதைகளின் மூலம் பேசினார். இதனால் தன் கவிதைகளில் பிரசார வாடை அதிகம் மணக்கிறது என்ற குற்றச்சாட்டையும் அவர் ஏற்கத் தயங்கவில்லை.

> "உலகம் முழுவதும் பிரஸித்தி பெற்ற குறிப்பிடத் தக்க கவிஞர் அவர்" என்று ஜனாப் முகம்மது அலி ஜின்னாஹ் பாராட்டினார். உர்து பாரஸீக மொழி மேதையும், இந்தியாவின் மிகச் சிறந்த சட்ட நிபுணருமாக விளங்கிய காலஞ்சென்ற ஸர் தேஜ் பஹாதூர் ஸப்ரூ, மகாகவி இக்பாலைப் பற்றிக் கூறியுள்ளது நமது கவனத்துக்கு உரியது: "உலகின் இக் கால மகாகவிகளில் இக்பால் தலையானவர். உர்தூ, பாரஸீக பாஷைகளில் பாட்டுகள் எழுதுவதில் அவர் கைதேர்ந்த தொழிலாளி. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு அதிகமாக நான் அவரை ஒரு முதல்தரமான கவிஞராக

வும், சிந்தனையாளராகவும் மதித்துப் போற்றி வருகிறேன்."

ஸர் ஷப்ருவின் இந்தப் பாராட்டுதல் அவரால் எழுதப்பட்ட பல கட்டுரைகளில் விவரித்து விளக்கப்பட்டுள்ளது. பண்டித ஜவாஹர்லால் நெஹ்ருவும் இக்பால் மரணமுற்ற செய்தி கேட்டதும், அதற்குச் சில நாட்களுக்கு முன்பே தாம் அவரைக் கண்டதையும், அவர் அறிவுத் திறனையும், நாடு சுதந்திரமடைய வேண்டும் என்ற அவர் தாகத்தையும் குறிப்பிட்டு வருந்தியிருக்கிறார். உர்துவைத் தாய் மொழியாகக் கொண்ட நெஹ்ருஜி இக்பாலின் கவிதைகள் வரப்போகும் சமுதாயத்துக்குப் புத்துயிரூட்டிக் கொண்டிருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

பிற சமயங்களிடத்து அன்பு

இஸ்லாத்தின் போதனைகளை அவர் தன்னகத்தே முற்றும் ஈர்த்துக்கொண்டு, அதன்படி ஒழுகி வந்தார். தமது கவிதைகளுக்கு அவற்றையே உணர்ச்சி யூட்டுபவைகளாகக் கொண்டார். வருங்கால சமுதாயம் இஸ்லாமிய சமாதான அடிப்படையில் அமைய வேண்டும், அதன்மூலம் உலகம் உய்ய வழி ஏற்படும் என்று அவர் பரிபூரணமாக நம்பினார். ஆனால், பிற சமயங்களை வெறுப்பவராக அவர் விளங்கவில்லை. அவர் எதையும் துவேஷக் கண் கொண்டு நோக்கவில்லை. அவர் கவிதைகளில் அவருடைய சமஸ்கிருத ஞானமும் தென்படவே செய்கிறது. ஹிந்துப் பெரியார்களில் ஸ்ரீ கிருஷ்ணரின் கீதையும் ஸ்ரீ ராமாநுஜரின் தத்துவங்களும், அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தன. ஹிந்து சமுதாயத்தை மிகவும் மரியாதையோடு நடத்தவேண்டும் என்றார் அவர். தம்முடைய புகழ் பெற்ற அல்லாஹபாத் லீக் மகாநாட்டுத் தலைமைப் பிரசங்கத்தில் அவர் கூறியதாவது:

"பிற வகுப்பினரிடம் கெட்ட எண்ணங் கொண்ட எந்த வகுப்பும் கீழ்த்தரமானது; வெறுக்கத் தக்கது. பிற வகுப்பினரின் பழக்க வழக்கங்களுக்கும் சட்ட திட்டங்களுக்கும் நான் மரியாதை காட்டுகிறேன். அவசியமேற் படின் திரு குர்ஆன் கட்டளையிடுகிறபடி அவற்றைப் பாதுகாப்பதும் என் கடமை யாகும். எனினும் என் வாழ்க்கை, நடத்தை ஆகியவற்றின் உற்பத்தியாக விளங்கும் வகுப் பிடம் நான் அன்பு கொண்டுள்ளேன்; அவ் வகுப்பு தன் மதம், தன் இலக்கியம், தன் கலாச்சாரம் ஆகியவற்றைத் தந்து எனது உணர்ச்சியில் ஜீவசக்தியாக நின்று நான் இன் றுள்ள நிலைக்கு என்னை உயர்த்திற்று."

உன் விக்ரஹங்களைக் கைவிட்டு விடு என்று
நான் சொல்லவில்லை.
நீ நிராகரிப்பவனா? அப்படியானால்
உன் நிராகரிப்பு முத்திரைக்குப்
பொருத்தமானவனாக நடந்து கொள்!
ஹே, பூர்வீகமான கலைப்பண்பை ஏற்றிருப்பவனே,
உன் முன்னோர் நடந்த பாதையை விட்டு விலகாதே!
ஒரு மக்கள் கூட்டத்தின் ஜீவன்
ஐக்கியத்தில்தான் இருக்கிறதென்றால்
நிராகரிப்பதும்கூட ஐக்கியத்துக்கு ஒரு பாதைதான்
ஒரு பூரணமான நிராகரிப்பவனாகாத நீ
சாஷ்டாங்கம் செய்ய அருகதையற்றவன்.

என்று ஒரு பாடலிலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான் கோயிலுக்கு மரியாதை செய்கிறேன்;
கஃபாவின்முன் அடிபணிகிறேன்.
என் மார்பில் பூணூல் உண்டு;
என் கையில் ஜெபமாலை மிளிர்கிறது.

என்றும் அவருடைய பாரஸீகக் கவிதையொன்று பேசுகிறது.

இக்பால் பாடிய "புதுக்கோயில்," "வேதனைச் சித்திரம்," "குழந்தைகள் தேசீய கீதம்" "ஸ்வாமி ராமதீர்த்தர்", "ராம்", "ஹிமாலயம்", "பறவையின் குரல்" காயத்ரி மந்திரத்தின் மொழிபெயர்ப்பான "சூரியன்" முதலிய பாடல்கள் அவர் ஹிந்து சமூகத்திடம் காட்டிய மரியாதையை உணர்ச்சியோடு விளக்கிக்கொண்டிருக்கின்றன.

இக்பாலின் குரோதமற்ற மனப் பண்பால் எழுந்த மகத்தான இலக்கியத்தைமுற்றும் படித்து உணர்ந்த உர்து, பாரஸீக நிபுணர், ஸர் தேஜ் பஹதூர் ஸப்ரூ சொல்லுவதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. அவர் ஒரு கடிதத்தில் எழுதியுள்ளதாவது:

> "இக்பால் முஸ்லிம் தத்துவத்தையும், முஸ்லிம் கலைப் பண்பையும், முஸ்லிம் தீரச் செயல்களையும் பற்றி அதிகம் எழுதியுள்ளார் என்பது உண்மைதான். ஆனால் மில்டனைக் கிறிஸ்தவக் கவிஞன் என்று கூறி அவர் கவிதைகளைக் கட்டுப்படுத்தவோ, காளிதாஸனை ஹிந்து சமயக் கவி என்று கூறி அவர் கவிப் பெருமைக்கு வேலியிடவோ யாரும் முயன்றதில்லை; மற்ற மதத்தினரும் இதே காரணத்துக்காக இக்கவிஞர்களின் பெருமையைக் குறைத்துக் கூறியதுமில்லை. இக்பால் முஸ்லிம் சரித்திர வெற்றிகளையும் கலாச்சார சாதனைகளையும் குறித்து எழுதினால், அதற்காக முஸ்லிமல்லாதவர் அவரைக் குறையாக மதிப்பிட்டுவிட முடியாது."

ஆனால் இதே சமயத்தில் தற்கால முஸ்லிம்களிடையுள்ள குறைகளையும் அவர் கண்டிக்காமலில்லை. இஸ்லாத்தின் போதனைகளின்படி நடக்கத் தவறியதால் தான் முஸ்லிம்கள் இன்றுள்ள கீழான நிலையை அடைந்தனர் என்று அவர் கவிதைகள் நெடுகிலும் எடுத்துக் காட்டியுள்ளார். "ஜவாபே-ஷிக்வா" (புகாருக்குப் பதில்) என்ற பாட்டில், இறைவனே இன்றைய முஸ்லிம்களின் முன்னேற்றமற்ற போக்கையும், செயலற்ற தன்மையையும், பழைய புகழைப் பேசிக்கொண்டே காலங் கடத்துவதையும் இடித்துக் கூறுவதாக அவர் பாடியுள்ளார். அவருடைய கவிதைகளில் முஸ்லிம்களின் கடமை இருவிதமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவதாக இஸ்லாத்தின் போதனைப்படி முஸ்லிம்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே அவர்கள் அத்திட்டத்தை மற்றவர்களுக்கும் விளக்கிச் சொல்ல வேண்டும். இது தான் அவர் முஸ்லிம்களுக்குச் செய்யும் போதனை.

இக்பாலின் தேசப்பற்று

மகாகவி இக்பால் தாய்நாட்டுப் பற்று அற்றவராக ஆகிவிட்டார், "ஸாரே-ஜஹான்-ஸே-அச்சா-ஹிந்துஸ்தான்-ஹமாரா" (உலகம் முழுவதிலும் சிறந்தது எம் ஹிந்துஸ்தானம்) என்று ஆரம்ப காலத்தில் கவிதை எழுதிய கவிஞர்,

> **மதம் ஒருவரோடொருவர்**
> **சண்டை போடச் சொல்லவில்லை.**
> **ஹிந்த் நமது ஜென்ம பூமி;**
> **ஹிந்துஸ்தான் நம்முடையது**

என்று போற்றிப் புகழ்ந்த கவிஞர்,

> **ஹே சிந்தையற்றவனே, உன் நாட்டை எண்ணிப் பார்!**
> **மேலே (மேல்நாட்டில்) உன்னை அழிக்கச் சதி நடக்கிறது.**

நடப்பதையும் நடக்க விருப்பதையும் பார்!
வெறும் பழங்கதை பேசுவதில் என்ன இருக்கிறது?
இதை உணராவிட்டால்
இந்திய மக்களாகிய நீங்கள் அழிந்துபடுவீர்கள்;
உலக சரித்திரத்தில் உங்கள்
அடிச்சுவடும் இல்லாது போகும்

என்று ஆத்திரமாகத் தாய்நாட்டுக்காக வீறுகொண் டெழாதவர்களைச் சபித்துப் பாடிய கவிஞர்,

நீங்கள் இத்தோட்டத்தின் பாதுகாவலர்கள்;
எனவே இதன் பிளவு நீங்க வழிகாணுங்கள்!
அப்பிளவெனும் பேய்க்காற்று
செடிகளைப் பாழாக்கிவிட்டது

என்று இந்தியாவைச் சீர்குலைத்த பிளவுப் புல்லுருவியைச் சுட்டிக் காட்டிய கவிஞர், பின்னர் வகுப்புவாதியாக மாறி விட்டார், நாட்டுப்பற்றை மறந்து விட்டார், பிற் போக்குவாதியாக ஆகிவிட்டார் என்று அவர்மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

குறுகிய தேசீயம், நாஜி வெறியையும், பாஸிஸ் வெறியையும் உண்டாக்கி வருவதைக் கண்ணுல் கண்ட கவிஞர் அதை வெறுத்துப் பாடியதிலும், சகலரும் ஒரே இறைவன் உண்டு என்ற அடிப்படையிலே சகோதரர்க ளாக ஒன்றுபடவேண்டும் என்று கூறியதிலும் வியப் பென்ன இருக்கிறது? அதற்காக அவர் தன் தாய்நாட்டின் மீது பிற்காலத்தில் அன்பு காட்ட மறந்துவிட்டார் என்று கூறினுல் அதைவிடத் தவறான கருத்து வேறு எது வுமில்லை. அன்னியன் ஆட்சிக்கு உட்பட்டு அல்லலுற்றுக் கிடந்த இந்தியாவைக் கண்டு அவர் கண்ணீர் வடித்திருக் கிருர். இந்தியா விடுதலையடைய வேண்டும், சுதந்திர நாடாகத் தலைநிமிர்த்து நிற்கவேண்டும் என்று அவர் கொண்டிருந்த சுதந்திர ஆவலை, திரு. ஜவாஹர்லால் நெஹ்ருவே உணர்ந்திருக்கிருர். இக்பால் தமது பிற்கா

லத்தில் எழுதிய "ஜாவீது நாமா"வில் காட்டும் நாட்டன்மையைப் பாருங்கள்:

நீ இந்தியாவைக் கண்டதில்லையா?
இதயமுள்ள யாரும் போற்றும் நாடல்லவா அது!
அதன் ஒவ்வோர் அணுவும்
உலகின்மீது ஒளி வீசினாலும்
அந்தோ, அது புழுதியிலும் குருதியிலும்
கிடந்து தத்தளிக்கிறதே!

இந்தியாவின் கைகள் கட்டுண்டிருப்பது அவர் கண்களில் கண்ணீரை வருவித்தது. இந்தியரின் அடிமை மனப்பான்மை, எதையும் விதியின் செயல் என்று ஏற்றுக் கொள்ளும் போக்கு அவர் மனத்தைச் சுட்டது.

மனிதன் நாய்ப் பிறவியைவிடக்
கடையனாகிவிட்டான்;
ஒரு நாய் இன்னொரு நாய்க்கு
அடிபணிவதை நான் கண்டதில்லை

ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு அடிபணியும் கொடுமையும் ஏற்பட்டு விட்டதே என்று துடிதுடித்தார். அவருடைய பிற்காலப் பாடல் ஒன்றில், தன் தாய்நாட்டை விளித்து அவர் பேசுவதைப் பாருங்கள்:

ஸீனா மலையிலே மூஸாவின் வெண்கரம் போல
அல்லது சுகந்தத் தென்றலுலாவும்
மலர்க்காவிலுள்ள முகையின் அத்தரைப் போல
உன் அன்பெனும் வெள்ளத்திலே
என் இதயம் மூழ்கியிருக்கிறது.

தாய்நாட்டு அன்பையும் பாசத்தையும் அவர் எப்படி வேட்கிறார்?

மதுக்கடையின் கிழவரே,
ஐரோப்பிய மதுவால் இன்பம் விளையும்.
ஆனால் அதில் இதயத் துயரமில்லை;
என் தாய்நாட்டு மதுவை எனக்குத் தாரும்!

என்று கேட்கிறார் இக்பால். பல கலைப் பண்புகளை வளர்த்துத் தந்த பாரதம், இக்பாலின் காலத்தில் நின்ற துயர்மான நிலை அவர் மனத்தைப் பெரிதும் வருத்திற்று.

ஹே, ஹிந்துஸ்தானமே,
உன் நிலை என்னை அழச் செய்கிறது.
கதைகளிலெல்லாம்
உன் கதையே வெகு துயரமானது

என்று துயரப்பட்ட இக்பால் "ஜாவீது நாமா"வில் இந்தியாவின் துயரமான நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதைப் படிப்பவர்களுக்கு அவருடைய நாட்டுப் பற்று எத்தனை ஆழமானது என்பது விளங்கியே ஆகவேண்டும். இந்தியா அழகில் தன்னிகரற்ற ஓர் அஸ்வாஜாக (தெய்வப் பெண்ணாக)த் தோன்றுகிறது. அவர் அதை வருணிக்கிறார்:

வானம் வெடித்து
வனப்பு மிக்க வனிதைக்கு வழிவிட்டது.
அவள் தன் முகத்திரையைச் சற்றே விலக்கினாள்.
அவள் நெற்றியில் தெய்வீக ஒளி சுடர்விட்டது.
அவள் கண்களில் தெய்வீக அன்பு

வெறியோடு கூடித் தேங்கி நின்றது.
அவள் ஆடை மேகம் போன்றிருந்தது;
அதில் ரோஜா இதழ்களையொத்த
புள்ளிகள் நெடுகிலும் மிளிர்ந்தன.

எனினும் அவள் விலங்கிடப் பட்டிருந்தாள்.
அவள் கண்டத்திலிருந்து
இதயம் பிளக்கும் விம்மல் ஒலி
வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ரூமி சொன்னார்:
பார் இதுதான் இந்தியாவின் ஆத்மா!
அவள் விம்மலின் வேகம்
யார் மனத்தையும் இறங்கச் செய்யும் என்று

கந்தல் கோஷங்களைக் கத்திக் கொண்டு, செயலற்று உழலும் இந்தியர்களின் சிரத்தையற்ற தன்மையைக் கூறி, அவன் முறையிடுவதாக இக்பால் எழுதியிருப்பது அவர் உள்ளத்தே உறைந்து கிடந்த நாட்டன்பாலன்றோ!

இந்திய மக்களைக் கூவி அவர் விடுக்கும் வேண்டுதலைப் பாருங்கள்:

வானத்தின் அங்கியுள்ளே
இடி மறைந்திருக்கிறது.
இந்தப் பாரத பூமியின் புல்புல்களான நாம்
கவலையற்று நம் கூடுகளில் தூங்கிக்கொண்டிருக்க
இதுவன்று நேரம்.

யாவரிடமும் அன்பு காட்டிய இப்பெருங் கவிஞரை, அவர் தமது பெரிய காவியங்களுக்குத் தமது சமயக் கருத்துக் களைப் பயன்படுத்திக் கொண்டுள்ள காரணத்துக்காகப் பிற்போக்குவாதி என்று ஒதுக்கிவிட இயலுமா? இந்திய மக்கள் சுதந்திர வீரர்களாக ஆகவேண்டும் என்று அவர் காட்டிய அவாவையும், இந்தியாவின் கஷ்டங்களைக் கண்டு அவர் கண்ணீர் வடித்ததையும் யாரே மறுக்க இயலும்! நாடு சம்பந்தப்பட்ட வரையில் அவருடைய இதயக் குரல் இதுதான்:

இப்பூமியிலே ஒரு புதிய தேவாலயத்தை,
அன்புக் கோயிலை,
பரஸ்பரம் ஒருவரை யொருவர்
நேசிக்கச் செய்யும் நிலையத்தை
எழுப்புவோம் வாரீர்!

குர்ஆன் ஹதீஸ் ஈடுபாடு

இக்பால் திரு குர்ஆனிடமும் நபி பெருமானாரிடமும் மிகுந்த பற்றுதல் கொண்டிருந்தார். அவர் மேல்நாடு சென்று தத்துவ சாஸ்திரங்களை யெல்லாம் கற்று வந்த பின், இமாம் கஸ்ஸாலி, மௌலானா ரூமி, இப்னு அரபி,

பக்ருத்தீன் ராஸி, ஷேகு அஹ்மது ஸர்ஹிந்த் போன்ற மாகான்களின் நூற்களையும், பிளேட்டோ, டேகார்ட், ஸ்பினிட்ஸ், ஸ்பினோஸா, பெர்க்ஸன், நீட்சே, காண்ட், வார்ட் முதலிய தத்துவவாதிகளின் நூற்களையும் கற்ற பின் தமக்கு ஏற்படும் தத்துவார்த்தச் சந்தேகங்களுக்கு, இந்த எந்த நூலின் உதவியையும் நாடாது திரு குர்ஆனையே நாடினார். தமது எந்த ஐயமும், அங்கு நிவர்த்தியாவதைக் கண்டார். திரு குர்ஆன் 'நூல்களின் தாய்' என்பதை அநுபவப் பூர்வமாக உணர்ந்தார். தினமும் தவறாது அவர் திரு குர்ஆன் ஓதுவது வழக்கம். சில உணர்ச்சிகரமான பகுதிகளை ஓதியதும் அவர் தேம்பித் தேம்பி அழுவார். தன் சிறு பிராயத்தில் இது சம்பந்தமாக நிகழ்ந்த ஒரு சம்பவத்தை ஜாவீது இவ்விதம் கூறுகிறார். "ஸர்ஹிந்த் ஷரீபில் உள்ள முஜத்தித்தே அல்பஸானி ஷேக் அஹ்மது ஸர்ஹிந்தின் அடக்க ஸ்தலத்திற்கு என் தந்தை என்னையும் அழைத்துச் சென்றார். அங்கே அமர்ந்து, அவர் திரு குர்ஆன் ஆயத்துக்களை ஓதிக் கொண்டிருந்தார். அச்சமயம் அங்கே எங்களைத் தவிர வேறு யாருமில்லை. திரு குர்ஆனை அவர் வாய்விட்டு இனிமையாக ஓதியபோது அவர் கன்னங்கள் வழியே கண்ணீர் வழிந்தோடிற்று. தந்தையின் குரல் அந்த மண்டபம் முழுவதும் எதிரொலிக்க நான் பணிவோடு அமர்ந்திருந்தேன். இந்நிகழ்ச்சி இன்னும் என் நினைவை விட்டு அகலவில்லை."

பிற்காலத்தில் அவருடைய தொண்டை கெட்டு இனிய குரல் உடைந்து போனதற்காக அவர் வருத்தப்பட்டதெல்லாம், திரு குர்ஆனை முன்னைப் போல இன்பமாக ஓத முடியவில்லையே என்றுதான். பிணியுற்றுக் கிடந்த அவர் திரு குர்ஆனை ஓதச் சொல்லிக் கேட்டே இன்பமடைந்துவந்தார். அவருடைய கவிதைகளில், குறிப்பாகப் பாரஸீகக் கவிதைகளில் திரு குர்ஆனிலிருந்து பதப் பிர

யோகங்களைத் எடுத்துத் தாராளமாகக் கையாண்டுள்ளார். அவருடைய சென்னைச் சொற்பொழிவுகளிலும் ஏராளமான திரு குர்ஆன் மேற்கோள்கள் உள்ளன. அவர் காலமாவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு தமது திரு குர்ஆன் ஆராய்ச்சியெல்லாம் தொகுத்து ஒரு நூல் எழுதுவதற்காகக் குறிப்புக்கள் தயார் செய்தார். அதற்காக அவர் அல்-அஸ்ஹர் சர்வகலாசாலையினர் ஒத்துழைப்பையும் கேட்டிருந்தார். அந்நூலுக்குத் "திரு குர்ஆனைக் கற்பதற்கு ஒரு விளக்கவுரை" என்று பெயரிட நாடினார். ஆனால் இந்நூல் எழுதப்படவில்லை. இது போலவே அவர் உர்துவில் எழுதத் திட்டமிட்டிருந்த **ராமாயாணமும்,** ஆங்கிலத்தில் காவியமாக எழுதத் திட்டமிட்டிருந்த, **"ஒரு மறந்துபோன நபியைப் பற்றிய நூலும்"** எழுதப்படாமலே போயின.

நபி பெருமானிடம் அவர் கொண்டிருந்த பக்தியும் அபிமானமும் அவர் கவிதைகளிலெல்லாம் ஒரு தனி வேகத்துடன் பெருக்கெடுத்து ஓடுகின்றன. குழந்தையை நெஞ்சோடு அணைத்து, குளிரிலும், உஷ்ணத்திலுமிருந்து பாதுகாக்கும் தாயைப் போல, உம்மத்துகளுக்கு நபி பெருமான் (ஸல்) அவர்கள் தாயாக இருக்கிறார்கள் என்று "ஸௌக்-வ-ஷௌக்" என்ற பாட்டில் அவர் கூறுகிறார். இஸ்லாத்தின் நடு நாயகம் நபி பெருமான் (ஸல்) அவர்களே; இஸ்லாத்தின் அடிப்படையே ஐக்கியத்திலும், நபியின் செய்தியில் நம்பிக்கை கொள்வதிலுமே இருக்கிறது என்கிறார் இக்பால்.

> **முஸ்லிமின் இதயம் முஸ்தபா (ஸல்) வின் உறைவிடம்.**
> **நம் பெருமை யாவும்**
> **முஸ்தபா (ஸல்) வின் பெருமையால் வருபவையே !**

என்கிறார் அவர்.

> அவர்கள் பாதம் (நடக்கும் பாதை)
> ஒரு சட்டதிட்டத்தை உண்டாக்கியுள்ளது

என்றும் அவர் பாட்டெழுதியுள்ளார். ஒரு சமுதாயத்தின் ஐக்கிய பாவத்துக்குத் திட்டம் வேண்டுமென்றும், முஸ்லிம் சமுதாயத்துக்கு அது திரு குர்ஆன்தான் என்றும் கூறும் இக்பால்,

> **திரு குர்ஆன் மானிட வர்க்கத்திற்கான**
> **இறுதிச் செய்தியாகும்;**
> **அதைக் கொண்டு வந்தவர்**
> **'ரஹ்மத்துன்-லில்-ஆலமீன்'**
> **(உலகங்களுக்கெல்லாம் கருணை) ஆனவராகும்**

என்று போற்றுகிறார்.

தொழுகை விஷயத்தில் இக்பால் மிகவும் கண்டிப்பான அனுஷ்டான முடையவராய் இருந்தார். பிற்காலத்தில் பின்னிரவில் தொழும் 'தஹஜ்ஜத்' தொழுகையையும் அனுஷ்டித்து வந்தார். கடைசி காலத்தில் தொழ இயலாது படுக்கையில் கிடந்த சமயம் அவர் பெரிதும் வருந்தினார்.

இவ்விதம் மார்க்கப் பற்றுதல் கொண்டு இறைவனுக்குப் பயந்து நடந்துகொள்ளும் மனப்பான்மை அவருடைய மனத்தில் இளமையிலேயே உண்டாக்கப்பட்டிருந்தது. இக்பால் வாலிப வயதினராய் இருந்த சமயம் தன் வீட்டின் முன் வந்து நின்று பிடிவாதமாகப் பிச்சை கேட்ட பிச்சைக்காரனை அடித்துவிட்டார். பிச்சைக்காரன் கீழே விழுந்து அழுது திட்டினான். இதைக் கண்ட பக்திமானான இக்பாலின் தந்தை மிகவும் வருந்தினார். அவர் கண்களில் கண்ணீர் மல்கிற்று. இளைஞர் இக்பாலிடம் அவர் சொன்னார்: "இறுதி நாளில் நபி பெருமான் (ஸல்) அவர்களின் கூட்டத்தார் - இறைவன்

பெயருக்காகப் போராடியவர்கள், திரு குர்ஆனை மனப்பாடம் செய்தவர்கள், வீர மரண மெய்தியவர்கள், பக்திமான்கள், பாபாத்மாக்கள் ஆகிய யாவரும் ஒரு பக்கத்தில் திரண்டு நிற்பார்கள். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கேட்பார்கள்:

"ஒரு முஸ்லிம் யுவனை
இறைவன் உமது பொறுப்பில் ஒப்படைத்தான்.
அவன் என் போதனையிலிருந்து பயனடையவில்லை
இத்தனை இலகுவான ஒரு கடமையை
நீர் செய்ய இயலவில்லை.
அந்தக் களிமண் குவியலை
ஓர் 'ஆதம்' ஆக்க உம்மால் இயலவில்லை!"

இதற்கு நான் என்ன பதில் சொல்லுவேன்?

மகனே, சற்றே யோசி!
நபியின் உம்மத்துக்கள் ஒன்று திரட்டப்படுவதை
எண்ணிப் பார்!
அதன் பின் என் வெளுத்த தாடியையும் கவனி!
நம்பிக்கையுடனும் அச்சத்துடனும்
நான் காட்டும் பணிவையும் பார்!
உன் தந்தைக்கு அத்தனை பெரிய
கொடுமையை இழைத்துவிடாதே!
எஜமானரின் முன் சேவகனை இழிவுபடுத்திவிடாதே!"

இந்தப் புத்திமதி இக்பாலின் இதயத்தில் நன்கு வேரூன்றிக் கொண்டது. அதைப் பின்னர் அவர் தம் கவிதைகளுக்கு உணர்ச்சி யூட்டப் பயன்படுத்திக் கொண்டார்.

"நீ வெற்றியடைய நேர்ந்தால், உன் கல்வியை இஸ்லாத்துக்காகப் பயன்படுத்து" என்று இக்பாலின் தந்தை தம் புத்திரர் கல்லூரியில் புகுந்த உடனேயே அவரிடம் கூறியிருந்தார். இதன் பின் ஒரு நாள் இக்பாலின் தந்தை அவரிடம் கேட்டார், அவர் கொடுத்த வாக்குறுதியை

எந்த அளவுக்கு நிறைவேற்றி வருகிறார் என்று. "நான் இஸ்லாத்துக்காகவே சேவை செய்து வருகிறேன்" என்று புத்திரரும் பதிலளித்தார். எனினும் இக்பாலின் தந்தைக்குத் தன் மகன் எழுதுவதில் உண்மையாகவே இஸ்லாமியம் இருக்கிறதா என்று படித்து அறிவதில் அதிக ஆர்வம் இருந்தது. இக்பால் 'அஸ்ராரே-குத்இ' போன்ற பாரஸீகக் கவிதைகளை எழுதத் தொடங்கியதும், பாரஸீக பாஷையே அதுவரை படித்திராத இப்பெரியார், அதற்காகவே பாரஸீக மொழியைக் கற்றுக்கொண்டு தன் புதல்வரின் கவிதைகளைப் படிக்கலானார்!

தன்னைப்பற்றி

இக்பால் காலத்து மௌலவிகளில் சிலர் மேல்நாட்டுத் தத்துவங்களையோ, இஸ்லாம் இன்று எப்படி உலகுக்கு எடுத்துக் கூறப்பட வேண்டும் என்பதையோ அறியாது மார்க்க ஞானம் பெற்றதுடன் மட்டும் அமைந்திருந்தனர். இத்தகையவர்களுக்கு இக்பாலைப் புரிந்துகொள்ளவே இயலவில்லை. ஆங்கில ஞானம் படைத்தவராகவும் இருக்கிறார்; மேல்நாட்டு தத்துவவாதிகளைப் பற்றியும் பேசுகிறார்; இஸ்லாத்தின் தத்துவத்தை விளக்கியும் கவிதைகள் எழுதுகிறார் என்கிறார்களே! மேல்நாட்டுத் தத்துவத்தைப் படித்தவன் உண்மை முஸ்லிமாக இருக்க இயலுமா? இவர் உண்மையிலேயே எத்தகைய மனிதர் என்று இந்த மௌலவிகள் சந்தேகித்தனர். இதை நன்கு அறிந்த இக்பால் தம் அண்டை வீட்டு மௌல்வி சாஹிப் ஒருவரிடம் சொல்லுவது போன்ற தோரணையில், 'என்னை நானே அறிய முடியவில்லையே! நீங்கள் அறியாதிருப்பின் வியப்பில்லை' என்று பாடினார்-

> " என் சிந்தனைச் சமுத்திரத்தில்
> தண்ணீர் ஆழமாக இருக்கிறது.
> எனக்கு இக்பாலைப் பார்க்க ஆசையுண்டு;
> பிரிவாற்றாமையால் நெடு நாள்

நான் கண்ணீர் வடித்தேன்.
இக்பாலே, இக்பாலை நன்கு அறியவில்லை.
இது கேலிப் பேச்சன்று,
இறைவன் பெயரால் இது கேலி அன்று."

இருப்பினும் தன்னுடைய தன்மை எப்படிப்பட்டது என்பதையும் அவர் சொல்லாமல் விட்டவில்லை. வேறொரு பாட்டில் இக்பால் சொல்கிறார் :

தெய்வ வெறி கொண்ட இப்பக்கீர்
கிழக்கையோ மேற்கையோ சேர்ந்தவனல்லன்.
நான் உண்மை யென்று பட்டதை வெளியிடுகிறேன்.
நான் டெல்லியையோ, இஸ்பஹானையோ,
ஸமர்க்கந்தையோ சேர்ந்தவனல்லன்.
மதக் குருக்களால் ஏமாற்றப்பட்டதுமில்லை;
நவீன நாகரிகத்தின் பகட்டில் மயங்கியதுமில்லை.
நண்பர்களும் பகைவர்களும் என்னை விரும்பாதது ஏன் ?
நான் விஷத்தையும் வெல்லத்தையும் பகுத்தறிவதால்-
உண்மையை உணர்ந்தவன்,
உண்மையைக் காணுபவன்
குப்பை மேட்டைக் கற்குன்று என்று மயங்குவானா ?

சில பண்புகள்

இக்பால் மிகவும் எளிய வாழ்க்கையே நடத்தினார். ஆடம்பரங்களை வெறுத்து ஒதுக்கினார். தன்னை ஒரு பக்கீர் என்றும், கலந்தர் என்றும், தர்வேஷ் என்றும் அவர் அழைத்துக்கொண்டார். ஆனால் கவிதை முறைக்கு அப்படி அழைத்துக்கொண்டதோடு நின்றுவிடாது வாழ்க்கை அனுஷ்டானங்களிலும் உலகத்தில் இருப் பினும், ஒட்டியும் ஒட்டாத தாமரை இலைத் தண்ணீர் போலவே, தேவையற்றவராகவே அவர் வாழ்ந்தார். அவர் மனச்சாட்சி சுத்தமானதாக இருந்தது. பொய் சொல்லு வதும், திரித்துக் கூறுவதும் கொடுமையான பாவங்கள்

என்று அவர் கருதினார். அவர் பூரையும் எச்சமயத்தும் ஏமாற்றியதில்லை. ஏகாந்தத்தையும், சிந்தனை செய்து கொண்டு அமர்ந்திருப்பதையும் அவர் அதிகம் விரும்பினார்.

அவர் எளிய வாழ்க்கை நடத்தியது போலவே ஆடம்பரத்தையும், வீண் விளம்பரத்தையும் வெறுத்தார். ஒரு தடவை ஒரு கிராமபோன் கம்பெனி அவர் பாடல்கள் இரண்டை ஒலிப்பதிவு செய்து இசைத் தட்டு வெளியிட்டது. அந்த இசைத் தட்டின் நடுவில் இக்பாலுடைய படத்தைப் போட்டுக்கொள்ள அனுமதிக்கும்படி, அந்தக் கம்பெனி இக்பாலிடம் கேட்டது. இதற்குத் தான் அனுமதி தர இயலாது என்று இக்பால் மறுத்துவிட்டார். "இத்தகைய விஷயங்களை இயற்கையாகவே வெறுப்பவன் நான். வியாபார நோக்கத்துக்கு என் படம் பயன்படுத்தப்படுவதை நான் சகித்துக் கொண்டிருக்க முடியாது" என்று கூறிவிட்டார்.

இக்பால் புகழ்பெற்ற அல்லாமாவாய் இருந்தபடியால் பிரபுக்களின் வீடுகளில் நடக்கும் பல விருந்துகளுக்கும் அழைப்புகள் வருவதுண்டு. அவற்றுக்கெல்லாம் அவர் போவதே இல்லை. "இவ்விருந்துகளில் மது பரிமாறுகிறார்கள். நான் போகமாட்டேன்" என்று அவர் கூறிவிடுவார். "என் வீடு எனக்கு நூஹு நபியின் கப்பலைப் போல; இதைவிட்டு நான் ஏன் போகவேண்டும்?" என்று அவர் கேட்பதுண்டு.

இக்பால் எதையும் விருப்பு, வெறுப்பின்றி வெளிப்படையாகக் கூறிவிடுவார். ஒரு தடவை அவரைக் காண வந்திருந்த ஒரு தத்துவ சாஸ்திர மாணவன் நாஸ்தீக வாதம் பேசலானான். அவனைத் தன் வீட்டை விட்டுப் போகும்படி கூறிவிட்டார். மற்றொரு சந்தர்ப்பத்தில் பல முக்கியமான நவாப்களும் பிரமுகர்களும் அவர் வீட்டில் கூடியிருந்தனர். அப்போது அங்கு வந்த ஒருவர்

இக்பாலைத் தனியே சந்தித்துப் பேச விரும்பினார். "ஏன் இங்கேயே பேசலாமே!......உம்...இங்கும் செய்தியை வெளியில் பரப்புபவர்களும் இருக்கின்றனர். தனியாகவே பேசலாம்" என்று கூறி இக்பால் எழுந்தார். வந்திருந்தவர்களில் ஒரு பிரமுகர், "யாரைச் சொல்கிறீர்கள்?" என்று இக்பாலிடம் வினவினார். "அத்தகையவர்களில் நீங்களும் ஒருவர்தான்" என்று கவிஞர் பதிலளித்து விட்டார்!

தன் இளைய மகனான ஜாவீதிடம் இக்பால் வெகு பிரியமாக இருந்தார். ஒரு நாள் ஜாவீது தன்னை அடித்து விட்டதாக ஒரு சிறுவன் வந்து அவரிடம் புகார் செய்தான். அவர் உடனே ஜாவீதை அழைத்துச் சொன்னார்; "மார்க்கக் கட்டளைகளுக்கு முரணாக நடந்தால் இனி நீ என் மகனல்ல. உன் நண்பர்களிடம் நேர்மையாக நடந்து கொள்; அவர்கள் உரிமையையும் காப்பாற்று!"

ஜாவீதை இக்பால் அடித்ததே இல்லை. ஆனால் அவருடைய கண்டிப்பின் முன் ஜாவீது நடு நடுங்குவார். ஒரே ஒரு தடவைதான் அவர் இக்பாலிடம் அடிபட்டிருக்கிறார். தன் செலவுக்குத் தந்திருந்த பணத்தைச் செலவு செய்துவிட்டு, வீட்டிலிருந்த ஒரு செம்பை எடுத்து, பேரீச்சம் பழம் விற்றுக்கொண்டு வந்தவனிடம் கொடுத்து, பேரீச்சம் பழம் வாங்கிவிட்டார் ஜாவீது. இதைக் கேள்விப்பட்ட இக்பால் கோபத்தில் தன் மகனை அடித்தார்.

1938-ல் அவர் உடல் நலங் குன்றியிருந்தபோது 'இக்பால் தினம்' கொண்டாட முதன்முதலாக லாகூரில் ஏற்பாடு செய்யப்பட்டது. கவிஞரை அவர் வாழ் நாளிலேயே கௌரவித்துவிடத் துடித்த இலக்கிய அன்பர்களின் முயற்சி அது. அத்துடன் அந்தத் தினத்தன்று கவிஞரிடம் பண முடிப்பு அளிப்பதற்காக ஒரு கணிசமான தொகையை வசூல் செய்யவும் தீர்மானித்தனர். இக்பால்

தினம் கொண்டாடப்படுவதை கவிஞர் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் தமக்கு நிதி திரட்டும் யோசனையைக் கைவிடுமாறு அவர் வன்மையாகவும் கண்டிப்பாகவும் கூறிவிட்டார். எனவே கொண்டாட்டம் மட்டும் சிறப்பாக நடந்து முடிந்தது.

இக்பாலுக்கு மாம்பழத்தின்மீது அதிகமான பிரியம். அமீர் குஸ்ருவும், காலிபும்கூட மாம்பழப் பிரியர்களாகவே இருந்திருக்கின்றனர். "மாம்பழத்துக்கு இரண்டு குணங்கள் தான் இருக்க வேண்டும்; ஒன்று அது நல்ல பழமாக இருக்க வேண்டும்; மற்றது அது நிறைய கிடைக்க வேண்டும்" என்றார் கவிஞர் காலிப். இக்பால் மாம்பழத்தைத் தான் சாப்பிடுவதோடு நிற்பதில்லை. அவர் தம் நண்பர்களை வரவழைத்து மாம்பழ விருந்து கொடுத்து மகிழ்வதுண்டு. பழங்களின் ராஜ்யத்தில் காஷ்மீர் திராக்ஷை உயர்ந்த ஸ்தானம் வகிக்கிறதாயினும், மாம்பழம் அதற்கும் ஒரு படி மேலே போய்விட்டது என்று அவர் சொல்லுவதுண்டு. தமது நண்பர்களுக்கு அடிக்கடி விசேஷமான விருந்துகள் கொடுத்துத் திருப்தியோடு அவர்கள் உண்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதில் இக்பாலுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுவதுண்டு.

இக்பாலுடைய பேச்சுவன்மை யாரையும் இலகுவில் கவரும் தன்மையது. எந்த விஷயத்தைப் பற்றியாயினும் சரி, காலம்-தூரம் பற்றிய தத்துவார்த்த விசாரணையாயினும் சரி, குஸ்திப் பந்தயத்தைப் பற்றியாயினும் சரி, அதில் ஒரு நிபுணராகவே அவர் பேசுவார். அவரோடு உறவாடியவர்கள், அந்த நினைவை என்றும் அகற்ற இயலாது. அவர் பேச்சில் ஹாஸ்யமும் கலந்து தான் இருக்கும். சில சமயம் கசப்பும் தொனிக்கும். பஞ்சாபிலுள்ள இரு பிரபல அரசியல் தலைவர்களைப் பற்றி அவர் அபிப்பிராயம் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது சொன்னார். "இவர்களில் ஒருவர் வைத்தான்

ருன் அடிபணிந்து, அவனை மகிழ்விக்க எதுவும் செய்பவராக இருக்கிருர். மற்றவரோ, ஷைத்தானே தன்னைக் கண்டு பயந்து நடுங்கித் தன்னோடு சிநேக உறவை நாடி, "நாம் இருவரும் ஒன்றுதான், வாருங்கள் நாம் கைகோத்துக் கொள்வோம்" என்று வேண்டுதல் விடுக்கும் அளவுக்கு உயர்ந்து விட்டார்."

ஷைத்தான் மனிதனுக்குச் சுறுசுறுப்பூட்டுபவன் என்பதல்லவா இக்பாலின் தத்துவம்! ஷைத்தான் ஒருவனல்லன், பலர் என்ற சித்தாந்தத்தையும் அவருடைய கவிதைகள் வெளியிடுகின்றன. டெல்லி ஜாமியா மில்லியாவில் அவர் செய்த ஒரு தலைமைப் பிரசங்கத்திலும் 'சாத்தான்' கதை ஒன்றைச் சொன்ஞர். 1914-18-ஆம் வருஷ மகா யுத்தத்தின்போது குட்டிச் சாத்தான்களெல்லாம் பெரிய ஷைத்தானை வந்து காணவந்தனர். பெரிய ஷைத்தான் சாவகாசமாகச் சுருட்டுப் புகைத்தவாறு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். உடனே அந்தச் சிஷ்யப் பிள்ளைகள் அவனிடம் கேட்டனர்: 'ஐயா, இப்போதெல்லாம் உங்களுக்கு ஒரு வேலையுமே இல்லையா? நிம்மதியாக இருக்கிறீர்களே!' என்று ஷைத்தான் பதில் சொன்ஞன், 'இப்பொழுதெல்லாம் எனக்கு ஒரு வேலையும் இருப்பதில்லை. ஏனெனில் நான் செய்யவேண்டிய வேலையையெல்லாம் பிரிட்டிஷ் மந்திரி சபையிடமே ஒப்படைத்திருக்கிறேன்' என்று. இதைக் கேட்ட சபையோர்கள் வயிறு குலுங்கச் சிரித்தனர்.

இக்பால், இந்தியாவின் தலை சிறந்த உர்தூ ஹாஸ்யக் கவிஞரான அக்பர் அல்லாஹபாத்தியைப்போல ஹாஸ்ய உணர்ச்சியுடனும் கவிதைகள் எழுதலாஞர். ஆண்களின் வீரமற்ற நிலையை விவரிக்கவந்த கவிஞர், "இனி எதற்காகப் பெண்கள் முகத்திரையிட்டுக் கொள்ளவேண்டும்? ஆண்கள் தான் பெண்களாகிவிட்டார்களே!" என்றும், தற்கொலை செய்துகொள்ள முயலும் ஒருவன், அதற்கும்

போதிய மனப் பலம் இல்லாது, அதைச் செய்யக் கூலி கொடுத்தாவது ஓர் ஆப்கானியன் உதவியை நாடப் பேர்வ தாகவும் அவர் எழுதியுள்ள கவிதைகளில் சாதாரண நகைச்சுவை மிளிர்கிறது. லேவாதேவிக்காரர்களின் கடும் வட்டி வாங்கும் தன்மைக்கு அவர் கொடுக்கும் ஹாஸ்ய மான சவுக்கடி இது: ஒரு கொசு முறையிடுகிறது: "அந்தோ, இரவு முழுவதும் ஓடியாடிப் பாடுபட்டாலும் ஒரு சொட்டு இரத்தம்தானே கிடைக்கிறது! ஆனால் ஒரு முயற்சியும் செய்யாமல் இருந்த இடத்தில் இருந்து கொண்டே இந்த லேவாதேவிக்காரர்கள் கடன்காரர்கள் இரத்தம் முழுவதையும் உறிஞ்சி விடுகிறார்களே!" ஆனால் இவ்விதமே சாதாரணமாக அவரால் எழுத இயல வில்லை. ஹாஸ்யத்திலும் தத்துவார்த்தம் வந்து புகுந்து கொள்ளலாயிற்று.

இக்பாலுடைய பேச்சில் தத்துவார்த்த மணம் எப் படிக் கமழ்ந்தது என்று காட்ட இச்சம்பவத்தைக் குறிப் பிடலாம்: ஒரு நாள் இக்பாலைக் காண ஒரு தர்வேஷ் வந்திருந்தார். அப்போது இக்பால் அவரிடம் சொன் னார், "ஷேகு அவர்களே, எனக்காகத் 'துஆ' (பிரார்த் தனை) செய்யுங்கள்!" என்று.

"உங்களுக்குச் செல்வம் பெருகவென்று 'துஆ'ச் செய்ய வேண்டுமா?" என வினவினார் தர்வேஷ்.

"இல்லை, எனக்கு அந்த ஆசை இல்லை. நான் ஒரு தர்வேஷ். என் தேவைகளை அல்லாஹ் தந்து வருகிறான்."

"உலகில் மதிப்பும் மரியாதையும் பெருகவென்று 'துஆ'ச் செய்யட்டுமா?"

"இல்லை, அதுவும்கூட இருக்கிறது; எனக்கு அதி லும் அதிக ஆசை இல்லை".

"அப்படியானால் அல்லாஹ்வைச் சந்திக்க நீங்கள் விரும்புகிறீர்களா?"

இதைக் கேட்டதும் இக்பாலின் கண்கள் பிரகாச மடைந்தன. அவர் சொன்னார்: "அல்லாஹ்வைச் சந்திக்கவா? தர்வேஷ், நான் எப்படி அவனைச் சந்திக்க முடியும்? நானோ பந்தத்துக்கு உட்பட்டவன்; மனிதன். அவனோ இறைவன். அவனோடு எனக்குள்ள ஒரே தொடர்பு, அவனை வணங்குவதுதான். சந்திப்பதா! அதற்கு அர்த்தமென்ன? இறைவன் என்னைக் காண வருகிறான் என்று கேள்விப்பட்டாலே நான் இரண்டு காதங்களுக்கு அப்பால் ஓடிவிடுவேன். ஆறு, துளி தண்ணீரைச் சந்தித்தால், துளி தண்ணீர் மறைந்து போகாதா? நான் ஒரு துளி தண்ணீராக என் தனித் தன்மையைக் காப்பாற்ற விரும்புகிறேன். அவ்விதம் ஒரு துளியாக நிலைத்துக்கொண்டு, என்னுள் ஆற்றின் தன்மைகளையும் சிருஷ்டித்துக்கொள்ள விரும்புகிறேன்".

இதைக் கேட்ட தர்வேஷ் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். "இக்பால் பாபா, உங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டது நிரம்ப சரி! நீங்களே அகமியத்தின் தத்துவத்தை அறிந்திருக்கிறீர்களே! ஒரு தர்வேஷின் 'துஆ' உங்களுக்குத் தேவையில்லை" என்று அவர் கூறினார்.

இக்பால் பல ஞானங்களையும் கற்றவராகவும், அவற்றைத் தமது கவிதைகளில் வெளியிடுபவராகவும் இருந்த காரணம் அவர் பல்வேறு பழைய புதிய ஆசிரியர்களின் நூற்களைக் கற்பவராகவும், ஒரு தடவை படித்ததை மனத்தில் பதியவைத்துக் கொள்பவராகவும் இருந்ததுதான். அவர் வெறும் அருட் கவிஞராக மட்டும் இருக்கவில்லை. அவரிடம் பெரியதொரு நூல் நிலையம் இருந்தது. சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு, அல்லது படுக்கையில் தலையணைமீது கைகளை ஊன்றியபடி படுத்துக்கொண்டு, அவர் வெகு வேகமாகப் 'படித்துக்' கொண்டிருப்பார். அவர் குரல் கொடுத்ததும் ஆஜராக அலீ பக்ஷ் தயாராக இருப்பார்.

அலீ பக்ஷ் அவருடைய அன்புக்குரிய வேலையாள். கூலிக்காகக் கடமை செய்யும் ஒரு வேலைக்காரராக அவர் இருக்கவில்லை. அவர் இக்பாலிடம் தனித்த ஓர் அன்பு கொண்டிருந்தார். இரவில் படித்தபடியே, அல்லது கவிதைகள் எழுதியபடியே இக்பால் உறங்கிவிடுவார். உடனே எங்கிருந்துதான், எப்படித்தான் வருவாரோ அலீ பக்ஷ், மெதுவாக எஜமானனை எழுப்பி விடாதபடி போர்வையை எடுத்து அவர் கால்களை மூடிப் போர்த்தி விட்டுப் போவார்.

அலீ பக்ஷ், இக்பால் மேல்படிப்புக்கு லண்டன் செல்லுமுன் அவரோடு பரிச்சயமானார். எம். ஏ. பட்டம் பெற்ற இக்பால் ஓரியண்டல் கல்லூரியில் ஆசிரியராய்ச் சிறிது காலம் பணியாற்றிய சமயம், அவர் இருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில் இஸ்லாமியாக் கல்லூரியின் அதிபரான மௌலவி ஹகீம் தீன் வசித்து வந்தார். அப்போதுதான் அலீ பக்ஷ் மௌலவி சாகிப் வீட்டில் வந்து வேலைக்கு அமர்ந்தார். அப்போது அவருக்கு வயது பதினொன்றுதான். அழுக்கு உடையும் நாகரிகமற்ற தோற்றமும் உள்ளவனாகத் தோன்றினான் அச்சிறுவன். இக்பால் மேல்நாடு சென்று திரும்பியபின் அலீ பக்ஷ் அவரிடம் வேலைக்கு அமர்ந்தார். அவர் மரணப் படுக்கைவரை அவரோடேயே இருந்து காலங்கழித்தார். இக்பாலும் அவரிடம் அபாரப் பற்றுதல் கொண்டிருந்தார். அவரை ஒரு பணியாளாகக் கருதாது குடும்பத்தில் ஒருவராகவே நடத்தினார். கவிஞருக்கு எது தேவை, எது தேவையல்ல என்பதெல்லாம் அலீ பக்ஷுக்குத் தெரியும். அவர் பேனாவும் தாளும் கேட்கப்போகிறார் அல்லது புஸ்தகந்தான் கேட்கப் போகிறார் என்பது எப்படியும் அவருக்கு விளங்கிவிடும். கடைசிவரை அவர் தன் எஜமானனிடம் மிகுந்த விஸ்வாசமாக நடந்துகொண்டார். அவர் மரணத்தால் மிகவும் வேதனைப்பட்டு வருந்தியவர்களில் அலீ பக்ஷ் பிரதானமாய் விளங்கினார்.

இப்பெரும் தத்துவஞானி தமது படுக்கையில் ஒரு தலையணையின்மீது கையை ஊன்றியவாறு சிந்தனையில் ஆழ்ந்திருப்பார். தத்துவ ஞானக் கருத்துக்களும் கவிதையும் அவர் சிந்தைப் பூங்காவில் குதித்து விளையாடும். கவிதைகள் எழுதுவதற்காக அவர் கஷ்டப்படுவதில்லை. விசேஷ முயற்சியின்றியே கவிதைகள் ஓடிவரும். சில சமயங்களில் தொடர்ச்சியாக அவரால் கவிதையே எழுத இயலாமலும் இருந்திருக்கிறது. அவர் ஒரு சமயம் சொன்னார்:

"கடந்த நான்கு ஐந்து மாதங்களாக ஒரு விசேஷமான சக்தி என்னுள் புகுந்து கொண்டிருப்பதாக உணர்கிறேன். அதனால் நான் எந்தச் சங்கடமும் இன்றிக் கவிதைகள் எழுதுகிறேன். இப்படிப்பட்ட சமயங்களில் நான் வீட்டு வேலைகளையும் ஒழுங்காகக் கவனிக்கிறேன். ஆனால் பெரும்பாலும் கவிதைகளே எழுதுகிறேன். இதற்காக இரவிலும்கூடக் கண் விழித்துக்கொண்டே இருக்க வேண்டுவதாகிறது."

இக்பாலுக்கு நள்ளிரவிலும் திடீரெனக் கவிதையுணர்ச்சி பெருக்கெடுத்து ஓடும். அப்போது வெளியாகும் கவிதையின் ஒவ்வொரு அடியின் முதல் சில வார்த்தைகளை உடனே குறித்துக் கொள்வதற்காகத் தலையணைக்குக் கீழே சதா பென்ஸிலும் தாளும் இருந்து வரும். அந்தக் குறிப்பின் உதவியால் காலையில் முழுப் பாட்டையும் எழுதி முடித்துவிடுவார். இப்படி உடனே குறிப்பெடுக்காதிருந்தால் மறு நாள் பாட்டு நினைவு வருவதில்லையாம். சமயங்களில் இரவு முழுவதும் உட்கார்ந்து கவிதை எழுதி முடித்த பின்னரே தூங்கப் போவார். அப்போது தாம் ஓர் இரவில் சாதாரணமாக முந்நூறு செய்யுட்கள் வரை எழுத முடிவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இக்பால் தம்மிடம் வருபவர்களிடமெல்லாம் செயலாற்றுதலின் அவசியத்தை வற்புறுத்துவார். தமது கவிதைகளில் வெளியிட்ட இக் கருத்தை அவர் நேரிலும் உபதேசித்து வந்தார். ஒரு நாள் வாழ்க்கையில் ஏமாற்றத்தையே கண்டு சலிப்படைந்த ஒரு வாலிபன் இக்பாலிடம் வந்து தன் கஷ்டங்களைச் சொல்லி முறையிட்டான். தனக்கு அதிர்ஷ்டமில்லை என்று அவன் கூறினன். அவனுக்கு இக்பால் இவ்விதம் போதனை புரிந்தார்: "வாழ்க்கையின் ஒரே நோக்கம் செயலாற்றுவதுதான். ஜின்னும் மனிதனும் இறைவனை வணங்கவே படைக்கப்பட்டுள்ளார்கள் என்று திரு குர்ஆன் கூறும் தொழுகையில் செயலாற்றுவதும் அடங்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் சிறிய அளவில் ஒரு சிருஷ்டிக் கர்த்தனே. இச் சிருஷ்டி சக்தியைப் பாழாக்குவது பெரும் பாவமாகும். நபி பெருமான் (ஸல்) அவர்கள் இவ்வுலகில் தோன்றியதே இது நன்று, இது தீது என்று தெரிவிப்பதற்காகத்தான். வெற்றி தோல்வியைப் பற்றிய எண்ணமே கொள்ளாமல் உன் போராட்டத்தை நீ தொடர்ந்து நடத்திவா!"

செயலாற்றுவோர் முன்னேறுகின்றனர்;
ஒருக்கணமாவது ஓய்பவர்கள்
சதா சுழன்றுகொண்டே இருக்கும்
காலச் சக்கரத்தில் சிக்கி நசுக்குண்டுவிடுகின்றனர்.

என்கிறது செயலாற்றுதல் பற்றிய அவருடைய பல கவிதைகளில் ஒன்று.

இக்பால் மறைந்து இன்றைக்குப் பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. அவர் புகழ் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. அவருடைய கவிதையும் தத்துவமும் எப்படிப்பட்டவை என்பதை ஓரளவாவது நாம் அறிந்தால், இக்பாலின் நாமம் வருங்கால உலகில் மிகவும் முக்கியமான ஓர் இடத்தைப் பெறும் என்பதை உணர முடியும். வாழ்க இக்பால் நாமம்!

கவிதைகள்

பாங்கே-தரா

மகாகவி இக்பாலின் கவிதைகள் **'பாங்கே-தரா'** (உர்தூ), **'பயாமே-மஷ்ரிக்'** (பாரஸீகம்) **'ஸபூரே-அஃஜம்'** (பாரஸீகம்), **'பாலே ஜிப்ரீல்'** (உர்தூ), **'ஸர்பே-கலீம்'** (உர்தூ), **'அர்முகானே ஹிஜாஸ்'** (உர்தூ-பாரஸீகம்), முதலிய கவிதைத் தொகுதிகளிலும், **'அஸ்ராரே குத்இ' 'ரமூஸி பேகுத்இ'**, **'பஸ்-சாய்-பாயத்-கர்த்'**, **'ஜாவீத் நாமா'** (இவை நான்கும் பாரஸீகம்) ஆகிய தனி நூற்களிலும் அடங்கும். இவற்றிலுள்ள கவிதைகளையெல்லாம் விவரிப்பது சாத்தியமன்று. எனவே கூடியவரை இவற்றில் முக்கியமான சில பகுதிகளையும், ஓரிரு கவிதைகளின் மொழிபெயர்ப்பையும், மற்றும் சிலவற்றின் விளக்கங்களையும் இங்கே பார்க்கலாம்.

'பாங்கே-தரா' (பாலைவன மணி யோசை) மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி கவிஞர் மேல் நாடு செல்லு முன்பும், அடுத்த பகுதி அவருடைய மேல் நாட்டு வாச காலத்திலும், கடைசிப் பகுதி அவர் இந்தியா திரும்பிய பின்னரும் எழுதப்பட்டவை. ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட பாடல்கள் பிறவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் மிகவும் சாதாரணமானவை. இஸ்லாத்தையும் அதன் சரித்திரத்தையும் பற்றிக் கவிஞரிடம் வளர்ந்து வந்த அக்கறை கடைசிப் பகுதியில் தெளிவுபடுகிறது. இத் தொகுதியின் முதல் பாட்டு 'ஹிமாலா' (இமயமலை) என்பதாகும். இப் பாட்டில் இக்பாலின் இயற்கை வருணனைகள் மனத்தை அள்ளுவனவாக இருக்கின்றன. மலையின் அமைதி நிறைந்த பள்ளத் தாக்குகளையும், அதனைத் தழுவிச் செல்லும் மேகக் கூட்டங்களின் ஒளியையும், மஸ்து அடைந்த முகைகளையும், சலசலக்கும் நீரோடையையும் வருணிக்கிறார் அவர்.

இந்தியாவின் மாபெரும் கோட்டையான இம்மலையைக் கண்டு அவர் பெருமைப்படுகிறார். "நீ முதுமையின் அறிகுறி எதுவுமே காட்டுகிறாயில்லை. பகலும் இரவும் மாறி மாறி வந்தாலும் நீ என்றும் இளமையோடு விளங்குகிறாய்" என்று போற்றுகிறார்.

காலை இளங்காற்று பூங்கொடிகளைத் தொட்டிலாக்குகிறது.
மொட்டுகளெல்லாம்
ஜீவியமென்னும் போதையிலே ஆடுகின்றன.
அவ்விதம் அவை தம் மௌனத்தைத்
தம் இதழ்களென்னும் நாவால் பேசுகின்றன.
"மலர் கொய்வோனின் கை அதிர்ச்சியை
நாங்கள் அனுபவித்ததே இல்லை" என்று கூறுகின்றன.
....

குன்றை யொட்டிப் பாடிக்கொண்டே
ஓடி வருகிறது ஓடை.
தெய்வ நதிகளையும் அது வெட்கச் செய்கிறது.
இயற்கையின் காதலி முன்
அது கண்ணாடியாக அமைந்துள்ளது.
சில வேளை தன் வழிப் படும் கல்லை விட்டு
விலகிவிடுகிறது; அல்லது
அக்கல்லில் மோதி முன்னேறுகிறது.
....

சிக்கலான பிரச்னையின் வேதனையை
நீ உணரமாட்டாய்;
ஹே வண்ணமலரே,
ஒரு வேளை உனக்குள் இதயம் இல்லையோ!

மற்றொரு பாட்டில் மேற்கே தென்படும் இளம் பிறையை இவ்விதம் வருணிக்கிறார்:

சூரியப் படகு கவிழ்ந்து
நீல நதியுள் மூழ்கிற்று;
அதன் பலகை யொன்று நீல நதிப் பரப்பில் மிதக்கிறது.

அந்தி எனும் செங்குருதி
வானப் பீங்கானிலே சொட்டுகிறது.
இயற்கை எனும் வாள்
சூரியனின் இரத்தக் குழாயை அறுத்துவிட்டதா?
மாலை எனும் மணப்பெண்ணின் காதணியை
வானம் களவாடியிருக்க வேண்டும்;
அல்லது நீல நதித் தண்ணீரிலே
சுத்தத் தங்க மீன் உலவ வேண்டும்.

'ஸாஹ்றத் அவ்ர் ரிந்தி' என்ற பாட்டில் தன் அண்டை வீட்டு மௌலவி சாஹிபைப் பற்றி முன்னமேயே குறிப்பிடப்பட்டுள்ள கதை விவரிக்கப்படுகிறது. 'ஆற்றின் அலை' எனும் பாட்டில்,

ஆற்று வரம்பை விட்டே நான் ஓடுகிறேன்.
கடலின் அகண்டத்தை விட்டுப் பிரிந்திருப்பது
எனக்குப் பிரிவாற்றாமைத் துயரை உண்டாக்குகிறது.

என்கிறார். இத்தொகுதியிலுள்ள 'தஸ்வீரே-தர்த்' (சோகச் சித்திரம்) அவர் இந்தியாவிடம் கொண்டிருந்த தேசபக்தியைக் காட்டுவது.

மௌனமே என் பேச்சு;
மூங்கையே என் நாவு.
என் கதையைப் பொறுமையுடன்
கேட்பது கடமையன்று.
ஹே இந்தியாவே, உன் நிலைமை
என்னை அழச்செய்கிறது;
சகல கதைகளிலும் உன் கதை
மிகவும் சோகமானது

என்று தொடங்குகிறது இப்பாட்டு. 'தரானா-யே-ஹிந்தி' இத்தொகுதியில் உள்ள பாடல்தான். இந்தியா சுதந்திரம் பெற்ற தினத்தன்று இப்பாடல்தான் அரசியல் நிர்ணய சபையில் பாடப்பட்டது.

தரான-யே-ஹிந்தி

ஸாரே ஜஹா(ன்) ஸே அச்சா(ஹ்)
ஹிந்தூஸ்தா(ன்) ஹமாரா
ஹம் புல்புலே(ன்) ஹை(ன்) உஸ்கீ
ஏ குலிஸ்தா(ன்) ஹமாரா.

குர்பத் மெ ஹமின் அகர் ஹம்
ரஹ்தா ஹை தில் வதன்மே
ஸம்ஜோ(ஹ்) வஹீ(ன்) ஹமே(ன்)
பீஹ்ஹோ ஜஹா(ன்) ஹமாரா.

பர்பத் ஒ(ஹ்) ஸொப் ஸே ஊன்ச்சா
ஹம்ஸாயா ஆஸ்மா(ன்) கா.
ஒ(ஹ்) சுந்தரீ ஹமாரா
ஒ(ஹ்) பாஸ்பா(ன்) ஹமாரா.

கோதீ மெ கேஹ்ல்தீ ஹை(ன்)
உஸ்கீ ஹஜாரோ(ன்) நதியான்
குல்ஷன் ஹை ஜின் கீ தம்ஸே
ரஷ்கெ ஜனு(ன்) ஹமாரா.

அய் ஆபெ ரவத் கங்கா!
ஒ(ஹ்) தின் ஹை(ன்) யாது தூஜ்(ஹ்)கு
உத்ரா தெரே கிநுரே
ஜப் கார்வா(ன்) ஹமாரா.

மஸ்ஹப் நஹீ(ன்) ஸிகா(ஹ்)த்தா
ஆபஸ்மெ பேர் ரக்(ஹ்)னு
ஹிந்தீ ஹை(ன்) ஹம் வதன் ஹை
ஹிந்தூஸ்தா(ன்) ஹமாரா.

யூனுனோ மிஸ்ரோ ரோமா
ஸொப் மிட்கயே ஜஹா(ன்)ஸே
அப்தக் மகர் ஹை பாகீ
நாமோ நிஷா(ன்) ஹமாரா.

குச்(ஹ்) பாத் ஹை கெ(ஹ்) ஹஸ்தீ
மிட்த்தீ நஹீ(ன்) ஹமாரீ
சதியோ(ன்) ரஹா ஹை துஷ்மன்
தவ்ரெ ஜமா(ன்) ஹமாரா.

இக்பால்! கோயீ மஹ்ரம்
அப்னா நஹீ(ன்) ஜஹா(ன்)மே
மலூம் கியா கிஸீகு
தர்தெ நிஹா(ன்) ஹமாரா.

உலகம் யாவினும் சிறந்தது நம் ஹிந்துஸ்தான்.
இம்மலர்வனம் எம்முடையது;
யாம் அதன் புல்புல்கள்.

நாங்கள் (அயல் நாடுகளில்) பிரயாணம் செய்யினும்
இதயம் தாயகத்திலேயே நிலைத்திருக்கிறது;
எம் இதயம் உள்ள இடம் எங்கோ
அங்கேயே நாங்களும் இருப்பதாக உணர்க!

யாவிலும் உயர்ந்த எமது மலை
வானைத் தழுவி நிற்கிறது.
அந்தச் சுந்தரியாள் எம்முடையாள்;
எமது காவலரசி அவள்.

ஆயிரம் ஆயிரம் ஆறுகள்
அவள் மடியிலே தவழ்ந்து விளையாடுகின்றன.
இந்த ஜீவநதிகள் தரும் வளத்தால்
பிறர்கண்டு பொறாமையுறும்
இப்பூஞ்சோலை எம்முடையது.

ஹே நீரோட்டமுள்ள கங்கையே,
எமது காரவான்கள் உன் கரையில் பாடிவீடமைத்திருந்த
அந்த நாள் உனக்கு நினைவிலிருக்கிறதா?

மதம் ஒருவரோடொருவர்
பகைமை பாராட்டுமாறு போதிக்கவில்லை;
ஹிந்தீ நம் தாயகம்;
ஹிந்துஸ்தான் நம்முடையது.

யூனன் (கிரேக்கம்), மிஸ்ர் (எகிப்து), ரோம்—
யாவற்றின் ஆட்சியும் உலகிலிருந்து மறைந்துவிட்டது.
ஆனால் இன்றுவரை நமது நாமமும்
சின்னமும் தரிபட்டிருக்கின்றன.

நமது காலச் சுழலிலே பல நூற்றாண்டுகளாகப்
பகைவன் இருந்தே வந்தான்;
(எனினும்) நம் வாழ்வு சீர்குலையாதது அற்புதமே!

இக்பாலே, உலகில் உன்னை அறிந்தவர் யாருமிலர்;
எமது அந்தரங்க வேதனையை
அவர்கள் உணருமாறு செய்துள்ளேன்.

அடுத்துள்ள 'மின்மினிப் பூச்சி' பற்றிய பாடலில் அவர் சொல்லுவதாவது:

ஏகத்துவத்தின் இரகசியம்
பல வழிகளில் மறைபட்டுள்ளது.
மின்மினியில் வெளிச்சமாக இருப்பது,
மலரில் மணமாக இருக்கிறது.

அப்படியிருக்க ஏனிந்த வேற்றுமைத் தகராறை
உண்டாக்க வேண்டும்?
சகல வஸ்துக்களிலும்தான்
இந்த நிரந்தர நிசப்தம் மறைந்து கிடக்கிறதே!

'விடிவெள்ளி' என்ற பாட்டில் இக்பால் சொல்கிறார்:

என்னிடம் மட்டும் அந்தச் சக்தி இருந்திருப்பின்
நான் ஒரு தாரகையாக இருக்க மாட்டேன்;
ஆழக் கடலின் அடியிலே
ஒரு நன் முத்தாகச் சுடர் விடுவேன்.
ஆனால் இவ்வுலகில் 'அழகுள்ள
ஏதாவது ஒரு பொருளாய் இருப்பதால்
இதுவே முடிவெனின்,
நான் ஏன் ஒரு மலரில்
பனித்துளியாக விழக்கூடாது?

அல்லது ஒரு சிப்பாயின் மனைவி
தன் கணவனை வழியனுப்புகையில்
வெளியாகும் ஒரு துளிக் கண்ணீராக
(நான் ஏன் ஆகக்கூடாது?)
புழுதியில் கலந்து நான் அமர வாழ்வடைவேன்;
அதன்மூலம் உலகிற்குக்
காதல் நெருப்பின் தன்மையை எண்பிப்பேன்.

'மஹப்பத்' என்ற பாட்டில் காதல் உண்டாக்கப்பட்டதைக் கவிஞர் வருணிக்கிறார்:

இரவு மணப் பெண்ணின் சிகைகளுக்குத்
தம் உருவம் இன்னும் விளங்கவில்லை;
வானிலேயுள்ள தாரகைகளுக்கு
அசையும் ஆசை இன்னும் பரிச்சயமாகவில்லை.

சந்திரனும் தன் புதிய உடையில் அன்னியமாகவே விளங்கிற்று. அப்போதுதான் உலகமே ஆரம்பமாகி இருந்தது. மேல் உலகில் ஒரு ரஸவாதி இருந்தான். 'அர்ஷ்' என்ற மாளிகையின் ஒரு தூணிலே எழுதப்பட்டிருந்த பக்குவப்படி அவன் ஓர் அமுதம் சமைத்தான். தாரகையிலிருந்து பிரகாசத்தையும், சந்திரனிடமிருந்து கருப்பு மச்சத்தையும், இரவின் இருளிலிருந்து கேச நிறத்தையும், இடியிலிருந்து கிளர்ச்சியையும், ஹூரியிடமிருந்து பரிசுத்தத்தையும், மஸீஹின் மூச்சிலிருந்து உஷ்ணத்தையும், இறைவனிடமிருந்து ஒரு சிறிது சுதந்திரத்தையும், ஒரு தேவதூதனிடமிருந்து புனிதத் தன்மையையும், பனியிலிருந்து தண்மையையும் எடுத்து வாழ்க்கையெனும் சுனைநீரில் கலந்து அதற்கு அர்ஷிலிருந்து வந்த 'காதல்' என்று பெயர் சூட்டினன்.

உடனே அசைவு தோன்றிற்று;
துகள்களும் தம் இனிய துயிலிலிருந்து விழித்தன.
அவை எழுந்து தம் தோழர்களைத் தழுவின.
சூரிய, சந்திரர்கள் தமது

அழகிய காம்பீர்யத்தை அடைந்தன.
மொட்டுகள் அவிழ்ந்தன;
பூவரசமலர்கள் சூடுண்டன.

'ஹகீகத்தே-ஹஸ்ன்' (அழகின் உண்மை) என்ற பாட்டில் கவிஞர் சொல்கிறார்:

உலகம் ஒரு சித்திரச் சாலை;
வாழ்க்கை எனும் நீண்ட இரவின் கதையே உலகம்.
....
அதன் தோற்றம் மாறுதல் எனும் வர்ணத்தால் வந்தது.
என்வே எதன் அழகு அழிகிறதோ,
அது அழகானதாக இருக்கிறது.

'அலிகார் மாணவர்களுக்கு' எழுதிய பாடலில் சந்திரன், தாரகைகளை விளித்து அவர் கூறுகிறார்:

நாளெல்லாம் அசைந்து கொண்டிருப்பதே நம் வேலை;
அசைவு, அசைவு, ஓயாத அசைவு.
இவ்வுலகில் யாவுமே அமைதியற்றவைதாம்.
அமைதி என்கிறார்களே அப்படி எதுவுமில்லை.
தோழர்களே, இரவெனும் கதிர்களை அறுக்கும்
அறுவடைக்காரர்களே,
இவ்வுலகில் வாழ்க்கை என்பதே
அசைவால் உண்டாவது.
இவ்விடத்தின் ஒரு பழைய பழக்கம் அது.

வாழ்க்கை ரகசியத்தைப்பற்றி மேலும் அவர் கூறுவதாவது:

கிஸரிடம் வாழ்க்கை இரகசியத்தைக் கேளுங்கள்!
யாவுமே பூர்ணமடையாத முயற்சியால்
ஜீவித்திருக்கின்றன.

'பாங்கே தரா'வின் மூன்றாம் பகுதியில் முதல் பாட்டு 'பிலாதே-இஸ்லாம்' (இஸ்லாமிய நகரங்கள்) என்பது. இதில் முஸ்லிம் உலகின் ஜாஜ்வல்யமிக்க இஸ்லாமிய நகரங்களை வருணிக்கிறார். இஸ்லாமியப் புகழின் இருப்

பிடமான டெல்லி, பாலைப் பயிர் விளையும் பக்தாத், புதிய உலகில் நாகரிகமெனும் விளக்கை ஏற்றிவைத்த குர்துபா (கார்தோவா), நபிபெருமான் (ஸல்) அவர்களின் அடக்க ஸ்தலமுள்ள மதீனா-இவற்றை அவர் போற்றிப் பாடுகிறார். மதீனாவைப்பற்றி அவர் எழுதுவதாவது :

ஆஹ் யத்ரபே,
முஸ்லிமின் சொந்த பூமி நீ !
அவன் தங்குமிடம் நீ,
கருத்தை யிழுக்கும், வெளியிடும் பீடம் நீ!
நீ உள்ளவரை,
நாங்களும் இவ்வுலகில் இருப்போம்.
காலை உண்டெனில்,
பூங்காவிலே பனித்துளி முத்துக்களும் உண்டு.

'பல்ஸபாயே கம்' (துயரத்தின் தத்துவம்) என்ற பாட்டில் கவிஞர் சொல்கிறார் :

துயரம் வாலிபனைக்
கனவின்பத்திலிருந்து விழித்தெழச் செய்கிறது.

....

காதலியின் மரணத்தோடு காதலும் மாண்டுவிடுவதில்லை.
துயரத்தைப் போல அதுவும் இதயத்துள்ளே இருக்கிறது;
போய்விடுவதில்லை.

....

அசைந்து செல்லும் வாழ்க்கை நதியின் சாரம் ஒன்றே:
உயரத்திலிருந்து விழுந்துவிட்ட அது
மானிடர் கூட்டமாக ஆகியுள்ளது.
நாம் பிரிகிறோம்,
உலகின் தாழ்ந்த பகுதிகளில் சந்திப்பதற்காக.
ஆனால் தற்காலிகப் பிரிவைச் சதம் என்றெண்ணி
நாம் அழுகிறோம்.

'சீனா - அரப்-ஹமாரா' என்ற 'தரானெ-யே - மில்லி' (சமூகக் கீதம்) இத் தொகுதியில்தான் உள்ளது. அதன் முக்கியத்துவம் கருதி அதையும் முற்றும் இங்கே தரலாம்.

தரானா-யே-மில்லீ

சீனோ அரப் ஹமாரா
ஹிந்தூஸ்தான் ஹமாரா
முஸ்லிம் ஹைஹ(ன்) ஹம் வதன் ஹை
ஸாரா ஜஹா(ன்) ஹமாரா.

தவ்ஹீத் கீ அமானத்
ஸீனோமெ ஹை ஹமாரே
ஆஸான் நஹீ(ன்) மிட்டானா
நாமோ நிஷான்(ன்) ஹமாரா.

துன்யாகெ புத்கதோ(ன்) மே
பஹ்லா ஓ கஹ்ர் குதாகா
ஹம் உஸ்கே பாஸ்பா(ன்) ஹை(ன்)
ஓ பாஸ்பா(ன்) ஹமாரா.

தேகோ(ன்)கெ ஸாயே மே
ஹம் பல் கர் ஜவான் ஹுயே ஹை(ன்)
கன்ஜர் ஹிலால் கா ஹை
கவ்மீ நிஷா(ன்) ஹமாரா.

மக்ரிப்கி வாதியோ(ன்)மே
கூன்ஜீ அஸான் ஹமாரீ
தஹ்ம்த்தா ந த்தா(ஹ்) கிஸீ ஸே........
ஸைலே ரவா(ன்) ஹமாரா.

பாத்தில் ஸே தப்னேவாலே
அய் ஆஸ்மான் நஹீ(ன்) ஹம்
ஸவ் பார் கர்ச்சுகா ஹை
தூ இம்த்திஹா(ன்) ஹமாரா.

அய் குலிஸ்தானெ உந்துலிஸ்,
ஓ தின் ஹை(ன்) யாது துஜ்(ஹ்)கு
தா(ஹ்) தேரீ டாலியோ(ன்)மே
ஜப் ஆஷ்யா(ன்) ஹமாரா.

அய் மோஜெ தஜ்லா,
தூ பீ(ஹ்) பஹ்ச்சான்த்தீ ஹை ஹம்கு
அப்தக் ஹை தேரா தர்யா
அப்ஸானெ கா(ன்) ஹமாரா.

அய் அர்ஸெ பாக், தெரீ
ஹூர்மத் பகட் மரே ஹம்
ஹை கூன் தெரீ ரகோ(ன்)மே
அப்தக் ரவா(ன்) ஹமாரா.

ஸாலாரெ கார்வா(ன்) ஹை
மீரெ ஹிஜாஸ் அப்னு
இஸ் நாம் ஸே ஹை பாகீ
ஆராமெ ஜா(ன்) ஹமாரா.

இக்பால் கா தரானு
பங்கேதரா ஹை கோயா
ஹோத்தா ஹை ஜாதெ பைமா
பிஹ்ர் கார்வா(ன்) ஹமாரா.

அரபு நாடும் சீனமும் எம்முடையது;
இந்தியாவும் எமதே; நாங்கள் முஸ்லிம்கள்.
உலகம் முழுவதும் எம்முடையது.

ஏகத்துவத்தின் அமானிதம்
எமது இதயங்களில் குடிகொண்டுள்ளது;
எமது பெயரையோ சின்னத்தையோ
அழிப்பது இலகுவன்று.

இணைவைத்து வணங்கப்படும் இப்புவியில்
இறைவனின் தலையாய வீடு கஃபா (ஆகும்);
அதன் பாதுகாவலர் நாம்; எமது காப்பாளன் அவன்.

வாளாயுதங்களின் நிழலிலே
வளர்ந்து யாம் வாலிபமடைந்தோம்.
இரு முனைகளும் கூர்மையான
இளம்பிறையே எம் சமூகச் சின்னம்.

மேற்கின் பள்ளத்தாக்குகளிலே
எமது 'அதான்' ஒலியே எதிரொலிக்கிறது;
எமது முன்னேற்ற வெள்ளத்தைத்
தடை செய்வார் யாருமிலர்.

வானவர்களே, அசத்தியத்தால்
அடக்கப்படக்கூடியவர்கள் யாங்களல்ல;
எம்மைப் பன்முறை பரீட்சை பார்த்தாகிவிட்டது.

ஹே அந்தலூஸ் (ஸ்பெயின்) பூந்தோட்டமே,
உன் கிளைகளில் நாங்கள் கூடு கட்டியிருந்தோமே
அந்த நாள் உன் நினைவிலிருக்கிறதா?

ஹே தஜ்லா (திகிரிஸ்) நதியின் அலையே,
எம்மை நீயும் அறிவாய்;
உன் ஆறு எம் கதைகளைக் கழறுமன்றோ!

ஹே பரிசுத்த பூமியே,
உன் தன்மானங் காக்கவே யாம் உயிரிழந்தோம்.
இன்றளவும் உன்னகத்தே எமது இரத்தமன்றோ
ஓடிக் கொண்டிருக்கிறது!

ஹிஜாஸின் அதிபர் (முஹம்மது [ஸல்]) அவர்களே
எமது காரவானின் தலைவர்;
அவர்களது திருநாமங்கொண்டே
எமது மூச்சின் ஆஸ்வாசம் தரிபட்டுள்ளது.

இக்பாலின் இந்தத் தரானு (முழக்கம்),
காரவானின் மணியோசை யாகும்.
புறப்பட்டு விட்ட படையே எமது படை.

ஹிந்துஸ்தான் குழந்தைகளுக்கான சமூகக் கீதம் ஒன்றையும் இக்பால் எழுதியுள்ளார். அதன் எளிமையும், இனிமையும் நம்மைக் கவரத்தக்கன. எனவே அதையும் முழுவதும் இங்கே தரலாம்:

ஹிந்துஸ்தானீ - பச்சோ (ன்)- கா-கவ்மீ -கீத்

க்ஷிஸ்நீனே ஜிஸ் ஸமீ (ன்) மே
    பைகாமெ ஹக் ஸுனயா,
நானக்னே ஜிஸ் (ச்)சமன் மே
    வஹதத் கா கீத் காயா,
தாத்தாரியோ (ன்) னே ஜிஸ் கு
    அப்னா வ(த்)தன் பனயா,
ஜிஸ்னே ஹிஜாஸியோ (ன்) ஸே
    தஷ்தெ அரப் சு(ஹ) டாயா,
மேரா வ (த்) தன் ஒஹீ ஹை,
    மேரா வ (த்) தன் ஒஹீ ஹை.

யூனானியோ (ன்) கு ஜிஸ்னே
    ஹைரான் கர் தியா (த்) தாஹ,
ஸாரே ஜஹா(ன்) கு ஜிஸ்னே
    இல்மோ ஹுனர் தியா (த்) தாஹ
மிட்டீ கு ஜிஸ்கீ ஹக்னே
    ஸர் கா அஸர் தியா (த்) தாஹ,
துர்கோ (ன்) கு ஜிஸ்னே
    தாமன் ஹீரோ(ன்) ஸே ப(ஹ)ர் தியா(த்) தாஹ,
மேரா வ (த்) தன் ஒஹீ ஹை,
    மேரா வ (த்) தன் ஒஹீ ஹை.

(ட்) டூட்டே தே (ஹ) ஜோ ஸி (த்) தாரே
    பாரிஸ் கே ஆஸ்மா (ன்) ஸே,
பி (ஹ) ர் தாப் தேகே ஜிஸ்னே
    (ச்) சம்காயே கஹகஷா (ன்) ஸே,
வ்ஹதத் கீ லே ஸுனீ(த்)தீ (ஹ)
    துன்யா னே ஜிஸ் மகா(ன்) ஸே,
மீரே அரப் கு ஆயி
    (ட்)டண்டீ ஹவா ஜஹா (ன்) ஸே.
மேரா வ (த்) தன் ஒஹீ ஹை,
    மேரா வ (த்) தன் ஒஹீ ஹை.

பந்தெ கலீம் ஜிஸ் கே
பர்பத் ஜஹா(ன்) கே வஸீஹ,
நூஹெ நபீ கா ஆகர்
(ட்) டேரு ஜஹா (ன்) ஸபீஹ,
ரிப்அத் ஹை ஜிஸ் ஸமீ (ன்) கீ
பாமெ பலக் கா ஜீஹ,
ஜன்னத் கி ஸிந்தகீ ஹை
ஜிஸ் கீ பஸா மே ஜீஹ,
மேரா வ (த்) தன் ஒஹீ ஹை,
மேரா வ(த்)தன் ஒஹீ ஹை.

(காஜா மொயினுத்தீன்) க்ஷிஸ்தி
சத்தியத்தின் செய்தியை எந்தப் பூமியில் பரப்பினரோ,
(குரு) நானக் எந்தப் பூங்காவில்
ஏகத்துவக் கீதத்தைப் பொழிந்தாரோ,
தாத்தாரிய (முகலாயர்கள்) எதைத்
தமது சுய நாடாக ஆக்கிக்கொண்டனரோ,
எது ஹிஜாஸ் வாசிகளை அரபுப் பாலையை விட்டு வந்து
(தன்னகத்தே) குடியேறச் செய்ததோ
அதுவே என் தாய்த்திரு நாடு,
அதுவே என் தாய்த்திரு நாடு.

கிரேக்கர்களைப் பிரமிக்க வைத்தது எதுவோ,
உலகிற்கே அறிவையும் தொழிலையும் தந்தது எதுவோ,
இறைவனால் பொன்னாக (செழிப்பாக)
ஆக்கப்பட்ட மண்ணையுடையது எதுவோ,
துருக்கியரின் முந்தானையை
ரத்னங்களால் நிறைத்தது எதுவோ,
அதுவே என் தாய்த்திரு நாடு,
அதுவே என் தாய்த்திரு நாடு.

பாரஸீக வானிலே உடைந்து கிடந்த
(ஞானியர், கவிஞர்களாய) விண்மீன்கள்,
மீண்டும் ஒளி தந்து ஜொலிக்கச் செய்த
வானம் எங்குளதோ,
ஏகத்துவத்தின் நாதத்தை
உலகம் எத்தலத்திலிருந்து கேட்டதோ,
அரபு நாட்டின் அதிபர் (முகம்மது [ஸல்]) அவர்களுக்கு
தண்ணென்ற பூங்காற்று எங்கிருந்து வீசியதோ,
அதுவே என் தாய்த்திரு நாடு,
அதுவே என் தாய்த்திரு நாடு.

மூஸா (அலை) இறைவனுடன் பேசிய
ஸீனு மலை உலகின் இதயமாகும்.
நூஹ் (அலை) அவர்களின் கப்பல் (கடைசியில் வந்து)
முகாமிட்டுத் தங்கிய ஜூதி மலையும் சிறப்புடையதே!
(இது போலவே) வானமளாவ வளர்ந்து மாளிகைபோல்
அழகு தந்து நிற்கும் (இமய) மலை எங்குளதோ,
எதன் சாரலில் வாழ்வது சொர்க்க வாழ்வோ
அதுவே என் தாய்த்திரு நாடு,
அதுவே என் தாய்த்திரு நாடு.

கவிஞரின் 'ஷிக்வா' (முறையீடு) வும், 'ஜவாபே-ஷிக்வா' (முறையீட்டுக்குப் பதில்)வும் இத்தொகுதியில் தான் உள்ளன. தமிழில் இவற்றின் மொழிபெயர்ப்புக்கள் சில வெளிவந்துள்ளன. உர்தூ கவிதைகள் படிப்பவர்களிடையே இவை பெரிதும் விரும்பிப் போற்றப்படுகின்றன. ஒரு முஸ்லிம், தன் கடந்த காலப் பெருமைகளையெல்லாம் விவரித்து, இப்படியெல்லாமிருக்கத் தன் நிலைமை, தன் சமூகத்தின் தற்கால நிலைமை, ஏன் இத்தனை வீழ்ச்சியுற்றதாக இருக்கவேண்டும் என்று இறைவனிடமே கேட்கிறான். "சதா உன்னைப் புகழ்ந்த நான் இதோ முறையிடுகிறேன், கேள்!" என்று தொடங்குகிறான். இதற்கு இறைவன் பதில் சொல்லுவதாக அமைந்துள்ள 'ஜவாபே-ஷிக்வா'வில், "உன் முன்னோர்கள் செய்த

பெருமையான காரியங்களைக் கூறிப் பெருமைப்படும் நீ சுயமாகச் செய்தது என்ன? உன்னுடைய இன்றைய சமுதாயம் செய்த சேவை, தீரமிக்க செயல் ஒன்று மில்லையே! உன்னிடையில் வகுப்பு வேற்றுமைகளும், பிளவுகளும் ஏற்பட்டிருப்பதுதானே கண்ட பயனாக இருக்கிறது! நபிபெருமானிடம் தளராத நம்பிக்கை கொண்டு அவர்களைப் பின்பற்றினால், இவ்வுலகில் மட்டு மின்றி இவ்வுலகுக்கு அப்பாலும் நீ பெருமையுடைய வனாக இருப்பாய்" என்று கவிஞர் சுட்டிக் காட்டுகிறார்.

இத்தொகுதியில் உள்ள 'ஷாம்-வ-ஷாயிர்' (மெழுகுதிரியும் கவிஞனும்) ஒரு சிறந்த பாடல். இதில் கவிஞனுடன் மெழுகுதிரி சம்பாஷிக்கிறது. இக்காலக் கவிஞர் பலரின் உண்மையற்ற வாழ்க்கையையும், கீழான நிலையையும், சமூகம் உயர அவர்கள் சற்றேனும் பாடுபடாததையும் இப்பாடலில் இக்பால் சுட்டிக் காட்டு கிறார். மெழுகுதிரி எரிகிறது; சுற்றியுள்ள பொருள் களின்மீது வெளிச்சத்தை வீசுகிறது. விட்டில்கள் அதைச்சுற்றி வந்து, தம் உயிரைத் தத்தம் செய்கின்றன. கவிஞனோ பாலைவனத்தில் பற்றவைத்த மெழுகுதிரி போல் பயனற்றுப் போய்விட்டான். ஏனெனில் மெழுகு திரியில் உள்ள நெருப்பைப் போல, உருகுதலைப் போலக் கவிஞனின் இதய நெருப்பு உருகுதலும் இயற்கையான தாக இல்லை. அதனால் அவன் கவிதைகள் மக்களைத் தம் வசப்படுத்தித் தியாகத்துக்குத் தயார் செய்ய முடிய வில்லை. மெழுகுதிரி சொல்கிறது:

நான் எரிகிறேன்;
ஏனெனில், எரிவது என் இயல்பு.
நீயோ மின்மினி வெளிச்சம் தருகிறாய்;
விட்டில்கள் உன்னைக் கண்டு காதலிப்பதெங்ஙனம்?
....

கலை உன் இதயத்திலே இருக்கிறது;
(எனினும்) நீ விக்ரஹ விடுதியை வேட்கிறாய்.
உன் பொறுப்பற்ற வேட்கை கிறுக்குத்தனமானது.
உன் சவையிலிருந்து ஒரு கைஸ் எழுவது சாத்தியமன்று.
உன் பாலைவனம் குறுகியது;
உன் தொட்டிலில் லைலா இல்லை.
ஆனால் இரவின் இருளிலே நம்பிக்கை உதயமாகிறது.

அதை மீண்டும் பெற்றுக்கொள்!
அஃதொரு பெருஞ் செல்வம்.
உன் இதயம் உனக்கே அன்னியமாக இருப்பின்,
இஃதென்ன வாழ்க்கை?
....
ஹா, யாரைத்தேடி நீ அலைகிறாய்?
நீதான் பாதை, நீ தான் வழிப்போக்கன், நீயே வழிகாட்டி;
நீயேதான் லக்ஷியமுமாவாய்.

தன் தாய் இறந்தபோது கவிஞர் எழுதிய இரங்கற் பாடலும் இத் தொகுதியில் உள்ளது.

அம்மா, நீ தந்த பயிற்சியல்லவா
இன்று நான் புகழ்பெற உதவிற்று!
என் முன்னோர் குடும்பம் யாவரும் அறிவதாயிற்று.
என் வாழ்க்கை எனும் ஏட்டிலே
நீ ஒரு பொன் ஓலையாக மிளிர்கிறாய்.
அந்த ஓலை நெடுகிலும் எனக்கு
மதத்தையும் உலக வாழ்க்கையையும் போதித்தது.

இப்பாடலில் மரணத்தின் பல்வேறு அம்சங்களை விளக்கிக் கவிஞர் கூறுகிறார்:

மரணம் என்பது
வாழ்க்கை ஆசையைப் புதுப்பிப்பதற்கு
மறு பெயர்தான்;
தூக்கம் எனும் திரைக்குள்,
அஃது எழுச்சியின் செய்தியாகும்.

'துலு-யே - இஸ்லாம்' (இஸ்லாத்தின் எழுச்சி) இக்பாலின் உணர்ச்சி மிக்க பாடல்களில் ஒன்று. 1914-ம் ஆண்டு தொடங்கிய யுத்தத்தின் பயங்கரங்களைக் கண்டு விட்ட கவிஞர் வருங்காலம் உணர்ந்தவராகப் பாடியது இப்பாடல்.

விண்மீன்கள் மங்குவது
பிரகாசமான காலை வரப்போவதன் அறிகுறியாகும்.
அடிவானத்துக்குமேலே சூரியன் எழுந்துவிட்டான்;
ஆழ்ந்த தூக்க யுகம் கடந்துவிட்டது.
சோம்பிக் கிடந்த கிழக்கின் இரத்தக் குழாயிலே
ஜீவ வோட்டம் தொடங்கிவிட்டது.
இஃது ஒரு ரகசியம்—
இப்னு சீனாவும், இப்னு அரபியும் அறிய முடியாதது.
....

நீலவானுக்கு அப்பால் உள்ளது
முஸ்லிமின் லக்ஷியம்.
நீ எழுப்பும் தூசி நக்ஷத்திரமாக வேண்டிய
காரவானாக நீ விளங்குகிறாய்.
....

இஸ்லாமிய மக்களின் சரித்திரத்தின் மூலம்
உண்மை வெளிச்சமாகிவிட்டது—
அதாவது ஆசிய நாடுகளின்
பாதுகாவலர் நீங்கள்.

இத் தொகுதியின் இறுதியில் உள்ள ஒரு பெரிய பாடல் 'கிஸரே - ராஹ்'. அதில் வாழ்க்கை பற்றியும் அரசாங்கம் பற்றியும் இக்பால் தரும் கருத்துக்கள் நாம் சிந்திக்க வேண்டியவை. அப்பாடலின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

கிஸரே-ராஹ்

'கிஸரின் வழி' இன்றைய அரசியல், சமுதாயப் பிரசினைகளை விமர்சனம் செய்யும் ஒரு கவிதை. மகான்களுக்

கும் ஞானியாருக்கும் வழி காட்டிய கிஸர் (கிலுரு அலேஹி) அவர்கள், இக்பால் மனம் தளர்ந்து அசந்து இருந்த சமயம் அவர் முன் வந்து விளக்கந்தரும் முறையில் பாட்டு அமைந்துள்ளது.

ஒரு நாள் இரவிலே
ஆற்றங்கரையிலே அமர்ந்து
நான் காட்சிகள் கண்டுகொண்டிருந்தேன்.
எனது இதயத்தின் ஒரு மூலையில்
"தொல்லைகளின் கடல்" நெளிந்துகொண்டிருந்தது.

அது மௌனமான இரவு;
ஆறும் அமைதியாக ஊர்ந்துகொண்டிருந்தது.
நிம்மதியற்ற அலைகள்,
தூளியில் தூங்கும் சிசுவைப் போல,
ஆற்றின் ஆழத்துள்ளே உறங்கிக்கொண்டிருந்தன.

இரவின் மாயா சக்தி பறவைகளையும்
அவற்றின் கூண்டோடு கட்டிப் போட்டிருந்தது.
மங்கிய தாரகைகள் சந்திரனின் தாயத்திலே
அகப்பட்டுக்கொண்டிருந்தன.

திடீரென அந்த உலகை அளக்கும் தூதரான
கிஸரைக் கண்டேன்.
முதுமையிடையிலும் காலையைப் போன்று
யௌவன வண்ணமுடையார் அவர்.
அவர் குரல் கொடுத்தார்:
"ஹே நிரந்தர இரகசியங்களைத் தேடுபவனே,
அகக்கண் திறந்துவிட்டால்
உலகின் விதியை மறைத்துள்ள
திரை அகன்றுவிடும் என்பதை அறி!"

இரவு பகலின்றிச் சதா கிஸர் அலைந்து திரிவது ஏன் என்றும், வாழ்கையின் இரகசியம் எது, அரசாங்கம் எது, தொழிலாளி-முதலாளி போராட்டம் எது என்றும் கவிஞர் வினவுகிறார். வாழ்க்கை என்பது ஓயாத அசைவும் மாறுதலுமே என்று கூறும் கிஸர் மேலும் கூறுகிறார்:

குடும்ப வாழ்க்கையின் கோட்டையள்
பாதுகாப்பான இல்லத்திலே,
அதுவே பத்திரமானது என்று
எண்ணிக்கொண்டு வாழும் நீ
சதா அலைந்து திரிவதிலுள்ள இன்பத்தை
அறிவது எங்ஙனம்?

பிரயாணிகள் கூட்டம்
ஓய்வெடுத்து மீண்டும் புறப்படுகையிலெல்லாம்
பாலை மணியோசை
நெடுகிலும் எதிரொலிப்பதைக் கேட்டு
உண்டாகும் உள்ளக் குதூகுதூப்பை
அனுபவியாதவன் நீ.

பாதுகாப்பான ஓரிடத்திலே
அடைபட்டுக் கிடக்காமலும்,
பளுவான பாரத்தைச் சுமக்காமலும்
சுதந்திரமான கால்களுடன் மானானது
காட்டிலே, இங்குமங்கும் அலைவதை நீ காணவில்லை.
உதய தாரகை வெள்ளிப் பிழம்பாக,
ஜிப்ரயீலின் இறக்கைகளைப் போலத்
தன் கதிர்களைப் பரப்பிக் கொண்டிருப்பதையும்
நீ பார்த்ததில்லை.

சதமென நீ கற்பித்துக் கொண்டுள்ள
கட்டுண்ட வாழ்வில் உழலும் நீ,
பாலையின் ஆழ்ந்த மௌனத்திடையே
இப்ராஹீம் நபியைச் சத்தியத்தை உணர வைத்த
சூரியாஸ்தமனக் காட்சியையும்,
அது தூண்டும் உணர்ச்சிப் பெருக்கையும்
எப்படி உணர முடியும்?

வெப்ப மிக்க பாலையில் நடந்து
களைத்த வழிப்போக்கனுக்குச்
சுவர்க்க நீரூற்றையும்விட
இன்பந்தரும் இனிய நீர்த் தண்சுனையை
(நீ அறியாய்).

காதலில் பட்டவர்கள்
ஏகாந்தத்தின் இனிமையை நாடுவது ஏன்?
குடியிருக்கும் இடங்களிலே
விதைப்பது-அறுப்பது எனும் பந்தமின்றி
(வேறு) என்ன இருக்கிறது?

(சிருஷ்டிக்) குயவனின் பானை வனையும் சக்கரம்
சதா சுழல்வதால்,
ஓயாது மாறுவதால் அல்லவா
வாழ்க்கை எனும் பானை உருப் பெறுகிறது!
சதமான வாழ்க்கையின் மர்மம்
முடிவற்ற, மாற்றங்கள் கொண்ட அநித்யமேயாம்.

வாழ்க்கை எது ?

வாழ்க்கை என்பது என்ன என்று
என்னிடமிருந்து நீ அறிய அவாவுகிறாய்.
அது லாப நஷ்டக் கணக்குகளுக்கு
அப்பாற் பட்டதாக இருத்தல் வேண்டும்.
சில சமயம் உயிர் தரித்திருப்பது வாழ்க்கை;
மற்றும் சில சமயம்
உயிர் கொடுப்பது வாழ்க்கையாகும்.

இன்று, நாளையெனும் அளவுகோலால்
வாழ்க்கையை அளக்காதே!
வாழ்க்கை அந்தமானது;
தொடர்படியான சுழற்சி அது;
அமரத்துவமுள்ள யௌவனம் அது.
ஜீவனுள்ளவனாக நீ இருக்க விரும்பினால்
அதற்காக உன் உலகை
நீயே சிருஷ்டித்துக் கொள்.
மனிதனின் இரகசியம் இதனுள் இருப்பதால்
அவன் ஆகுக என்றதும் (எதுவும்) ஆகிவிடுகிறது.

வாழ்க்கை விடுகதையை
நீ வெளிப் படையாக்க விரும்பினால்
பர்ஹத்தின் இதயத்தில் போய்ப் பார்!

தன் காதலியைத் திருப்தி செய்ய
அல்லும் பகலும் பாறைகளைப் பிளந்து
ஒரு பாலாறு ஓடச் செய்யும் ஓயாத வேலையே
அவனுக்கு வாழ்க்கையாய் இருந்தது.

உன் நோக்கைக் குறுகியதாக்கி
உன்னைக் கட்டுப்பாட்டுக்குள்ளாக்கிக் கொண்டால்
வாழ்க்கை நதியின் ஊற்று வற்றிவிடுகிறது.
ஆனால் உன் போக்கு கட்டுப்படாததாயின்
வாழ்க்கையும் எல்லையற்ற பெருங்கடலாகிவிடுகிறது.
வாழ்க்கை ஒரு பானை மண்ணுக்குள்ளே
மறைந்திருப்பதாகவே தோன்றும்.
ஆனால் அது தன் ஆக்கும், நிர்ணயிக்கும் சக்தியால்
தான் அடைய வேண்டிய நிலையை அடைகிறது.

ஜீவித்திருப்பது என்ற சமுத்திரத்தில்
நீ ஓர் அலையே யன்றி வேறன்று;
உன் மதிப்பின் சோதனை வாழ்க்கை யாகிய
இந்த நஷ்ட வீட்டிலே இருக்கிறது.

ஒரு மண் குவியலாக இருக்கும்வரை
நீ வளர்ச்சி பெறாதவன், பக்குவமாகாதவன்.
உன் அகத்தை நீ வளர்த்தால்
எதையும் சாடும் வாளாக நீ ஆகி விடுவாய்.
சத்தியத்துக்காக மரணிக்கும் தாபம் உனக்குண்டா ?
அப்படி யெனின், உன் மண்ணுடலுள்ளே
உயிரைச் சிருஷ்டித்துக்கொள்!
கொடுப்பதற்கு உயிர் இல்லாவிடின்
நீ எப்படி மரணிக்க முடியும் ?

வானங்களையும்,
குடி கூலிக்கு இருப்பது போல
நீ தங்கியிருக்கும் இப்பூமியையும்
சாம்பலாக ஊதித் தள்ளு!
அர்த்தமற்ற உன் வாழ்க்கையிலிருந்து
உனக்கேயுரிய ஒரு புதிய உலகை ஆக்கு!
அங்கே உண்மையான வாழ்க்கை வாழ்.

உன்னுள் மறைந்து கிடக்கும்
வாழ்கை சக்தியை வெளிப்படுத்து!
அதன் மூலம் உன்னகத்தேயுள்ள பொறி
மங்காத ஒளி வீசட்டும்.
உன் முன்னேயுள்ள இருளை யகற்றிக் கொண்டு
கிழக்கேயிருந்து தேன்றும் சூரியன் போல் எழு!

உன் கிரணங்கள்
கிழக்கின் சாதாரண மண்ணிலே
விலையிலா மாணிக்கங்களை உண்டாக்கட்டும் !
இரவிலே உன் அழுகையொலி
வானிலே எதிரொலி எழுப்பட்டும் !
தாரகணங்கள் உன் இரகசியத்தைக்
கேட்பவைகளாகட்டும்.

இந்த நேரம்
இறுதி நாளின் நேரம் என்பதை உணர் !
நீதித் தீர்ப்பு மைதானத்திலே
தெய்வத்தின் சந்நிதானத்திலே
நீ நின்று கொண்டிருக்கிருய்.
உன்னைச் சிருஷ்டித்தவன் முன்
அது சரிதான் என்று இப்போதே நிரூபி !

அரசாங்கத்தின் அந்தரங்கம்

அரசாங்கம் (ஸல்தனத்) பற்றியும்
விளக்குமாறு கேட்கிருய்.
ஆட்சியாளர்களின் வழி (இன்னமல் முல்க்) யை
நான் விவரிக்கிறேன் கேள்.
அரசாங்கம் ஒரு சூன்யக் கலை;
ஆளும் வர்க்கத்தாரால் அது பயிலப்படுகிறது.
ஆளப்படுபவர்களும் தூங்கிக் கிடப்பவர்களும்
விழித்தெழும்போது
ஆளும் சூன்யக்காரர்கள் மீண்டும் அவர்களை
அறியாமை எனும் உறக்கத்தில் ஆழ்த்திவிடுகின்றனர்—
ஆனல் நசுக்கப்படுபவர்கள்
என்றுமே தூங்கிக் கொண்டிருப்பதில்லை.

பனி இஸ்ராயீல்களின் இரத்தம்
கொதிக்கும் நேரமும் வரவே செய்கிறது.
அப்போது ஒரு மூசா தோன்றி
ஸமீரி (போன்ற சூன்யக்காரர்கள்) உண்டாக்கிய
பிரமையை உடைத்தெறிகிறார்.

உண்மையான ஆட்சியும் ராஜ்யமும்
சிருஷ்டியாளனான இறைவனுக்கே உரியவை.
அவன் ஒருவனே ஆளுபவன்;
மற்ற யாவும் மக்கள்தம் அறியாமையால்
முழந்தாளிடுபவை.

உனக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரமான இயல்பை
அடிமைத்தனம் மாசுபடுத்த அனுமதியாதே!
பொய்யான விக்ரஹங்களையும்,
உன்னையே பிணைத்துப்போட்டுவிடும் அதன் குருமார்களையும்
சிருஷ்டியாதே!

மேல்நாட்டின் ஜனநாயகம் என்பது புதியதொன்றன்று.
பிரமைகளையும் அடிமைத்தனத்தையும் உண்டாக்கிய
சூன்யக்காரியின் பாடல்போல அதுவும் பழமையானதே;
ஜனநாயகம் என்பது திரைக்குப் பின்னே,
ஸீஸரின் பழைய அடக்குமுறையேதான்.

அது சுதந்திர தேவதை என நீ நினைக்கிறாய்.
ஆனால் இல்லை;
மக்கள் விருப்பம் என்ற திரைமறைவிலே உள்ள
எதேச்சாதிகார பூதம்தான் அது.
சட்டசபைகள், சீர்திருத்தங்கள்,
சலுகைகள், உரிமைகள்-
இவை யாவும் மேல்நாட்டின் மருத்துவ நூலில் கண்ட
அயர்ச்சியில் ஆழ்த்தும் தூக்க மருந்துகள்தாம்.

சட்டசபைகளில் நெருப்பெழப் பேசுவர்.—
இவர்களிடமிருந்து யாவரையும்
இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்!

செல்வர்கள் மேலும் மேலும் பணம் பெருக்கப்
பயன்படுத்தும் ஆயுதமே இது.

வர்ணமும் வாசனையும் இருப்பதாகத் தோன்றும்
வெளித் தோற்றமே இது.
எனினும் அது நிஜமான ரோஜாவனம் என்று
நீ நினைக்கிறாய்.
அது ஒரு சிறைக்கூண்டு தான்;
எனினும் அது மரத்திலுள்ள கூடு என்று
நீ எண்ணுகிறாய்!

பின்னர் கிஸர் முதலாளி - தொழிலாளி பிரச்னைகளைப்பற்றிப் பேசுகிறார். பாட்டாளிகள் உழைப்புக்கு ஊதியந் தருவதைக்கூடத் தருமங்கொடுப்பது போல்தான் முதலாளிமார்கள் கொடுக்கிறார்கள் என்று கூறும் கிஸர் முடிவில் பேசுகிறார்:

துருக்கனுடைய, அரபியுடைய கதையை
நீ ஏன் சொல்கிறாய்?
இஸ்லாமிய மக்களின் சோகக் கதை
எனக்கொன்றும் புதியதல்லவே!
....
....

திரித்துவத்தின் புத்திரர்கள்
இப்ராஹீமின் பிதுர்ராஜ்ஜிதத்தை
அடித்துச் சென்றுவிட்டனர்.
ஹிஜாஸின் புழுதி
கிறிஸ்தவத்தின் அஸ்திவாரக்கல் ஆகிவிட்டது.
நாடுதான் இனத்தின் கையை விட்டுப் போய்விட்டது.
அதன் கண்கள் விழித்தபடியே இருந்தன.
ஹே அக்கறையற்றவனே,
இறைவன் உனக்குக் கண்ணைத் தந்திருக்கிறானே,
பார் இதை!

அஸ்ராரும் ரமூஸும்

இக்பாலுடைய தத்துவ ஞானத்தின் அடிப்படையை விளக்குபவை "அஸ்ராரே குத்இ" (அகத்தின் இரகசியம்) "ரமூஸி பேகுத்இ" (அகத்துக்கு அப்பாலுள்ள தத்துவம்) ஆகிய இரண்டு பாரஸீக மத்னவீக் கவிதைகளுமாகும். மேல்நாடுகளிலும் கவிஞருக்குப் புகழைக் கொண்டு வந்த முதல் கவிதை "அஸ்ராரே குத்இ" தான். இவ்விரு நூற்களிலும் பலசிறு கதைகளும் உபமானங்களும் இடையிடையே தரப்பட்டு அவர் கூற வந்த தத்துவார்த்த விளக்கங்கள் சலிப்புத் தராதபடி விளக்கப்பட்டிருக்கின்றன. அகத்தை வளர்ப்பது எப்படி என்பதையும், சமுதாய வளர்ச்சிக்காக அகத்தை விட்டுக் கொடுப்பது எப்படி என்பதையும் இவ்விரு கவிதைகளும் காட்டுகின்றன.

அஸ்ராரே குத்இ: ஆசையே வாழ்க்கைக்கு ஜீவ ஊற்றாகும். இது மானிடரின் செயலாற்றலாக வெளிப்படுகிறது. யாசிப்பது அகத்தைப் பலஹீனமாக்குகிறது. அன்பு ஆத்மாவைப் பலமுள்ளதாக்குகிறது; அதன் மூலம் உலக சக்திகள்மீது அகம் அதிகாரம் செலுத்த முடியும்.

அகம் வாழ்க்கைக்குப் பலமளிக்குமாயின்
வாழ்க்கை எனும் நதி கடலாக விரியும்.

....

உன்னிடம் கவிதை எனும் பொன் இருந்தால்
வாழ்க்கை உரைகல்லில் அதைத் தேய்த்துப் பார்!
நெடுநாள் பஞ்சணையில் புரண்டாய்;
இப்போது கரட்டுத் தரையில் படுத்துப் பார்!
கொதிக்கும் மணலில் உருளவும்
குளிர்ந்த நீரில் மூழ்கவும் கற்றுக் கொள்!
எத்தனை நாட்கள்தான் புல்புலைப் போல கூவி அலைவாய்?
எத்தனை நாட்கள் குளிர் சோலையில் வாழ்வாய்?

மலையின் உச்சியிலே ஒரு கூடு கட்டு;
வாழ்க்கைப் போராட்டத்துக்கு உன்னைப் பழக்கு.
வாழ்க்கைத் தணலில் உடலையும் உள்ளத்தையும்
போட்டெடுக்கப் பழகிக் கொள்!

....

ஜீவனின் உருவம் அகத்தால் வருவதே.
நீ காண்பனவெல்லாம்
அகத்தின் இரகசியங்களிலிருந்து வந்தவையே.

....

அகத்தின் இயல்பு தன்னை வெளிப்படுத்தலே.
ஒவ்வொரு சிறு துகளிலும் அகத்தின் பலம் தூங்குகிறது.

....

நோக்கமுள்ளவரை வாழ்க்கையும் நீடிக்கிறது.
அதன் காரவானின் மணியோசையே
நோக்கத்தால் ஜீவித்திருக்கிறது.
வாழ்க்கை, தேடுவதில் மறைந்துள்ளது.
அதன் மூலஸ்தானம் ஆசையுள் புதையுண்டுள்ளது.

....

அறிவு வாழ்க்கையின் பாதுகாப்புக்கான ஆயுதம்;
அகத்தை வளர்க்க உதவும் ஒரு கருவி அறிவு.

....

அகமெனப்படும் ஒளி முனையே
நம் புழுதியின் அடியிலுள்ள ஜீவச் சுடராகும்.
அன்பால் அது அதிகம் (ஒளிவிட்டு) எரியும்.
அதிகம் வாழ்ந்தால்,
அதிகப் பிரகாசத்துடன், இன்னும் அதிகமாக எரியும்.

....

ஒரு பிடி மண்ணைத் தங்கமாக்கு;
சம்பூர்ண மனிதரின் முன்றிலை முத்தமிடு...

அந்தச் சம்பூர்ண மனிதர் நபிபெருமான் (ஸல்) என்கிறார் இக்பால். ஒரு முஸ்லிமின் உள்ளம், முஸ்தபா

(ஸல்) உறைவிடம்: அப்பெயராலேயே நாம் பெருமை யடைகிறோம் என்கிறார்.

வெயிலில் தாகத்துடனிருப்பினும்
பிறரிடம் ஒரு கோப்பை தண்ணீரை இரவாதவன்
மகிழ்ச்சியுடையவனாவான்.

....

அகம் அன்பினால் பலப்படுத்தப்படும்போது
அதன் சக்தி உலகையே ஆட்கொண்டுவிடும்.

....

மரணத்துக்கு இடங்கொடுக்கும் சமுதாயம்,
தன் கவிஞனை வாழ்க்கையை விட்டுப்
புறம்பே செல்லவிடும் சமுதாயம்
கைசேதமடையும்

....

தன்னைத்தான் ஆட்சி செலுத்தாதவனைப்
பிறர் ஆட்சி செய்வார்கள்.

....

இறைவனின் பிரதிநிதியாக இருப்பது நன்று;
புலன்களை அடக்கியாள்வது நன்று.

....

இறைவனுக்காக வன்றித்
தன் வாளை எவன் உருவுகிறானோ
அவன் வாள், அவன் இதயத்திலேயே பாயும்.

ரமூஸி பேகுத்தி: சமூகத்திலே ஒவ்வொரு மனிதனும் ஓர் அங்கமாவான். தன் அகத்தை வளர்ப்பது அவன் கடமையாகும். அதைப்பற்றி 'அஸ்ராரே குத்இ' பேசுகிறது. அந்த அக வட்டத்திற்கு அப்பால் சமூகம் என்ற பெரிய வட்டம் இருக்கிறது. அதனுள் தனி மனிதன் பரந்த அகம் பெற்று, சமூகத்தின் பகுதியாக ஆகிவிடுகிறான். 'சமுதாய வாழ்வுக்கு' அவன் உற்று

துணையாக உதவுகிறன். 'ரமூஸி பேகுத்இ' இத்தகைய ஒரு சமுதாய வாழ்வைப் பற்றிப் பேசுகிறது. இதில் விளக்கப்பட்டுள்ள விஷயங்களின் சுருக்கமாவது: சமூகம் என்பது தனி நபர்கள் பரஸ்பரம் தொடர்பு கொள்வதால் உருவாகிறது. அது சம்பூர்ணமடைவது நபித்துவத்தை (இறைவனின் செய்தி தரும் தூதரை) அடைவதைக் கொண்டாகும். இஸ்லாமிய சமூகத்தின் அடிப்படைத் தூண்களில், ஏகத்துவமே முதலாவதாகும். நம்பிக்கை யிழத்தல், துயரம் பயம்-இவைதாம் தீமையின் ஆதி காரணங்கள். இவை வாழ்க்கையையே நாசம் செய்பவை. ஏகத்துவம், இத்தொல்லைகளைக் களையும். இரண்டாவதுதான் நபித்துவமாகும். முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் தலையாய நோக்கம் மானிட வர்க்கத்தின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவங்களை உண்டாக்குதலாகும். இத்தகைய ஒரு சமூகம் ஒரு நாட்டு வரம்புக்கு உட்பட்டதன்று. 'சுய பூமி' இஸ்லாமிய சமூகத்துக்கு அடிப்படையன்று. இந்தச் சமூகத்துக்குக் கால வரம்பும் இல்லை. ஏனெனில் இதன் நித்தியத்துவம் வாக்களிக்கப்பட்டது. இச் சமுதாயத்துக்கு ஒரு சட்டம் வேண்டும். முஸ்லிம் சமூகத்துக்குத் திரு குர்ஆன் சட்டமாக விளங்குகிறது. நபிவு காலத்தில் இஜ்திஹாத் (புதியன புகுதல்) ஐவிடத் தக்லீத் (முன்னோர் பாதையில் நடத்தல்) நல்லது. சமூகத்தின் ஸ்திரமான தன்மை தெய்வீகச் சட்டத்தைப் பின்பற்றுவதைப் பொறுத்தது. சமூகத்தின் ஆழகு நபி பெருமான் (ஸல்) அவர்களின் ஒழுக்கத்தைப் பின்பற்றுவதைப் பொறுத்தது. இத்தகைய சமூக வாழ்வுக்கு ஒரு மத்திய பீடம் வேண்டும்; முஸ்லிம் மக்களுக்கு அது கஃபாவாக இருக்கிறது.

உண்மை ஒற்றுமைக்கு ஒரு சமுதாய லக்ஷியம் வேண்டும். ஏகத்துவத்தை (த்தௌஹீதை)ப் பாதுகாத்தலும் பரப்பலும் முஸ்லிம்களின் லக்ஷியமாகும். சமு

தாய வாழ்க்கை சம்பூர்ணமடைய, தனி மனிதனைப் போலச் சமூகத்துக்கும் அக உணர்வு வேண்டும். சமூதாயப் பெருமைகளைப் பாதுகாப்பதன் மூலம் அந்த அக உணர்வை வளர்க்க இயலும். மானிட வர்க்கத்தைப் பாதுகாப்பது தாய்மையைப் பொறுத்தது. தாய்மையைப் பாதுகாத்தலே இஸ்லாத்தின் உண்மையான குறிக்கோள். நபி பெருமான் (ஸல்) அவர்களின் புத்திரி பாத்திமாவே முஸ்லிம் பெண்களுக்குச் சரியான முன் மாதிரி யாவார்.

'ரமூஸி பேகுத்இ' யின் பொருளைக் கீழ்க்கண்ட பகுதிகள் விளக்குகின்றன.

தனிநபர் ஜமாஅத் (சமூகம்) துடன்
தொடர்பு கொள்வது ஒரு வரப்பிரஸாதமாகும்.
அதன் உண்மை நிலை மில்லத் (சமூகம்) மூலம்
கமால் (சம்பூர்ணம்) அடைகிறது.

....

ஒரு தனி நபர் தன் தனித்தன்மையைச்
சமூகத்தினுள் மூழ்க்கும்போது,
அகண்டத்தைத் தேடும் துளி
செங்கடலாக விரிகிறது.

....

தனிநபரின் இயல்பு ஒற்றுமையில் நாட்டமாவதாகும்.
சமூகத்தில் அவன் சேர்ந்தாலே
அவன் பாதுகாவலுடனிருக்கலாம்.

....

'எவ்வளவு, எப்படி' என்ற உலகில்
தேடியலைந்தது அறிவு;
ஏகத்துவத்தின்மூலம் அது லக்ஷியத்தை அடைந்தது.

....

ஆசையற்றிருத்தல் என்பது மரணமேயாகும்.
"நிராசையடையாதே!" என்பதன் மூலமே

வாழ்க்கை ஸ்திரம் பெறுகிறது.

....

சர்வ வல்லமையாளனான இறைவன்
நம் உடலைப் படைத்தான்;
நபித்துவத்தின்மூலம் நமக்கு உயிரளித்தான்.

....

சபையின் விளக்காகத் "தாய்நாடு" வந்ததும்,
மனித இனமே
பல கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.

....

ஒரு சமூகம் தன் சட்டத்தை இழந்தால்,
அதன் அங்கங்கள் புழுதி போல் கலைந்துபோகின்றன.

....

உன் மூதாதையர் பாதையைப் பின்பற்று!
ஏனெனில் அதுவே ஐக்கியவழி.
'தக்லீ'தின் தாத்பரியம் சமூகத்தைப் பாதுகாத்தலாகும்.

....

தீர்க்க திருஷ்டியற்ற 'உலமா'வின் இஜ்திஹாத்தைவிட
நமக்கு முன்னிருந்தோர் முன்மாதிரியைப்
பின்பற்றுவது பாதுகாப்பானதாகும்.

....

முஸ்லிமின் புனித இயல்பு
ஒரு நன்முத்தைப் போன்றது;
அதன் பிரகாசமெல்லாம்
நபிபெருமான் (ஸல்) எனும் சமுத்திரத்தால் வருவது.

....

ஆண்களின் நிர்வாணத்துக்குப்
பெண் ஆடையாவாள்;
அவளுடைய கொள்ளை அழகு
அன்பின் அணிகலனாகும்.

பயாமே-மஷ்ரிக்

காஜா ஹாபீஸ் எழுதிய திவானின் ஜெர்மன் மொழி பெயர்ப்பைப் படித்துவிட்டு உணர்ச்சிபெற்ற ஜெர்மானிய தத்துவ ஞானி கெத்தே தானும் மேற்கு நாட்டுத் 'திவான்' ஒன்றை எழுதினர். அதற்குப் பதில் தரும் முறையில் இக்பால் இந்த 'பயாமே மஷ்ரிக்' (கீழ்நாட்டுச் செய்தி) என்ற தொகுதியை வெளியாக்கினர். இத் தொகுதியிலுள்ள பாடல்களின் நோக்கம் தனிநபர்களுடையவும், சமூகங்களுடையவும் அக வளர்ச்சிக்கும் நீதி, சமய, தேசிய உண்மைகளுக்கும் உள்ள சம்பந்தத்தை உணர்த்துவதாகும். திரு குர்ஆனில், "இன்னல்லாஹ-லா-யுகைய்யிரு-மா-பிகௌமி-ஹத்தா-யுகைய்யிரு-மா-பிஅன்பூஸிஹிம்"—(ஒரு மக்கள் கூட்டம் தம் அகத்திலுள்ளதை (முதலில்) மாற்றிக் கொண்டாலன்றி, இறைவன் நிச்சயமாக அவர்கள் நிலைமையை மாற்றுவதில்லை 13:11-) என்றுள்ள உண்மைதான் 'பயாமே மஷ்ரி'யின் அடிப்படையாகும். இத்தொகுதியில் பல பகுதிகள் உண்டு. முதல் பகுதிதான் 'லால-யே-தூர்' (தூர்ஸீனவின் பூவரசம் பூ) என்பது. இதில் மொத்தம் நூற்று அறுபத்து மூன்று ருபைகள் உள்ளன. அவை யாவும் மொழிபெயர்க்கப்பட்டிருந்தும்கூட, இச்சிறு நூலில் போதிய இடமின்மையால் அவற்றில் நூற்று நாற்பத்து ஏழு ருபைகள் மட்டும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்குத் தேவையான விளக்கத்தையும் இத்துடனேயே சேர்க்க இயலாது போயினும், இந்த மொழி பெயர்ப்பைப் பல முறை மீண்டும் மீண்டும் படித்தால் இவற்றின் கருத்தழகை உணர்ந்து மகிழலாம். அடுத்த பகுதியிலுள்ள 'தஷ்கீரே - பித்ரத்' (இயற்கையின் வெற்றி) என்ற கவிதையும் விளக்கங்களுடன் அடுத்துத் தரப்பட்டுள்ளது. இத்தொகுதியில் மற்றும் கஸல்களும், ஐரோப்பியப் பிரச்னைகளைப்பற்றிய பாடல்களும் உள்ளன.

லால-யே-தூர்

சகல ஜீவராசிகளும்
அவன் நாட்டத்துக்குப் பலியாகின்றன.
எல்லா உயிர்களும்
அவன் தேவையால் நிரம்பியுள்ளன.
அதிகாலையின் வான வளையத்திலே
வானில் தகதகக்கும் செம்பரிதி
தன் நெற்றித் தழும்பை விட்டுச் செல்கிறது.

(நெற்றித்தழும்பு - தொழுகையால் நெற்றியில் ஏற்படும் தழும்பு. இது அருணோதயக் கருங்கோட்டோடு உவமையாயிற்று.)

உள்ளே எரியும் செந்தணலால்
என் இதயம் வெளிச்சமாக இருக்கிறது.
உன் கண்களில் இரத்தம் கசிகிறது;
எனினும், அவை உலகம் முழுவதையும் நோக்குகின்றன.
காதல் என்பது சித்தப்பிரமை என்போன்
வாழ்வின் மர்மங்களை அறியாதவனாவான்.
பூங்காவுக்கு வசந்த காற்றைத் தருவது காதல்;
முகட்டிலே தாரகை முகைகளுக்கு
ஒளி தருவது காதல்;
உணர்ச்சி எனும் ஒளிப் பிழம்பு
கடலினூடே ஊடுருவுகிறது.
(அதனால்) காதல்,
மீன்களுக்கு வழியுணரும் கண்களைத் தருகிறது.

கழுகுகள் விலையை
இலகுவில் மதிப்பிடுவது காதல்;
ஊர்க்குருவிகளை
ராஜாளிகளின் பிடியிலகப்படுத்துவதும் அதுவே.
நம்மிதயங்கள் தமது பாதுகாவலில் கவனமாயுள்ளன;
எனினும், திடீரெனக் காதல் வெளியில் குதிக்கிறது.

சிவப்பு மலர்களுக்கு
வர்ணந்தீட்டுவது காதல் ;
உணர்ச்சி எனும் கசப்புச் செடிக்கு
ருசியூட்டுவது காதல் ;
இந்த (க் களி) மண் சடலத்தைப் பிளந்தால்
அதிலிருந்து காதலின் குருதி கொட்டுவதை
நீ காண்பாய்.

காதல் இதயத்துக்கு நிகரேதுமில்லை;
சகல உணர்ச்சிகளும்
காதலின் குரலுக்குப் பணிகின்றன.
பூவரசம்பூ(காதல் நெருப்பால்)
சூடுபட்ட இதயத்தோடு மலர்கிறது ;
மாணிக்கக் கல்லின் இதயத்திலோ
எந்த நெருப்புத் துளியுமில்லை.

பூங்காவிலே மணம் குன்றிய சுகந்தமாக
நான் உழல்கிறேன் ;
நான் என்ன தேடுகிறேன்,
என் தேவை என்ன என்று அறியேன்.
என் ஆசை பூர்த்தியாகுமோ அல்லவோ,
ஆசைக்குத் தாரையாகி இங்கு நான் எரிகிறேன்.

உலகம் வெறும் மண் ;
நம் இதயம் அதன் மாசூலாகட்டும் !
எனினும் இந்தக் குருதித் துளி அதன் மர்மமா ?
நிச்சயமாக நம் பார்வை இரண்டுபட்டது ;
இல்லையேல்,
ஒவ்வொருவரும் தமது இதயத்தி னகத்தேயே
உலகைக் காணலாமே !

விடியும் வேளையில்
புல்புல் பறவை தோட்டக்காரனிடம் கூறிற்று :
“ இந்தக் களிமண்ணுள்ளே
துயரத்தின் ஆணிவேர் புதைந்துள்ளது ;
இது முதுமை யெய்தும் வரை
பாலைவன முட்செடி இதில் தழைக்கும்.

வாலிபத்திலே ரோஜா மலர்கிறது,
மடிவதற்காக."

நமது இந்நில வுலகிலே,
நஷ்டம் லாபத்தோடு பிறக்கிறது;
அழிவு ஜீவனோடு பின்னிக்கிடக்கிறது.
நெடுநாள் நம்பிதயம்
அதில் தரிக்க இயலாது.
(விரைவிலோ, சற்றுத் தாமதித்தோ)
புதியதைப் பழையதாக்கி,
மீண்டும் அது சிருஷ்டிக்கும்.

காதல் வீணையிலே மானிடன் ஒரு தந்தி;
மர்மமும், அதைத் தெளிவிப்பவனும் மானிடனே.
இறைவன் உலகைப் படைத்தான்;
மனிதன் அதை அதிக வனப்பினதாக்கினன்.
அப்படியானல் மானிடன் இறைவனோடு
போட்டியிடப் போகிறவனே?

என் நாட்டத்துக்கு ஆரம்பமுமில்லை, முடிவுமில்லை;
மர்ம உலகை நான் தேடுவதே மர்மமானது.
அங்கே சகல உண்மைகளும்
திரையகற்றப்பட்டு நிற்கும்.
எனவே நான் தேடினல்
ஒரு வேளை அது அகப்படலாம்.

இதயமே,
எத்தனை நாட்களுக்கு இந்த ஊசல் துடிப்பு!
என்றைக்குத்தான்
உன் ஆண்மையை வெளிப்படுத்துவாய்!
அன்னியர் நெருப்பின்மேல்
நீ ஏன் வட்டமிடுகிறாய்?
போ, உன் சொந்த நெருப்பிலே
உன்னைத் தகித்துக்கொள்!

கற்கோட்டையைவிட உறுதியான உடலும்
ஒரு பிடி மண்ணுகிவிடுகிறது.
எனினும் துயர உணர்வுள்ள இதயம்,
மலையருகே ஓடும் ஆற்றைப் போல
அதனுள் அடித்துக் கொள்கிறது.

நீராலும் மண்ணுலும்
ஓர் அழகிய உருவை இறைவன் சமைத்தான்.
சொர்க்கப் பூங்காவைவிட
அருமையான உலகை ஆக்கினுன்.
இருப்பினும்,
சாகிஇ தன் நெருப்பால்
என் (உடல் மக்கிய) புழுதியிலிருந்து
ஒரு புதிய உலகைத் தோற்றுவித்துள்ளாள்.

கியாம நாளிலே
பிராமணன் இறைவனிடம் சொன்னுன்:
"வாழ்க்கையின் பிரகாசம்
(சட்டெனத் தோன்றி மறையும்) ஒரு பொறி;
ஆனுல் நான் கோபமூட்டாது பேசவேணுயின்
ஆதமின் களிமண்ணைவிட
விக்ரஹம் நீடித்திருந்தது என்பேன்."

விடி வெள்ளியே,
சட்டென நீ மறைந்துவிட்டாய்.
எங்கள் தூக்கத்தைக் கண்டு
மனங் கசந்துதாஞே (அப்படி மறைந்தாய்)?
அறியாமையால் நான் பாதையிழந்தேன்—
வந்தவர்களே, விழியுங்கள் !
விழித்தவாறு மறையுங்கள் !

மதுக் கடையில் சந்தடியில்லை;
நமது மண்ணின் அலக்ஷியத்தால்
எந்தக் கதிரும் ஒளிதரவில்லை.
காதலுமில்லை;
காதலின் எச்சரிக்கையுமில்லை.

இதயம் உள்ளத்தின் இரகசியத்தை
உணர்ந்திருக்குமானால்......

எக்களிப்போடு
உயரே வட்டமிடும் புது உணர்ச்சியே,
நீ இறக்கையடித்துப் பறந்து இன்பம்பெற
இறைவன் உன்னை ஆக்கினான்.
நாம் வேகமாய்ப் பறப்பதைத்
தேக இச்சை தடுக்கிறது.
நீயோ பரமானந்தத்தில்
வானை நோக்கிக் கிளம்பிவிட்டாய்!

அருமை இறைவனே,
வாழ்வது, இருப்பது எத்தனை இனிய இன்பம்!
ஒவ்வோர் அணுவின் இதயமும்
பிரகாசமான மகிழ்ச்சியோடு துடிக்கிறது.
ரோஜாச் செடியிலே அரும்பு விடும் மொட்டு
வாழ்க்கையின் பேரின்பத்தால்
புன்னகையோடு மலர்கிறது.

அழிந்து கொண்டிருந்த ஈசல் கேட்டது:
"ஒரே ஒரு கணம் எனக்கு
வாழ்க்கையின் கணப்பையும் ஜுரத்தையும் தா!
விடிகையிலே என் அஸ்தி
காற்றில் பறக்குமெனினும்,
ஓர் இரவு முழுவதும்
எரியவும் போராடவும் எனக்கு வலிமை தா!"

முஸ்லிம்களே,
எனது இதயத்துள்ளே ஒரு வார்த்தை யுண்டு;
அது ஜிப்ரயீலின் ஆத்மாவைவிட வெளிச்சமானது-
நெருப்பின் மக்களிடமிருந்து
அதை நான் மறைத்து வைத்திருக்கிறேன்.
அது இப்ராஹீம் நபி நன்கறிந்த இரகசியம்.

இதயமே, எனது இதயமே,
நீ என்னைத் தனியே விட்டுப் போய்விட்டாய்.

கணத்துக்குக் கணம்
நீ புது ஆசைகளை உண்டாக்குகிறாய்,
இதயமே, உனக்கு வேறு வேலை யில்லையா?
நீ ஒரு தாரகையின்
அகத்தை அடைந்துவிட்டாய்;
ஆயினும் உன்னைப் பொறுத்தவரை,
நீ அதை அறியாய்.
தானியக் கதிர் தலை நீட்டுதல் போல்
உன்மீது ஒரு கண் திறக்கிறது.
நீ பூமியிலிருந்து
ஓர் இளஞ் செடிபோல் கிளம்புவாய்.

அதிகாலையிலே, இலையடர்ந்த தோட்டத்திலே
ஒரு பறவையின் பாடல் காற்றில் மிதந்தது.
அது எத்தனை இனிமையாக இருந்தது!
"உன் உள்ளத்தில் எது இருப்பினும் வெளியிடு-
பாடு, அல்லது துயரப்படு,
அல்லது பெரு மூச்சுவிடு அல்லது அழு!"
(என்றது அப்பாடல்.)

வாழ்க்கைப் போதனையை
நீ என்னிடமிருந்து பெற முன்வந்தால்,
மிகவும் ரகசியமான மர்மமொன்றை
நான் உனக்குச் சொல்வேன்:
உன்னகத்தே ஆத்மா இல்லாததால்
நீ சாகவேண்டியதே;
உன்னிடம் ஆத்மா இருப்பின்
நீ சாக மாட்டாய்.

மெழுகுதிரி எரியும்
உன் கதையை நிறுத்தப்பா!
அதைக் கேட்டுக் கேட்டுக்
காது புளித்துப் போய்விட்டது.
தீவிரமாகப் போராடி
இன்பமாய் எரிந்து மடியும் ஈசலைத்தான்
நான் மதித்துப் போற்றுகிறேன்.

உன்னை உனக்கே அன்னியனுக்கும்
அந்த இனிமையான பானத்தை
நான் அருந்தவில்லை.
எனவே, என் கடைவீதியில்
வேறு சாமான்கள் தேடாதே !
என் இதயமும், ரோஜாவைப் போல்,
இரத்தம் சிந்துகிறது.

எனது பூங்காவில் உலவினுல்
உனக்கு நஷ்டமேயன்றி வேறில்லை;
தேட்டத்தாலேயே உன் ஆத்மா பலியாகிவிடும்.
ரோஜா மலரின் நரம்புகளில் என்ன ஓடுகிறது
என்று நான் காட்டுகிறேன்.
(அது) ஜாலமான மணமுமன்று,
என் வசந்தத்தின் வர்ணமுமன்று.

எப்படி, எங்கிருந்து
என்ற இவ்வுலகிலிருந்து ஓடு—
இருப்பதா, இல்லாது போவதா
என்ற புயலிலிருந்து (ஓடு)!
"தான்" தன்மை
உன் குருதியில் குடி கொள்ளட்டும்;
இப்ராஹீம் (அலைஹி) போல
ஒரு புனித ஸ்தலத்தைக் கட்டிக்கொள்.

அந்த மேட்டில் உலவும் பறவைகள்
நான் அறியாதவை;
இங்கே என் கூட்டினருகில் இருந்து
நான் ஏகாந்தத்தில் பாடுகிறேன்.
உன் மனம் மிகவும் இளகியதாக இருப்பின்
என்னைவிட்டு அகன்று போ !
என் கீதத்தில்
என் ஜீவனே வெளியாகிக் கொண்டிருக்கிறது.

எனது இறைவனே,
உலகை நிறைக்கும் இனிய உணர்வுதான் என்னே !
ஓரே கோப்பையால்

நீ உலகையே மஸ்து மயமாக்கிவிட்டாய்!
பார்வை பார்வையோடு கலக்கச் செய்துவிட்டாய்.
ஆனால், இதயம் இதயத்திலிருந்து,
ஆத்மா ஆத்மாவிலிருந்து
பிரியும்படி செய்து விட்டாயே!

சிகந்தர் தன் வழிக்காட்டியிடம்
சாதுர்யமாகப் பேசினார்:
"நிலத்திலும் நீரிலும் அலைந்து திரியும்
இக்கடின முயற்சியில் பங்குகொள்;
களத்தைவிட்டு விலகி நின்று
போராட்டத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிராதே!
போராட்டத்தில் இறங்கி மடி.
அது வாழ்வதைவிடச் சிறந்ததாகும்."

கை அரசன் அரியணையும்,
ஜாம் சக்ரவர்த்தியின் கிரீடமும் மண்ணே;
கோயிலும், தேவாலயமும்,
இப்ராஹீமின் கபுரும் மண்ணே;
என்னகத்தே என்ன திறம் உண்டு
என்று நான் அறியேன்—
நான் வானங்களுக்கு அப்பால் நோக்குகிறேன்!
எனினும், நானும் மண்ணே!

உன்னுடைய ஒரு பிடி மண்ணினுள்ளே
ஓர் இதயமும், சூடான குருதியும் இருப்பின்,
வசந்தகால மேகங்களிடமிருந்து
நீ அழக் கற்றுக் கொண்டிருப்பின்,
உன்னுடைய துயரக் கண்ணீரிலிருந்து
சிகப்பு மலர்கள் முகை அவிழும்.

ஒவ்வொரு மூச்சிலும்
புதிய உருவங்கள் வார்க்கப்படுகின்றன.
எந்த ஓர் உருவிலும்
வாழ்வு நிலைத்து நிற்பதில்லை.
உன்னுடைய இன்று,
உனது நேற்றை மாதிரியே இருந்தால்

உன் மண்ணிலே
எந்தத் தீப்பொறியும் இல்லையென்றனர்

உன் இதயம் என்பது என்ன என்று
நீ விசாரணை செய்கிறாயா?
நெருப்பு அறிவை விழுங்கியதும்
இதயம் ஜனனமாயிற்று.
போராட்ட இன்பம் இதயத்துக்கு உகந்தது.
அது நின்றதும்
இந்த இதயம் மீண்டும் மண்ணாகிவிட்டது.

மனம் சொல்லிற்று,
கண் அவனை எய்த முடியாதென்று.
எனினும், நாட்டத்தின் பார்வை
நம்பிக்கையோடும் பயத்தோடும் நடுங்குகிறது.
தூர் வஸீனாவின் கதை
பழமையடைவதில்லை;
எனினும் ஒவ்வோரிதயமும்
மூஸாவின் பிரார்த்தனையைத்
தானும் முணுமுணுக்கவே செய்கிறது.

தேவாலயம், கோயில்,
மடாலயம், மஸ்ஜித்—யாவும்
இம்மண்ணாலான கையாலானவை.
அன்னிய ஆதிக்கத்திலிருந்து
இதயமே (யாரையும்) காப்பாற்ற முடியும்.
ஆனால் அந்தோ மூடனே,
நீயோ இதயத்தைக் கண்டுகொள்ளவில்லையே!

இந்த நந்தவனத்திலே
என் இதயப் புண்ணைப்
பிணைத்துக் கொள்ளவில்லை.
ஆனால் இந்தச் சிறையிலிருந்து
மேல் நோக்கி முன்னேறுகிறேன்.
காலையின் ஒரு மூச்சைப் போல
(இங்கு)ச் சற்றே தாமதித்தேன்.

நான் போகிற போக்கில்
மலர்களுக்கு மணம் நல்கினேன்.

இந்த இளமை ததும்பும் மதுவைக்
கோப்பையில் ஊற்றினேன்.
அது மரண நிலையிலுள்ள முதிய குடிகாரனையும்
பிழைத்தெழச் செய்கிறது ;
பழைய கிழவர்களைப் போல
நானும் இந்த மதுவைச்
சாகியின் மருளும் விழிகளிலிருந்து
கடன் வாங்கினேன்.

ஒவ்வொரு மனிதனின் சிரத்திலும்
அறிவும் அடக்கமாகியுள்ளது.
எனது சதையும், பிறருடையதைப் போல
மண்ணாலும் குருதியாலும் ஆனதே;
ஆனால் இந்தச் சதையிலே
ஓர் எல்லையற்ற சிந்தனை வாழ்கிறது.
இந்த மர்மத்தை நான் புரிந்துகொண்டேன்.

(தூர்) ஸீனாவின்மீது யாசகனாய் நிற்கிறாய் ;
ஏனெனில், உன் ஆத்மா தானாகவே தன்னை அறியவில்லை.
துணிந்து முன்னேறு ;
ஒரு (சரியான) மனிதனைத் தேடி அடை.
அந்த விசாரணையில்
இறைவனே உதவி புரிகிறான்.

எனது இந்தச் செய்தியை ஜிப்ரயீலிடம் ஓதவும் :
"எனது உடல்
ஒளிவிடும் வெளிச்சத்தால் ஆனதன்று ;
எனினும் இப்பூமியின் புத்திரர்களின்
மனோ வேகத்தைப் பாரும்!
இந்தத் துயர இன்பத்தை
வெளிச்சத்தின் மக்கள் யாரும் அறிய முடியாது."

அறிவு, (ஆத்மப்) பறவையை
வலைப்படுத்திவிட்டதா ?
அதிக உறுதி கொள்ளாதே!
ஐயம் உன்னைச் சிறைப்படுத்தட்டும்!
செயலாற்றுவாயா ?
அப்படியானால் உன் தெய்வ நம்பிக்கை
இன்னும் நன்கு பக்குவமாகட்டும்.
நீ நாடுவது ஒன்றாகவே இருக்கட்டும்.
ஒன்றையே பார்; ஏகமாக (ஒன்றாக)வே இரு.

மனம் ஒரு திரையைப் பின்னுகிறது;
அந்தத் திரை உன் பார்வையை மறைக்கிறது.
அந்தோ, எனது கண்கள்
உன் வதனம் காணத் துடிக்கின்றன!
சிந்தனை ஆசையோடு சதா போராடுகிறது.
என் ஏழை நெஞ்சிலே
நீ எவ்வளவு கொந்தளிப்பை எழுப்பிவிட்டாய்!

மரணத்தைப்பற்றி எண்ணியதுமே
உனது உள்ளம் பதறுகிறது;
சுண்ணும்பைப் போல் வெளுத்துவிடுகிறாய்.
அஞ்சாதே!
இன்னும் அதிகப் பருவமான 'தான்' தன்மையடை!
அதன் பிடிப்பிலே
மரணத்தின் பின்னும் நீ சாகமாட்டாய்!

எனது உடலையும் ஆத்மாவையும்
எது சேர்க்கிறது என்று ஏன் வினவுகிறாய் ?
'எப்படி', 'எத்தனை காலம்' என்ற கண்ணிகளில்
நான் அகப்படுவதில்லை.
ஒரு கணம் என் மூச்சு தடைப்படுகிறது;
ஆனால் மூங்கிலின் (புல்லாங்குழலின்) தழுவலிலிருந்து
தெளிவாய் நான் வெளிப்படுகையில்
நான் ஒரு கீதமாக இருக்கிறேன்.

ஞானவானான ஷேகு சொன்னார்:
"உன் ஒவ்வொரு நாளும் நாளையின் செய்தியாகும்.
லக்ஷியமற்ற (கண்டதே காட்சி என்ற) கூட்டத்திடமிருந்து
உன் இதயத்தைக் காப்பாற்று!
அவனுடையதன்றி வேறு எப்பாதமும்
அப்புதிய பூமியில் படாமலிருக்கட்டும்!

கிதாப் (குர்ஆன்) எதைக் காட்டுகிறது என்று
ராவியிடம் (தத்துவ வாதியிடம்) ஏன் கேட்க வேண்டும்?
பார், அதன் சிறந்த விரிவுரையாளன் நான்:
மனம் ஒரு நெருப்பைப் பற்றவைக்கிறது;
இதயம் எரிகிறது—
இப்படி நம்ரூத்-இப்ராஹீம் கதையை
(தத்துவார்த்தமாக) உய்த்துணர்!

நான் இருப்பினும், இல்லை எனினும் சரி,
நான் மௌனமாயிருக்கிறேன்.
'நான் இருக்கிறேன்' என்பது
தன்னையே ஆராதனை செய்வது.
அப்படியானால் இந்தப் பாடுபவன் யார்?
எனது இதயத்துள்ளே "நான் இருக்கிறேன்" என்று
சப்தமிடும் பாட்டு யாருடையது?

கடுமையாக நடக்கும் மந்திரியே,
ஒரு வேளை நீர் அறியீரோ,
மரணத்துக்குப் பிறகு
அன்புக்கும் நீதித் தீர்ப்பு உண்டு என்பதை?
ஆனால் அந்த மண்டபத்திலே
கிதாபுமில்லை, தராசுமில்லை, பாவமுமில்லை.

(தானாக) ஒளிபெறும் நீர்த்துளி.
நூறு முத்துக்களிடையிலே
தானும் ஒரு முத்தாகத் தோன்றும்,
எனவே, இக்கோஷ்டி கானம் பாடுவோரிடை

அவ்விதமே வாழ்;
அவர்கள் தோட்டத்தையே
உன் தொழுகையிடமாக்கிக்கொள்.

கரையிலே விருந்தயராதே!
வாழ்க்கைக் கடலின் அலைகள்
அங்கு மிக மெதுவாகவே ஒதுங்குகின்றன.
கடலுள் மூழ்கு; அலைகளோடு போராடு!
போராட்டத்தின் மூலம்தான்
அமரத்துவம் அடைய முடியும்.

நான் மறைவாயுள்ள ஓர் எண்ணம்:
வார்த்தை வலை பின்னுவோரின்
துருதுருத்த பார்வை
எனக்கு வெறுப்பூட்டுகிறது.
சுதந்திரமான எண்ணம்
அல்லது விதி என்று பேச வேண்டாம்!
காரணம் நான் உயிருள்ளவன்,
புரட்சி ஊட்டாடும் மண்.

இவ் வாழ்க்கையின் லக்ஷியம்பற்றி
நீயொன்றும் பேச வேண்டாம்!
அதன் இனிய மொழியைக் காண
உனக்குக் கண்ணில்லை.
இந்தப் பாதையில் நடப்பதில்
எனக்கு மகிழ்ச்சி அதிகம்;
கல் நிறைந்த பாதையன்றி நான்
வேறு எதையும் உணர்வதில்லை.

உன் பார்வையை ஒரு பாறைமீது ஊன்றினால்
உன் பேராசையால்
அதுவும் பொன்னாகத் தெரிகிறது;
பொன்னின் அடிமையே,
உன்னையும் பொன்னால் நிறுக்காதே!
அந்த இழிந்த கல்லுக்கு
மூலாம் பூசிவிட்டது உன் பார்வைதான்.

காதலைப் பற்றியும்
அதன் மாயாவித்தனத்தைப் பற்றியும் பேசாதே!
நீ எந்த உருக் கொண்டாலும்
அஃது உன்னுள் புகுந்துகொள்கிறது.
நெஞ்சகத்தே அஃது ஒரு பொறிதான்;
நாவிலோ அஃது எல்லையிலாப் பெருங்கதை.

இன்று கிளர்ந்த இனிய முகையே,
ஏன் நீ தனிமையில் தவிக்கிறாய் ?
இந்தத் தோட்டச் சந்தையிலே
நீ என்ன தேடுகிறாய் ?
இங்கே பனியும், ஆறும்,
காலைக் கீதமும், புல்புல் பறவைகளும்,
சிவந்த நறுமலர்களும், வேனில் காற்றுமுண்டு.

வாடிய ரோஜா மலரொன்று ஒரு நாள்
என்னிடம் சொல்லிற்று:
"மின்னலைப் போல்
ஒருகண ஜ்வாலை என வெளியானேன்.
சைத்ரீகனின் கஷ்டத்தால்
என் இதயமும் வேதனையுற்றது;
அவன் தூரியின் வர்ணந் தீட்டல்
இத்தனை விரைவில் மங்கிவிட்டது!"

நமது இவ்வுலகை நோக்கு!
நாட்களாலான வாரிதியில் மூழ்கிய மீனைப் போல
அதற்கு ஓர் எல்லை இல்லை.
நாட்களின் கடல்
ஒரு கிண்ணத்தில் அமிழ்ந்துவிட்டது !
(ஆனால்) நீ கண்கொண்டு காணமட்டும் வேண்டும் !
உனது இதயத்தின்மீது
உன் பார்வையைப் பதித்துக்கொள் !

இந்த ரோஜாப் பள்ளத்தாக்கு,
உண்மையிலேயே
இதன் தோற்றத்தைப் போல்தானா (இஃது இருக்கிறது) ?

பூவரசம் பூவின் நெருப்பு இதயத்தை
ஒளிவிடச் செய்வது எது ?
நாம் பார்க்கும் மேட்டு நிலம்
ஒரே வர்ணக் கடலாய்த் தோன்றுகிறது ;
புற்கள் அதை எப்படி நோக்குகின்றனவோ,
யாருக்குத் தெரியும் ?

நானோர் வலம் வரும் கிரணம் ;
நீ என் சூரியன்.
உன் பார்வையால் என்னைக் குளிப்பாட்டும்
வெளிச்சம் இதோ வீசுகிறது !
உன் சந்நிதானத்திலிருந்து விலகினால்
நான் சம்பூர்ணமற்றிருக்கிறேன்.
நீயே கிதாப்,
நான் அதில் ஒரேயொரு ஜுஸ்வு (அத்தியாயம்).

என் பார்வையில் தங்கும்
அவன் நிழல் இனிமையுடையது.
எனது உயிரைக் கொள்ளை கொள்ளும்
அவன் அன்பு அதனினும் இனியது.
தீர்க்கமான அறிவு படைத்த ஓர் ஆசான்
எனக்கு இதைப் போதித்தான் :
ஓரிடத்தில் தங்கியிருப்பதைவிடச்
சுற்றி வளைந்து செல்லும் பாதை (பயணம்) நன்று.

எனது அறிவு
கச்சையை வரிந்து கட்டி நிற்கும் ஒரு காபிர்;
தனது மனதுக் கிசைந்த உருவங்களை
அது வழிபடுகிறது.
உணர்ச்சியின் துயரத்துக்காக அழும்
எனது இதயத்தைப் பார் !
எனது வழி (பற்றி), எனது பவ்ய நம்பிக்கை(பற்றி)
உனக்கென்ன (கவலை) ?

தொலைவிலுள்ள நட்சத்திரத்தை
ஒரு நூறு உலகங்கள் தொடும்படி செய்தன.
மனம் உந்திப் பறந்த இடங்களிலெல்லாம்
அவன் முகமும் இருந்தது :
ஆனால் நான் என்னுள்ளே
அகத்தை நோக்கியபோது
வெகு தொலைவில் ஒரு விளிம்பை மட்டும் கண்டேன்.

விதி எனும் விலங்கை
உன் கால்களில் மாட்டிக் கொள்ளாதே !
இந்தச் சுழலும் உலகுக்கு அப்பால் ஒரு வழியுண்டு.
நீ நம்பாவிட்டால் எழுந்திரு ;
(உடனே) உன் கால்கள்
வான் நோக்கி எழும்புவதைக் காண்பாய் !

எனது இதயம் தனது
மந்திர சக்தியால் கட்டுண்டு கிடக்கிறது.
உலகம் அதன் ஒளிமிகு அழகால் பிரகாசமாகிறது.
எனது உதயத்தைத் தேட வேண்டாம் ;
பல்லாண்டுகளாக நான் உதிக்கு முன்னமேயே
கதிர்விடும் பகலவனிலும்
(அதைத் தேட வேண்டாம்).

எனது விரல்களால் மீட்டப்பட்ட
ஆத்மா நாதம் எழுப்புகிறது.
நீ எப்படி அதன் உள்ளிருந்தும்,
வெளியேயும் இருக்கிறாய் ?
உன்னாலேயே எனது நெருப்பை எரிக்கிறேன் ;
நீ இன்றேல் நான் மாண்டு போகிறேன்.
முழுமையானவனே,
நானின்றி, உன் நிலைமை என்ன ?

பெருமூச்சு அவன் கடலில் அலை எழுப்புகிறது.
நமது குழலை அவன் வாயில் வைத்து,
நமது இசையை எழுப்புகிறான் ;
என்றுமுள சுனையின் கரையிலே

நாம் புற்களாக வளர்கிறோம் ;
அவன் பனித்துளி நமது நரம்புகளிலும்
இரத்தக் குழாய்களிலும் ஓடுகிறது.

உன் இதயத்தை வதைக்கும் ஒரு வேதனையுண்டு ;
வர்ணங்களும், வாசனைகளும் நிறைந்த
இவ்வுலகை நீ ஆக்கினாய்.
எனது பலமற்ற காதலில்லாவிட்டால்
(வேறு எதனால்) ஏன் நீ வேதனைப்பட வேண்டும் ?
இந்த மாபெரும் கொந்தளிப்பைச் சிருஷ்டித்தது யார் ?

நீ யாரைத் தேடுகிறாய் ?
உன் அகத்தை நிறைத்திருப்பது எது ?
அவன் வெளிப்படையானவன் ;
நீ தான் திரையாக இருக்கிறாய்.
அவனைத் தேடு, உன்னை அறிவாய் :
'தன்னை'த் தேடு, அவனைக் காண்பாய்.

சிறு பிள்ளைத்தனத்தை விட்டொழி ;
(இதைவிட) நல்ல கதையைக் கற்றுக்கொள் ;
நீ முஸ்லிம் எனப் பெயர் தரிக்க விரும்பினால்
வர்க்கப் பெருமை பேசுவதை விட்டொழி ;
தன் வீரத்தால், குலப் பெருமையால்,
அரபி, (தான் உயர்ந்தவன் என)
உரிமை கொண்டாடினால்,
அரபி (வர்க்கமே) இல்லாதொழியட்டும் !

ஆப்கானியரல்லோம், துருக்கரல்லோம்,
தார்த்தாரிய மக்களுமல்லோம் ?
நாம் யாவரும்
ஒரே அடிமரத்தைச் சேர்ந்தவர்கள் !
வர்ண, வாசனைப் பெருமையை வெறுத்தொதுக்கு—
நாம் யாவருமே
ஒரே வர்க்கத்தின் சிசுக்களாக இருப்போம்.

எனது இதயத்துள்ளே
ஓர் உலகமே புதைந்து கிடக்கிறது.
எனது இதயமோ மண்ணில் புதைந்து,
உணர்ச்சியின் துயரவசப்பட்டுக் கிடக்கிறது.
ஆத்மாவை ஒளியுள்ளதாக்கிய மதுவின்
ஒரு துளி இன்னும் என் ஜாடியில்
மீதமிருக்கவே செய்கிறது.

எனது இதயமே,
உன் பெயரை நான் மும்முறை கூறுகிறேன்.
நீயே எனது மரக்கலம், நீயே எனது கடல்,
நீயே எனது (கடற்) கரை
எனது (உடல் மக்கிய) துகள்களின்மீது
ஒழுகிய பனித்துளி நீயா ?
அல்லது எனது (அப்) புழுதியைத் தாங்கிய
செந்நிற ரோஜா மூகை நீயா ?

நன்மை தீமையை ஆக்குவது எது என்று
நான் எப்படிச் சொல்வேன் !
அத்தகைய விடுகதையை வெளியிட நாவு நடுங்குகிறது ;
கிளையில்லாதபடி ரோஜாவையும்
அதன் முள்ளையும் நீ பார்க்கிறாய் ;
உள்ளே ரோஜாவோ முள்ளோ தெரியவில்லை.

உண்மையில் துயரமற்ற மனிதன் எவனோ
அவனுக்கு உடலுண்டு, ஆத்மா இல்லை.
நீ உணர்ச்சியை வேட்கிறாயா ?
எனின் சதா கனல்வீசும் நெருப்பையும்
ஜ்வரத்தையும் நாடு !

நான் யார், எங்கிருந்து வந்தேன்
என்று கேட்காதேயேன் !
என்னை நான்
சிக்கலுட் படுத்திக்கொண்டு வாழ்கிறேன்.
இந்தக் கடலிலே நான் ஓர் அமைதியற்ற அலை.
சிக்கல்களில்லாவிட்டால் நான் மடிந்து போவேன்.

உன் பிரபல்யத்திடையிலும்
நீ முகத்திரை அணிந்திருக்கிறாய்.
எமது பார்வையின் வெறியை
நீ தாங்க இயலாது.
மதுவின் மஸ்தைப் போல்
நீ எமது குருதியிடை ஓடுகிறாய்.
ஆனால் அந்தோ, எத்தனை அபூர்வமாய்,
எப்போதாவதுதானே நீ வருகிறாய்!

விதியைப் பற்றிப் பிடித்துக்கொள்ளாதே!
பாதையிலே ஓடு!
உன் பார்வை சூரிய, சந்திரன் போல்
வெளிச்ச முள்ளதாகட்டும்!
ஆனால் உன் இதயம் வென்றுவிட்ட
காதலின் துயரத்தைப் போற்றிப் பேணி வா!

அன்பே, வா!
இதயத்தின் பரம ரகசியமான ஒலியே (வா)!
எங்கள் விதைப்பே, அறுவடையே வா!
இந்தப் பூமியின் உணர்ச்சிகள்
மிகவும் அதிகமாய் முதுமையடைந்துவிட்டன.
நமது மண்ணிலிருந்து
புதியதொரு ஆதத்தைக் கொண்டு வா!

பேச்சு எத்தனை சிறந்ததாயினும்
வேதனையையும் துயரத்தையும் சேர்க்கிறது.
இந்த நீண்ட துயரப் புலம்பல்
எனது இதயம் உகந்ததாகும்.
நான் காணும் இன்பம்
சிக்கந்தர் அறியாதது.
ஜாம்ஷிதின் ஆட்சியைவிடவும்
இது தவழும் இனிய காற்றுப் போன்றது.

சவாரி செய்ய
வேகமாகப் போகும் குதிரை என்னிடமில்லை.

நான் எந்த அரசனுக்கும் ஆஸ்தானக் காரனல்லன்;
நேசனே, இதுவே எனக்குத் திருப்தி.
எனது இதயத்தின் ஆழத்திலே
மாணிக்கம் ஒளி யிடுகிறது!

நீ சம்பூர்ண வாழ்க்கை எய்த இயலுமா?
எனின் இதனைக் கற்றுக்கொள்:
அகத்தின்மீது மட்டுந்தான்
உன் கண்களின் கவனம் பதிந்திருக்க வேண்டும்.
உலகை ஒரே வாயில் விழுங்கிவிட,
அதைச் சூழ்ந்துள்ள மந்திர சக்தியை உடைத்தெறிய
அதன்மீது மட்டுமே கண்காணிப்பு வேண்டும்.

நீ சொல்கிறாய், "ஆதம் மண்ணின் மகன்;
ஜனன மரணமெனும் உலகுக்குக்
கட்டுப்பட்டவன்" என்று.
எனினும், இயற்கை ஓர் அற்புதம் விளைத்தது -
கடலின் மூல ஸ்தானமும்
அவனுடைய சுனையினுள்தான் இருக்கிறது.

அஞ்சா நெஞ்சுக்கு
அரிமாவும் ஆடாகவே தோன்றும்.
வெற்று வீரப் பிரதாபங்களைப்
புல்வாயிடங் காண்கிறது அரிமா.
நீ அச்சமற்றவனாயின்
(உனக்குக்) கடலே ஒரு திறந்த சமவெளிதான்.
நீ அஞ்சினாலோ
ஒவ்வோர் அலையிலும் ஒரு சுறாமீனுண்டு.

நான் மதுவா, அதைந்து இருக்கும் கிண்ணமா?
முத்தா, அதைந்து இருக்கும் சிப்பியா?
எனது உள்ளத்தைத் தொட்டுப் பார்க்கிறேன்;
நான் காண்பது இதுதான்:
எனது ஆத்மா ஒன்று; நான் வேறொன்று.

நீ சொல்கிறாய், "அந்தோ, நம் பறவை
கண்ணியில் மாட்டிக் கொண்டதே !
இனி அது தன் சிறகை விரிக்கவும்
வானில் பறக்கவும் முடியாதே" என்று.
எனினும், சதையினிடையில்
ஆத்மா நன்கு வளர்கிறது.
அங்கேயுள்ள தீட்டும் தோலில்
நம் கத்தி கூராக்கப்படுகிறது !

சொல்லு :
இதயத்திலே ஆசை எப்படிப் பிறந்தது ?
வீட்டிலே விளக்கின் தீபம் எரிவதெப்படி ?
நமது பார்வையால் பார்ப்பவன் எவன் ?
அவன் பார்ப்பது என்ன ?
நமது ஊத்தைச் சடலத்துள்
ஆத்மா வைக்கப்பட்டது எப்படி ?

நான் இறந்து, சுவர்க்கத்தில் நடந்தபோது,
இந்த வானத்தையும் பூமியையும்
தெளிவாகக் காண முடிந்தது.
எனது கலங்கிய உள்ளத்திலே
ஒரேயோர் ஐயம் ஊடாடிற்று -
அதுதானு உவமை யுலகம் (என்ற ஐயம்).

நமது உலகு சைத்ரீகனின் கோல் எழுதிய
படமன்றி வேறன்று.
இரவு, பகல் என்று மாறி மாறிப்
பாராக் கொடுக்கும் காவலாட்களின் கைதி அது.
விதி அதை வழுவழுப்பாக்குகிறது.
இந்தப் புழுதியடைந்த உருவம்
இன்னும் பூரணமாகத் தீட்டப்படவில்லை.

வானை வளையவரும் பகலவனே,
அத்தனை தூரத்தில் இருந்தும்
நீ எப்படி என் பார்வையில் படுகிறாய் ?

பூமிக்கு அத்தனை தொலைவிலிருந்தும்
பூமிக்கு அருகிலுள்ளாய் !
என் பார்வையைத் தடுமாறச் செய்பவனே,
நீ எங்கு வளைய வருகிறாய் ?

நீ உன் மண்வெட்டியால்
உன் பாதையைத் தோண்டிக் கொண்டாய்.
மற்றொருவர் பாதையில் செல்லுவது
கொடுமையும் கஷ்டமும் ஆனதாகும்.
உன் சிரமசாத்தியத்தால்
ஏதாவது அபூர்வமானது கிட்டுமானால்
அது பாவமாயினும் அதற்குப் பயனுண்டு.

வளையவரும் மனம்
ஓரிடத்தில் நிலைக்க விரும்பவில்லை;
நீரோடும், நெருப்போடும்,
மண்ணோடும் தங்கியிருக்க விரும்பவில்லை.
உடலிலே ஓய்வு இருப்பதாக எண்ணாதே !
இந்த அலை புரளும் கடல்
விளையாடக் கரை வருவதில்லை.

நீ ஏன் தனித்திருக்க விழைகிறாய் ?
இயற்கையின் வனப்புடன் சரசமாடு !
தன் பிரகாசத்திலிருந்து நோக்கை உண்டு பண்ண,
இறைவன் தெளிவான கண்களை உனக்குத் தந்துள்ளான்.

களி மண்ணுக்கும் தண்ணீருக்குமிடையே
நான் தனித்திருந்தேன்;
அப்லாதூனி*லிருந்து அல்-பாரபி வரை
நான் போய்விட்டேன்.
எந்த மனிதனின் கண்களையும்
நான் யாசிக்கவில்லை.
எனது கண்களைக் கொண்டன்றி
நான் உலகை நோக்கவில்லை.

[*பிளேட்டோ]

'தான்' தன்மையில் மூல ஸ்தானத்தை
எந்த மனிதனும் அறியான்.
காலையிடத்தும் மாலையிடத்தும்
அதற்கு நட்பில்லை.
வானலோக வழிகாட்டியிடமிருந்து
இதைக் கேட்டேன்:
"சமுத்திரம் தனது அலைகளைவிட
முதுமையற்றதாய்க் கிடக்கிறது."

இதயமே, ரோஜா முகையிலே
வாழ்க்கை மர்மங்களை நோக்கு?
மறைந்திருக்கும் உண்மைகள்
அங்கு வெளிப்படையாகத் தெரிகின்றன.
நிழல் படர்ந்த பூமியிலே
அது முளைத்தாலும்,
அதன் பார்வை ஒளி மிகுந்த பகலவனை
நோக்கியதாக வல்லவா இருக்கிறது!

தோட்டமும் மேட்டு நிலமும் தம்மை
அவன் ஜோதியால் அலங்கரித்துக்கொள்கின்றன.
ரோஜா தன் பளபளப்புக்கு அவன் மதுவைப்
பயன் படுத்திக்கொள்கிறது.
இவ்வுலகில் அவன் யாரையும்
இருளில் விடவில்லை.
அவன் அருள்
ஒவ்வோரிதயத்திலும் வெளிச்சத்தைத்
தூண்டிவிட்டிருக்கிறது.

முல்லை வனத்திலே ஒரு முகை எழுந்தது.
காலைப் பனி அதன்
கண்களிலிருந்த துயிலைக் கழுவிற்று;
'தான்' இல்லாததிலிருந்து 'தான்' உதித்தது
எனவே அது தேடியதை,
உலகம் உணர்ந்தது.

தன்னகத்தே நிலையான தன்மையைக்
காணாத இவ்வுலகம்,
தாபம் எனும் வீதியிலே வழி தேடிற்று.
இல்லாமையின் தழுவலிலிருந்து விலகியோடி
கடைசியில் ஆதத்தின் இதயத்திலே
புகலிடம் பெற்றது.

உடலையும் உயிரையும் பற்றிய மர்மத்தை
எனது உள்ளம் அறியும்;
மரணமே எனக்குத் துயர் தருவதென்று
(நீ) எண்ணவேண்டாம்!
நான் காண முடிகிற உலகங்களில்
ஒன்று குறைந்து போனதற்காக
ஏன் துயரப் படுகிறேன் ?
எனது சிந்தையுள்ளே
நூறு உலகங்கள் உறங்கிக் கிடக்கின்றன.

ரோஜாவும் நானும்
ஒரே பிரசினையைச் சொல்ல வேண்டியவர்கள்;
நாங்களிருவரும் சபையின் மந்திர சக்தியால்
கட்டுண்டு கிடக்கிறோம்.
ரோஜா இதழின் நாவு பேசும் வன்மையற்றது;
ஆனால், அதன் புண்பட்ட நெஞ்சகத்தே
ஓர் இதயமே குடிகொண்டுள்ளது.

தானாகவே விதை தூவிக்கொள்ளும்
பூவரசம் பூவின் இயல்பை நான் நன்கறிவேன்.
(ரோஜாச் செடியின்) கனவினுள்ளே
மலரின் மணத்தை நான் முகர்கிறேன்.
மேட்டு நிலத்தின் பர்ட்டுக்காரன்
என்னைத் தன் நேசனாய்ப் பாராட்டுகிறான்.
அவன் இசைக்கும் பாட்டின் தொனியிலிருந்து
அதை நான் சொல்லவும் முடியும்.

ஒரே தாப கீதம்
உலகம் முழுவதையுமே நிறைக்கிறது ;
அது சர்வலோக வீணையிலே மீட்டப்படுகிறது.
எது இருப்பினும், இருந்திருப்பினும்,
இருக்கப் போயினும்,
காலத்தின் ஆசையிலே
நான் ஒரு கணத்தைக் காண்கிறேன்.

ஓயாத தாபம் எனது உள்ளத்திலே உழல்கிறது.
கொந்தளிப்பும் கிளர்ச்சியும்
என் இதயத்தை நிறைக்கின்றன.
தோழனே, என்னிடமிருந்து
நீ என்ன புத்திமதியை எதிர்பார்க்கிறாய் ?
நான் சொல்லக்கூடியவையெல்லாம்,'
என்னை நோக்கிச் சொல்லக் கூடியவையே.

உயிர் தரித்திருப்பது என்பது
முடிவற்று எரிந்து கொண்டிருப்பதாகும்.
மீன்களைப் போல் வளையவும் நெளியவுமன்றி
நாம் வேறென்ன செய்ய முடியும் ?
கரையைத் தேடாதே !
கரையின் தழுவலால்
உண்டாகும் ஒரு கண நெளிவு
நிரந்தரமான சாவைத் தந்துவிடுகிறது.

பிரசாரகனே, பிராமணன்
விக்ரஹங்களின் முன் பணியும்படி
நம்மிடம் கூறினால் நெற்றி சுழிக்காதே !
நமது இறைவனே
அழகியதாக ஓர் உருவினை உண்டாக்கித்
தேவதூதர்களை அதன் முன்
அடிபணியும்படி சொல்லியிருக்கிறான் !

தத்துவவாதிகள்
நூறு விக்கிரஹங்களை உடைக்கின்றனர்.
எனினும், உயிரின் ஸோமநாதபுரத்தை

அவர்கள் உதறித் தள்ளிவிடுவதில்லை.
ஆதத்தை இன்னும் சேணத்தோடு பிணையாமல்
புறப்பட்டுவிட முடியும்
என்று எண்ணுகிறார்கள்!

மண்ணாலான எனது கரத்தாலே,
விதை முளைப்பதைப் போல்
உலகம் கிளர்ந்தெழுகிறது.
வா, என் அறுவடையிலிருந்து
முதலைப் பெற்றுக்கொள்!
அந்தோ, நேசனிடம் போகும் பாதையை
நீ இழந்து விட்டாயே!
அப்படியானதால், என் மன மைதானத்தில்
ஒரு கணம் உன்னையும் மறந்து இரு.

ஆயிரம் ஆண்டுகள்
இயற்கையோடு (சேர்ந்து) தோழமை பூண்டேன்.
என் அகத்தை உதறினேன்.
என் சரிதையின் சுருக்கம் இதுதான்:
நான் உருப்படுத்தினேன்;
வணங்கினேன்; உடைத்தேன்.

சாஸ்வதமென்னும் சமவெளியிலே பறந்தேன்.
மண், தண்ணீர் ஆகிய பந்தங்களிலிருந்து
விடுபட்டேன்.
உன் நோக்கில் எனது மதிப்பு உயர்ந்தது.
ஏனெனில் காதல் சந்தையில்
நீ என்னை விலை கூறினாய்.

புறத்தேயுள்ளவையே
இரகசியத்தில் மறைந்திருக்கும்போது
எனது நெஞ்சகத்துள் பளிச்சிடும்
இச்சிந்தனைகள் யாவை?
எனது அறிஞனான ஞானியே,
இதை எனக்கு விளக்கும்.
என் ஆத்மா ஒரு பிரயாணி,
எனது உடல் ஓய்விலே கிடக்கிறது.

நான் தேவையற்ற யாசகன்-
இது என் பெருமை.
நான் அதிர்ச்சியுறுகிறேன்,
எரிகிறேன், உருகுகிறேன், குழலூதுகிறேன்;
எனது கீதம் உன்னையும்
முற்றும் நெருப்புப் பிடித்துக்கொண்டவனாய்
ஆக்கிவிட்டது.
நான் சிக்கந்தரின் இனத்தைச் சேர்தவன் ஆனதால்,
நிலக்கண்ணறைகள் செய்கிறேன்.

உன் குணங்களையெல்லாம்
நீ நன்குணர்ந்திருப்பின்
உன் பனித்துளிகளை உதிரச் செய்து
அதைக் கொண்டு ஒரு கடலை உண்டாக்கு.
இதயமே, எத்தனை நாட்கள்தான்
சந்திரனிடம் பிச்சை கேட்பது!
உன் சொந்த வெளிச்சத்தால்
இருளை ஒளியுள்ளதாக்கு!

இதயமே, நீ எனதகத்தே இருக்கும்வரை
அரசன் உடையையும்விட
முரட்டுக் கம்பளியே போதுமானது!
மரணத்துக்கு அப்பால் நீ என்னுள் இருப்ப
அந்தோ, எனது நம்பிக்கைகளெல்லாம்,
பயமெல்லாம் உன்மீதே ஊன்றி நிற்கின்றன.

சேற்றிலே, கிளர்ந்தெழும் ஆம்பலைப் போல,
ரோஜா முகைகள் வெளியிடும் மணத்தைப் போலத்
திடீரென எழுந்துவிடாதே!
எனக்கு அதிக ஒளியுள்ள கண்களை
இறைவன் தந்திருக்கிறான்.
அறிவு விழித்திருக்கவும்,
இதயம் தூங்கவுமாக இருந்துவிடாதே!

என்னைப் போன்றதோர் உருவத்தை அமைத்தேன்.
நான் உடுத்தியிருந்த பாணியில்
கடவுளுக்கும் உடுத்தினேன்.
ஏன் என் அகத்தைவிட்டு நான் விலக முடியாது ?
என் வேஷம் எதுவாயினும்,
அகத்தை உள்ளே அறிந்தேயிருக்கிறேன்.

நவமாய் மலர்ந்த வண்ணமலர்
பனித்துளியிடம் பேசிற்று :
மேட்டு நிலக் குழந்தைகளான எங்களுக்கு
ஊடுருவிப் பார்க்கும் கண்களில்லை;
நூறு சூரியன்களைத் தாங்கும் இச்சமவெளியிலே
உயர்ந்தவருக்கும் தாழ்ந்தவருக்குமிடையே
என்ன வேற்றுமையிருக்கிறது ?

சிருஷ்டியாளனின் (குன்) "ஆகுக!" என்ற நிலையிலேதான்
நீ இருக்கிறாய்.
ஒருவரும் காண முடியாத அதிசயமாகத்தான்
நீ இருக்கிறாய்.
அப்படியிருக்க வாழ்க்கைப் பாதையில்
முற்றும் நிர்ப்பயமாக உலவு !
வாழ்வெனும் பரந்த மைதானத்திலே
நீ மட்டுமே இருக்கிறாய்.

சிக்கந்தர் தன் வாளுடனும்
அரியணையுடனும் மறைந்துவிட்டார்.
அவர் பரிவாரங்களும்,
செல்வங்களும் போய்விட்டன !
எனவே ஆட்சிக்குப் பின்னும் ஆளப்படுபவர்கள்
நீடித்திருக்கின்றனர் என்பதை அறி.
ஜாம் மன்னன் மறைந்து போயினும்
ஷீராம் (பாரஸீகம்) உயிரோடேயே இருக்கிறது.

என் நெஞ்சம் கிழிக்கப்பட்டிருக்கிறது;
நீ என் இதயத்தைக் கைப்பற்றிக் கொண்டாய்.
ஹா, எனது உயிருக்குயிரான பரிசோடு புறப்படுகிறாய்.
என் வெற்றியின் மதிப்பிலாப் பொக்கிஷத்தை
உனக்குத் தந்தவர் யார்?

வர்ண உலகம், சுகந்த உலகம்,
பூமி, வானம், பரிமாணம்-
யாவும் என்னைவிட்டகன்று போயின.
எனது இதயமே,
அவன் கொந்தளிப்பை நீ கைவிட்டாயா?
அல்லது அவன்தான் உன்னைத்
தனியிடத்தே விட்டகன்றானோ?

இசைக் கருவியையும்,
அதை முடுக்கும் சாவியையும் பற்றி
எனக்கு எதுவும் தெரியாது.
எனினும், வாழ்க்கையின் நாதத்தை
நான் அடையாளம் கண்டுபிடித்துவிடுவேன்.
முட்செடியிலிருந்து நான் இசைத்த கீதம்
" அந்தக் குரலினியான் யார்?" என்று
ரோஜா மலரையே புதரிடம் கேட்கச் செய்துவிட்டது.

பேரவையிலே பரவசமூட்டும்படி பாடினேன்.
அவர்கள் மண்ணிலே
வாழ்க்கை ஜ்வாலைகளை எழுப்பினேன்.
அகத்தின் ஒளியால்
இதயத்தில் விளக்கேற்றினேன்.
இதயத்தின் சோதனைக்கு எதிரே
மனத்தைத் துழாவினேன்.

எனது பாடல்
ஷாம் நாட்டு இளமையை
மீட்டுக் கொண்டு வந்துவிட்டது.

எனது இதய கீதத்தால்,
அதன் பெருமை துரிதமாகப் பிரபலப்பட்டது.
எனது மணியோசை
மைதானத்திலே பாதையிழந்த கூட்டத்தினரை
வழிக்குத் திருப்பிக்கொண்டு வந்துவிட்டது.

எனது பாட்டால்
ஆம் நாட்டின் ஜீவன் (விளக்கே) தூண்டிவிடப்படுகிறது.
காபிலா (பிரயாணக் கூட்டம்)
மேல் நோக்கிச் செல்கிறது !
எனது குரல் வலிமையுடையது.
கவிஞர் உர்ஃபியைப் போல
நானும் கவின்மிக்க பாட்டொன்றை எழுப்புவேன்.
ஏனெனில் சுமையோ பளுவானது ;
பாதையோ தூங்கா நெடுவழியாக இருக்கிறது.

எனது நிம்மதியற்ற உணர்ச்சியிலிருந்து
ஜ்வாலை புறப்படுகிறது.
கிழக்கின் அகத்துள்ளே
நான் ஓர் இதயத்தைக் கிளறிவிட்டுள்ளேன்.
எனது பிரலாபத்தால்
அதன் மண் நெருப்பு மூட்டப்பட்டுள்ளது.
அதன் ஆத்மாவின் பரம அந்தரங்கத்துள்ளும்
மின்னலைப் போல் நான் பாய்ந்து செல்கிறேன்.

காலையிளங் காற்றைப் போல
நான் ஒரு வழிப்போக்கன்.
ரோஜாவைப் போல எனது இதயமும்
துகள்களாகப் பிய்ந்துவிட்டது.
எதார்த்தமானதைக் காண முடியாத என் நோக்கு
காட்சி இன்பத்துக்குப் பலியாகிவிட்டது.

பஞ்சு உடை தொட்டுத் தங்கப் பீதாம்பரம் வரை
(எதையும்) மனம் உண்டாக்க முடியும்.
அது கொடுக்கும் மிருதுவால்

கற்களும் கண்ணாடிகளாகின்றன.
கவிஞன் தன் மோகனக் கீதத்தால்
வாழ்க்கையின் விஷத்தையும்
தேன் நிறைந்த அமுதாக்கிவிடுகிறான்.

வெறி எனும் தருவின் கனிதனை
நான் புசித்துவிட்டேன்.
வாழ்க்கையின் அந்தரங்க மர்மங்களையும்
புரிந்து கொண்டு விட்டேன்.
ஹா, வசந்தத்தின் செய்தியை
நான் கொணர்ந்திருக்கிறேன்.
வில் எய்வதில் வல்லானைக் குறித்துத்
தோட்டக்காரனே, எச்சரிக்கை(யாக இரு)!

புதிய அபூர்வமான கற்பனைகளுக்கு
உருக் கொடுப்பதற்காக
'அதன்' (சுவர்க்க) தோட்ட மலர்களை
என் இதயம் கொய்கிறது.
உனது நெஞ்சினுள்ளே ஓர் இலையை,
கோடைப் பனியிலே நடுங்கும் ஓர் இதழை
என் இதயம் உதிர்க்கிறது.

ஷாம் நாடு கரை காணாத ஒரு கடல்;
அதன்கண் வர்ண ஜாலங்கள் வீசும்
முத்துக்கள் பலவுண்டு.
எனினும், சுறாமீன் அபாயமில்லாத ஒரு கடலிலே
நான் எனது படகை ஓட்டிச் செல்லமாட்டேன்.

உலக விவகாரங்கள்
நிலையற்றிருக்கட்டும் என்று சொல்லாதே!
நமது ஒவ்வொரு கணமும்
சாஸ்வத யுகத்தைத் திரையிடுகிறது.
இன்றைய தினத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்!
ஏனெனில், நாளை என்பது
இன்னும் விதியின் மனத்தகத்துள்ளேதான் இருக்கிறது.

மேற்கின் மர்மத்திலிருந்து தப்பிவிட்டாய்!
ஆயினும் கபுரையும் கோரிகளையும்
நீ இன்னும் தொழுகிறாயே!
அடிமை மனப்பான்மையால்
உனக்குச் சொரணையற்றுப் போய்விட்டது.
கல்(லுருவ)மோஸ்தரிலே
நீ ஓர் எஜமானைச் செதுக்கிக் கொள்கிறாய்!

எத்தனை காலம்தான்
வாழ்க்கை உடையைக்
கிழிசலும் கந்தலுமாய் வைத்திருப்பது?
எத்தனை காலம்தான்
எறும்புகளைப் போல் பூமியில் வளைய வருவது?
எழுந்திரு! உன் இறக்கைகளை விரி!
ராஜாளியின் வழியைக் கற்றுக்கொள்!
வைக்கோலில் உணவைத் தேடும் பழக்கத்தை
ஒரேயடியாய் விட்டொழி!

ரோஜா சாமந்திச் செடிகளினூடே ஒரு கூடு கட்டு!
சிட்டுக் குருவியிடமிருந்து
குரலினிமையைக் கற்றுக்கொள்.
ஆண்மையின்மை
உன்னை நரையும் மூப்புமுள்ளவனுக்கியிருந்தால்,
உலகின் யௌவனத்திலிருந்து
ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொள்!

உடலின் ஜீவனைப் பிளந்தது ஆத்மாவாகும்.
ரோஜா இண்டாக மலர்ந்தது!
திறந்து காட்டும் தாபத்தால்;
நிம்மதியில்லாத ஆத்மாவுக்கு
ஆயிரம் பழக்கங்கள்.
ஒன்றோடு பழகியதும் அது சதையிடம் திரும்புகிறது.

கபுரிலிருந்து பிரகடனம் செய்த ஒரு குரலைக் கேட்டேன்:
“புழுதிக்குக் கீழே மீண்டும் வாழ முடியும்;

பிறரின் விருப்பங்களைத் திருப்தி செய்ய
வாழ்பவனுக்கு உயிருண்டு, ஆத்மாவில்லை"

வானிலே தூவும் புழுதியாலான இக் கை நீடித்திருக்காது.
எனினும், மனம் மாழ்காதே!
இயற்கை ஒரு ஜீவனுள்ள உருவை உண்டாக்கினால்,
அதைச் சம்பூர்ணமாக்க ஒரு யுகமே செல்லலாம்.

சுகந்தமும் பிரகாசமும் உள்ள
இவ்வுலகு அறியப்படவேண்டும் ;
பூங்காவிலுள்ள மலர்கள் பறிக்கப்பட வேண்டும்.
எனினும், அகத்தைப் பாராது கண்களை மூடிக்கொள்ளாதே !
உன் ஆத்மாவினுள்ளே
ஒரு வஸ்துவைக் காண வேண்டியதிருக்கிறது.

மண்ணிலும் தண்ணீரிலுமிருந்து
இன்னும் நீ விடுபடவில்லை.
நீ ஆப்கானியன் அல்லது துருக்கன் என்கிறாய் ;
முதலில் நான் மனிதன்,
எனக்கு வேறெந்த வர்ணமுமில்லை ;
அதன்பின் நான் இந்தியன், துரானியன்.

பேச்சின் காதல் முதலில் என் இதயத்தை
இரத்தத்தால் நிரப்பிற்று.
பிறகு வீதியிலுள்ள புழுதியில் நெருப்பு எழச் செய்தது ;
ஆனால், காதலைப் பற்றிப் பேச நான் உதட்டை அசைத்ததும்
இந்த இரகசியத்தை
வார்த்தைகள் முரட்டுத் திரையால் மூடிவிட்டன.

கடைசியில்
நுட்பமான பகுத்தறிவை விட்டும் அவன் ஓடிவிட்டான் ;
அவனுடைய சுயதிடமுள்ள இதயம் வெறியை அறியும் ;
அந்த இரத்தம் சிந்திற்று.

மேகங்களோடே
இக்பாலிடம் நீ என்ன கேட்கிறாய் ?
நமது புத்திசாலி தத்துவவாதி
தன் புத்தியைப் பறிகொடுத்துவிட்டான்.

இயற்கையின் வெற்றி

இறைவன் மனிதனைப் படைத்தான். அவனுக்கு வேண்டும் இன்பங்களை அளித்தான். அவன் சுகமாக வாழ்வதற்கான வசதிகளைத் தந்தான். இரவி, திங்கள், மலை, கடல், நதி, பாதாளம், வானவர் முதலாய எல்லா வற்றையும் மனிதனுக்காகவே ஆக்கினான். இன்பப் பூங் காவில் மனிதன் இலங்கும்படி செய்தான்.

ஆனால் ஒரே இன்பம் மனிதனுக்கு வெறுப்பையளித் தது. இன்பத்தோடு துன்பமும் கலந்தால்தான் வாழ்க்கை இனிமையுறும் என்று அவன் எண்ணினான். வெறும் இன்ப வாழ்க்கை, கவலை துக்கம் அற்ற வாழ்க்கை, சாரமற்றதாக அவனுக்குப்பட்டது. அதை மாற்றிக் கொள்ள மனிதன் உள்ளம் துடித்தது. காரணம் மனி தனிடம் பண்பாடு வளர்வது கஷ்டத்தின் மூலந்தான்.

இத்தகைய எண்ணங்களால் தடுமாறிக் கொண் டிருந்த மனிதனுக்கு உதவி புரிய ஷைத்தான் தோன்றி னான். ஷைத்தான் மிகுந்த சுறுசுறுப்புள்ளவன்; காரிய வாதி; தூங்கிக் கிடந்தவரைத் தட்டி எழுப்பிப் போராட் டக் குழியில் தள்ளினான்; வாழ்க்கையில் ஓயாப் போராட்டத்தைப் புகுத்தினான்.

இறைவனின் அன்புக்கு உரிய தேவ தூதனாக இருந்து, இறைவனுக்குக் கீழ்ப்படிய மறுத்ததால் ஷைத் தான் ஆனவன், இறைவன் சிருஷ்டிகளுக்கெதிராகப் போர் தொடுக்கப் புறப்பட்டான். அவன் முதல் மனி தனை வென்ற கதையை அல்லாமா இக்பால் 'இயற்கை யின் வெற்றி' (தஷ்கீரே பித்ரத்) என்று குறிப்பிடுகிறார். பிரகிருதி மனிதனை வெற்றி கொண்டு விட்டதாம். பருவங் களில் மாறுதல் உண்டாவது போல மனிதன் நிலையிலும்

மாறுதல் உண்டாகத் தொடங்கிற்றும். இன்பமும் துன்பமும்—அமைதியும் போரும்—பூசலும் அன்பும்—யாவும் கலந்து வந்தனவாம்.

முதல் மனிதரான ஆதம் (அலை) ஷைத்தானின் தூண்டுதலுக்கு உள்ளானார். அதை இக்பால் "இஸ்லாத்தில் மதக் கருத்தைப் புனர் நிர்மாணஞ் செய்தல்" என்ற நூலில் இவ்விதம் குறிப்பிடுகிறார்: "தான்றோன்றி உணர்ச்சியுள்ள ஆரம்ப நிலையிலிருந்து சுயமான சிந்தையும் ஐயமும் கீழ்ப்படிய மறுக்கும் சுபாவமும் உள்ளவனாக மனிதனை உயர்த்துவதுதான் அதன் நோக்கம்." லக்ஷியமற்ற வாழ்க்கையை லக்ஷியமுள்ள, உழைப்புள்ள வாழ்க்கையாக்கிற்று ஷைத்தானின் தூண்டுதல். இறைவன் முதல் மனிதராகிய ஆதத்தைப் படைத்தான். உயிரற்ற களி மண்ணிலிருந்து செயலாற்றும், சதா போராடும் சக்தியையும் அறிவையும், அன்பையும் தன்னகத்தே கொண்டவராக அவர் இருந்தார். அவருடைய பிறப்பு உண்டாக்கிய எதிரொலியை 'இயற்கையின் வெற்றி' என்ற பாட்டின் ஆரம்பத்தில் 'மீலாதே-ஆதம்' (ஆதமின் பிறப்பு) என்ற தலைப்பில் இக்பால் இவ்விதம் வருணிக்கிறார்:

இரத்தம் கசியும் இதயத்தான்
பிறந்துவிட்டான் என்று அன்பு மலர்ந்தது;
திருஷ்டியுடையவன் பிறந்துவிட்டான் என்று
அழகு சிலிர்த்தது.
உயிரற்ற மண்ணிலிருந்து,
சுய சிருஷ்டி சக்தியும்,
தானே அழிக்கும், தானே மதிப்பிடும் திறனும்
கொண்ட ஒரு ஜீவன் உதித்துவிட்டான் என்று
இயற்கை கவலையுள் ஆழ்ந்தது.
வானங்களிலிருந்து நித்தியத்துவத்தின் ஏகாந்தத்துக்குச்
செய்தி சென்றது:

'திரையிட்டுள்ளானே, எச்சரிக்கை!
ஒரு மட்டும் திரைகளைக் கிழிப்போன் தோன்றிவிட்டான்!'
தன்னுணர்வற்று, தூக்கத்தில் ஆழ்ந்திருந்த ஆசை
வாழ்க்கையின் மடியிலே கண் விழித்தது.

சகல பொருள்களும் இந்த முதல் மனிதனுக்கு அடி பணிய வேண்டுமென்று இறைவன் உத்தரவிட்டான். யாவும் ஆதத்துக்கு அடிபணிந்தன. ஆனால், ஷைத்தான் அதற்கு இணங்கவில்லை. இறைவன் கட்டளையை எதிர்த்தான். தன்னைக் கீழ்ப்படியும்படி உத்தரவிட்ட இறைவனை நோக்கி அந்த இப்லீஸ் என்ற ஷைத்தான் கூறினான்: "என்னையா அடிபணியச் சொன்னாய்? நெருப்பிலிருந்து உதித்த வானவனை, அழியா நிலை பெற்றவனை, அமரனை, கேவலம் மண்ணால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்கு, பூலோகத்தவனுக்கு, நிலையற்ற வாழ்க்கையுடையவனுக்கு அடிபணியச் சொன்ன காரணமென்ன? உன்னைப் போல் நானும் மனிதர்கள் எனக்குப் பணிவதையே விரும்புகிறேன். வாழ்க்கைக்கு உயிரளிப்பவன் நான். அழியும் மனிதனுக்கு என்னை அடிபணியச் சொன்னது ஏன்?" இவ்விதமாகப் பேசும் ஷைத்தான் மொழிகளை இக்பால் கூறும் முகக்தான் காணலாம்:

நான் ஒளியிலிருந்து உற்பவித்தவன்;
ஆதத்தின் முன் அறிவற்று அடிபணியேன்.
அவன் மண்ணால் ஆனவன்;
நானோ நெருப்பிலிருந்து உதித்தவன்.
என் உணர்ச்சியால் சிருஷ்டிகள் என்ற ஜீவநாடிகளில்
ஓட்ட முண்டாகிறது.
காற்றின் கடுவேகமும், இடியின் முழக்கும்
என்னகத்தே உண்டு.
நீ அண்டத்தை ஆக்கினாய்,
நான் அதைச் சுழலச் செய்தேன்.
நான் உலகிலுள்ளோரின் உயிர்;
நான் பலஹீனமானோரைப் 'பணியச் செய்வதில்லை.

நான் நரக மின்றியே பயங்கரம் விளைவிப்பவன்;
தீர்ப்பளிக்கும் அவசியமற்ற நீதிபதி.
நீ உடலுக்கு உயிரளிக்கிறாய்;
நான் உயிருக்கு உணர்ச்சி தருகிறேன்.
நீ அமைதிக்கு வழி காட்டுகிறாய்;
நான் போராட்டத்துக்கு வழி சொல்கிறேன்.
அறிவற்ற தீர்க்கதிருஷ்டியற்ற புழுதியில் புரளும் மனிதன்
உன் மடியில் பிறக்கிறான்; என்னிடம் அறிவு பெறுகிறான்.

இந்த அகந்தையால் இறைவன் சன்னிதானம் விட்டு விரட்டப்பட்ட சைத்தான் ஆதத்தை ஆசையென்னும் வலையில் சிக்க வைக்கத் திட்டமிடுகிறான். ஆதத்தை அணுகி, அவர் உள்ளத்தில் ஆசைக் கனலை மூட்ட முயல்கிறான். சுவர்க்கப் பூங்காவில் உண்டு களித்து உறங்கும் வாழ்க்கையை அவன் எள்ளி நகையாடுகிறான். உணர்ச்சியற்று உலவுவதில் உண்மையான இன்பம் இல்லை என்று கூறுகிறான். 'ஆதமே, நீர் உண்மையிலேயே வாழ்க்கையை அனுபவிக்க விரும்பினால் உம் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பும்' என்று சைத்தான் தூண்டுகிறான்.

நிரந்தர அமைதியைவிட ஓயாப் போராட்டம் சிறந்தது.
நீர் அடிபணிவதைத்தான் அறிவீர்!
கோழை மனம் படைத்த மனிதரே, நிமிர்ந்து நில்லும்!
ஐக்கியம் என்பது ஆசையின் முடிவென அறியீரா நீர்!
நிரந்தர வாழ்க்கையின் மர்மம் பூர்த்தி பெறாத ஆசைதான்.

இவ்விதமாகப் புத்திமதி கூறும் சைத்தானின் ஆசை வார்த்தைக்கு அடிமையாகிறார் ஆதம். சுவனக் காவை விட்டு வெளியே வருகிறார். வாழ்க்கையின் உணர்ச்சிகள் அவர் உள்ளத்தைப் பிணைக்கின்றன. அவர் உள்ளத் தந்திகள் புதிய இசைகளைப் பொழிகின்றன. ஆசைகளைத் தளிர்க்கச் செய்கின்றன. பொருள்களின் மதிப்பு மாறுகிறது. மனத்தில் ஐயங்கள் எழுகின்றன. எதையும் சந்தேகிக்கும் இயல்பு உண்டாகிறது.

வாழ்க்கையைப் போராட்டமுள்ளதாக்குவது
எவ்வளவு அற்புதமாக இருக்கிறது !
மலையையும், வனத்தையும், பாலையையும் ஒரே மூச்சில்
உயிர்ப்பித்தல், ஆஹா, ஆனந்தம் !
என் மனம் திருப்தியற்றுத் தத்தளிக்கிறது.
நான் சதா தேடியலைபவனாக,
ஐயம் கொண்டவனாக ஆகிவிட்டேன்.

இவ்விதம் ஷைத்தானின் சூட்சியில் விழுந்த முதல் மனிதர் இன்ப வாரியில் திளைக்கிறார். திருப்தியற்று வேதனையுற்ற மனத்தினராக ஆதம் எல்லாப் பொருள்களிலும் புத்துணர்ச்சியைப் பார்க்கிறார்.

இறுதியில் ஆதம் இறைவன் முன் வந்து தன் பாவத்தை ஒப்புக்கொள்கிறார். தான் வழி தவறியதை உணர்வதாகவும், ஆனால் ஷைத்தான் ஊட்டிய ஆசையென்னும் தூபமின்றித் தான் முக்கியத்துவமடைந்திருக்க முடியாதென்றும் கூறுகிறார் :

ஷைத்தானின் ஆசை வார்த்தை
ஒழுங்கான பாதையை விட்டு என்னை இழுத்துச் சென்றது.
என் பிழையைப் பொறுத்துப் பாவ மன்னிப்பு அருள்.
உணர்ச்சியற்ற இம்மரக் கட்டையில் ஆசைக் கனல் மூட்ட
நான் ஷைத்தானின் சீடனாயும் இருக்க நேர்ந்தது.
மனிதனைச் சிறைப்படுத்த அவன் அறிவை ஏவினான்.
எனினும், நெருப்பில் பிறந்த ஷைத்தான்
மண்ணால் ஆய மனிதனுக்கு மதிப்புத் தந்துவிட்டான்

என்று ஆதம் ஷைத்தானுக்குப் பெருமை தரும் முறையில் தன் பாவத்தை ஒப்புக்கொள்கிறார். ஆனால், வாழ்க்கை ரசமுள்ளதாக இருக்க ஷைத்தானோடு போராடுவது அவசியம் என்பதையும் வெளியிடுகிறார்.

இயற்கையைக் கண்டு மகிழ, அன்பைக் கைக் கொள்ள, அழகை ரசிக்க ஆதம் ஆரம்பித்தது, ஷைத் தானின் சேஷ்டைக்குப் பின்னர்தான். எனவே, இதை இயற்கையின் வெற்றி என்றார் இக்பால். உலகில் மனி தனுக்கு அளிக்கப்பட்டுள்ள உன்னத நிலை என்ன என் பதை இக்பால் விளக்குகிறார். அன்பின் துணை கொண்டு மனிதன் தன்னை வளர்க்க முடியும் என்றும் லௌகீக எண்ணத்தைக் கட்டுப்படுத்தினால், மனிதனிடம் மறைந்து கிடக்கும் சக்திகளை வளர்க்க இயலும் என் றும், இக்பால் இக்கவிதையிலே தெளிவாக்குகிறார். இவ் விதம் தன் அகத்தின் சக்தியைப் பெருக்க முயலும்போது மனிதனுக்கு அடிபணிய மறுத்த ஷைத்தானும் கீழ்ப் படிவான் என்பதே இதன் தாத்பரியமாகும்.

இப்பாட்டில் ஷைத்தான் என்பது புலன், உணர்ச்சி, அறிவு ஆகியவற்றைக் குறிக்கிறது. உணர்ச்சியைக் கட்டுப் படுத்தினால்தான் மனிதன் தன் லக்ஷியத்தை அடைய முடியும். உணர்ச்சி வசப்படுவோன் கருதிய காரியத்தை முடிக்க முடியாது தத்தளிப்பது இயற்கை. மேலும் ஷைத்தான் என்பது ஓயாப் போராட்டத்தையும் குறிப்ப தாகக் கொள்ளலாம். ஓயாது போராடுவதால் மறைந்து கிடக்கும் பல மர்மங்களை வெளிப்படுத்த முடியும். வாழ்க்கை என்பது வெறும் களியாட்டமாக, உண்டு களித்து உறங்கும் சாரமற்ற வாழ்க்கையாக இருத்தல் கூடாது. வாழ்க்கை நிரந்தரப் போராட்டமே. இதை உணராது போகத்தில் மூழ்கி உலகை மறந்து அயர்ந் திருப்பவர்களை இயற்கை பழிவாங்கிவிடும். முதல் மனி தர் இன்பம் நிறைந்த உலகிலே உலவினார். துன்பம் யாது என்று அறியாதவராய் இருந்தார். உண்பதும் உறங்குவதும் வாழ்க்கையின் நியதி என்று எண்ணினார். இயற்கை ஷைத்தானைத் துணை கொண்டது. வாழ்க்கை களியாட்டமன்று, போராட்டமே என்பதைக் காட்டிற்று; வெற்றியுற்றது.

ஸபூரே - அஜம்

'ஸபூரே-அஜம்' (பாரஸீகப் பாடல்கள்) என்ற தொகுதியில் கஸல்களும், 'குல்ஷனே-ராஸே - ஜதீத்' (அந்தரங்கங்கள் பற்றிய புதிய தோட்டம்) என்ற பாடலும், 'பந்தகி நாமா' (அடிமை நூல்) என்பதும் அடங்கும்.

எழுச்சி பெற்று வரும் இளைஞர்களிடை ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்குவதே, இத்தொகுதியின் நோக்கமாகும். 'ஸபூர்' என்ற பதம், தாவூத் நபியின் வேதமான 'ஸபூர்' என்பதிலிருந்து இக்பால் எடுத்தாளுவதாகும். அஜம் என்பது அரபி அல்லாத நாடுகளைத்தான் குறிக்கும். (அஜமி-அரபி அல்லாதவன்.) எனினும், இது பாரஸீகத்தின் சிறப்புப் பெயராய் ஆகிவிட்டது.

'குல்ஷனே-ராஸே ஜதீத்' முஹம்மது ஷபிஸ்திரி என்ற சூபி ஞானி எழுதிய புகழ்பெற்ற 'குல்ஷனே ரா'ஸுக்குப் பதிலாகவும், ஒரு சூஃபி விடுத்த ஒன்பது வினாக்களுக்கு விடையாகவும், இன்றைய இருபதாம் நூற்றாண்டின் நிலைமைகளுக்கு ஏற்பப் பதில் தரும் முறையில் எழுதப்பட்டுள்ளது. 'பந்தகி நாமா' அடிமைத் தனத்தின் தீமைகளை விவரிக்கிறது.

'ஸபூரே அஜ'த்தின் மிக முக்கியமான அடிகளின் பொருள் வருமாறு :

இறைவனே, என் மார்பினுள்
சகலமும் அறிந்த இதயத்தைத் தந்தருள் !
மதுவில் போதையைக் காணும் பார்வையை
எனக்குக் கொடுத்தருள் !

....

தாஹூதின் பாட்டின் ஒளியால்
என் புழுதியில் விளக்கேற்று ;
மதுவின் ஒவ்வோர் அணுவுக்கும்
தீப்பொறியின் இறக்கைகளைத் தா !
....

அஜம் நாட்டின் மூங்கில்களில் (குழல்களில்)
காலைக் காற்று வேகமாக வீசுகிறது.
வாத்தியத்தின் வழியாகச் சொட்டும் (தீப்) பொறியை
வெளியாக்கு !
....

இராக்கின் மணல் வெளி காத்திருக்கிறது ;
ஹிஜாஸின் பயிர்கள் தாகித்துள்ளன.
மீண்டும் உன் கர்பாவுக்கும் கூஃபாவுக்கும்
ஹுஸைனின் செங்குருதியைக் கொடு.
....

தேரியஸ் மன்னனின் புகழையும்
பரீதூனின் ஜாஜ்வல்யத்தையும்விட
வாளின் துணையின்றி நூறு நாடுகளை வெல்லும்
திருப்தி மிக மிகச் சிறந்தது.
....

தன் ஆத்மாவைத் தன் உள்ளங்கையில்
வைத்துக் காட்டும்படியோ,
தன் புராதன உடலில்
ஒரு புதிய ஆத்மாவை உண்டாக்கும்படியோ
முஸ்லிமிடம் உத்தரவிடாதே !
இவ்வழியில் அல்லது அவ்வழியில் அதைச் செய் !
....

என் இருப்பிடம் எனக்குப் புறம்பாகவில்லை ;
நான் அதிர்ஷ்டமற்றவன் ;
என்னால் வழிகாண இயலவில்லை.
....

நிம்மதியற்ற இதயம்
போராட்டத்திலிருந்து விடுபெற வேண்டாம் !
சிக்கல் விழுந்துள்ள சிகைகளுடன்
இன்னும் ஓரிரு சிக்கல்களைச் சேர் !
....

நீ விழித் தெழுவதற்காக,
நான் இரைந்து அழுதேன்.
அன்பென்பது பெருமூச்சோ, கூச்சலோ இன்றிச்
செய்யும் ஒரு காரியமாகும்.
....

கம்பாவிலும் விக்ரஹ விடுதியிலும்
நீண்ட காலமாக வாழ்க்கை அழுதுகொண்டிருக்கிறது ;—
அன்பெனும் சபையிலிருந்து
ஓர் அறிஞன் தோன்றும் வரை
(அது அழுதுகொண்டே யிருக்கும்).
....

பூமி பிஹிஸ்தூனையும், ஆல்வந்தையும்
தன் முதுகில் சுமந்து கொண்டிருக்கிறது ;
நம் புழுதிதான் அதன் தோளில் பாரமாக இருக்கிறது.
....

என் இதயத்தில் எழுவதிலிருந்து
ஒரு தீப்பொறி எடு !
நான் ரூமியைப் போல் கொதிக்கும் குருதியுடையவன்.
அல்லது புதிய நாகரிகத்திலிருந்து நெருப்பை அகற்று.
உன் வெளிரங்கத்தை வெளிச்சமாக்கிக் கொண்டு,
அகத்தே மரணமடை !
....

அடிமைத்தனக் கலைகளில் மரணங்கள் உள;
அடிமைத்தனத்தின் மாயா ஜாலம் விவரிக்க இயலாதது.
....

அடிமை தன் சமயத்தையும் அறிவையும்
மிக மலிவாகக் கொடுத்துவிடுகிறான்;
உடலை உயிரோடு வைத்திருப்பதற்காக
உள்ளத்தை விற்றுவிடுகிறான்.

ஜாவீது நாமா

ஜாவீது நாமா அமரகாவியம்; ஒரு பாரகாவியம். உலகிலுள்ள பாரகாவியங்கள் எவை என்பதை இலகுவாக எண்ணிவிடலாம். பாரகாவியம் என்பது ஒரு யுகத்தின் சிந்தனைகளை வெளியிடுவதாகவோ ஒரு மக்கள் கூட்டத்தின் அபிலாஷைகள் முழுவதையும் பிரதிபலிப்பதாகவோ இருக்க வேண்டும். இம் முறையில் தமிழில் கம்ப இராமாயணமும், வடமொழியில் வான்மீகமும், வியாஸ பாரதமும், ஆங்கிலத்தில் மில்டனின் சுவர்க்க நீக்கமும், கிரேக்க மொழியில் ஹோமரின் இல்லியாதும் வர்கிலின் அயினுதும், இத்தாலிய பாஷையில் தாந்தேயின் டிவைனு காமெடியாவும் பாரகாவியங்களாகக் கொண்டாடப் படுகின்றன.

இத்தகைய பாரகாவியங்களோடு சேர்க்கப்படக் கூடியது ஜாவீது நாமா. இது ஒரு மகா காவியமும் ஆகும். ஒரு பேரறிஞர் குறிப்பிடுவது போல ஜாவீது நாமா பிர்தௌசியின் ஷாஹ் நாமாவோடும், ரூமியின் மஸ்னவியோடும், சாஅதியின் குலிஸ்தானோடும், ஹாபீஸின் திவானோடும் ஒன்றாகக் கருதப்படக்கூடிய நூல்.

ஜாவீது நாமா இளைஞருலகைத் தட்டி எழுப்புவதற்காக எழுதப்பட்டது. வாழ்க்கையில் இன்றுள்ள பிரச்சினைகள், உலக நிலை ஆகியவை பற்றி இக்பால் பல வழிகளில் விவரிக்கிறார். உயரிய அரசியல் எது என்பதையும் தெளிவாக்குகிறார். கீழ்நாட்டுக்கும் மேல் நாட்டுக்குமுள்ள வேற்றுமைகளை எடுத்துக் காட்டி அவை பரிபூரணமடையும் மார்க்கத்தை விளக்குகிறார்.

இந்நூலில் ஜாவீது என்று குறிப்பிடுவது தன் புத்திரர் ஜாவீதைப் போன்ற இளைஞர் உலகம் முழுவதையும் ஆகும். இந்நூல் பாரஸீக பாஷையில் மஸ்னவியாக எழுதப்பட்டிருக்கிறது.

இது இக்பால் பல உலகங்களைச் சுற்றுவதாகவும் புலவரை ஆங்காங்கே சந்திப்பதாகவும், அவர்களோடு உரையாடுவதாகவும், பின்னர் இளைஞருலகை நோக்கி அறிவுரை சொல்லுவதாகவும் வரையப்பட்டிருக்கிறது.

முதலில் இக்பால், நபி பெருமான்(ஸல்) வானுலகஞ் சென்று இறைவனோடு சம்பாஷித்த சம்பவத்தை இன்றையக் கருத்துக்குப் பொருத்தமான முறையில் பொருத்திக் காட்டி 'மிஃராஜ் நாமா' என ஒரு நூல் எழுத எண்ணினார். ஆனால், இத்தாலிய மகாகவி தாந்தே எழுதிய 'டிவைனா காமெடியா' நபி பெருமானின் மிஃராஜ்பற்றிய ஹதீஸ்களை ஆதாரமாகக்கொண்டே எழுதப்பட்டிருக்கிறது என்பதையும், அந்த விபரங்கள் தாந்தேக்கு இப்னு அரபி எழுதிய "புதூஹாத்துல்-மக்கியா" என்ற நூலின்மூலம் கிட்டியதையும் அறிந்தார். உடனே அவர் தாந்தே கீழ், மேல் உலகங்களைச் சுற்றுவதாக வருணிக்கும் பாணியில் தாமும் 'தம் ஏற்றம்' பற்றி ஒரு நூல் எழுத முடிவு செய்தார். தாந்தே தம் வானுலகப் பிரயாணத்துக்குக் கிரேக்க மகாகவியான வர்கிலைத் துணையாக்கக் கொண்டு செல்லுவதைப் பார்த்த இக்பால், தன் பிரயாணத்துக்கு ஜலாலுத்தீன் ரூமியைத் துணை கொள்கிறார். அவரை பீரே-ரூமி (குருவாகிய ரூமி) என்று அவர் அழைக்கிறார். பல உலகங்களிலுமுள்ளவர்களுக்கு ரூமி, இக்பாலை அறிமுகம் செய்து வைக்கிறார்.

பிரயாணம் ஆரம்பமாகிறது. காலம் தூரம் என்ற இரண்டையும் உருவகித்து நிற்கும் **ஸார்வான்** அவரைக் காண்கிறான். காலம் தூரம் என்ற கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை பெற்றவராகும்படி அவரைக் கேட்டுக்கொள்கிறான். அவ்விதம் இக்பால் எண்ணியதும், அவர் உயரே செல்ல ஆரம்பித்துவிடுகிறார். நக்ஷத்திரங்கள் அவரை வரவேற்றுப் பாடுவதுகூடக் காதில் விழுகிறது.

முதலில் இக்பால் சந்திரலோகத்தில் நுழைகிறார். அங்கே ஒரு விருக்ஷத்தினடியில் ஜடாமுடி தரித்து, திகம்பரதாரியாய், ஸர்ப்பம் ஒன்று அருகே நெளிய அமர்ந்திருக்கிறார் ஒரு முனிவர். இக்பாலோடேயே செல்லும் மௌலானா ரூமி இக்பாலை அம் முனிவருக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார். அம் முனிவரின் பெயர் 'ஜஹான் தோஸ்த்' (விஸ்வாமித்ரர்) என்பதாகும். அவர் தம் மோன நிலையிலிருந்து விழித்து, வந்தவர்களோடு உரையாடுகிறார். அப்போது மௌலானா ரூமி சொல்கிறார்: மனிதன் முன்னேற்றமுற வேண்டுமானால் கீழ்நாட்டுக் கலாச்சாரமும் மேல்நாட்டுக் கலாச்சாரமும் ஒன்று சேர வேண்டும்; கீழ்நாடுகள் லோகாயதத்தை ஒதுக்கி விட்டு ஆத்மீகத்தை மட்டுமே மதிக்கின்றன; மேல்நாடுகளோ அதைப் புறக்கணித்துவிட்டு லோகாயதத்தை மட்டுமே பெரிதாகக் கருதிப் போற்றுகின்றன.

கீழ்நாடுகள் இறைவனைக் கண்டன.
ஆனால் இகலோக நன்மைகளைக்
காணத் தவறிவிட்டன.
மேல்நாடுகள் இவ்வுலக நன்மைகளில் மூழ்கி
இறைவனையே மறந்துவிட்டன.

ரூமி சொன்னதை ஒப்புக்கொள்ளும் விஸ்வாமித்ரர் இவ்விதம் கூறுகிறார்: இதுவரை கீழ்நாடுகள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தன; ஆனால், அவை விரைவில் விழிப்புறப் போகின்றன; எழுச்சியுறப் போகின்றன. நான் ஒரு தேவதூதனைக் கண்டேன். அவன் கீழ்நாட்டையே ஓயாது உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஏன் அப்படிப் பார்க்க வேண்டும் என்று கேட்டேன். அவன் சொன்னான்:

கீழ்நாடுகள் எழுச்சி பெற வேண்டிய காலம் வந்துவிட்டது.
அவற்றின் மடியில் புதிய சூரியன் தோன்றிவிட்டான்.

கற்களிலிருந்து ரத்தினங்கள் வெளிப்படுகின்றன.
அதன் யூசுப்்கள் தாங்கள் தள்ளப்பட்டிருந்த
கிணறுகளிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றனர்.
எழுச்சியின் அறிகுறியை
அதன் தேகமெங்கணும் கண்டேன்;
அதன் பர்வதங்கள் உடல் சிலிர்ப்பதிலும் பார்த்தேன்.
ஆத்மா ஒளிவிடுகின்ற அந் நாடுகளை நான் வாழ்த்துகிறேன்—
அவை தம் மண்ணைக்கொண்டே புது உருப்பெறுகின்றன.
ஒரு நாடு கண்திறந்து விழிப்புறும் நாள்
தேவலோகத்தவர்க்குத் திருவிழா நாளாகும்.
[யூசுப் நபி தன் சகோதரர்களால் கிணற்றில் தள்ளப்பட்டதை உவமையாகக் கூறுகிறார்.]

இவ்விதம் தேவ தூதனின் செய்தியைத் தெரிவிக்கும் அம் முனிவர் வாழ்க்கையின் மர்மத்தைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு மறைகிறார்.

அப்போது வருங்கால நம்பிக்கையின் உருவகமான **ஸரூஷ்** என்ற அழகிய தேவலோக மங்கையைக் கவிஞர் காண்கிறார். அவள் அமுததாரை பொழியும் கீதம் இசைக்கிறாள். மனிதனுக்கு வரவிருக்கிற நற்காலத்தைப் பற்றி அவள் பாடியது இக்பாலுக்கே புது உணர்ச்சி தந்து ஊக்குவதாக இருந்தது. வாழ்க்கையின் அந்தரங்க உண்மையை உணரும்படி அவள் கூறுகிறாள்.

அவளிடமிருந்து பிரிந்து இக்பால் **யர்கமீது** என்ற கணவாய்க்கு வருகிறார். அங்கே புத்தர், ஸொராஸ்தர், கிறிஸ்து, முகம்மது நபி (ஸல்) ஆகிய மகான்களின் போதனைகள் பொறிக்கப்பட்ட நான்கு பலகைகளைக் காண்கிறார். அவர்களை நேரில் காண இயலவில்லை. அப் போதனைகளை நான்கு வெவ்வேறு விதமான மனிதர்கள் விளக்குகிறார்கள். நடன ராணியாய் விளங்கிப் புத்தர் போதனைகளால் ஆத்மாவின் நித்தியத்துவத்தை உணர்ந்த ஒரு பெண் மணி புத்தரின் ஞான மார்க்கத்தை

விளக்குகிறுள். ஸொராஸ்திரீய மதம் பாரஸீகத்தில் பரவி யிருந்தது. இன்று பார்ஸிகள் எனப்படுவோரால் பின் பற்றப்படுவது. அவர்கள் நெருப்பை வணங்குபவர்கள். அவர்களுடைய வேதபுத்தகம் ஸெண்ட் எவஸ்தா எனப் படும். இந்த மதத்தைத் தோற்றுவித்தவர் பெயர்தான் ஸொராஸ்தர் என்பதாகும். இவருடைய கொள்கைகளை விளக்கி வைக்க **அஹர்மான்** என்பவன் வருகிறுன். அஹர் மான், ஸொராஸ்திரியர்களால் தீய தெய்வமாகக் கருதப் படுபவன். பின்னர் ஏசு கிறிஸ்துவின் கொள்கையை விளக்கி வைக்க ருஷ்ய ஞானி டால்ஸ்டாய் வருகிறுர்.

பின்னர் நபி பெருமான் (ஸல்) அவர்களின் பரம வைரி அபூ ஜஹல் வருகிறுன்—அவர்களைப்பற்றிக் கூற. அபூ ஜஹல் பெருமானுரின் போதனைகளை எதிர்த்து நின் றவன். அவர்கள் உயிரை வாங்கவும் பல சூட்சிகள் செய்தவன். நபி பெருமானுக்கெதிராக நடந்த சண்டை யொன்றில் அவன் கொல்லப்பட்டான். அவன் சொல் கிறுன் :

இந்த முஹம்மதால்
எங்கள் மனமும் விண்டுபோயிற்று.
அவர் போதனைகள்
கஃபாவின் ஒளியை மங்கச் செய்துவிட்டன.
கைஸரும் குஸ்ரூவும்π
வேண்டாமென்கிறுர் அவர்.
எங்களிடமிருந்து
இளைஞர்களையும் தம் பக்கம் இழுத்துக்கொண்டார்.
அவர் தாக்குதலால்
லாத்தும் மனுத்தும் * தூள் தூளாகிவிட்டன.
ஏ உலகமே, நீ அவர் பேரில் வஞ்சம் தீர்த்துக்கொள்!

π கைஸர், குஸ்ரூ - நபிபெருமான் காலத்திலிருந்த முடி மன்னர்கள்.

* லாத், மனுத்—கஃபாவிலிருந்த பெரிய விக்ரகங்கள்.

அவர் மதத்தில் வர்க்க, ஜாதி பேதங்களைக் காணேம்,
அவர் குறைவழிக் கூட்டத்தவராயினும்
அராபியர்கள் உயர்ந்தவர்களல்லர் என்கிருர்.
அவர் மதத்தில் உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் ஒன்ரும்!
தன் அடிமை உண்ணும் தட்டில்
தானும் உடனிருந்து உண்ணுகிருர்!

இவ்வாறு உலகில் வாழ்ந்த நான்கு மாகான்களின் கொள்கையை ஒருவிதத் துவேஷமுமின்றி இக்பால் விளக்கி வைக்கிருர்.

இதன் பின்னர் இக்பால் புதன் கிரஹம் செல்கிருர். அங்கே பத்தொன்பதாம் நூற்ருண்டைச் சார்ந்த இரு பெரும் அறிஞர்களான ஜமாலுத்தீன் ஆப்கானியையும் செய்யிது ஹாலீம் பாஷாவையும் காண்கிருர். அவர்களுக்கு மௌலாணு ரூமி இக்பாலை "ஜிந்தா ரூத்" (ஜீவநதி) என்று அறிமுகப்படுத்தி வைக்கிருர். இக்பால் அவர்களிடம் இன்றைய முஸ்லிம்களின் நிலையை விவரிக்கிருர். முஸ்லிம் நாடுகள் மதம் வேண்டுமா, நாடு வேண்டுமா என்ற போராட்டத்தில் இறங்கியுள்ளன. துருக்கியரும், பாரஸீகத்தவரும், அராபியரும் ஐரோப்பாவின் மேல் மோகங்கொண்டு விட்டனர். ஆனல், மேல்நாட்டு ஏகாதிபத்தியமோ கீழ்நாட்டின் உயிரையே உறிஞ்சி வருகிறது. கம்யூனிஸம் மதத்தை நாசஞ் செய்கிறது என்று இக்பால் சொல்கிருர். ஜாமலுத்தீன் ஆப்கானி கம்யூனிஸம், ஏகாதிபத்தியம் ஆகிய இரண்டையும் பற்றிய தற்கால நோக்கங்களின் தீமைகளை எடுத்துக் கூறுகிருர். செய்யிது ஹாலீம் பாஷா மேல்நாட்டையும் கீழ்நாட்டையும் ஒப்பிட்டு அவை இரண்டிலுமுள்ள நல்ல அம்சங்கள் ஒன்று சேர்க்கப்பட்டாலொழிய உலகுக்கு விமோசனமில்லை என்பதை இவ்வாறு குறிப்பிடுகிருர்:

மேற்கே அறிவுத்திறனே
வாழ்க்கை ஊற்றாக விளங்குகிறது.
கிழக்கிலே அன்பே
வாழ்க்கையின் அடிப்படையாக உள்ளது.
அன்பின் மூலம் தான் அறிவு உண்மையை உணரும்.
ஆகவே விழியுங்கள் ! புத்துலகு காண விழையுங்கள் !
அன்போடு அறிவு கலந்திட ஆக்கந்தேடுங்கள் !

கடைசியில்,

ஒருவகை உலகு பழையதானதும்
திரு குர்ஆன் இன்னொருவகை உலகைத் தருகிறது

என்று குறிப்பிட்டுத் தன் பேச்சை முடிக்கிறார்.

செய்யிது ஹாலீம் பாஷா குறிப்பிடுகிற திரு குர்ஆனைப் பற்றிய இக்கூற்றுக்கு விளக்கம் அறிய இக்பால் ஆசை கொள்கிறார். ஜமாலுத்தீன் ஆப்கானி அதை விரித்துக் கூறி அவர் ஆவலைத் தீர்க்கிறார். திரு குர்ஆன் தரும் ராஜ்யம் ஜாதி மத பேதமற்றதாகவும், நாட்டாசை யற்றதாகவும், ஒருவனை ஒருவன் அடக்கியாள வேண்டும் என்ற வெறியற்றதாகவும் இருக்கும். அங்குக் கலாச்சார மென்பது மனிதனுக்கு மதிப்பளிப்பதாகவும் அறிவை விருத்தி செய்வதாகவும் விளங்கும். பெண்கள் தற்காலக் கோலாகலங்களின்றி எளிய வாழ்க்கை வாழ்பவர்களாக இருப்பர். பொருள்களின் ஆத்மீக மதிப்பே அங்குப் பெரிதாகக் கருதப்படும் என்று ஆப்கானி வருணிக்கிறார். செய்யிது ஹாலீம் பாஷா, குறுகிய மனம் படைத்த முல்லாக்களால்தான் இஸ்லாம் மாசுண்ட தென்றும், முல்லா, மதம் என்று நினைப்பதே அல்லாஹ்வின் பெயரால் சங்கடங்களை உண்டாக்குவதுதான் என்றும் கூறுகிறார்.

பின்னர் ஜமாலுத்தீன் ஆப்கானி ரஷ்யாவைப்பற்றிப் பேசத் தொடங்குகிறார். ரஷ்யாவிலுள்ள போல்ஷவிஷத்

துக்கும் இஸ்லாத்துக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக்காட்டி திரு குர்ஆனை ஒப்புக்கொண்டால் தான் ரஷ்யாவின் நிலைமை உண்மையிலேயே சீர்ப்பட்டதாகும் என்று சொல்கிறார். ராஷ்யாவிடம் சொல்லும் படியாக ரஷ்யாவை விளிக்கும் முறையில் அவர் பேசுகிறார் :

'இறைவனில்லை' என்ற படியிலிருந்து
'அல்லாஹ்வைத் தவிர' என்ற படியை நோக்கி முன்னேறு !
உலக அமைதியில் உனக்கு ஆசையுண்டென்றால்,
அதற்கான பலம், பொருந்திய அடிப்படை
எது என்று உணர முயன்றாயா ?
பழைய சரித்திரத்தை நீ கொளுத்திவிட்டாய்,
உன் அறிவை 'நூல்களின் தாயால்' * சிறப்பு !
கருப்பர்களையும் ஒளி பெறச் செய்தவர் யார் ?
கைஸருக்கும் கிஸ்ராவுக்கும் இங்கு இடமில்லை,
எனக் கூறியவர் யார் ?
ஐரோப்பியக் கலாச்சாரத்துக்கு அப்பால் பார் !
மேல்நாட்டின் சூழ்ச்சிகளை நீ உணர்ந்திருந்தால்,
நரியின் தந்திரத்தைக் கைவிட்டுப்
புலியின் தன்மையைக் கைக்கொள்.
நரி திருட்டு வழிகளைச் சிந்திக்கும்;
புலியோ சுதந்திரத்தைத் தேடும்;
சாவு வரினும் ஏற்கும்.
திரு குர்ஆன் இன்றேல்,
சிங்க உள்ளமும் குள்ளநரித்தன்மை யடைந்துவிடும்.
திரு குர்ஆனின் எளிமையே அரசுமுறையின் சாரம்.
ஆத்மீக அன்பையும் அறிவையும்
ஒன்று கூட்டுவதே திரு குர்ஆனின் தர்வேஷ் தன்மையாகும்.
தெய்வீக அன்பற்ற அறிவு பரிபூரணமற்றது.

[* நூல்களின் தாய் — திரு குர்ஆன்]

ஆகவே ருஷ்ய மக்கள் திரு குர்ஆனைப் பின்பற்றி அறிவையும் அன்பையும் கலக்கச் செய்து முஸ்லிம்களின்

கடமையைக் கைக்கொள்ளவேண்டும் என்று செய்யிது ஹாஸீம் பாஷாவும் ஆப்கானியின் கூற்றைத் தொடர்ந்து பேசுகிறார் :

திருகுர்ஆன் என்பது என்ன ?
முதலாளி வர்க்கத்துக்குச் சாவுமணி ;
பாட்டாளிக்கு உற்ற துணைவன்.

இவ்விதம் திரு குர்ஆனின் பெருமையையும் உலகம் உய்ய அதைக் கைக்கொள்ளல் ஒன்றே சரியான வழி என்பதையும் ஹாஸீம் பாஷாவும் ஜமாலுத்தீன் ஆப்கானியும் விளக்குகின்றனர்.

அங்கிருந்து இக்பால் சுக்ரன் என்ற கிரஹத்துக்குப் போகிறார். அங்கே புராதன தெய்வங்களெல்லாம் தற்கால உலகம் லோகாயதத்தில் மூழ்கி மதத்தை மறந்து விட்டனவே என்று புலம்பக் காண்கிறார். மௌலானா ரூமி தன் இனிய இசையால் அத் தெய்வங்களெல்லாம் முழுந்தாளிடும்படி செய்துவிட்டு, ஓர் ஆற்றுக்கு அடியிலுள்ள பாதை வழியாக இக்பாலை அழைத்துச் செல்கிறார். அங்கே பிர்அவ்ன் அரசனும் கிச்சனர் பிரபுவும் வதிகின்றனர். பிர்அவ்ன் மூஸா நபி காலத்திலிருந்த கொடுங்கோலன். தானே இறைவன் என்று சொன்ன மூர்க்கன். கிச்சனர் கப்பல் படைத் தலைமையிலிருந்தவர். எகிப்திலுள்ள புராதனப் புதைகுழிகளைத் தோண்டி அவற்றிலிருந்த பொன்னையும் மணியையும் வெளியே எடுத்தவர். அவர் தோண்டிய குழிகளில் ஒன்றில் மெஹ்தி சூடானி அடக்கப்பட்டிருந்தார்.

பிர்அவ்ன் தான் மூஸா நபியின் போதனைக்குச் செவிசாயாது போனது குறித்து வருந்தி, இன்று தன்னைப் போலுள்ள சர்வாதிகாரிகளுக்கு அது ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்கிறான். ரூமி தன்னாட்சியையும் ஏகாதிபத்தியத்தையும் கொள்ளையடித்தலுக்கு ஒப்பிடு

கிறார். இதைக் கிச்சனரின் குற்றமுள்ள நெஞ்சம் ஏற்க மறுக்கிறது. அவர் ஐரோப்பிய நாடுகளுக்காகப் பரிந்து பேசுகிறார். ஐரோப்பாவின் லக்ஷியங்கள் மிகவும் உயர்ந்தவையென்றும் எகிப்து தேசத்திலுள்ள புராதனப் புதைகுழிகளை ஐரோப்பியர் தோண்டியது எகிப்தின் சரித்திரத்தை அறிவதற்காகத்தான் என்றும் சொல்கிறார். பிர்அவ்ன் மெஹ்தி சூடானியின் அடக்க ஸ்தலத்தைத் தோண்டியதைக் குறிப்பிடுகிறான். அப்போது மெஹ்தி சூடானியே அங்கே வருகிறார். தனது புதைகுழியைத் தோண்டிய பாவத்தால்தான் கிச்சனருக்குப் பூமியில் கூடப் புதைகுழிக்கு இடம் கிடைக்கவில்லை, அவர் கடலுள் மூழ்க வேண்டியதாயிற்று என்று கிச்சனர் சென்ற கப்பல் நீர்மூழ்கியால் மூழ்கடிக்கப்பட்டதை மெஹ்தி நினைவூட்டுகிறார். மெஹ்தி சூடானி அராபியருக்கு ஒரு வேண்டுகோளும் விடுக்கிறார்; அவர்கள் விழிப்படைந்து புத்துலகை ஆக்க வேண்டுமென்றும் காலீத்களையும் உமர்களையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் கூறுகிறார்.

பின்னர் இக்பால் செவ்வாய்க் கிரஹத்துக்குச் செல்கிறார். அங்கே ஒரு வானசாஸ்திரியைக் காண்கிறார். அங்குள்ள மக்கள் விஞ்ஞானத்திலும் மேல்நாட்டினரை விட அதிக முன்னேற்றமடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால், அவர்கள் மேனாட்டினரின் லோகாயத வெறியற்றவர்களாய் விளங்குகின்றனர். அவ் வான சாஸ்திரி தங்கள் வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்கிறார்: தங்களுடைய ஆதம் (முதல் மனிதன்) ஒரு **பர்கியா** வென்றும், அதைத் தங்கள் ஷைத்தானாகிய பர்ஸ்மாஸ் தவறான வழியில் திருப்பப் பார்த்ததென்றும், ஆனால் பர்கியா அவ்விதம் வழி தவறவில்லையென்றும், அதற்கு வெகுமதியாக இறைவன் அச் செவ்வாய்க் கிரஹத்தைத் தங்களுக்குத் தந்தான் என்றும் தெரிவிக்கிறார். அந்தக்

கிரஹத்தின் தலைநகரான **மர்காதின்** என்பதைக் கவிஞர் வருணிக்கிறார். அங்கே இந்த உலகைப் போன்று காசுகள் இல்லை; போர்க் கருவிகளில்லை; பிச்சைக்காரர்களில்லை; வேலையில்லாத் திண்டாட்டமில்லை; ஒழுக்கமற்ற நிலையில்லை; சைன்யமில்லை; குரோதமும் பொய்ப் பிரசாரமும் இல்லை. செவ்வாயிலுள்ள தொழிலாளிகள் தம் உழைப்பின் முழுப் பயனையும் அனுபவித்தனர். அங்கு அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சும் முதலாளிகள் இல்லை. இவ்விதம் வருணனை செல்கிறது. முதல் மனிதன் தோன்றியதிலிருந்து உலகத்தோர் ஷைத்தானின் தூண்டுதலுக்கு இணங்காமல் நேர்மையாக நடந்திருந்தால் உலகம் எப்படி இருக்கும் என்பதைத்தான் இக்பால் இவ்விதம் வருணிக்கிறார் எனலாம்.

பின்னர் அந்த வானநூல் வல்லார் விதியைப் பற்றிப் பேசுகிறார். ஒருவன் தன் விதியை மாற்றிக்கொள்வது இயலுமென்றும், மனிதன் தன் விதியை அடக்கியாளப் பயில வேண்டுமென்றும் அந்த வல்லுநர் கூறுகிறார். "உன் விதி உனக்குச் சரிப்படாவிட்டால், ஆண்டவனிடமிருந்து இன்னொருவகை விதியைப் பெற்றுக்கொள்! புது விதி பெறுவது இயலும்; ஏனெனில், இறைவன் பல விதிகளை அருளமுடியும். அதன் இரகசியம் இதுதான்: நீ மாறினால் உன் விதியும் மாறும்" என்றும் அவர் சொல்கிறார்.

செவ்வாயை விட்டுக் கவிஞர் புறப்படுமுன், அவ்வுலக ஷைத்தானை பர்ஸ்மாலால் அங்குச் சங்கடங்களை உண்டுபண்ணுவதற்காக ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கன்னியையும் காண்கிறார். அந்தக் கன்னியின் வதனத்தில் அருளில்லை; கண்களில் கருணையில்லை; வார்த்தைகளில் ஈரமில்லை; அவள் அன்பினால் ஊறும் இன்பத்தை அறியாதவள். அவள் ஸ்தனங்கள் வளர்ச்சி

யற்று வாடிக் கிடந்தன. அவள் நாணம் சிறிதுமின்றிக் கூச்சமற்று உடலின் இரகசியங்களை வெளிப்படையாகப் பேசுகிருள். அவள் தான் ஐரோப்பிய நவ நாகரிக நங்கையின் உருவகம்.

தாய்மையை மறந்து குழந்தைகளையும் தாம் பராமரியாது தாதி கையில் விட்டு வருங்கால மக்களை நாசமாக்கும் பெண்களை இக்பால் கடிந்து பேசுகிருர். கண்ணுடி உடையணிந்து, உதட்டுச் சாயம் பூசி, முகத்தில் பவுடரை அப்பி குடும்ப வாழ்க்கையை நாசமாக்குகின்றனர் சிலர்; இஷ்டப்பட்டால் கணவனை ஏற்கவோ ஒதுக்கவோ செய்யலாம் என்று எண்ணுகின்றனர். ஆத்மா என்ற கண்ணுடியை மங்கியதாக ஆக்கிச் சமுதாயத்தின் உயிரே வற்றும்படி செய்துவிடுகின்றனர். இங்கே இத்தகைய அநாகரிகப் பெண்களையே இக்பால் வருணிக்கிருர்.

இந்த ஐரோப்பியக் கன்னி இதோ பேசுகிருள்: "ஏ மனைவியர்களே, தாய்மார்களே, சகோதரியரே, எத்தனை நாட்கள்தான் மனிதனின் அன்புக்கு உட்பட்டு நீங்கள் அடங்கிக் கிடக்கப் போகிறீர்கள்? ஆண்களால் நேசிக்கப்படுவது உங்களுக்குத் துன்பத்தைச் சேர்க்கிறது. அது உங்கள் உரிமையைப் பறித்துவிடுகிறது. உங்கள் கேச அலங்காரத்தில் மனிதன் மயங்கி அடிமையாகி விட்டான் என்றெண்ணுகிறீர்கள். மனிதனே பணிவு என்ற ஆயுதத்தோடு உங்களை வளைய வருகிருன். அது உங்களை அடிமைப்படுத்தவே. அவனுடைய அன்பு ஒரே பாசாங்குதான்; அவன் நடிப்பெல்லாம் போலி; அந்தக் காபிர் உங்களைத் தன் கல்பாவினுள் பிரதிஷ்டை செய்து விடுவதாகக் கூறினாலும், உங்களுக்குத் துன்பத்தையும் துயரத்தையுமே தருகிருன். அவன் உறவு உங்கள் வாழ்வைக் குலைக்கிறது. அவனோடு ஒன்றுவதே விஷந்தான். அவனை விட்டகன்றிருப்பது அமிர்தம். அவன்

உங்கள் உடலைச் சுற்றும் ஸர்ப்பம்; அவனைவிட்டு விலகி நில்லுங்கள். அவனுடைய நச்சுப் பல் உங்கள் குருதியில் விஷத்தைக் கலந்துவிடக் கூடாது. குழந்தைகள் பெறுவது உங்களை இரத்தமற்றவர்களாக்குகிறது; நீங்கள் கணவரிடமிருந்து விடுதலை பெறுங்கள். கலையின் மூலம் கர்ப்பம் உண்டாக்கும் அதிசயம் நடக்கும் காலம் வந்துவிட்டது. குழந்தைகள் நமக்கு இஷ்டமில்லாதவையாக இருந்தால், உடனே அவற்றைக் கொன்றுவிடுதல் நம் கொள்கையாதல் வேண்டும். விரைவில் புது ரகசியங்கள் வெளியாகலாம்; கருக்குழியின்றியே கருவை உண்டாக்குதல் சாத்தியமாகலாம். வாழ்க்கை என்ற வாத்தியம் விரலின் மீட்டுதலின்றியே நாதம் எழுப்பும். எழுங்கள், இயற்கையின் நியதியோடு போராடுங்கள்! அடிமைப் பெண்கள் சுதந்திரர்களாகட்டும். மணம் என்னும் தடையிலிருந்து விடுதலை பெறுதலே பெண்கள் ஐக்கியத்துக்கு அடிகோலும். உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்! ஆண்களை அண்டவிடாதீர்கள்!"

இங்கே இக்பால் வரம்பு மீறிய வருணனையில் இறங்கியதாகத் தோன்றினும், மேல்நாட்டுப் பெண்கள் மனப்பான்மையையே இவ்விதம் கசப்புடன் விவரிக்கிறார்.

பின்னர் இக்பால் அதைவிட்டு நீங்கி வியாழ கிரஹம் செல்கிறார். அங்கே கவிஞர் காலிபையும், பெண் புலவர் தாஹிராவையும், மெய்ப்பொருள் அறிவு ஞானி மன்சூர் ஹல்லாஜையும் சந்திக்கிறார். இவர்களோடு வாழ்வு, சாவு ஆகியவற்றின் தத்துவங்களைப்பற்றிப் பேசுகிறார். மனத்தைப் பழக்கப் பலவந்தம் அவசியம். நபி பெருமானைப் பார்ப்பதென்பது உடலை அவர்கள் கட்டளைக்கு உட்படுத்துவதாகும். ஆண்டவனைக் காண்பதென்பது அவனோடு நாம் சம்பந்தப்படுத்தும் கருணை முதலிய குணங்களை நம் மனத்துள் வளர்த்து உலகிலும் அவை நிலவும்படி செய்தல்தான். இம்முறையில் உரையாடல் செல்கி

றது. அப்போது ஷைத்தான் அங்கே வருகிறான். இக்பால் தனது மற்றையக் கவிதைகளில் ஷைத்தானுடைய தன்மையைக் 'கூறுவது போலவே இங்கும்' அவனை வருணிக்கிறார். அவனைக் காரியவாதி என்கிறார். அவன் பிரிவை விரும்புகிறான். தனக்கும் மனிதர்களைப் போன்ற உள்ளத்தாபம் இருப்பதாகவும், பூர்த்தி பெறாத லக்ஷியங்களைத் தானும் விரும்புவதாகவும் சொல்கிறான். அத்துடன் ஷைத்தான் தற்பெருமையும் பாராட்டுகிறான். அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருந்த மனிதனின் நிலையை உயர்த்தி, மனிதத்தன்மையை வளர்ப்பதற்கு அவசியமான சுதந்திரத்தை வழங்கியவன் தானே என்று பெருமையடித்துக் கொள்கிறான். அவன் இறைவனிடம் மனிதனின் பலஹீனமான நிலையைச் சொல்லி முறையிடுகிறான். மனிதன் வெகு இலகுவாக அவன் சூட்சிகளுக்குப் பலியாகிவிடுகிறானும். அவன் பலத்தை மனிதர்களிடங் காட்ட முடியவில்லையாம். ஆகவே, தன் திறமை முழுவதையும் பிரயோகிக்கக்கூடிய வகையில் தனக்கு எதிரியான மானிடனை ஆண்டவன் படைக்க வேண்டுமாம். மனிதனிடம் வெகு இலகுவாக வெற்றி பெற்று அவனைக் கஷ்டமின்றித் தன் வழிக்குத் திருப்ப முடிவதால், ஷைத்தானின் வாழ்க்கையே சாரமற்றதாகிவிட்டதாம். ஆகவே, அவன் தன் தீயவழிகளையும் ஏற்பாட்டையும் இலகுவில் ஏற்றுக்கொள்ளாத மனிதனைக் காண வேண்டுமாம்:

எல்லோர்க்குமிறைவனே,
மானிடரோடு பழகி நான் மதிப்பற்றவனுகிவிட்டேன்.
நான் விரும்புவதை
மனிதன் நிறைவேற்றத் தவறுவதில்லை.
அவன் தன் கண்களை மூடிக்கொள்கிறான்.
தன் மனத்தைப் பார்க்க முயலவே இல்லை.
அவன் தன்மை முதிர்ச்சியற்று,
முடிவு பலமற்று விளங்குகிறது.
இந்த எதிரி எனது கை வீச்சுக்குக்கூடத் தாளமாட்டான்.

நீராலும் மண்ணாலுமான
இந்தப் பொம்மையை உன்னிடம் அழைத்துக்கொள்.
குழந்தையில்லா வீட்டில் கிழவனா குதித்தாடுவது !
மனிதன் இல்லாத உலகில் இந்தப் பொம்மையையா
மனிதன் என்று அழைப்பது !

இவ்விதம் கோழை மனிதனைப் படைத்த இறைவனையே வைதுத்தான் இடித்துக் காட்டுகிறான்.

பின்னர் இக்பால் சனிக் கிரஹம் போகிறார். அங்கே தம் நாடுகளுக்கும் எஜமானர்களுக்கும் துரோகம் செய்த துராத்மாக்களைக் காண்கிறார். இந்தியா இத்தகைய பாவிகளாலல்லவா இந்நிலைக்கு வந்தது என்று நெஞ்சு குமுறுகிறார்; இந்தியாவில் அடிமைத்தனத்தின் விதைகளை ஊன்றிய இப்பாவாத்மாக்களைக் கண்டு வருந்துகிறார்.

இத் துரோகிகள் கூட்டத்தில் வங்கத் துரோகி மீர் ஜாபரும் தக்ஷிணத் துரோகி மீர் சாதிகும் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் இருவரும் இரத்தத்தாலாய கடலில் மிதக்கும் ஒரு தோணியில் அமர்ந்திருக்கின்றனர். அப்போது இந்தியா அழகு மிக்க ஓர் அஸ்வரஜாக அங்கே தோன்றுகிறது. அதன் காலும் கையும் அடிமைத்தனம் என்ற விலங்கால் பிணைப்புண்டிருக்கின்றன. அதன் தொண்டையிலிருந்து இதயம் பிளக்கும் விம்மல் ஒலி எழுகிறது.

அர்த்தமற்ற பழக்கங்களுக்கு அடிமையாகி கந்தல் கோஷங்களைக் கத்தித் திரியும் இந்தியர்களின் சிரத்தையற்ற தன்மையையும், தங்கள் மனத்தையே அவர்கள் அறிய முடியாதிருப்பதையும் கூறி அந்த அஸ்வரஜ முறையிடுகிறது; மீர் ஜாபர் தன்மை இன்னும் இந்தியாவில் இருக்கிறதென்கிறது.

அப்போது மீர் ஜாபரும் சாதிகும் தங்கள் இறங்கத் தக்க நிலையை விவரிக்கின்றனர். அவர்களுக்கு எங்குமே இருக்க இடம் கிடைக்கவில்லையாம். நரகம்கூட அவர்

கள் உடல் தன் நெருப்பில் விழக்கூடாது என்று சொல்லி விட்டதாம். இந்நிலையைக் கூறி அவர்கள் இருவரும் கண்ணீர் விட்டுக் கதறுகின்றனர்.

பின்னர் இக்பால் சுவர்க்கத்துக்கு அருகேயுள்ள இடத்தை அடைகிறார். அங்கே நீட்சே என்ற நாஸ்திகத் தத்துவ ஞானியைக் காண்கிறார்! மௌலானா ரூமி 'கிருக்கன்' நீட்சேயின் இயல்பை விளக்குகிறார். 'ஆண்டவனில்லை' என்று சொன்ன நீட்சே, 'அல்லாஹ்வைத் தவிர' என்று அத்துடன் சேர்க்கத் தவறிவிட்டாராம். அவர் கடவுள் தன்மையை உணர முயன்றாராம். ஆனால், முடியவில்லையாம். காரணம் அவர் அறிவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அதுபற்றி ஆராய்ந்ததாலும். இதற்குப் பிறகு கவிஞர் இன்னும் சற்று அப்பால் செல்கிறார். காஷ்மீரைச் சேர்ந்த செய்யிது அலி ஹம்தானியையும் கனி என்ற சூஃபி கவிஞரையும் சந்திக்கிறார். உடனே கவிஞருக்குக் காஷ்மீர நிலை நினைவுக்கு வருகிறது. அந்நாட்டின் உழவர்களையும், உணவுப் பொருள்களையும், ஆற்றையும், தோட்டத்தையும், ஏன் அந்நாட்டு மக்களையே சர்வதேச சங்கம் மிக மலிவாக விற்றுவிட்டதாம். ஆனால், கனி என்ற கவிஞர் சொல்கிறார், இந்திய சுதந்திர எழுச்சியை உண்டாக்கிய தலைவர்களெல்லாம் காஷ்மீரத்தைச் சார்ந்தவர்களே என்று. அவர்கள் விட்டுச் சென்ற உணர்ச்சியைப் புகுத்திப் பாடல்கள் இயற்றி அப் 'பூலோக சொர்க்க' மக்களைத் துயில் எழுப்ப வேண்டுமென அவர் இக்பாலிடம் கூறுகிறார்.

இங்கே செய்யிது அலி ஹம்தானியிடம் இக்பால் கேட்கும் ஒரு கேள்வியும் அதற்கு அவர் தரும் பதிலும் குறிப்பிடத் தக்கன. துன்பத்தின் இடையே மனிதன் விரைவில் முன்னேற முடியும் என்ற கொள்கையை இக்பால் இங்கு விளக்குகிறார். அவர் செய்யிது அலி ஹம்தானியை நோக்கிக் கேட்கிறார் :

இத்தேவ ரகசியத்தைச் சொல்லுங்கள்:
நம்மிடமிருந்து பணிவை விரும்பும் இறைவன்
ஷைத்தானை ஏன் படைத்தான்?
ஒரு பக்கம் நமக்கெதிராகத் தீமையின் சக்திகளை
இறைவன் சிருஷ்டித்திருக்கிறான்;
இன்னொரு பக்கம்
நம்மை நன்மைகள் செய்யும்படி உத்தரவிடுகிறான்.
இது ஏன்?

ஷைத்தானில்லாவிட்டால் நாம் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருப்போம். நம்மைப் பணிவுள்ளவர்களாக இருக்கும்படி உத்தரவிடும் இறைவன், நம்மை (இறைவனுக்குப்) பணியவிடாது செய்யும் ஷைத்தானை ஏன் படைக்க வேண்டும்?—இக்பாலின் இந்தக் கேள்விக்கு ஞானி செய்யிது அலி ஹம்தானி பதில் தருகிறார். கஷ்டம் என்பது வெற்றிக்குக் குறுக்கு வழி என்று பொருள்பட அவர் சொல்லுவதாவது:

தன் அகத்தை முற்றும் அறிபவன்
தீமையானதையும் பயனுள்ளதாக்கிவிடுவான்.
ஷைத்தானோடு நட்புக் கொள்வது
வாழ்க்கையைச் சுமையுள்ளதாக்கிவிடுகிறது.
ஆனால், அவனோடு போராடுவதால்
வாழ்க்கை இனிமை பெறுகிறது.
நீ ஷைத்தானுக்கெதிராக நில்!
நீ வாள், ஷைத்தான் வாளைத் தீட்டுகின்ற கல்.

அக்கல்லில் தீட்டத் தீட்ட வாள் கூர்மை பெறும் என்று ஹம்தானி விளக்கிவைக்கிறார்.

இதன் பின்னர் இக்பால் சமஸ்கிருதக் கவி ராஜயோகி பர்த்ருஹரியையும், நாதிர் ஷாவையும், அஹ்மத் ஷா அப்தாலியையும், திப்பு சுல்தானையும் சந்திக்கிறார். இவர்கள் யாவரும் துருக்கியும் பாரஸீகமும் அரேபியாவும் மேல்நாடுகளைப் பின்பற்ற முயலுவதை இகழ்ந்து அது தவறு என்று சொல்கின்றனர். உணவிலும் உடையிலும்

கூடக் கீழ்நாட்டினர் மேல்நாட்டினரைப் பின்பற்று வதில் பயனில்லை என்று சொல்லும் அல்லமத் ஷா அப் தாலி மேலுங்கூறுகிறார்:

மேல்நாட்டுப் பலத்தின் இரகசியம்
அதன் வாத்தியங்களில் இல்லை;
அதன் பெண்மணிகளின்
மாய மினுக்குகளால் வந்தது மன்று.
அவர்கள் முக அழகின் கவர்ச்சியாலோ
கத்தரித்துவிடும் சிகையாலோ வந்ததுமன்று.
மதமற்று இருப்பதும்,
லத்தீன் லிபியைப் பயன்படுத்தலும்
அதன் பலத்துக்குக் காரணமல்ல.
மேல் நாட்டின் பலம்
அறிவாலும் விஞ்ஞானத்தாலும் உண்டாயிற்று.
அதன் விளக்கு
இந்நெருப்பால்தான் ஏற்றப்பட்டது.
அறிவு நீ அணியும் ஆடையைப் பொறுத்ததன்று.
உன் தலைப்பாகை அறிவுபெறத் தடங்கலானதன்று.

பின்னர் திப்புசுல்தான் காவிரி நதிக்குக் கவிஞர் மூலம் ஒரு செய்தி அனுப்புகிறார். அதில்,

வாழ்க்கை ஊற்றில் நீயும் நானும் அலைகள்தாம்.
ஒவ்வொரு கணமும் இவ்வண்டம்
சுழன்று கொண்டே இருக்கிறது.
காரணம் அது புத்துலகம் காணும் அவாவில் மூழ்கியுள்ளது.
சிருஷ்டிகளின் சாரமெல்லாம் அசைவில்தான் இருக்கிறது.
வளர்ச்சியுற வேணுமென்ற ஆத்திரமும்
அசைவிலிருந்து உண்டானதுதான்.
எங்குப் பார்க்கினும் மறைவாகவோ, வெளிப்படையாகவோ
அசைவு இருந்து கொண்டே இருக்கிறது.
காரவானும் ஒட்டகையும், பாலையும் அதன் சுனையும்,
நாம் பார்ப்பவை யாவும்
அசைவின் வருத்தத்தால் அமைதியற்றுக் காணப்படுகின்றன

என்று குறிப்பிடுகிறார்.

வாழ்க்கை, வீர மரணம், சுயநலத் தியாகம் ஆகியவை பற்றி மேலும் அச் செய்தியில் திப்பு பேசுகிறார். இந்தியர்களுக்காக விடுக்கும் அச்செய்தியில் 'ஆட்டைப் போல் நூறாண்டு வாழ்வதைவிடப் புலியாக ஒரு கணம் வாழ்ந்தாலும் போதும்' என்ற போதனையும் அடங்கி இருக்கிறது.

இக்பால் அப்பிரதேசத்தைவிட்டுக் கிளம்ப உத்தேசிக்கும் சமயம் ஒரு தெய்வீகக் குரல் எழுகிறது. தனி மனிதன் எப்படி முன்னேறுவது, ஒரு சமுதாயம் எவ்விதம் முன்னேறுவது என்ற இரகசியங்களை அவ்வொலியில் கேட்கிறார். இங்கே இக்பாலின் பிரயாணம் முற்றுப் பெறுகிறது.

இறுதியில் இக்பால் தன் மகனை ஜாவீதை நோக்கிப் பேசுகிறார். இங்கே ஜாவீது என்பது இளைஞர் உலகு முழுமையையும் குறிக்கும். ஆகவே, அது இன்றைய இளைஞர்களை நோக்கிக் கூறுவது என்று சொல்லலாம். இளைஞர்கள் தங்கள் கருத்துக்களை ஒதுக்கி அறிவையும் அன்பையும் ஒன்று கூட்டிப் புலன்களை ஆத்மீக வழியில் பழக்கி, இறைவனின் வார்த்தையைக் கண்ணியப்படுத்த வேண்டுமாம். இன்றைய லோகாயதப் போக்கில் 'சிக்கி விடக் கூடாதாம். தற்காலக் கல்வியோ 'ராஜாளியின் குஞ்சுகளையும் வாத்தின் முறைகளைப் பயிலும்படி செய்யக் கூடிய' தாம். ஆகவே, அக்குறையை உணரவேண்டுமாம். கெட்ட சகவாசம் நீக்கி மக்களிடத்தே அன்புடையோராக வாழ வேண்டுமாம். அவர் மேலும் சொல்லுகிறார்:

யாரையும் இழிவாகப் பேசாதே !
காபிரும் மூமினும் இறைவனின் சிருஷ்டிகள்தாம்.
மிதமாக உண், சுருக்கமாகப் பேசு,
குறைவாகத் தூங்கு, 'தன்னை' அறிய முயல் !
முல்லாக்கள் நிராகரிப்போரைக் காபிர் என்பர்;

நான் 'தன்னை' அறியாதவன் பெரிய காபிர் என்பேன்.
உன் செயல்களில் உண்மையுள்ளவனாக இரு!
அரசர்களையும் பிரபுக்களையும் கண்டஞ்சாதே!
ஒருக்காலும் நியாயத்தைக் கைவிடாதே!
வாழ்க்கை என்பது போராட்டமே.
வீடு அதற்கு ஏற்ற இடமன்று.

கவிஞர் சொல்லும் சகிப்புத்தன்மையும் பரஸ்பர நல்லெண்ணமும் மக்களிடையே வளருமானால், அத்துடன் ஒரு புதிய உலகம் உதிக்கும் என்பது திண்ணம்.

ஜாவீது நாமா முழுவதையும் மதிப்பிடுவது கடினம். அம் மகாகாவியத்தில் என்ன இருக்கிறது என்று காட்ட முயன்ற ஒரு முயற்சியே இது. இக் காவியம் மஸ்னவீயாகவே எழுதப்பட்டிருந்தாலும் நடை சந்தர்ப்பத்திற்கேற்ற பாணியில் அமைந்திருக்கிறது. ஆகவே இதைப் படிப்பவர்களுக்குச் சலிப்புத் தட்டுவதில்லை. இடை யிடையே மற்றப் பாரஸீகக் கவிஞர்களின் கவிகளிலுள்ள அடிகளும் நுழைக்கப்பட்டுள்ளன. ஓர் இடத்தில் சமஸ்கிருதக் கவியொன்று மொழிபெயர்த்துச் சேர்க்கப்பட்டுள்ளது. இவை யாவும் இதன் நடையை அதிகக் கம்பீரமுள்ளதாக ஆக்குகின்றன. 'ரிதும்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஓசை நயம் அற்புதமாக இருக்கிறது. எனினும் எவ்விதத் தடங்கலுமின்றிப் பாட்டு செல்கிறது. பெரிய உண்மைகளை இத்தகைய முறையில் இலகுவாக எப்படிச் சொல்ல முடிகிறது என்று படிப்போர் ஆச்சரிய முறுவர். இதில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒரு லக்ஷியத்தைக் குறிப்பனவாக அமைந்துள்ளன. சந்தக் கட்டுபாடுகளுக்கிடையேயும் இவ்விதம் லக்ஷியப் பாத்திரங்களைப் புகுத்தி, அவர்களுடைய பேச்சில் முரண்பாடு இல்லாதபடி காவிய முறையில் அமைக்க வேண்டுமானால், அதன் சிருஷ்டிக்கர்த்தா ஓர் உயர்ந்த மேதாவியாகத்தான் இருக்க வேண்டும். மேலும் ஒவ்

வொரு பாத்திரமும் தன் தன்மைக்கு ஏற்பப் பேசு வதாகக் காட்டுவது அற்புதம். ஷைத்தான் எப்போதும் செயலாற்றலில் ஆத்திரம் காட்டுபவனுகவே இருக் கிறுன். கிச்சனர் தான் ஒரு போர் வீரன் என்ற முறையில் முரட்டுத்தனமாக — வெளிப்படையாகப் பேசுபவராகக் காட்டப்படுகிறுர். பெண் கவி தாஹிரா வின் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் அவள் லக்ஷியங்கள் துடிக்கின்றன.

இன்னெரு பெரிய விஷயம், கவிஞர் செவ்வாய்க் கிரஹம் சென்றபோது அங்கே நான்கு மகான்களேயும் காணவில்லை யென்றும் அவர்களுடைய போதனைகள் பொறிக்கப்பட்ட பலகைகளே மட்டுமே கண்டதாகவும் குறிப்பிடுவதாகும். மேலும் கவிஞர் தாம் காணும் ஒவ்வொருவரையும் மிகுந்த அனுதாபத்தோடேயே வருணிக்கிறுர். அவர்கள் எம்மதத்தவராயினும் மதிப் புடனேயே அவர்களேப்பற்றிப் பேசுகிறுர். நாட்டுக்குத் துரோகம் செய்தவர்களே மட்டும் சற்றுக் கசப்போடு பேசி னுலும், அவர்களேப்பற்றிய வருணனேயிலும் நமக்கு அனு தாபம் உண்டாகும்படிதான் அதன் போக்கு அமைந் துள்ளது.

ஜாவீது நாமாவின் கருத்தை அறிந்துகொண்டவர் கள் இக்பால் இதை எந்நோக்கோடு எழுதினுர் என்பதை ஒருவாறு உணரலாம். இன்றைய மேல்நாடும் கீழ்நாடும் எந்த நிலேயில் உள்ளன, அவை விமோசன மடைய வேண்டுமானுல் என்ன செய்ய வேண்டும், அன்பும் அறி வும் ஒன்று கூடினுல் உலகம் எப்படி மாறும் என்பதைக் கவிஞர் மீண்டும் மீண்டும் விவரிக்கிறுர். தீயவற்றை நல்லவை என்று கொண்டு அநாகரிகத்தை நாகரிகம் என்று மயங்கும் மக்களுக்கு அவர் எச்சரிக்கை விடுக்கிறுர். மேல்நாட்டுப் பெண்டிர்களின் போக்கைப் பின்பற்றுவது நீதியுணர்ச்சியை மடியச் செய்து உலகையே நாசமாக்கி

விடும் என்பதை வெகு அருமையாக விளக்குகிறார். கடைசி யில் இளைஞர்களுக்கு அவர் சொல்லும் புத்திமதி ஜாதிமத பேதமின்றி உலக இளைஞர்கள் யாவரும் பின்பற்றக்கூடியது. இன்றைய நிலையில் அரசியல் கட்சிகளின் பெயரால் இளைஞர்கள் தங்கள் உள்ளத்தில் ஜாதிபேத விஷத்தை ஏற்றிக்கொண்டு விடுகின்றனர். ஒருவரை யொருவர் விரோதிக்கத் தொடங்கிவிடுகின்றனர். வருங்கால உலகை நடத்த வேண்டிய அவர்களுக்கு அல்லாமா 'இக்பாலின் புத்திமதி அருமருந்தாகும். இதன்படி இளைஞர்கள் நடப்பார்களானால் புதிய உலகம் உடனே உதயமாகும்; உலகமே சுவர்க்கமாகும்.

பாலே-ஜிப்ரீல்

'பாலே-ஜிப்ரீல்' (ஜிப்ரயீலின் இறக்கை) என்பது பிற்காலத்தில் அவர் எழுத ஆரம்பித்த உர்தூ கவிதைகளின் தொகுப்பு ஆகும். இதன் முதல் பகுதியில் அறுபத்தொரு கஸல்களும் சில ருபாயியாத்துகளும் உள்ளன. இரண்டாம் பகுதியில் குர்துபாப் பள்ளி வாசலில் செய்த பிரார்த்தனை, லெனின், ஜாவீதுக்கு, முல்லாவும் சுவர்க்கமும், அரசியலும் மதமும், ஒரு யுவனுக்கு, மதமும் தத்துவமும், முஸோலினி, பஞ்சாப் விவசாயிக்கு, தார்த்தாரியனின் கனவு முதலிய பாடல்கள் உள்ளன. இத்தொகுதியிலுள்ள பாடல்களின் நடையும் போக்கும் உர்தூ இலக்கியத்திலேயே மிகவும் உயர்ந்த ஸ்தானம் வகிப்பவை. இதிலுள்ள கஸல் ஒன்றில் கவிஞர் சொல்கிறார்:

கோயிலிலும் மஸ்ஜிதிலும்
வர்ணம் பூசுவது என் தேட்டமே எனினும்,
என் முறையிட்டால்
கஃபாவிலும் ஸோம்நாத்திலும்
புத்துயிர் தோன்றியுள்ளது.
....

உன் தயாளத்தால்
நான் தகுதியில்லாதவனாக இல்லை;
ஒரு துக்ரனுக்கோ, எந்த ஸஞ்சருக்குமோ
நான் அடிமையன்று.
உலகை நோக்குவது என் கடமை.
ஆனால், நான் எந்த ஜாம்ஷிதுக்கும்
மதுக் கிண்ணமாக இல்லை.

குர்துபா (கார்தோவா) பள்ளிவாசலில் அவர் செய்த பிரார்த்தனையாகிய கவிதையில் சொல்கிறார்:

இது என் பிரார்த்தனை:
இது என் 'ஒலு' (கை, கால், முகம் சுத்திகரித்தல்).
என் பாடல்களில் என் இதய இரத்தம் நிறைந்துள்ளது.
காதல் பாதையில் ஒருவனுக்குத் தோழன் யார் ?
என்னோடிருப்பது என் ஆசை மட்டுமே.
என் ஜாகை எந்தப் பிரபுவுடையதோ,
வஸீருடையதோ மாளிகையன்று.
நீதான் என் இருப்பிடம் ;
நீதான் என் இருக்கை (கூடு) உள்ள (மரக்) கிளை.
நீ என்னோடில்லையெனில்
நகரமே பாழ்பட்டு விடுகிறது.
நீ இருந்துவிட்டால்
பாழ்பட்ட அரண்மனைகளும் சந்துகளும்கூடக்
கும்பல் நிறைந்தவையாகிவிடுகின்றன.

'பாலே-ஜிப்ரீ'யிலுள்ள வேறு பாடல்களின் சில அடிகளாவன:

சம்பவங்களைச் சிருஷ்டிப்பது
இரவும் பகலும் தொடர்வதே யாகும்.
இரவு பகலின் சங்கிலித் தொடரே
ஜீவ, மரணத்தின் ஆணிவேராகும்.
....

நான் விட்டிலாய் இல்லாததற்காக
இறைவனுக்கு ஆயிரம் நன்றிகள் !
அன்னியனின் நெருப்பை யாசிப்பவன் நானல்லன்
....

உயரே பறப்பதற்குக் காக்கைக்குத் தெரியாது
ஆனால், காக்கையின் சகவாசம்
ராஜாளிக் குஞ்சையும் கெடுத்துவிட்டது.
....

யுவர்களகத்தே கழுகு ஜீவசக்தி
விழித்தெழுந்ததும் தமது லக்ஷியத்தை
வானங்களிலே அவர்கள் காண்கின்றனர்.
....

ஆத்மாவற்ற உடலைக் கண்டு
ஆண்டவனுக்கு அதிருப்தி உண்டாகிறது.
உயிருள்ள இறைவன்,
உயிருள்ளோரின் இறைவனாவான்.
....

அன்புக்காக உயிர் கொடுத்தோன்
கிராகரிப்பவனே, காவியோர் அல்லன்;
அன்பின் பழக்கங்கள்
துருக்கியையோ அரேபியாவையோ சேர்ந்தவையல்ல.
....

இப்போராட்ட உலகின் விதி ஒரு ரகசியம்;
செயலாற்றும் உணர்ச்சி பெறுதல்
விதியின் இரகசியங்களை வெளியாக்குகிறது.

இத்தொகுதியிலுள்ள 'இறைவன் சந்நிதானத்தில் லெனின்' (லெனின் - ஹுதா-கே - ஹுஸுர் - மே(ன்)) 'மலக்குகளின் கீதம்' (பரிஷ்தே(ன்)-கா-கீத்), 'இறைவன் கட்டளை' (பிர்மானே ஹுதா) என்ற மூன்று சிறு தலைப்புகளைக் கொண்ட ஒரு பாட்டு மிகப் பலரைக் கவர்ந்ததாகும். எனவே, அதன் முக்கியப் பகுதிகள் விளக்கத்துடன் கீழே தரப்பட்டுள்ளன :

இறைவன் கட்டளை

கார்ல் மார்க்ஸ் கம்யூனிஸத்தை விளக்கி எழுதினர். லெனின் அதைக் காரியத்தில் நடத்திக் காட்டினன். கார்ல் மார்க்ஸின் கம்யூனிஸம் பொருளாதாரத்தில் இஸ்லாத்தோடு இணங்கியதுதான். ஆனல், இஸ்லாத்தின் உயிர் நாடி, ஆணிவேர், இறைவன் இருக்கிறன் என்பதாகும். கம்யூனிஸம், இறைவன் ஒருவன் இருக்கிறன் என்ற சர்ச்சையில் இறங்கத் தேவையில்லை; இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும்; அதுபற்றிக் கவலைப்பட வேண்டியதுமில்லை என்ற விதத்தில் பேசுகிறது. மனிதன் கடவுளையும் மதத்தையும் தன் சொந்த விஷயமாகவேண்டுமானல் வைத்துக்கொள்ளலாம்; ஆனல், அதைப் பொது விஷயங்களில் புகுத்தல் தவறு என்று லெனின் முடிவு கட்டினன். ஆகவே கம்யூனிஸம் கடவுளை ஒதுக்கிற்று.

கம்யூனிஸத்தை நடைமுறையில் கொண்டுவந்த லெனின், தன் மரணத்துக்குப் பிறகாவது இறைவனின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பானனல், அவனே உலகங்களை ஆட்டுவிப்பவன் என்பதை அறிந்திருப்பானனல் நிலைமை எப்படி இருக்கும்? - இவ்விதம் எண்ணிப் பார்க்கிறர் இக்பால்.

உயிருடன் இருக்கும்போது இறைவனை ஒதுக்கிய லெனின் இறந்துபட்டபின் அம்மறை பொருளைக் காண்கிறன். "யாரப்பா நீ? இறைவன?" என்று வினவுகிறன். "உன் ஜீவசக்திதான உயிர்களிடையே நிலவுகிறது? எனினும் நான் அன்று இதை உணர்ந்தேனில்லை. அது சரி, நீ யாருடைய கடவுள்? உலகில் தெய்வம் எனப்படுவன பணமும் மனிதனுமாக இருக்கும்போது நீ

யாருடைய கடவுள் என்பதையாவது தெரிவிப்பாயா? பணக்காரர் கொடுமையைக் கண்டும் நீ வாளாவிருத்தல் ஏனோ? தொழிலாளர் துயர் கண்டும் உன் மனம் இளக வில்லையா? அவர்களுக்கு விமோசனம் என்று கிடைக்கும்?" என்று லெனின் இறைவனை நோக்கிக் கேள்விகளை அடுக்குகிறான். அவன் சொல்கிறான்:

உயிர்களிடையே உன் சக்தியை உணர்ந்தோம்.
நீ எங்குமிருப்பவன், என்றுமிருப்பவன்.
எனினும், அதை நான் எங்ஙனம் அறிவேன்?
இன்று கண்ணால் கண்டபின் உணர்கிறேன்...
நீ யாருக்குக் கடவுள்?
வானத்தினடியிலுள்ள வையகத்தோருக்கா?
கீழ்நாட்டினர்க்கு மேல்நாட்டு வெள்ளையனே தெய்வம்;
மேல்நாட்டினர்க்கு மின்னும் பொன்னே கடவுள்.
நீ யாருடைய இறைவன்?
இவ்வறிவும், கல்வியும், ஞானமும், தந்திரமும்
உயிரை உறிஞ்சியபடியே சமத்துவம் பேசுகின்றன.
நீ சர்வ வல்லமையாளன், நீதிவான்,
ஆனால், உன் உலகிலோ
தொழிலாளியின் துயருக்கு எல்லையில்லை.
முதலாளித்துவக் கப்பல் அழிவதென்று?
உன் உலகம் விடுதலை நாளை வேண்டித் தவிக்கிறது.

இவ்விதம் தொழிலாளிகளின் கஷ்டங்களை லெனின் விவரிக்கிறான். அவனுடைய இம்முறையீடு தேவ தூதர்களின் மனத்தையும் உருக்கிவிடுகிறது. ஆமாம், இன்றைய உலகின் நிலை அவன் வருணித்தது போலவே இருக்கிறதென்று அவையும் இறைவனிடம் முறையிடுகின்றன.

அறிவு இன்னும் கட்டுப்பாடற்றதாகவில்லை;
அன்பு ஒரு சிலரின் உரிமையாகவில்லை;

எனினும், தெய்வீகச் சைத்ரீகனே,
உன் சித்திரத்தில் சோபையில்லை;
காலாடியும், மதத் தலைவனும், மீரும், பீரும்
மானிடர்ப் பாதையில் வலை விரித்துள்ளனர்;
உலகில் பழைய் முறை இன்னும் மாறவில்லை.

இவ்விதம் தேவ தூதர்கள் கூறிய உடனே, சர்வ வல்லமையுடைய இறைவன் மனமிறங்குகிறான். ஏழைகள் இன்னலைக் களையவேண்டும், ஒருவன் உழைப்பில் மற்றவன் உண்டு கொழுக்கும் கொடுமை ஒழிய வேண்டும் என்று அவன் எண்ணுகிறான். அவ்வளவு தான், தன் தூதர்களுக்கு உத்தரவிடுகிறான். பயங்கரமான உத்தரவு தான். உரிமையிழந்தோருக்கு உணர்ச்சி யூட்டி, போகத்தில் மயங்குவோருக்குப் புத்தி புகட்டும்படி அவன் சொல்கிறான்:

எழுங்கள்.
உரிமையிழந்து உணர்ச்சியற்று உறங்கும்
ஏழை மக்களைத் தட்டி யெழுப்புங்கள் !
பணக்காரர் கோட்டைகள்
அடியோடு அதிர்ந்து சாயட்டும்.
அடிமைகளின் குருதியை
உணர்ச்சி உயிர் கொண்டு ஓடச் செய்யுங்கள் ?
எளிய ஊர்க்குருவி
ராஜாளியை எதிர்க்கப் பலமளியுங்கள்.
மக்களாட்சிக்கான மாட்சி மிக்க நாள் நெருங்கிவிட்டது.
பழைய சின்னங்களை
எங்குக் காணினும் துவம்சம் செய்யுங்கள்?
உழவன் உணவுக்கு உதவாத கழனி எங்காவது இருந்தால்

அதில் ஒரு தானிய மணிகூட மிஞ்சாதபடி
நெருப்பிட்டுக் கொளுத்துங்கள்.
கோயில்கள், மஸ்ஜித்களின் விளக்குகளை
அணைத்துவிடுவதுகூட நன்று.
சலவைக் கற்களாலாய இப்பிரார்த்தனை ஸ்தலங்களை
நான் வெறுக்கிறேன்.
என்னை வணங்க மண்ணாலான குடிசைகள் எழட்டும்!
நவீன நாகரிகமென்பது கண்ணாடித் தொழிற்சாலை;
கீழ்நாட்டுக் கவிஞனுக்கு வெறியை ஊட்டுங்கள்;
அவன் அதை நொறுக்கி எறிவான்.

இவ்விதமாக இறைவன் கட்டளையிடுகிறான். "இறந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்று திருவள்ளுவர் இறைவன் சிருஷ்டித்த மக்கள் தம் உழைப்பால் உயிர் வாழ வகையற்றுப் போனால் அச்சிருஷ்டிக்கர்த்தாவே நாசமாகட்டும் என்று சாபமிட்டார். ஆனால், இக்பால் இறைவனைக் கொண்டே உத்தரவிட வைக்கிறார். ஒவ்வொருவனும் அவனவன் உழைப்பின் பயனை அவனவனே அடைய வேண்டும், உணர்ச்சி செத்து ஒடுங்கிக் கிடக்கும் பஞ்சை விழிப்புற வேண்டும், தன் இரத்தத்தை உறிஞ்சி உயிர் வாழும் வர்க்கத்தினரோடு போராடவேண்டும் என்ற தம் உள்ளக் கிடக்கையை இக்பால் இவ்விதம் வெளியிட்டுள்ளார். அத்துடன் நில்லாது, உழைப்பாளிக்கு அந்த உணவின் பயன் கிட்டாதெனின், அதற்கு நெருப்பிட்டுக் கொளுத்த வேண்டும் என்று தன் நெஞ்சு குமுறக் கூறுகிறார். கடவுளை மறந்து உழைப்பாளிக்கு நியாயம் வழங்காவிட்டால் ஏற்படப்போகும் பலாபலன்களை இப்பாட்டில் ஓர் எச்சரிக்கையாகக் கவிஞர் இவ்விதம் வெளியிட்டுள்ளார்.

ஸர்பே கலிம்

'ஸர்பே-கலீம்' (மூஸாவின் (தடி) அடி) என்ற உர்தூ கவிதைத் தொகுதி இன்றைய யுகத்திற்கு எதிராகப் போராட்டம் தொடுப்பது என்று கவிஞரே கூறியுள்ளார். 'ஸர்ப்' என்பது வேகமாக அறைதல், அடித்தல் என்று பொருள் படும். கலீம் என்பது இறைவனோடு வசனித்த மூஸாவின் பெயராகும். இத்தொகுதியின் முதல் பகுதி இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பற்றியும், இரண்டாம் பகுதி போதனையையும் கல்வியையும் பற்றியும், மூன்றும் பகுதி பெண்களைப் பற்றியும், நான்காம் பகுதி இலக்கியத்தையும், கவின்கலைகளையும் பற்றியும், ஐந்தாம் பகுதி கிழக்கின், மேற்கின் அரசியலைப் பற்றியும், கடைசிப் பகுதி மிஹ்ராப் குல் ஆப்கனைப் பற்றியும் பாடுகின்றன. இதிலுள்ள விஷயங்கள் பல; ஆனால் பாடல்கள் சிறியவையே. அவற்றினுள் முக்கியமான சில அடிகளின் பொருளாவது:

அகத்தின் விழிப்பு
கோயிலிலோ, மஸ்ஜிதிலோ நிகழ்வதில்லை.
(காரணம்) கிழக்கு நாடுகளின் ஆத்மா
அபினியோடு பழக்கப்பட்டுவிட்டது.
....

'நல்லது அல்லாதது,' 'நல்லது' ஆகிவிட்டது.
காரணம் அடிமைத்தனத்தில்
நாடுகளின் மனச்சாட்சியே மாறிவிடுகிறது.
....

தியான நிலை என்பது
காலத்தையும் தூரத்தையும் அளப்பதாகும்;
நினைவுகூர்தலின் (திக்ர்) நிலை என்பது
"எனது உன்னதமான இறைவனுக்கே சகல புழும்"
(சுப்ஹான ரப்பில் அஃலா) என்பதாகும்.
....

காலமும் ஒன்றே; வாழ்க்கையும் ஒன்றே;
அண்டமும் ஒன்றே.
'பழமை, புதுமை' என்ற கதை
தூரதிருஷ்டியற்ற தன்மையின் விவகாரமாகும்.
....

அகத்தின் ஒளியும் நெருப்பும்
இஸ்லாத்தின் ஜீவசக்தியாகும்.
அகத்தின் நெருப்பு, வாழ்க்கைக்கு
வெளிச்சமாகவும் சந்நிதானமாகவும் உள்ளது.
....

காபிரின் அடையாளம்
அவன் இவ்வுலக வாழ்வில் மூழ்கியிருப்பதாகும்;
மூமினின் அடையாளம்
இவ்வுலகே அவனில் மூழ்கியிருப்பதாகும்.
....

செடிகளும், கனிப்பொருள்களும் விதிக்கு அடங்கியவை.
மூமினோ இறைவனின் உத்தரவுகளுக்கே அடங்கியவன்.
....

எந்த இனத்தில் இளைஞர்கள் அகம்
எஃகைப் போல இருக்கிறதோ,
அந்த இனத்துக்கு வாள் தேவை இல்லை.
....

அகம் செத்துவிட்ட காரணத்தால்
இறகொடிந்த இந்தியர்களுக்குக்
கூண்டு கூடுமானது (ஹலால்) ஆகி,
ஓய்விடம் கூடாததாகிவிட்டது.
....

அடிமைகள்தாம் அவகாசம் விரும்புவர்;
சுதந்திரவானுக்கு உலகில் செயலென்பதே இல்லை!
....

இயற்கை தனி நபரை விட்டுவிடுகிறது;
ஆனால், ஓர் இனத்தின் பாவங்களை
அது ஒருக்காலும் மன்னிக்காது.
....

இதுவா சமுதாயம் சம்பூர்ணமடைதல்-
ஆண்கள் வேலையின்றியும்,
பெண்கள் மார்பகங்களின்றியும் (இருப்பதா) ?
....

விக்ரஹ விடுதியின் வாசலிலே
பிராமணன் துயில்கிறான்;
(பள்ளிவாசல்) கமானின் அடியிலே இருந்துகொண்டு
முஸ்லிம் விதியை நொந்து கொள்கிறான்.
கிழக்கைக் கண்டு மனங் கலங்காதே;
மேற்கையும் ஒதுக்கிவிடாதே!
இயற்கை சுட்டுகிறது-
ஒவ்வோர் இரவையும் ஒரு பகலாக்கு !
....

தன் விதியின் ‘இன்று’ இல்லாத இனம்
நாளையின் கொந்தளிப்புக்குத் தகுதியற்றது.
....

கல்லூரியில் இளைஞன்
உயிருடன் இருப்பது போல் தோன்றினும்
அவன் செத்தவனே;
அவன் விடும் மூச்சு ஐரோப்பியனிடமிருந்து
கடன் பெற்றதுதான்.

பாஸ்-சிஹ்-பயாத்-கர்த்

'பாஸ்-சிஹ்-பயாத்-கர்த்' (ஹே, கிழக்கின் நாடுகளே, இனி என்ன செய்வது?) என்ற பாரஸீகப் பாடல் இத்தாலி அபீஸீனியாவின்மீது படையெடுத்த சமயம் எழுதப்பட்டது. இந்த மஸ்னவியுடன் மூஸாவின் ஞானம், பிர்அவ்னின் ஞானம், ரகசியம் முதலிய பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. மற்றும் 'முஸாபிர்' (பிரயாணி) என்ற ஒரு பகுதியில் பல சிறு கவிதைகளும் காணப்படுகின்றன. இத்தொகுதியிலுள்ள சில அடிகளின் பொருள் வருமாறு :

மூமின் தன் உறுதியாலும்,
தவக்குல் (இறைவன் சித்தத்தில் நம்பிக்கை வைப்பது) மூலமும்
ஆதிக்கமுள்ளவனாக இருக்கிறான்.
அவ்விரண்டு குணங்களும் அவனிடம் இல்லையெனின்,
அவன் நிராகரிப்பவனே (காபிரே).
....

நாம் வாழும் காலம்
நம்மையே நமக்கு அன்னியர்களாக்குகிறது.
முஸ்தபா (ஸல்) அவர்களின் பெருமையிலிருந்து
நம்மை அப்புறப்படுத்துகிறது.
....

இனத்தின் இதயத்திலே அகம் மாண்டதால்
மலை துரும்பாகி, காற்றில் அகப்பட்டுக்கொண்டது.
....

என் நயனங்களிலே,
இரத்த நிறமுள்ள ஒரு கண்ணீர்த் துளியை
நான் பாதுகாக்கிறேன்.
காரணம் நான் ஒரு பக்கீர்;
இக் (கண்ணீர்) செல்வம் இறைவன் தந்தது.

அர்முகானே - ஹிஜாஸ்

கவிஞரின் உர்தூ, பாரஸீகக் கவிதைகளில் வேறு எந்தத் தொகுதியிலும் சேராதவை கடைசியாகத் தொகுக்கப்பட்டு இப்பெயரில் வெளியாயின. "இறைவன் சந்நிதியில்", "நபிபெருமான் சந்நிதியில்", "இஸ்லாமிய மக்கள் முன்னிலையில்," "மனிதவர்க்கத்தின் முன்னிலையில்" ஆகிய பாரஸீகக் கவிதைகள் இதில் உள்ளன. "குத்இ", "அனல் ஹக்" போன்ற பாடல்களும் இதில் சேரும். உர்தூ கவிதைகளில் "ஷைத்தானின் மந்திரி சபை" மிகவும் நையாண்டி நிறைந்தது. "நரகிலுள்ள ஒரு மனிதனின் பிரார்த்தனை", "மஸ்ஊத் மர்ஹூம்" போன்றவை குறிப்பிடத்தக்கவை. இத்தொகுதியிலுள்ள அருமையான கருத்துக்கள் சில வருமாறு:

மேல்நாட்டு மதுக்கடையின் மதுவை
நான் ருசி பார்த்தேன்!
என் ஆத்மா சாட்சியாக,
நான் தலைவலியை விலைக்கு வாங்கிவிட்டேன்.
ஐரோப்பாவின் நல்லவர்களோடு நான் சேர்ந்திருந்தேன்;
அந்நாளைப் போல் வீணானது வேறு எதுவுமில்லை என்று
கண்டுகொண்டேன்.
....

இவ்வுலகில் ஓரிடத்தை நீ விரும்பினால்
உன் இதயத்தை இறைவனிடம் பற்றச் செய்;
முஸ்தபா (ஸல்) அவர்களின் பாதையைப் பின்பற்று
....

குடும்பியுடையவும், முல்லாவுடையவும்
பிடிகளில் அகப்பட்ட நீ
திரு குர்ஆனின் போதனையை அறியவில்லை.
அதன் வாக்கியங்களால் உனக்கு
வேறொரு பயனும் விளையவில்லை—
அதன் யாஸீனின் உதவியால்,
நீ அமைதியாக இறப்பது தவிர.
. . . .

பிராமணன் தன் மாடக்குழியை
விக்ரஹங்களால் அழகு செய்கிறான் ;
நீ உன் மாடக்குழியைத் திரு குர்ஆனால்
அழகுபடுத்துகிறாய்.
. . . .

ஹரம் ஷரீபிலுள்ள
பக்திமான்களுக்கு ஒரு சுவர்க்கமுண்டு;
தீரச் செயல் புரியும்
வீரர்களுக்கும் ஒரு சுவர்க்கமுண்டு.
இந்திய முஸ்லிமிடம் செல்லுங்கள்:
" மகிழ்ச்சியோடிரு,
இறைவன் பெயரால் (இனுமாகவும் உனக்கு)
ஒரு சுவர்க்கம் கிடைக்கும் !" என்று.
. . . .

தத்துவம்

இக்பாலின் ஆத்மீகத் தத்துவம்

இக்பால் போதித்த தத்துவம் எது என்று புரிந்து கொள்ளாதவரை இக்பாலின் கவிதைகளையும் சரியாக மதிப்பிட்டுவிட இயலாதுதான். எனவே, இக்பாலின் அகமியம் பற்றிய தத்துவ விளக்கத்தையும் மற்றும் சில முக்கிய விளக்கங்களையும் இங்கே பார்க்கலாம்.

கீழை நாடுகளின் அடிமைத்தன மோஹத்தை இக்பால் கண்டார். துருக்கி தொட்டு, பாரஸீகம், சீனு வரை ஆசிய நாடுகள் யாவும் செயலற்றுக் கிடப்பதை அவர் பார்த்தார். கீழ்நாட்டு ஆத்மீகப் போக்கில் உலகை விட்டு ஒதுங்கி (செயலற்று), ஆத்ம ஞானம் தேடும் கருத்து (சகல சமயங்களிலுமே) புகுந்துகொண்டு எல்லாச் சமுதாயங்களையும் செல்லரித்து வந்தது; வாழ்க்கை என்பதே மாய்கை, 'வாழ்வாவது மாயம், மண்ணுவது திண்ணம்' என்ற தத்துவம் தலைதூக்கி நின்றது. இதை இக்பால் தன் முழுப் பலமும் கொண்டு எதிர்க்க முன் வந்தார். வாழ்க்கை உண்மையானது, தனி நபர் தன் அகத்தை வளர்ப்பதன் மூலம் வாழ்க்கையை வளப் படுத்த வேண்டும். அப்போதுதான் உலகம் உண்மை யிலேயே முன்னேற முடியும் என்றார்.

உலகிலுள்ள சகல வஸ்துக்களுக்கும் அவ்வவற்றின் தனித் தன்மைகள் உண்டு. தன்னுடைய இந்தத் தனித் தன்மையை எந்த அளவுக்கு ஒரு வஸ்து வளர்க்கிறதோ அந்த அளவுக்கே அது மதிப்புடையதாகிறது. அதன் மூலம் அது தன் சூழ்நிலையின்மீதே ஆதிக்கம் பெறு கிறது. மனிதனிடம்தான் இந்தத் தனித் தன்மை மிக வும் உன்னதமாக வளர்ந்துள்ளது. இங்கே அதற்குக் குணுதிசயம் என்று பெயர் உண்டாகிவிடுகிறது.

உடலளவிலும், ஆத்மாவளவிலும் மனிதன் தனக் குள் யாவும் உடையவனுக இருக்கிருன். ஆயினும்,

அவன் சம்பூர்ணமான தனித்தன்மையாளனாக ஆக வில்லை. அவன் இறைவனைவிட்டு எந்த அளவுக்கு அப்பால் விலகியிருக்கிறானோ அந்த அளவுக்கு அவன் தனித் தன்மையும் குறைவானதாக இருக்கிறது. இறைவனுக்கு மிகச் சமீபத்தில் வருபவன் சம்பூர்ணமான மானிடனாகி விடுகிறான். ஆனால்; அவன் இறைவனோடு ஐக்கியமாகி விடுவதில்லை ; இறைவனின்-அதாவது அவனோடு சம்பந் தப் படுத்தும்-தன்மைகளைத் தன்னோடு ஐக்கியப் படுத் திக் கொள்கிறான்.

“வாழ்க்கை என்பது ஐக்கியப்படுத்திக் கொண்டே முன்னேறும் சக்தியாகும். தன் பாதையிலுள்ள இடைஞ் சல்களையெல்லாம் அது தன்னுள் இழுத்துக் கொண்டு முன்னேறும். அதன் சாராம்சம், ஆசைகளையும் லக்ஷி யங்களையும் ஓயாது சிருஷ்டித்துக் கொண்டிருப்பதாகும். தன் பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும் தன்னில் நின்றே அது புலன்கள், அறிவு போன்ற சில கருவிகளைக் கண்டுபிடித்து, அல்லது வளர்த்துத் தந்துள்ளது. இக் கருவிகள்தான் தடைகளை இழுத்துக் கொள்கின்றன. வாழ்க்கை வழியில் பெருந்தடையாய் உள்ளது இயற்கை தான். எனினும் இயற்கை தீமையானதன்று. ஏனெனில் வாழ்க்கையின் அகச் சக்திகள் தாமாக வெளிப்பட இது உதவுகிறது. தன் பாதையிலுள்ள சகல தடைகளும் அகற்றப்படுவதால் அகம் சுதந்திரமடைகிறது. அகம் ஓரளவு சுதந்திரமாகவும், ஓரளவு உறுதியுடனும் சர்வ சுதந்திரனான தனி நபரை-இறைவனை-நெருங்கியதும் பரி பூரண சுதந்திரம் அடைந்துவிடுகிறது.” (டாக்டர் நிக்கல் ஸனுக்கு இக்பால் எழுதிய கடிதத்தின் ஒரு சிறு பகுதி இது.) இயற்கையோடு போராடி, வெற்றிகொள்ளும் அகம் சுதந்திரமடைகிறது. அதனால் இறைவனை நெருங் குகிறது. மேலும் அது ஓயாது உழைத்து - சோம்பிக் கிடக்காது சதா பாடுபட்டு - சாகா அமர நிலையை எய்து

கிறது. இதன் மூலம் அது காலத்தையும் தூரத்தை யும் வெல்கிறது. போராட்டத்தின் மூலம் சுதந்திரம்; சுதந்திரத்தின் மூலம் இறைவனை நெருங்குதல். சதா உழைப்பது – சாம்பாத நிலை; அதன் மூலம் அமரத்து வம். அதனால் காலத்தையும் தூரத்தையும் வெல்வது. இந்த இரண்டு பெருமைகளோடு, அகம் செய்ய வேண் டிய மூன்றாவது கடமை சம்பூர்ண மானிடனை - சகல உயிர்களும் அடைவதற்கு முன்மாதிரியாகக் கொள்ளத் தக்க மனிதனை உண்டாக்குவதாகும். இதுவே இக்பாலின் ஆத்மீகத் தத்துவத்தின் சாராம்சம்.

தனி நபர் சுதந்திரம், தனி நபர் அமரத்துவம், லக்ஷிய மனிதனை உண்டாக்குதல் ஆகிய மூன்று நிலைகளே யும் எய்துவது எப்படி? தனிக் குணத்தைப் பாதுகாத்து வளர்ப்பதன் மூலமல்லவா? இதற்காகத் தனித் தன் மையைப் பலப்படுத்த உதவும் சகலவற்றையும் மனிதன் பின்பற்ற வேண்டும்; அதைப் பலஹீனமாக்கக்கூடிய சகலவற்றையும் தவிர்க்க வேண்டும்.

மனிதனின் அகமிய வளர்ச்சியால், அகத்தைப் பலப் படுத்த உதவும் சக்திகளாக இக்பால் கருதுபவை ஆறு. அவை (1) முஹப்பத் என்னும் **அன்பு**, (2) **உலக ஆசை களைப்பற்றிய அக்கரையே முற்றுமற்ற திருப்தி**, (3) **தீரம்**, (4) **சகிப்புத்தன்மை**, (5) **ஆகுமான (ஹலால்) உணவு தேடல்**, (6) **திறனை வளர்த்தல்** ஆகியவை.

1. இக்பால் **முஹப்பத்** (அன்பு, காதல்) என்ற வார்த் தையை மிகவும் பரந்த பொருளில் உபயோகிக்கிறார். இதன் பொருள் தனக்குள் ஈர்க்கும், உறிஞ்சும் ஆசை என்கிறார் இக்பால். "லக்ஷியங்களையும் மதிப்புகளையும் உண்டாக்கி, அவற்றை எய்த முயற்சிப்பதே அன்பின் உன்னதனமான படித்தரமாகும்" என்கிறார் அவர். அன்புக்கும் அகத்துக்கும் உள்ள தொடர்பாவது :

அகம் என்னும் ஒளிவிடும் முனை
நம் மண்ணுள் உள்ள ஜீவச் சுடர் ஆகும்.
அன்பால் அஃது அதிக உறுதியானதாகிறது
அதிக வாழ்க்கை, அதிக வேகுதல், அதிக ஒளிவிடல்.
உன் ஒரு பிடி மண்ணைத் தங்கமாக்கு;
சம்பூர்ண மனிதரின் முன்றிலை முத்தமிடு!
அன்பு மதுவால் பல ஆத்ம சற்குணங்கள் எழுகின்றன.
அன்பின் அடைமொழிகளுள் குருட்டு பக்தியும் ஒன்று.
காதலியிடம் குன்றாத பக்திகொண்ட அன்பாய் இரு!
அதன் மூலமே நீ உன் வலையை வீசி
இறைவனைப் பிடிக்க முடியும்.

பல்வேறு உலக மொழிகளில் கவிஞர்களும், ஞானிகளும், தத்துவவாதிகளும் மானிட நடத்தையின் வளர்ச்சிக்கு அன்பு இன்றியமையாதது என்பதை அழகொழுகும் பாணியில் வருணித்துள்ளனர். ஆனால், இக்பாலைப் போல் இத்தனை பரந்த பொருளில் இதை உபயோகித்தவர்கள் சிலர்தாம். மனிதனின் தனித்தன்மையை வளர்ப்பதற்கு அன்பு மிகவும் அவசியமானது என்பதை மௌலானா ரூமிக்குப் பிறகு இக்பால்தான் பெரிதும் வலியுறுத்தியிருக்கிறார்.

2. **'பக்ர்'** (திருப்தி) என்று இக்பால் குறிப்பிடுவது மானிடரில் மிகப் பலர் வேட்பதான இவ்வுலக, மறு உலக வெகுமதிகளைக் கொஞ்சமும் பொருட்படுத்தாத திருப்தியான நிலைமையையாகும். 'பக்ர்' என்பது குறிப்பிட்ட லக்ஷியந் தவிர சகல இன்பங்களையும் வெகுமதிகளையும் பொருட்டாக மதியாது ஒதுக்கும் மன நிலையைக் குறிக்கிறது. சாதாரணமாகப் பிச்சைப் எடுத்தலுக்கும் 'பக்ர்' என்ற பதம் உபயோகிக்கப்படுகிறது. 'பகீர்' தான தருமங்களில் வாழும் யாசிப்பவன் ஆகிவிட்டான்! எனவே,

இப்பதத்தின் இரண்டு அர்த்தங்களையும் இக்பால் தமது பாடலில் விளக்கியுள்ளதாவது:

ஒரு 'பக்ர்' வேடனுக்கு
வேட்டையாடும் கலையைக் கற்பிக்கிறது;
ஒரு 'பக்ர்' உலகை வெல்லும்
அந்தரங்கங்களைப் போதிக்கிறது;
ஒரு 'பக்ர்' சமூகங்களுக்குத்
தரித்திரத்தையும் நம்பிக்கையின்மையையும் தருகிறது.
ஒரு 'பக்ர்' களிமண்ணில்
அமிர்தத்தின் குணங்களை உண்டாக்குகிறது.

அசலான 'பகீர்' கொஞ்சங்கூடச் சுயநலமோ, பற்றுதலோ அற்றவனாக இருப்பான். தனக்கு இம்மை மறுமையில் வரக்கூடிய லாபங்களையெல்லாம் எண்ணிப் பாராது உலகின் நன்மைக்காக அவன் பாடுபடுவான். உன்னதமான தீர்க்கதிருஷ்டி வாய்ந்தவர்களால் மட்டுமே வெகுமதிகளைப்பற்றி இத்தகைய அலக்ஷியங் காட்ட முடியும். இத்தகையவர்களே உலகில் நிரந்தரமான நினைவையும் விட்டுச் செல்வார்கள்.

ஒரு மூமினின் 'பக்ர்' என்ன ?
காலத்தையும் தூரத்தையும் வெல்வதாம்.
அஃது அடிமையிடம்
எஜமானரின் குணங்களை உண்டாக்குகிறது.

3. **தீரம்** என்பது உடல் பலத்தையும் மனோபலத்தையும் குறிப்பிடுகிறது. இவை யிரண்டுமின்றி யாரும் உலகில் உண்மையிலேயே முக்கியமான எதையும் எய்திவிட இயலாது. முன்னேற்றம் என்றாலே முட்டுக்கட்டைகளும் உண்டு. ஆனால் தடைகள், தயங்குபவர்களையே வீழ்த்தும். தீரமிக்கவர்களுக்கோ, அவர்கள் இயல்பும், அவர்களிடை மறைந்து கிடக்கும் சக்திகளும் வளர அவை உதவுகின்றன. உடல் தளர்வதின்றி, தீய சக்திகளுக்கு மனம் இடம்

தாவின்றி, இடையில் கைவிடும் சபலமின்றித் தீரமிக்கவர்களே முன்னேறி வெற்றிகொள்வார்கள். இவர்கள் இறைவனின் உத்தரவுகள் அன்றி எவற்றுக்கும் - எந்தப் பலாத்காரப் பிரயோகத்துக்கு இடையிலும் - இணங்கமாட்டார்கள்.

உன் அன்பு சகல ஐயங்களையும் எரிக்கட்டும் !
உன்னைச் சிங்கமாக்கும்
சத்தியத்துக்கு மட்டும் கீழ்ப்படிந்து நட !

அபாய வாழ்க்கை போராட்ட வாழ்க்கைதான் வெற்றிக்கு மார்க்கம் என்பதை இக்பால் பல இடங்களிலும் வற்புறுத்தியுள்ளார்.

தீரமிக்கவர்களுக்குச்
சத்தியமும் அச்சமின்மையுமே வரம்புகள் ஆகும்.
இறைவனின் சிங்கங்களுக்கு
நரியின் தந்திரம் பரிச்சயமற்றது.

நம் லக்ஷியங்களைப் பிறர் இகழும்போதும், சந்தர்ப்பங்கள் சரிவராதிருக்கையிலும் நம்பிக்கையிழக்காமல் இருத்தலும் தீரமாகும். நேசர்களும், எதிரிகளும் நம்மைப் பற்றித் தூற்றுகையிலும் அதை அமைதியாக ஏற்கும் தீரம் வேண்டும்.

4. தீரத்துக்கு அடுத்ததாகச் **சகிப்புத்தன்மை** வேண்டும். மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்கும், பழக்கங்களுக்கும் மதிப்புத் தருவது சகிப்புத்தன்மையாகும். இத்தகைய சகிப்புத்தன்மை அகத்தை ஊட்டி வளர்த்துப் பலப்படுத்துகிறது. உண்மையில் சகிப்புத்தன்மை என்பது பலத்தால் வருவதுதான்; பலஹீனத்தால் அன்று. இதை இக்பால் அதிகம் வலியுறுத்துகிறார்:

ஒரு தீய வார்த்தை சொல்லுவதும் சரியன்று ;
காபிரும், மூமினும் இறைவனின் சிருஷ்டிகளே.
மனிதத்தன்மை, மனிதனை மதிப்பதில்தான் இருக்கிறது.

எனவே, மனிதன் உயர்வை உணர்ந்துகொள்.
அன்புள்ள மனிதன் இறைவனிடமிருந்து
ஞாபகமூட்டுதல் பெறுகிறான்;
காபிரிடமும், மூமினிடமும் அன்பாக இருக்கிறான்.

5. **ஆகுமான உணவு தேடல்** (கஸ்பே - ஹலால்) என்பது சாதாரணமாக முஸ்லிம் பிக்ஹு சட்ட அறிஞர்களாலும் பெரியார்களாலும் திருட்டாலோ, ஏமாற்றாலோ, பித்தலாட்டத்தாலோ அல்லது இவை போன்ற வேறு தீய வழியிலோ வராத நியாயமான, சட்டப்பூர்வமான செல்வத்தைக் குறிப்பதாகவே விளக்கப்பட்டுள்ளது. ஆனால், இக்பால் இதற்கு ஒரு பரந்த, புதிய விளக்கம் தந்துள்ளார். தன்னுடைய சொந்த முயற்சியால் ஒருவர் அடையும் பொருட்களையோ, கருத்துக்களையோதான் 'கஸ்பே-ஹலால்' என்கிறார் இவர். தான் பாடுபடாத ஒன்றை அனுபவிப்பதே அகத்துக்கு நல்லதன்று, உறவினரிடமிருந்து எதையும் வாரிசாக அடைவது கூடக் 'கஸ்பே-ஹலால்' அன்று என்கிறார் இக்பால்.

உன் மூதாதையரிடமிருந்து
ஒரு வைரத்தை நீ வாரிசாக அடைய விரும்பினாலும்
(அது குறித்து) வெட்கப்படு!
நீயாகவே வைரத்தை அடையும் இன்பத்தை
இது தந்துவிடாது.

இது போல் கருத்துக்களைக் கடன் வாங்குவதையும் ஒதுக்க வேண்டும் என்கிறார்.

கண்ணுக்குப் புலப்படாதிருக்கும் நெருப்பை
உன் புழுதியிலிருந்து பெற்றுக்கொள்!
பிறரின் வெளிச்சம் நீ வைத்திருக்கத் தகுதியற்றது.

6. கடைசியாக, **அசலான செயலாற்றும் திறனை வளர்த்தல்** அகத்தை வளர்த்துப் பலப்படுத்தும் என்கிறார் இக்பால். பிறரைப் பார்த்துக் 'காப்பியடித்தல்', போலி

யாக நடந்துகொள்ளல் ஆகியவற்றை ஒதுக்க வேண்டும். சிருஷ்டி சக்தியுள்ளவனே மூமின்; அஃதற்றவன் காபிர் என்ற முடிவுக்கே அவர் வந்துவிடுகிறார். யாவருக்கும் ஒரே அளவினதான அசல்தன்மையும், சிருஷ்டி சக்தியும் இல்லைதான். எனினும், ஒவ்வோர் அகத்திலும் சிருஷ்டி வெறி இருக்கவே செய்கிறது. ஆனால், நாம் பெற்ற தவறான கல்வி காரணமாகாவோ, தவறிய போதனை காரணமாகவோ அது உருப்பெற இடமில்லாதிருக்கிறது. இந்த இடைஞ்சலை அகம் அகற்றி, அசலான, சிருஷ்டி வேலைகளில் முனைந்து நிற்கவேண்டும். மனிதனுடைய கிரியா சக்தி அவன் தெய்வீகத் தன்மையடைய உதவி புரிகிறது. இச்சக்தி உருவாகாமல் நசிந்து போவதால் மனிதனின் இயல்பே குன்றிப் போய் விடுகிறது.

அகத்தைப் பலப்படுத்த உதவும் இந்த ஆறு சக்திகளை அறிந்து கொண்டது போல, அகத்தைப் பலஹீனமாக்கும் நான்கு விஷயங்களையும் நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். அவை முறையே **(1) அச்சம் (2) யாசகம் (சுவால்) (3) அடிமைத்தனம் (4) வம்சப் பெருமை பேசுதல் ஆகியவையாம்.**

1. **அச்சம்:** கவலை, ஆத்திரம், ஆவல், கோபம், பொறாமை, தயக்கம் யாவும் அச்சத்தைச் சேர்ந்தவைதாம். இதுவே மனிதவர்க்கத்தின் பெரிய எதிரியாகும். மற்ற எந்தச் சக்தியையும்விட இதுவே மனிதனைக் கோழையாக்கி அவன் முன்னேற்றத்தைத் தடுத்து, அவன் திறமையையும் மகிழ்ச்சியையும் கொள்ளை கொண்டு போகிறது. பயம் மனிதனிடம் வேண்டாத உணர்ச்சிகளை வளர்க்கிறது. மனிதன் கோழையாகவும், ஏமாற்றுபவனாகவும், கொடுங்கோலனாகவும், சர்வாதிகாரியாகவும் இருப்பதற்கெல்லாம் காரணம் உள்ளத்துக்குள் அமுங்கிக் கிடக்கும் அச்சம்தான் என்று பிராய்ட்

போன்ற மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். எனவே, பயத்தின் இத்தீய குணங்கள், வளர்வதற்கு முன்பே, முளையிலேயே அதைக் கிள்ளிவிடவேண்டும்.

கவலைச் சிறையிலே கைதியாய் இருப்பவனே,
நபி பெருமானிடமிருந்து
'லா தஹ்ஸனூ' (துயரப் படாதீர்கள்) என்ற பாடத்தைக்
கற்றுக்கொள்!
உனக்கொரு தெய்வ மிருந்தால், கவலையை ஒழி.
லாப நஷ்ட எண்ணத்தையே ஒழித்துவிடு.
'குவ்வத்தே ஈமான்' (நம்பிக்கை பலம்)
வாழ்க்கையை உறுதிப்படுத்துகிறது.
தொடர்ந்து, 'லா கௌஃபுன் அலைஹிம்' (அஞ்ச வேண்டாம்!)
என்று உச்சரித்து வரவேண்டும்.
பிர்அவ்னிடம் மூஸா செல்கையில்
'லா தஹஃப்' (பயப்படாதே!)
என்ற வார்த்தைகளால் அவர் மனம் பலமடைகிறது.
இறைவனையன்றி வேறு யாருக்கும் பயப்படுவது
செயலாற்றலுக்குத் தடையாகும்.
வாழ்க்கைக் காரவானை அது கொள்ளையடிக்கிறது.
முஸ்தபா (ஸல்) அவர்களின் இரகசியத்தைப்
பற்றிப் பிடிப்பவன், அச்சத்திலே
காபிர் தன்மை மறைந்திருப்பதைப் பார்ப்பான்.

அச்சத்தை ஒழிக்க இக்பால் கூறும் இம்மார்க்கம் அனுஷ்டானத்தில் நல்ல பயன் தரத்தக்கதாகும்.

2. **யாசகம் :** தன் சொந்த முயற்சியால் அடையாத எதுவுமே யாசகம் பெற்றதுதான் என்ற பரந்த பொருளில், இக்பால் சுவால் என்ற வார்த்தையை உபயோகித்துள்ளார். இதன்படி தன் தந்தை சொத்தை வாரிசாகப் பெறுபவனும், பிறரிடமிருந்து கருத்துக்களைக் கடன் வாங்குபவனும் யாசிப்பவர்களே. இது அகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் தீங்கு பயப்பதாகும்.

யாசிப்பதால் தரித்திரம் இன்னும் கடுமையாகிறது.
யாசிப்பதால் யாசகன் இன்னும் அதிகம் ஏழையாகிறான்.
யாசகம் அகத்தைப் பலஹீனமாக்குகிறது.
ஸீனு மலைப்புதரின் ஒளியை
இதயம் அடையாதபடி அது தடுத்துவிடுகிறது.

சிறு உதவி பெறுவதுகூட யாசிப்பதுதான். கலீபா ஹஸரத் உமர் (ரலி) ஒட்டகைமீது சவாரி செய்த ஒரு தடவை அவர்கள் கையிலிருந்த சாட்டை கீழே விழுந்து விட்டது. அதை எடுப்பதற்காக அவர்கள் ஒட்டகையிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். வேறு யாரும் அதை எடுத்துத் தந்து, தான் அதற்காகக் கடமைப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. இதைக் குறிப்பிட்டு இக்பால் சொல்கிறார்:

உமரைப் போல, உன் ஒட்டகையிலிருந்து இறங்கிவா !
எச்சரிக்கை, கடமைப் படுவதிலிருந்து எச்சரிக்கை !

எத்தனைதான் செல்வத்தில் புரண்டு கொண்டிருந்தாலும் பிறரைச் சுரண்டும் யாவருமே பிச்சைக்காரர்கள் தாம். அவர்கள் அகத்தில் சொந்த முயற்சியின் ஊட்டமில்லாது போகிறது. சொந்த முயற்சியின்றித் தன் பிரஜையின் உழைப்பில் வாழும் அரசனும், பல பெரிய பேர்களில் சமூகத்தை உறிஞ்சி வாழ்பவர்களும் பிச்சைக்காரர்களே என்கிறார் இக்பால்.

3. **அடிமைத்தனம்:** அடிமைத்தனத்தைப் போல் இழிவானதொதையும் மானிடன் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. அடிமைத்தனம் மனிதன் அகத்தை அழித்து அவனை மிருகமாக ஆக்கிவிடுகிறது. சுதந்திரமில்லாவிடின் உண்மையான மனிதர்களை உண்டாக்க இயலாது.

அடிமைத்தனத்தில்
உடலுள் இதயம் கொல்லப்பட்டுவிடுகிறது.
அடிமைத்தனத்தில்
ஆத்மா உடலுக்குப் பாரமாகிவிடுகிறது.

அடிமைத்தனத்தில் சமூகம் பிளவுபடுகிறது;
அதனால் அவரோடு இவரும், இவரோடு அவரும்
சச்சரவிடுகின்றனர்.

உலகின் பெரும் பகுதியில் அசல் அடிமைத்தனம் என்பது இன்று இல்லாது போயினும், அரசியல், பொருளாதாரச் சுரண்டல்களாக அது நெடுகிலும் நிலவியே வருகிறது. இதனாலும் அகத்தின் வளர்ச்சி குன்றிப் போகிறது. எனவே, சகல அரசியல் ஆதிக்கங்களும் பொருளாதாரச் சுரண்டல்களும் ஒழிந்தால்தான் மானிடர்கள் நீதி, ஆத்மீக வளர்ச்சியடைய முடியும்.

4. வம்சப் பெருமை (நஸப் பரஸ்தீ) : தனது வம்சத்தைப் பற்றியும், ஜாதியைப் பற்றியும், அகந்தை கொள்வதும் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் பல தடைகளை உண்டாக்கிவிடுகிறது. வர்க்கங்களும், இனங்களும், கூட்டங்களும், வகுப்புகளும், ஜாதிகளும், குடும்பங்களும் தமக்கேயுரித்தான பெருமைகளையும், உயர்ந்த அந்தஸ்தையும் பற்றிப் பேசுகின்றன. முடிமன்னர்கள் மதிப்புடன் ஆட்சி செய்த காலையில் அவர்கள் தம் குலம் பற்றிப் பெருமைப்பட்டனர். அவர்களோடு ஒட்டியவர்களும் அவ்விதமே செய்தனர். அதன்பின் இனப் பெருமை மக்கள் தருவில் புல்லுருவியாக ஓடிற்று. நாஜிகளின் அகங்காரத்துக்கு அதுவே காரணமாகும். எனவே, இவை யாவும் தவிர்க்கப்பட வேண்டும்.

குலத்தைப் பற்றிப் பெருமைப்படுவது தவறு;
அது உடலோடுள்ள உறவு;
உடலோ அழியக் கூடியது.
நம் சமூகம் வேறோர் அடிப்படையில் அமைந்தது.
அதன் இரகசியம் நமது இதயங்களில் இருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட வளர்க்கும் சக்திகளும், தடுக்கும் சக்திகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய

சம்பந்தமுள்ளவை. குறிப்பாகத் தீரமும் அச்சமும், ஆகுமான உணவு தேடலும், யாசகமும் ஒரு நாணயத்தின் பூவும் தலையும் போலத் தொடர்புள்ளவையாய் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் தனித்தனியே தான் இயங்கும் என்றில்லை; பெரிதும் சேர்ந்தே தொழில்படுகின்றன. இலகுவில் விளங்கிக் கொள்வதற்காகவே மேலேயுள்ள முறையில் இவை தனித்தனியே பிரித்துப் பேசப்பட்டன.

அகத்தை வளர்க்கும் சக்திகளைத் தூண்டிவிட்டு, அதைப் பலஹீனமாக்கும் சக்திகளைத் தவிர்த்துவந்தால், அகம் தினை தினை புதுப் பலம் பெற்று வளரும். அவ்விதம் பலம் பெற்று வளரும்போது அது மூன்று நிலைகளுக்கு உட்பட்டாக வேண்டும். அவை, (1) சட்டத்துக்குக் கீழ்ப்படிதல், (2) தன்னைக் கட்டுப்படுத்தல், (3) இறைவனின் பிரதிநிதித்துவத்தை எய்துதல் ஆகியவையாகும்.

மேலே நோக்கி, சம்பூர்ண மனித நிலையை அடையச் செல்லும் பாதையில் இம்மூன்று படிகளையும் கடக்க வேண்டும். நன்கு பயிற்சி பெற்று, சரியான முறையில் பாதுகாக்கப்பட்ட அகம், இயல்பாகவே தன்னுணர்வின்றியே, சட்டத்துக்குக் கீழ்ப்படிவதாகிவிடுகிறது. சட்டம் சம்பந்தப்பட்ட வரை, அது எந்தப் போராட்டத்தையும் எதிர்நோக்கத் தேவையில்லை. அடுத்து, சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுடன், மற்றும் உள்ள நல்ல சக்திகளும் சேர்ந்து தன்னைக் கட்டுப்படுத்தும் சக்தியை அகத்திடம் உண்டாக்கிவிடுகின்றன. தன்னைக் கட்டுப்படுத்தும் சக்தி பூரணமாக வளர்ந்ததும் அது தெய்வீகப் பிரதிநிதித்துவத்துக்கு அகத்தைத் தயாராக்கிவிடுகிறது. இந்த மூன்றாவது நிலையைப் பற்றி இக்பால் சொல்லுதாவது :

"பிரதிநிதி (நாயிப்) பூமியில் இறைவனின் பிரதிநிதி யாவர். அவரே பரிபூரணமான அகம் 'ஆவர். இதுவே மானிடரின் லக்ஷியம்; உள்ளத்திலும் உடலிலும் வாழ்க்கையின் உச்சமும் அதுவேயாகும். நம் மனவாழ்வில் உண்டாகும் போராட்டங்களெல்லாம் அவருள் இணைந்து போகின்றவையாகிவிடும். அவருள் உன்னதமான சக்தி; உன்னதமான ஞானத்தோடு இணைந்துபோகிறது. 'அவர் வாழ்க்கையில், சிந்தையும், செயலும், உள்ளுணர்வும், பகுத்தறிவும் ஒன்றாகிவிடுகின்றன. அவர் மானிட விருக்ஷத்தின் கடைசிக் கனியாவார்; வேதனை நிரம்பிய வளர்ச்சிகள் யாவும், சோதனைகள் யாவும் அவர் கடைசியில் வரும் காரணத்தால் நியாயமானவைகளாகிவிடுகின்றன. அவரே மனித வர்க்கத்தின் உண்மையான ஆட்சியாளர்; அவர் ராஜ்யமே பூமியில் இறைவனின் ராஜ்யம்."

விதியின்மீது சவாரி செய்பவனே, வெளிப்படு !
மாற்றம் என்ற இருண்ட பூமியின் விளக்கே, வெளிப்படு !
இனங்களின் இரைச்சலை அடக்கு !
உன் இசையால் எம்காதுகளில் சுவர்க்கத்தைப் புகுத்து.
எழுந்து, சகோதரத்துவம் என்ற வீணையை மீட்டு !
அன்பு மதுக் கோப்பையை மீண்டும்
நாங்கள் அருந்தச் செய் !
உலகிற்கு மீண்டும் அமைதியான நாட்களைக் கொண்டுவா!
போரை விரும்புபவர்களுக்குச்
சமாதானத்தின் செய்தியைக் கொடு !
மானிட வர்க்கம் நெல் வயல் ;
நீயோ அதன் அறுவடையாவாய்.
வாழ்க்கையின் காரவானுக்கு நீயே லக்ஷியமாவாய்.

இதுவாற்றூனும் சொல்லிய விஷயங்களெல்லாம் தனி நபரின் அகத்தை வளர்க்கவே உதவுவன. ஆயினும், ஓர் அகம் அகங்களோடு தொடர்புள்ளதாகவன்றித் தனித்த முறையில் வளர்வது கடினமாகும். பூமியிலே இறைவன்

ராஜ்யம் தோன்ற வேண்டுமானால், சம்பூர்ண மனிதர் மற்றோரோடு சேர்ந்தே வேலை செய்யவேண்டும். தாம் எந்தக் கூட்டத்தில் இருக்கிறாரோ, அதிலிருந்தும் தனித்தவராக அவர் இருக்க இயலாது. சமூக நலனுக்காகத் தன் செயல்முறை பயன்படும் விதத்தில் நடந்துகொள்வது அந்தச் சம்பூர்ண மனிதருக்கும் நன்மை பயப்பதாகும். ஏனெனில், சமுதாய நோக்கத்தோடு இணைந்தவராக ஆனாலன்றி, அவர் தாம் எய்த வேண்டிய உன்னத நிலையை எய்தவே இயலாது. அதாவது அகம் ஒரு சமுதாயத்தில் வாழ வேண்டும்; அங்கேயே அது தொழிலாற்ற வேண்டும். ஆனால், அகம் சுயேச்சையாக வளர்வதற்கு எந்தவிதமான சமுதாயம் வேண்டும், வளரும் அகத்துக்கு அதிகமான முன்னேற்றப் பாதையை எவ்வகைச் சமுதாயம் காட்டும் என்பதை நாம் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

இத்தகைய லக்ஷிய சமுதாயம் எது என்று தீர்மானிக்குமுன், சமூகத்துக்கும் தனி நபருக்கும் இருக்க வேண்டிய உறவுமுறை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதையும் கவனிக்கலாம். தனி நபரின் வளர்ச்சியே வாழ்க்கையின் உன்னதமான லக்ஷியம், சமூகம் அதற்குத் துணை செய்யும் வெறும் கருவிதான் என்று கூறும் அறிஞர்கள் ஒரு பக்கம்; சமூகமே சகல சக்தியும் வாய்ந்ததாக இருக்கவேண்டும், அதன் நலனைப் பாதுகாப்பதில் தனி நபர் உரிமைகளை மதிக்கவே கூடாது என்று கூறும் அறிஞர்கள் கூட்டம் மறு பக்கம். இவ்விரண்டு அபிப்பிராயங்களுக்கும் இடையில் அல்லாமா இக்பால் ஒரு நடுநிலையான அபிப்பிராயத்தை வெளியிடுகிறார். தான் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவனோ அதனுடைய பண்பாட்டிலிருந்து ஆத்மீக ஊட்டம் பெற்றாலன்றி ஒரு தனி நபர் பூரணமாகவும், சுதந்திரமாகவும் வளர்ச்சியடைய முடியாது; ஆனால், சமூகம் தன் நலனை

யும் உத்தேசித்து அவனுடைய வளர்ச்சியில் கூடியவரை, பொது நலனைப் பொறுத்தன்றிக் குறுக்கிடாமல் இருந்து வரவேண்டும். அதாவது ஒரு சமூகத்தின் தன்மையும், வாழ்க்கையும், அதன் தனி நபரின் தன்மையும் வாழ்க்கையும் விரிவாக்கப்பட்டவையே. அதனால் தனி நபரின் தன்மை சிறந்ததாகவும், சீர்பட்டதாகவும் இருந்தாலன்றிச் சமூகத்தில் குழப்பமேற்பட்டு விடுவது நிச்சயம். இது தான் இக்பால் சொல்லும் அபிப்பிராயம். அவர் சொல்கிறார்:

தனி நபருக்கு
ஒரு கூட்டத்தோடு சேர்ந்திருப்பது வரப்பிரஸாதமாகும்.
அவனுடைய மறைவான திறம்
அக் கூட்டத்தால் சம்பூர்ணமடைகிறது.
ஒரு தனி நபர் தன்னைச்
சமூகத்தோடு சேர்ந்தவனாகக் காணும்போது,
விரிவை நாடியலையும் நீர்த்துளி கடலாகிவிடுகிறது.
ஏகாந்தத் தனி நபர் நோக்கங்களை உணராதவர்.
அவர் பலம் க்ஷீணித்துவிட ஹேதுவுண்டு.

இத்தகைய லக்ஷிய சமுதாயம் உண்டாக இக்பால் எட்டு முக்கியமான தேவைகளைக் குறிப்பிடுகிறார். அவை யாவன:

1. சமூகம் ஆத்மீக அடிப்படையில் ஒரே இறைவனைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
2. அஃது இறையுணர்ச்சி பெற்ற தலைமையை, அல்லது நபித்துவத்தைப் பின்பற்றுவதாக இருக்க வேண்டும்.
3. அதன் வழிகாட்டுதலுக்கு ஒரு சட்ட புஸ்தகம் இருக்க வேண்டும்.
4. அஃது ஒரு பீடத்தை நடுவிடமாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

5. அஃது ஒரு தெளிவான லக்ஷியத்தை முன்னிறுத்தியதாக இருக்க வேண்டும்; அதை நோக்கி முன்னேற முழுச் சமூகமுமே பாடுபட வேண்டும்.

6. இயற்கைச் சக்திகளை அது தன் ஆதிக்கத்துக்கு உட்படுத்த வேண்டும்.

7. தனி நபரின் அகத்தைப் போலவே, சமூகத்தின் கூட்டு அகமும் வளர்க்கப்பட வேண்டும்.

8. தாய்மையை அது பாதுகாக்க வேண்டும்.

இவற்றைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

1. **ஒரே இறைவன் :** உலக மானிட சகோதரத்துவத்தை ஒப்புக்கொள்ளாத எந்தச் சமூகமும் நசிந்து போகும். எனவேதான் எல்லாப் பெரிய சமயங்களும் இந்தப் பெரிய உண்மையை ஒப்புக்கொண்டிருக்கின்றன. இறைவன் ஒருவனே, ஒரே இறைவனைத் தவிர வேறு இல்லை, எல்லா மக்களும் அவன் மக்களே, எனவே, அவர்கள் யாவரும் சகோதரர்களாவர் என்று உலக சகோதரத்துவத்துக்கும் அடிப்படையாக ஒரே இறைவன் கொள்கையை வெளியிடுகிறது இஸ்லாம். தனக்கு இணை வைப்பவர்களை இறைவன் ஒருக்காலும் மன்னிக்க மாட்டான் என்கிறது திரு குர்ஆன். இந்த ஒரே இறைவன் அடிப்படைபற்றி இக்பால் எழுதுவதாவது : "தௌஹீத் தத்துவத்திலே உலக ஐக்கிய அடிப்படை அமைந்திருப்பதைப் புதிய பண்பாடு காண்கிறது. இஸ்லாம் ஒரு சமுதாய அமைப்பு என்ற முறையில் இத் தத்துவத்தை மனித வர்க்கத்தின் அறிவியல், உணர்ச்சியியல் வாழ்க்கையில் ஒரு ஜீவசக்தியாக ஆக்கும் அனுஷ்டானப் பூர்வமான மார்க்கமேயாகும். அது எந்த ஆட்சிப் பீடத்திடமுமன்றி, இறைவனிடம் விசுவாசத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது. சகல உயிர்களுக்கும் இறைவனே கடைசியில் ஆத்மீக

அடிப்படையாக இருப்பதால், இறைவனிடம் விசுவாச மாக இருப்பதென்பது, மனிதன் தன்னுடைய லக்ஷிய இயல்புக்கே விசுவாசமாக இருப்பதாகிவிடுகிறது.” (இக்பாலின் ‘சமயக் கருத்தைப் புனர் நிர்மாணம் செய் தல்’ சொற்பொழிவுகளில் உள்ள பகுதி.)

துவேஷத்தையும் பகைமை யுணர்ச்சியையும் உண் டாக்கும் சகல பிற்போக்குச் சக்திகளுக்கும் சரியான மாற்று ஒரே இறைவனிடம் நம்பிக்கை வைப்பதுதான். இதன் மூலம் மானிடருக்குள் உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை உண்டாக்க முடியும்.

ஆயிரம் இதயங்களில்
ஒரே பான்மையை உண்டாக்குவது
‘தௌஹீ’தின் ரகசியங்களில் ரகசியமாம்.
சமயம், அறிவு, சட்டம் யாவும் அதனின்று எழுபவையே.
சக்தி, வீரியம், உயர்வு யாவும் அதனின்றே வருகின்றன.
அதன் செல்வாக்கு அடிமைகளை உயர்த்தி, அவர்களிலிருந்து
முற்றும் புதிய வர்க்கத்தையே உண்டாக்குகிறது.
அதனுள்ளே ஐயமும் அச்சமும் அகல்கின்றன;
செயலாற்றும் சக்தி மீள்கிறது;
பிரபஞ்சத்தின் அந்தரங்கத்தையே
கண்கள் காண்கின்றன.

2. நபித்துவம் : உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல் வேறு காலங்களிலும் தோன்றிய தீர்க்கதரிசிகள் மானிட வர்க்கத்தின் முன்னேற்றத்துக்காக எத்தனைதூரம் பாடு பட்டுள்ளார்கள் என்பதையும், அவர்களுக்கு மானிட வர்க்கம் எத்தனைதூரம் கடன்பட்டுள்ளது என்பதையும் நாம் சிந்திக்காமலிருக்க முடியுமா? முஸ்லிம்களுக்கோ தம் நபி பெருமான் (ஸல்) அவர்களின் மகத்தான முன் மாதிரியை மறக்கவே முடியாது. அங்குத்தான் சகல விசுவாச சக்திகளும் ஒன்று சேர்கின்றன. அங்குத்தான் சகல பிளவு சக்திகளும் மறைகின்றன.

இம்மண்ணுலகில் நாம் ஜீவித்திருப்பதே
நபித்துவ அடிப்படையில்தான்.
நபித்துவத்தின் மூலம் (வந்தவையே)
நம் சமயமும், சட்டமும்.
லக்ஷக்கணக்கானவர்களை
நம் பெருமான் (ஸல்) ஒரே அங்கமாக ஆக்கினார்கள்;
பல்வேறு பகுதிகளும் பிரிக்க முடியாதபடி
ஒன்றுடன் ஒன்று பொருத்தப்பட்ட அங்கம் அது.
நபித்துவத்தின் மூலமே
நாம் ஒரே குரலுடையவர்களானோம்.
அஃது ஐக்கியமான மூச்சையும்,
ஐக்கியமான லக்ஷியத்தையும் நமக்களித்தது.

இவ்விதம் ஒரே இறைவனையும், அவன் தூதரையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயம், காலத்தையும் தூரத்தையும் (இடத்தையும்) வென்றுவிடுகிறது. அது அழியாததாக, நிரந்தரமானதாக ஆகிவிடுகிறது.

3. சட்டம் : தன் நிச்சயமற்ற நிலைமையிலும் இடைஞ்சல்கள் நிறைந்த சமயங்களிலும் தனக்கு வழி காட்ட ஒரு சமுதாயத்துக்கு ஒரு சட்ட திட்டம் இருக்க வேண்டுவது இன்றியமையாதது. அச்சட்ட திட்டம் காலத்தின் மாற்றங்களாலும், பொருள்களின் மதிப்புகள் கூடுவது, குறைவதாலும் கொஞ்சமும் பாதிக்கப்படாததாக இருக்க வேண்டும். இத்தகைய சட்ட திட்டம் மக்கள் வாழ்வுக்கு ஸ்திரம் அளிக்கும். சமூகம் தன்னிடமே நம்பிக்கையிழந்து குழப்பங்களில் சிக்கி நிற்கையில் அச்சட்ட திட்டம் வெளிச்சந் தந்து சமூகத்துக்கு நேர்வழிகாட்டிக் காப்பாற்றும். சரியான சட்ட திட்டம் இல்லாவிடில் சமுதாய வாழ்வே குழப்பமானதாகிவிடும். முஸ்லிம்களுக்குரிய சட்ட திட்டம் திருகுர்ஆனில் தரப்பட்டுள்ளது.

4. மத்தியப் பீடம் : ஒவ்வொரு சமுதாயத்துக்கும் தன் கலாச்சார சமுதாய நடவடிக்கைகள் ஒளிவிட

வேண்டிய ஒரு நடுநாயகமான இடம் இருக்க வேண்டியது அவசியமாகும். இந்நடவடிக்கைகள் உடலில் இரத்தம் என்றால், இந்த நடுநாயகமான மத்தியப் பீடம், உடலின் சகல பகுதிகளுக்கும் உணர்ச்சி நிறைந்த இரத்தத்தை அனுப்பும் ஹிருதயமாகும். இவ்விதம் ஜீவ ஊட்டமான நடுப்பீடம் இருக்கும்வரை உடல் ஒழுங்காக இயங்கும்; கோளாறுகள் ஏற்படா. முஸ்லிம்களுக்கு இத்தகைய மத்தியப் பீடம் மக்காவாகும்.

5. **லக்ஷியம்:** உண்மையான ஐக்கிய பாவத்தை எய்த எந்தக் கூட்டமும், சமூகமும் தெளிவான குறிப்பிடத் தக்க ஒரு லக்ஷியத்தை முன்னிறுத்திக் கொள்ளவேண்டும். அதற்காகவே தன் செயலாற்றும் திறன் முழுவதையும் பயன்படுத்த வேண்டும். முஸ்லிம்களுக்கு இத்தகைய லக்ஷியம் ஏகத்துவத்தை (இறைவன் ஒருவனே என்ற செய்தியை)ப் பரப்புவதாகும்.

6. **இயற்கையின் சக்திகளை வெற்றிகொள்ளல்:** தன் அகத்தைப் பலப்படுத்துவதற்குத் தனி நபர் தன் சூழ் நிலையை வெற்றிகொள்ளவேண்டும். அதாவது விஞ்ஞானத்தைக் கற்று முன்னேறி இயற்கையின் சக்திகளின் மீது ஆதிக்கங்கொள்ள வேண்டும். விஞ்ஞான மனப் பான்மையும் ஆத்மீக முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியமாகிறது. ஒரு சமூகத்தினுடைய முன்னேற்றத் துக்கோ இந்த ஞானம் மிக மிக இன்றியமையாததாகும். கீழ்நாடுகளின் க்ஷீண நிலைக்கே விஞ்ஞான அறிவு புறக் கணிக்கப்பட்டதுதான் முக்கியமான காரணமாகும். அரபிகளுடைய சரித்திரம் இந்த உண்மையை இன்னும் அதிகம் தெளிவுபடுத்துகிறது. அவர்கள் உன்னதம் பெற்றிருந்த காலத்தில் விஞ்ஞான அறிவில் அவர்களே உலகிலேயே முன்னணியில் நின்றனர். ஐரோப்பா மிகப் பல விஷயங்களை அவர்களிடமிருந்து கற்றே நாகரிக மடைந்து முன்னேறிற்று. ஆனால், பிற்கால அரைகுறை

ஞானங்களின் ஆதிக்கத்தால் விஞ்ஞான அறிவை அவர்கள் கைவிட்டனர்; உலகில் அவர்கள் பெற்றிருந்த தனியிடமும் அத்துடன் பறிபோய்விட்டது. எனவே, இன்று மீண்டும் விஞ்ஞான அறிவின் முக்கியத்துவம் உணரப்பட்டு, அதில் ஆராய்ச்சிகள் நடத்தப்படவேண்டும்.

7. சமூகத்தின் அகவளர்ச்சி : *சமுதாயம் ஸ்திரமும் வளமும் அடைய அதன் நிகர அகம் (சகல அகங்களும் சேர்வதால் வரும் கூட்டு அகம்) தனி நபருடைய அகத்தைப் போலவே வளர்க்கப்பட வேண்டும். ஒரு சமூகம் தனது கடந்த காலப் பண்புகளை வளர்ப்பதன் மூலம் இது சாத்தியமாகும். கடந்த காலப் பண்புகள் ஒரு சமூகத்தின் வெற்றிக்கு எத்துணை இன்றியமையாதவை என்பதைக் காட்ட யூதர்களின் கதையை ஒரு சிறிது பார்த்தால் போதும். ஒவ்வொரு நாட்டிலும் இடமின்றி விரட்டப்பட்ட இந்த ஜாதியினர், இன்று ஒரு தனி ராஜ்யத்தையே ஸ்தாபித்துக் கொண்டுள்ளார்கள் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் தமது முந்தையோர் சரித்திரத்தில் கொண்டிருந்த பெருமையும், அது மீண்டும் தமக்கு வழிகாட்டும் என்ற உறுதியுமாகும். ஒரு சமுதாயம் தன் கடந்த காலம் என்ற கண்ணுடியுள் நோக்கி, வருங்காலத்துக்கு வழி வகுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் இக்பால்.*

8. தாய்மை : *தாய்மையின் பெருமை உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். ஒரு சமூகத்தின் உண்மையான செல்வம் அதன் பொன்னும் பொருளுமல்ல; ஆண்மையும் தீரமும் மிக்க மக்களே என்கிறார் இக்பால். தாய்மை போற்றப்பட்டாலே ஒரு சமுதாயம் சரியான ஆரோக்கியமுள்ளதாக வளர முடியும். பெண்களைப் பற்றிய இக்பாலின் கருத்துக்கள் ஒரு தனித் தலைப்பில் தரப்பட்டிருப்பதால் இங்கு அது விவரிக்கப்படவில்லை.*

இதுவாற்றுனும் சொன்னவைகளிலிருந்து இக்பால் தனி நபரின் ஆத்மீக வளர்ச்சிக்கு மட்டும் வழி சொன்னதோடு அமையாது ஒரு லக்ஷிய சமுதாயத்தின் தன்மையையும் விளக்கியிருக்கிறார் என்பதை உணரலாம். ஒரு சமூகம் தன் அலக்ஷியத்தாலும், தவறான வழிகளாலும் வீழ்ச்சியடைந்து கிடந்தால், தன் க்ஷீணமான நாட்களுக்கு ஈடுகட்ட எந்த நடை முறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர் விளக்கியுள்ளார்.

கடைசியாக, படைத்தவனுக்கும் அவன் சிருஷ்டியான மானிடனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி அவர் என்ன சொல்கிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், இந்தச் சம்பந்தம் எது என்பதுதான் பல்வேறு காலங்களில் தோன்றிய பல்வேறு மகான்களையும் ஞானிகளையும் திகைக்க வைத்த விஷயமாகும். நாம் நம் இறைவனுகிய சிருஷ்டியாளனிடம் கொள்ளும் காதலே உண்மையான காதல் என்று மகான்கள் கூறுகின்றனர். முஸ்லிம் ஞானிகள் இக் காதலை, "இஷ்கே-ஹகீகீ" (சத்தியக் காதல்) என்கின்றனர். இம் மகான்களில் பெரும்பாலார் பக்தன் இறைவனிடம் கொள்ளும் காதலில் மூன்று நிலைகள் உண்டு என்கின்றனர். அவை **தாபம், தரிசனம், கலந்து ஐக்கியமாதல்** ஆகியவை என்று கூறுகின்றனர்.

இந்த ஞானிகள் கூறும் மூன்று நிலைகளில் ஒன்றை அல்லாமா இக்பால் ஏற்றுக்கொள்ளவில்லை. தெய்வக் காதலில் தாபம், தரிசனம் ஆகிய இரு நிலைகள் மட்டுமே உண்டு என்று அவர் கூறுகிறார். மானிட அகம் இறைவனின் அகத்தோடு கலந்து ஒன்றுகிவிடுகிறது என்ற கருத்தையே அவர் வன்மையாகக் கண்டிக்கிறார். அவர் தன் சொற்பொழிவு ஒன்றில் சொல்லுவதாவது, "தள்ளிவைக்க முடியாத தான் என்ற தனித்தன்மையுடனேயே, தன் கடந்த காலச் செயல்களின் பலாபலன்

களை நேரில் காண ஒவ்வோர் அகமும் எல்லையற்ற பரம் பொருளின் முன் வரும்.'' திருகுர்ஆனில், 'உன் (குறிப்புப்) புஸ்தகத்தைப் படி; இத்தினம் உன் கணக்கைப் பார்க்க உன் நப்ஸே (அகமே) போதுமானது' (17: 14) என்றுள்ள வாக்கியத்தை இக்பால் தனக்கு ஆதாரமாகக் கொண்டிருக்கலாம். துளி நீர் கடலில் கலப்பது போல, மானிட ஆத்மா இறைவனோடு, (ஜீவாத்மா பரமாத்மாவோடு) கலந்துவிடும் என்ற அத்வைதக் கொள்கையை நிராகரிக்கும் இக்பால் 'விகா' என்ற இறைவன் சந்நிதானத்தை அகம் அடைவதோடு நின்றுவிடுகிறது என்று அபிப்பிராயம் தெரிவிக்கிறார். அவ்வித நிலையை அடைவதற்காக ஆத்மாவிலெழும் தாபத்தையும், அந்நிலையை அடைந்ததும், அது பெறும் 'தீதார்' என்ற தரிசனத்தையும் அற்புதமான வார்த்தைகளால் அவர் வர்ணித்துள்ளார். ஆத்மா அடையும் தாபத்தை அவர் இவ்விதம் குறிப்பிடுகிறார் :

எரிவதும், தாபமடைவதும் ஒரு நிலையைக் குறிப்பவை;
இந்நிலையின் பேரானந்தத்தை நான் விளக்குவதெனின்,
என்னிடம் சிறிது மதுக் கேட்டு இரப்பாய்.

....

தாபமடையும், எரியும் உலகிலே
சித்தியடைவதைவிடப் பிரிவே விரும்பத் தக்கது.
சித்தியடைவது என்பது ஆசையின் மரணம் ;
பிரிவிலோ தேடுவதன் இன்பம் நிறைந்துள்ளது.

தாபமடையும் நிலையில் ஒவ்வோர் ஆத்மாவும் இறைவனின் சந்நிதானம் என்ற லக்ஷியத்தை அடையவே முயல்கிறது. ஆனால், சரியான அரண் வகுத்துக்கொண்ட, பயிற்சி முற்றிய ஆத்மாவுக்கு மட்டுமே இது சாத்தியமாகிறது. "திரைக்கு அப்பாலுள்ள உன்னதமான ஒளியைக் கண்டுபிடிக்கும் மார்க்கம் கடினத்திலும் கடினமானது'' என்கிறார் இமாம் கஸ்ஸாலி. திரை அகன்றதும் ஹக்குத ஆலாவின் பெருமையையும் சாந்நித்தியத்தின் மகிமையை

யும் ஆத்மா பார்க்க முடிகிறது. ஆனால், போதிய பயிற்சியும் வளர்ச்சியும் அடையாத நிலையில் தரிசனம் கிட்டினாலும், அதன் பயன்கள் அபாயகரமானவையாக ஆகிவிடலாம். இக்பால் (தம் சொற்பொழிவு ஒன்றில்) சொல்கிறார்: "சகலவற்றையும் தழுவி நிற்கும் அந்த மாபெரும் அகத்தோடு நேரடியான தொடர்பு கொண்டுவிட்டாலுங் கூட, ஆத்மா தன்னிலையைக் கொஞ்சமும் மறவாதிருக்கும் திறனுடையதாக இருந்தால்தான் அந்த முன்னேற்றம் உச்சமெய்த முடியும்."

சத்தியத்தின் வெறும் மேல்பரப்பான
ஒளியைக் கண்டதுமே மூஸா மூர்ச்சித்துவிட்டார்.
(ஆனால்) நீயோ சத்தியத்தின் முழு உருவையே
புன்னகையரும்பத் தரிசிக்கிறாய்.

இந்தத் தரிசனத்தைப் பற்றி இக்பால் மேலும் கூறுவதாவது:

சர்வ சக்தனின் தரிசனம் பெறுதல்
வாழ்க்கையின் சிகரமான லக்ஷியமாகும்.
கால, தூரங்களை வெல்வதே இதற்கு வழியாகும்.
அவன் உன்னைக் காண்பதும்,
நீ அவனைக் காண்பதுமான நிலையில்
உன்னை இறைவனோடு சம்பந்தப்படுத்து.
அவன் சந்நிதானத்தில்
உன்னை நிலைநிறுத்து.
அவன் ஒளி வெள்ளத்தில் முற்றும் முழுகிவிடாதே!
உன் காதலியின் விருந்து மாளிகையில்
நீ எரிகின்ற முறையினால்,
உனக்கு வெளிரங்கமான வெளிச்சமும்,
அவனுக்கு உண்மையான வெளிச்சமும்
உண்டாக வேண்டும்.

இத்தகைய தரிசனம் ஒரு கணமே இருக்கும் அனுபவந்தான். ஆனால், இதற்காக எத்தனையோ சோதனைகளையும் பயிற்சிகளையும் கடந்தாக வேண்டும்.

காதலியின் தரிசனத்தைப்
பிறர்க்கு நான் விவரிப்பதெப்படி?
ஒரு நெருப்புப் பொறியைப் போலக்
கண் மூடித் திறக்கும் நேரமே அது நீடித்தது.

இக்பாலின் ஆத்மீகத் தத்துவத்தை ஓரளவு மேலே விளக்கியுள்ளேன். இன்று உளம் நைந்து, நம்பிக்கை யிழந்து கிடக்கும் மனித வர்க்கம், சுரண்டல் பேய்களுக்கும், லஞ்ச மனப்பான்மைக்கும், புறமொன்று பேசி அகமொன்று நினைக்கும் கும்பலுக்கும் மத்தியிலே சிக்கித் தவிக்கும் மனிதகோடிகள் இந்தத் தத்து வத்தைப் பின்பற்றினால் பொன்யுகம் பூத்துவிடுமன்றோ!

இவ்விதம் இக்பால் ஓர் ஆத்மீகத் தத்துவத்தைத் தந்திருப்பது சரி; ஆனால், அதை ஏன் இஸ்லாத்தின் போதனைகளை அடிப்படையாகக்கொண்டு தரவேண்டும், சுயமே ஒரு தத்துவத்தை ஏன் உண்டாக்கித் தந்திருக்கக் கூடாது என்ற கேள்வி எழுவே செய்யும். இக்பால், மானிடனின் தினசரி வாழ்க்கை நியதியை, மனிதன் தன் கூட்டத்தாரோடு சேர்ந்து வாழும் வழிவகை யைக் கூற வந்தார். இதற்கு ஒரு கற்பனைத் தத்துவத் தைத் தந்துவிடுவது கடினமன்று. ஆனால், காரிய சாத்திய மான லக்ஷியங்களைக் கொண்டதாகவும் அந்தத் தத்துவம் விளங்க வேண்டுமன்றோ! இவ்விதம் செயல் முறைக்கு ஏற்று வந்த ஒரு சமயத்தின் முன்மாதிரிகளை அவர் மேற்கோள்களாகக் காட்ட நேர்ந்தது அவசியத்தைக் கருதிச் செய்யப்பட்டதே; இஸ்லாத்தைப் பிரசாரம் செய்யும் நோக்குடனன்று. அது தரும் செய்தியும், அதன் தத்துவமும் ஒரு லக்ஷிய சமுதாயத்துக்கு ஏற்றவையாக இருப்பதால் அவற்றை அவர் நெடுகிலும் மேற்கோள்கள் காட்டப் பயன்படுத்திக்கொண்டார். இதைப்பற்றி டாக்டர் நிக்கல்ஸனுக்கு அல்லாமா இக்பால் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

"என் பாரஸீகத் தத்துவார்த்தக் கவிதைகளின் நோக்கம் இஸ்லாத்தைச் பிரசாரிஷ் செய்வதன்று; இப்பொழுதுள்ளதைவிடச் சிறந்த ஒரு சமுதாய அமைப்பை விவரிக்க நாடினேன்; வாழ்க்கையிலும் செயல் முறையிலும் யாவருக்கும் பொருத்தமான ஒரு லக்ஷியத்தை உலகின்முன் சமர்ப்பிக்க ஆவல் கொண்டேன். இந்த லக்ஷியத்தைச் சமர்ப்பிக்கும் எனது முயற்சியில் இஸ்லாம் தரும் மதிப்புகளையும், சமூக முறையையும் நான் புறக்கணிப்பது என்றால் முற்றும் இயலாததாகி விட்டது. ஏனெனில், இஸ்லாத்தின் முக்கியக் குறிக்கோள் செயற்கையானவையும், விபரீதத்தை உண்டாக்குபவையுமான வர்க்க, நிற, ஜாதி, பொருளாதார வேற்றுமைகளையெல்லாம் ஒழிப்பதாகவே இருக்கிறது. 'சர்வதேச ஒற்றுமைக்கும் ஒத்துழைப்புக்கும் பெருத்த இடையூறு விளைவித்து வரும் இனவெறியை இஸ்லாம் தன் முழுப் பலத்தோடும் எதிர்த்துள்ளது. இந்த அடிப்படை லக்ஷியம் மனித சமூகத்தின் மாபெரும் எதிரியாகும். மானிடவர்க்கத்தின் நலனை விரும்பும் சகலருமே இதைத் துடைத்தெறியும் முயற்சியில் இறங்க வேண்டியது அவர்கள் கடமையாகும். இனத்தையும், நாட்டையும் அடிப்படையாகக்கொண்ட தேசீயக் கருத்து இஸ்லாமிய உலகையும் ஆட்கொண்டு வருவதைக் கண்ட நான், ஒரு முஸ்லிம் என்ற முறையிலும், மானிட வர்க்கத்தின் நன்மையைக் கருதுபவன் என்ற முறையிலும், மானிட வளர்ச்சியில் அவர்களுடைய மகத்தான பங்கை மீண்டும் உணர்ந்து செயலாற்றும்படி அவர்களை அழைப்பது என் கடமை என்று உணர்ந்தேன். நான் இஸ்லாத்திடம் அதிகமான பற்றுதல் கொண்டுள்ளேன் என்பதில் ஐயமில்லை. ஆயினும், இஸ்லாமிய சமூகத்தை எனது தத்துவ விளக்கத்துக்கு ஆரம்ப உற்றுணையாகக் கொண்டுள்ள காரணம் எந்தத் தேசீய, மத விருப்பு வெறுப்புகளுமல்ல.

இப்பிரச்னையைச் செயல் முறையில் கொண்டுவர அது மிகவும் பொருத்தமானதாய் இருப்பதாலேயே அதை அடிப்படையாகக்கொண்டு எனது தத்துவார்த்தத்தைத் தந்துள்ளேன்.''

மானிட வர்க்கம் உன்னத நிலையை அடைய வேண்டும் என்ற லக்ஷியத்தை முன்னிறுத்திக் கவிதை பாடிய கவிஞர், சுதந்திரம், சமுதாயச் சமத்துவம், மானிட சகோதரத்துவம் ஆகிய செய்திகளைத் தந்து, நசுக்கப் பட்டவர்களுக்காகவே போராடி, மனிதனுக்கும் மனித னுக்கும் இடையிலிருந்த சகல செயற்கைத் தடைகளையும் அகற்றப் பாடுபட்ட ஒரு சமுதாயத் திட்டத்தை அலக்ஷி யம் செய்வது சாத்தியமேயன்று. அது அவர் தம் சுய மான ஆராய்ச்சியால் வந்தடைந்த முடிபுதானே ! இக்பால் மானிட வர்க்கம் முழுமையின்மீதும், மக்கள் அனைவர்மீதும் காட்டுகின்ற அன்பைப் பாருங்கள் :

மனிதப் பண்பு (ஆத்மீயத்) என்பது என்ன ?
மனிதனை மதிப்பதுதான்.
அப்படியெனில், இனியாவது மனிதனின் மதிப்பை உணர்
ஒரு சுடுசொல் சொல்வதும் பெரும் பாவம்.
காரணம் மூமினும் காபிரும் இறைவனின் மக்களே !
இறைவனின் மனிதன் தன் வழிகளை
இறைவனிடமிருந்தே கற்றுக்கொள்கிறான்.
மூமினிடமும் காபிரிடமும் அவன்
கண்ணியமாகவே நடந்துகொள்கிறான்.
நேர்வழி (தீன்) யையும், அதை நிராகரிப்பதை (குஃப்ர்)யும்
உன் இதயத்துள் அளந்து பார் !
இதயம் இதயத்தை விட்டு ஓடினால்
இதயம் கைசேத மடையும்.
இதயம் மண்ணாலான (உடல்) சிறையில் அடைபட்டுள்ளது ;
ஆனால், இப்பிரபஞ்சம் முழுவதுமன்றோ
இதயத்தின் ஆளுகைக்கு உட்பட்டுள்ளது !

சம்பூர்ண மனிதன்

இக்பாலின் ஆத்மீகத் தத்துவ விளக்கத்திலிருந்து அவர் சம்பூர்ண மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்று கூறியுள்ளதையும் ஓரளவு புரிந்துகொள்ளலாம். சம்பூர்ண மனிதனைக் குறிக்க அவர் உபயோகிக்கும் பதம் தான் '**மூமின்**' என்பது. சாதாரணப் பொருளில் 'ஈமான்' (நம்பிக்கை) கொண்ட ஒவ்வொருவரும் மூமின் தான். ஆனால், இக்பால் இந்தப் பதத்தை உபயோகிப்பது சம்பூர்ணமடைந்த மனிதனுக்கேயாகும். இதற்கு முன் மாதிரியாக நபி பெருமான் (ஸல்) அவர்களை இக்பால் சுட்டிக் காட்டுகிறார். இக்பாலின் ஆத்மீகத் தத்துவத்தை விவரித்தபோது ஒரு மூமினின் குணாதிசயங்களைப் பற்றி அவர் சொன்னவற்றை மீண்டும் இங்குச் சுருக்கமாக நினைவுபடுத்திக்கொள்ளலாம். மூமின் அன்பு நிறைந்தவனாகவும், உலக இச்சைகளில் பற்றுதலே அற்ற மனத் திருப்தி உள்ளவனாகவும், தீரமுடையவனாகவும், ஆகுமான உணவையே உண்பவனாகவும், சகிப்புத்தன்மையுடையவனாகவும், அசலான செயலாற்றும் தன்மையை வளர்த்தவனாகவும் விளங்குவான். அவன் அச்சத்தையும், யாசித்தலையும், அடிமைத்தனத்தையும், வம்சப் பெருமை பேசுதல் முதலியவற்றையும் முற்றும் அகற்றியவனாக இருப்பான். மேலும் அவன் ஒரு குறிப்பிட்ட சட்டத்துக்குக் கட்டுப்பட்டவனாகவும், தன்னைச் சுயக் கட்டுப்பாடு செய்துகொள்பவனாகவும், இறைவனின் பிரதிநிதித்துவத்தை ஏற்றவனாகவும் இருப்பான். இத்தகைய லக்ஷிய மனிதனை இக்பால் வருணிக்கிறார் :

ஒரு மூமினின் கரம்
உண்மையில் அல்லாஹ்வின் கரமேயாகும்.
ஆதிக்க சக்தியும், சிருஷ்டி சக்தியும், தகுதியும்,
எதையும் சமாளிக்கும் திறனும் உடையவன் அவன்.
மானிடன்தான் ; ஆயினும்,

தன்மையில் தேவதூதன் போன்றவன்.
அடிமைதான், எனினும்
எஜமானனின் குணங்களை (சிபத்துகளை)க் கொண்டவன்.
அவன் சுதந்திர இதயம்
எவ்வுலகைப் பற்றியும் கவலைப்படுவதில்லை.
அவன் நம்பிக்கைகள் சிறியவை,
அவன் லக்ஷியங்கள் மகத்தானவை.
அவன் ஒழுக்கம் யாரையும் கவர்வது,
அவன் கண்கள் அற்புதமானவை.
மென்மையான இன்மொழியும்,
தீவிரமான செயல் முறையும் உடையான் அவன்.
போரிலும் சரி,
நண்பர் குழாத்திடையிலும் சரி,
அவன் இதயம் பரிசுத்தமானதாகவும்
அவன் போக்கு கண்ணியமானதாகவும் இருக்கும்.

இத்தகைய சம்பூர்ண மனிதனைப் பற்றிய இக்பாலின் கருத்தை மற்றும் ஞானியர் சிலர் 'சம்பூர்ண மனித'னைப் பற்றிச் சொல்லியுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு இக்பாலின் தத்துவத்தின் தன்மையை ஓரளவு உணர முயல்வோமாக!

இக்பால் மிகவும் பற்றுதல் கொண்டிருந்த சூஃபி ஞானி மௌலானா ஜலாலுத்தீன் ரூமிதான். இறுதியில் மானிட ஆத்மா இறைவனோடு ஐக்கியமாகிவிடுகிறது என்று எழுதப்பட்ட சூஃபி இலக்கியத்தையே வெறுத்த இக்பால், மௌலானா ரூமியைத் தன் ஆத்மீக வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டார். ரூமியின் தத்துவார்த்தத்தில் உணர்ச்சியும், நம்பிக்கையும், சொந்த உணர்வால் ஆன அனுபவமும் உள்ளன என்றும், அவருடைய முடிவுகள் மேல்போக்காகப் பார்ப்பவர்களுக்கு ஐயமெழுப்பி

னும், (குறிப்பாக அவருடைய 'திவானே - ஷம்ஸே - தப்ரீஸ்' தொகுதியிலுள்ள சில பாடல்களில் தாம் இறைவனோடு ஒன்றியிருப்பதாக எழுதியுள்ளது ஐயமெழுப்பினும்), சற்று ஆழ்ந்து சிந்தித்தால் அஃது அங்ஙனமன்று என்பது விளங்கும் என்றும் கூறுகிறார் இக்பால்.

மௌலானா ரூமியைச் சரியாக மதிப்பிடுவதில் இன்று வரை அறிஞர்களிடையில் அபிப்பிராயபேதங்களும், குழப்பங்களுங்கூட இருந்துதான் வருகின்றன. ஆனால், இக்பால் மௌலானா ரூமியிடம் அதிகமான ஈடுபாடு கொண்டிருந்தது உண்மை. அவருடைய 'அஸ்ராரே குத்இ'யும் 'ரமூஸி பேகுத்இ'யும் மௌலானா ரூமியின் 'மஸ்னவி'யின் சந்தத்தையும் மாதிரியையுமே பெரிதும் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன. 'அஸ்ராரே குத்இ'யின் முன்னுரையில், ரூமி வந்து தன்னைத் தட்டி எழுப்பிப் பாடச் சொன்னதாக இக்பால் எழுதியுள்ளார். மேலும், அவருடைய 'ரமூஸி பேகுத்இ'யின் முன்னுரையில் ரூமியின் 'திவானே-ஷம்ஸே-தப்ரீ'ஸிலிருந்து மூன்று அடிகளை எடுத்துப் பயன்படுத்தியுள்ளார். 'பயாமே மஷ்ரிகி'ல் உள்ள ஒரு பாடலில் அவர் ஜெர்மன் தத்துவ ஞானி கெத்தேயுடன் ரூமியைப் பேசவைத்துள்ளார். 'ஜாவீது நாமா'விலோ தன்னை 'முரீதே-ஹிந்தீ' (ஹிந்தின் ஆத்ம ஞானம் தேடும் சிஷ்யன்) ஆக்கிக்கொண்டு, ரூமியைப் 'பீரே-ரூமி' (ஆத்ம ஞானக் குரு) ஆக ஏற்கிறார். இக்பாலின் மதிப்புக்கு இவ்வகைகளிலெல்லாம் உரியவரான மௌலானா ரூமி தன் 'மஸ்னவி'யிலே 'சம்பூர்ண மனித'னைப் பற்றித் தரும் கருத்தைப் பார்க்கலாம். அவர் சம்பூர்ண மனிதனை, லக்ஷிய மனிதன் என்ற பெயரால் குறிப்பிட்டு எழுதுகிறார் :

> "படைக்கப்படாததும், தெய்வீகமானதுமான
> தன் அமரத்துவ ஆத்மாவை அறிந்துள்ளவனே
> லக்ஷிய மனிதனாவான்.

"ஒவ்வொருவரும் இந்நிலையை எய்தலாம் ;
இதுவே வாழ்க்கையின் நோக்கமும்,
குறிக்கோளுமாகும்.

"லக்ஷிய மனிதன் இறைவனுடன்
மிகவும் நெருக்கமானவனுக இருக்கிறுன் ;
நபிமார்களோ, மலக்குகளோ
அவர்கள் இருவருக்கும் இடையில் குறுக்கிடுவதில்லை.

" லக்ஷிய மனிதன் அற்புதங்களைச் செய்ய முடியும் ;
அவை இயற்கை நிகழ்ச்சிகளை அழிக்காது,
சாதாரண அனுபவங்களுக்கு அப்பாற்பட்ட
காரணங்களைச் செயல்பட வைக்கின்றன.

"மலக்குகள் அடிபணிந்தவரும்,
திரு குர்ஆனில் விவரிக்கப்பட்டுள்ளவருமான ஆதம்
லக்ஷிய மனிதராவார்.
லக்ஷிய மனிதனுவது சாத்தியம் என்பது மட்டுமன்று ;
ஒவ்வொரு யுகத்திலும் இந்நிலையை எய்தியவர்கள்
இருந்தே வருகின்றனர்."

பூமியில் மானிடனுகப் பிறந்த எவனும், சம்பூர்ண மனிதனுக ஆக முடியும் என்ற கொள்கையை ரூமியைப் போல இக்பாலும் ஒத்துக்கொள்கிறுர். அவன் அற்புதங்கள் நிகழ்த்த முடியும் என்றும் இருவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனுல், அத்தகைய சம்பூர்ண மனிதன் தானே ஓர் அற்புதமாகவும் இருப்பான் என்று இக்பால் கூறுகிறுர். ஒவ்வொரு யுகத்திலும் ஒரு லக்ஷிய மனிதன் இருப்பான் என்ற கருத்தை இக்பால் பிரஸ்தாபிக்கவில்லை. மௌலானு ரூமி தன் காலத்துக்கேற்ற ஆத்மீகப் பாஷையில் தனது 'லக்ஷிய மனித'னை விளக்குகிறுர். இக்பால் இப்பூவுலகின் இன்றைய ஞானத்துக்கு ஏற்ற

முறையில் அவனை விளக்கியுள்ளார். இவ்விரு பெரியார்களும் வாழ்ந்தது வெவ்வேறு வகையான சந்தர்ப்பங்களில் என்பதை உணர்ந்தால் இது இயற்கையே என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளவே வேண்டும்.

முஸ்லிம் தத்துவ ஞானத்தைப் பற்றிப் பல நூற்கள் எழுதிய பெரியார் ஷேகு முஹ்யித்தீன் இப்னுல் அரபியும் ஒரு சம்பூர்ண மனிதனைப் பற்றிப் பேசுகிறார். இவன் ஆண்டவனின் 'ஸிபத்துகள்' என்ற குணங்கள் யாவையும், அவனுடைய சம்பூர்ணத்துவத்தையும் தன்னில் நின்றும் வெளியாக்குபவன் என்றும், இறைவனோடு இவன் சம்பூர்ணமாகக் கலக்கும் சித்தியை அடைந்தாலன்றி, இவ்விதம் வெளியாக்குவது சாத்தியமில்லை என்றும் இப்னுல் அரபி எழுதுகிறார். சம்பூர்ண மனிதன் 'ஹக்' (சத்தியம்) கின் ஒரு சிறிய பதிப்பு என்கிறார். ஆனால், இந்தச் சம்பூர்ண மனிதனுடைய சம்பூர்ணத்துவம் எதிலிருந்து வருகிறது? இவன் ஞானத்தில் சம்பூர்ணமானவனா, அல்லது ஜீவனில் சம்பூர்ணமானவனா, அல்லது இரண்டிலும் சம்பூர்ணமானவனா? இறைவனின் 'ஸிபத்துகளை' வெளியாக்குபவனாக இருப்பதால் இவன் சம்பூர்ணமானவனா அல்லது, இறைவனோடு தன் ஆத்மீக அனுபவத்தில் ஐக்கியப்பட்டு இருப்பதால் இவன் சம்பூர்ணமானவனா? இதை இப்னுல் அரபி சரிவர விளக்கவில்லை என்றும், இவை இரண்டிலுமே இவன் சம்பூர்ணமானவன் என்று கூறிக் குழப்பமடைவதாகவும் அவருடைய நூற்களைக் கற்றறிந்த அறிஞர் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

இதற்குப் பின்னர் சம்பூர்ண மனிதனைப் பற்றிய விரிவான நூல் ஒன்றையே தந்தார் ஷேகு அப்துல் கரீம் இப்னு இப்ராஹீம் அல்-ஜீலீ என்ற பெரியார். இவர் தன்னுடைய "இன்ஸானுல்-காமீல்" (சம்பூர்ண மனிதன்; கமால் - சம்பூர்ணம், கமாலிலிருந்து காமீல் என்ற

பதம் வந்துள்ளது.) என்ற நூலில் சம்பூர்ண மனிதனைப் பற்றிய தன்னுடைய கருத்துக்களைத் தந்துள்ளார். "இன்ஸானுல் காமீல்" பல விஷயங்களைப்பற்றி ஆங்காங்கே விவரித்துக்கொண்டு செல்லுவதால் ஒரு சம்பூர்ண மனிதனின் அடிப்படையான அம்சங்களாக எவை எவையை இவர் குறிப்பிடுகிறார் என்று காட்டுவது கடினம். இக்பால் தான் டாக்டர் பட்டம் பெற எழுதிய "பாரஸீகத்தில் தத்துவ சாஸ்திர வளர்ச்சி" என்ற நூலில் இது குறித்து நல்ல விவரங்கள் தந்துள்ளார். ஜீலீயின் சம்பூர்ண மனிதனைப் பற்றிய விபரங்களை இக்பால் தருவதிலிருந்து இவ்விதம் நாம் சுருக்கமாகக் கூறலாம்: சம்பூர்ண மனிதன் உண்மையில் இறைவனின் நிழலே. அவன் இறைவனின் நாமங்களையும் குணங்களையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாவான். சம்பூர்ணமானது பல்வேறு பகுதிகளிலும், தன்னை உணரும் ஓர் உருவாக அவன் ஆகிவிடுகிறான். இந்தச் சம்பூர்ணத்துவத்தை மனிதன் அடைவதெப்படி? ஆத்மீகப் பயிற்சி மூலமும், அகமிய ஏற்றம் பெறுவதன் மூலமுமாம். சம்பூர்ணமானது பல படித்தரங்களாக மனிதனுள் இறங்குவது போல, மனிதனும் தன் ஏற்றத்தால் தெய்வீகத்துள் புகுகிறான். இவ்விதம் மனிதன் ஏறுவதில் மூன்று நிலைகள் (மகாம்கள்) உண்டு. முதல் நிலையில் மனிதன் இறைவன் நாமத்தைத் தியானிக்கிறான். இரண்டாம். நிலையில், குணங்கள் (ஸிபத்துகள்) வட்டாரத்தில் புகுகிறான். இங்கே அவன் இறைவனோடு ஐக்கியப்படுத்தும் குணங்களில் பங்கு பெறுகிறான்; அற்புதமான சக்திகள் வாய்க்கின்றன. மூன்றும் நிலையில் பெயர்களும் குணங்களுமாகிய வட்டாரத்தை விட்டு முன்னேறிச் சம்பூர்ண-சாரம் என்ற வட்டத்தை எய்தி, இன்ஸானே காமீல் என்ற இறைவன் மனிதன் ஆகிறான். அவன் கண்கள் இறைவன் கண்களாகின்றன; அவன் வார்த்தைகள் இறைவனின் வார்த்தைகளாகின்றன; அவன் ஜீவன்

இறைவனின் ஜீவனாகிறது. இது ஜீலீயின் 'சம்பூர்ண மனிதன்' பற்றிய தத்துவமாகும்.

இக்பால் தமக்கு முந்திய பல முஸ்லிம் ஞானிகளுடைய 'சம்பூர்ண மனிதன்' பற்றிய கருத்துக்களையெல்லாம் மிகவும் ஆரம்ப காலத்திலேயே கற்றிருக்கிறார். ஆனால், அவர்கள் தமது ஞான நிலைக்கேற்ப, ஆத்மீக வழியிலேயே சம்பூர்ண மனிதனை விளக்கியுள்ளதை உணர்ந்தார். ஆயினும், தன் சம்பூர்ண மனிதனை, லௌகீகம், ஆத்மீகம் ஆகிய இரண்டையும் மனத்தில் கொண்டு, அதாவது நபி பெருமான் (ஸல்) அவர்களை முன்னிறுத்தி உருவாக்கியுள்ளார்.

கிரேக்கத் தத்துவங்கள் முஸ்லிம் ஞானியர் பலரால் அரபியில் கொண்டுவரப்பட்டு, உண்மையான மார்க்க ஞானத்துக்கு இடைஞ்சலை உண்டாக்கிவிட்டன என்று அபிப்பிராயப்படுபவர் இக்பால். கிரேக்கத் தத்துவ ஞானியரிடையில் அவர் பற்றுதல் கொண்ட ஒருவரும் இருந்தார். அவர்தான் அரிஸ்டாட்டில். அவரும் ஒரு லக்ஷிய மனிதனைப் பற்றிப் பேசுகிறார். அரிஸ்டாட்டிலுடைய லக்ஷிய மனிதன் வருணனையாவது: "அவன் மானிடர்க்குச் சேவை செய்யும் இயல்பினன். பிறர் தனக்குச் சேவை எதுவும் செய்துவிட்டால் வெட்கித் தலை குனிவான். அன்பு செய்வது உயர்ந்த அந்தஸ்தைக் குறிக்கும்; அன்பு பெறுவது தாழ்ந்த நிலையையே காட்டும். ஒருக்காலும் அவன் துவேஷமே கொள்ளான். தனக்குச் செய்யப்படும் தீங்குகளை உடனுக்குடன் மறந்துவிடுவான். அவன் தீரம் அமைதியானது; அவன் குரல் ஆழமானது; அவன் பேச்சு மிகவும் சுருக்கமானது. அவன் படபடப்படைவதில்லை. ஏனெனில், அவன் ஒரு சில விஷயங்களைப் பற்றியே கவலைப்படுவான். அவன் ஆத்திரத்தோடு பேசுவதில்லை. ஏனெனில், எதையும் மிகவும் முக்கியமானது என்று பேசுவதில்லை. வாழ்க்கையின் விபத்துக்களை அவன்

கண்ணியமாகவும், காம்பீர்யமாகவும் ஏற்றுக்கொள்வான். சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்வான்.''

இந்த லக்ஷிய மனிதன் இக்பாலின் சம்பூர்ண மனிதனிலிருந்து பல முக்கிய அம்சங்களில் வேறுபட்டிருப்பது தெளிவு. எனினும், "அவன் மானிடர்க்குச் சேவை செய்யும் இயல்பினன்; ஆனால், பிறர் தனக்குச் சேவை ஏதுவும் செய்துவிட்டால் வெட்கித் தலைகுனிவான்'' என்றுள்ள வருணனை, "எச்சரிக்கை, கடமைப் படுவதினின்று எச்சரிக்கை!'' என்ற இக்பாலின் வார்த்தைகளை நினைவூட்டுகிறது. அமைதியாகப் பேசித் தீவிரமாகச் செயலாற்ற வேண்டும் என்பதையும் இருவரும் ஒரே விதமாகக் கூறியுள்ளனர்.

ஐரோப்பியத் தத்துவஞானிகளில் இக்பாலின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தவர் இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்த ஜெர்மானிய அறிஞர் நீட்சே ஆவார். இவரும் ஒரு சம்பூர்ண மனிதனைப் பற்றிப் பேசுகிறார். இக்பால் தமது கவிதைகளிலும், கட்டுரையின் பல இடங்களிலும் நீட்சேயைப்பற்றிக் குறிப்பிடுகிறார். நீட்சே கடவுளே இல்லை என்று நிராகரித்தவர்; கிறிஸ்தவ மதத்தின் பரம வைரியாக இருந்தவர். ஆனால், நவீன ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான சிந்தனையாளர்கள், பல்வேறு கோணங்களிலிருந்து, கடவுள் மறுப்பும், கிறிஸ்தவ மதத் தாக்குதலும் புரிந்தே வருகின்றனர். கிறிஸ்தவத்தின் கொடுமையைச் சிலர் தாக்கினர்; அது கூறும் அற்புதங்கள் பற்றிய கதைகளைச் சிலர் தாக்கினர்; ஏசு கிறிஸ்துவின் பிறப்பையும் மரணத்தையும் பற்றிய கதைகளைச் சிலர் தாக்கினர். ஆனால், நீட்சே கிறிஸ்தவத்தை மானிட வர்க்கத்தின் முன்னேற்றத்தின் எதிரி என்று தாக்கினார். கிறிஸ்தவம் அடிமைகளின் கலகத்தால் ஏற்பட்டது என்றும், எஜமான விசுவாசத்தை அது தலைகீழாகச் செய்துவிட்டது என்றும், கிரேக்க ரோமானிய

நாகரிகங்களின் நல்லம்சங்களை அழித்தொழித்து விட்டதென்றும், வாழ்க்கை வளர்ச்சியடையும் பாதையில் அது பெரிய தடைக்கல்லாக வந்துவிட்டதென்றும் நீட்சே எழுதினார். "சகலரும் சமமே; சகலரும் பாவமுள்ளவர்களாகவே பிறக்கின்றனர்; பகுத்தறிவையும் ஞானத்தையும்விட அறியாமையும், மூடத்தனமும், கடவுளுக்கு மிகவும் பிரியமானவை; அடிமை எஜமானனைவிடச் சிறந்தவன்; சுவர்க்கம் ஏழைகளுக்கும் வறியோருக்கும் பலஹீனர்களுக்குமேயாகும்; பலம் பாவகரமானது, நிர்க்கதியான நிலையே மாபெரும் சக்தி, இவ்வுடம்பும், இவ்வுலகும் இகழத் தக்கவை, மரணத்துக்கு அப்பாலுள்ளதே ஒரே ஓர் உண்மையான உலகம்"-இத்தகைய பேச்சுக்கள் அடிமைகளிடையில்தான் பேசப்படும். இவ்விதப் போதனையை வேரறுத்தாலன்றி மனிதன் முன்னேறவே முடியாது என்றார் நீட்சே.

இவர் அறிவை அடிப்படையாகக் கொண்டு கடவுள் உண்டா என்று ஆராய்ந்து இல்லை என்று முடிந்து தவறிவிட்டார் என்பதல்லவா இக்பால் அபிப்பிராயம். இவரை இக்பால் ஆத்ம ஞான வளர்ச்சியில் சில படிகளை அடைந்து, பின்னர் வழிதவறிவிட்ட வெறியர் (மஸ்தான்; மஸ்து-வெறி, மஸ்தான்-வெறியர்; இதனையே ஞான பரிபாஷையில் மஜ்தூப் என்பர்) என்று அழைக்கிறார். "கடவுள் செத்துப் போனார்; அவர் பிரேதத்துக்கு அடிபணிந்துகொண்டிருக்கும்வரை மானிடன் தன் அகத்தை உணர்ந்து முன்னேற முடியாது" என்று கூறிய நீட்சேயின் தத்துவத்தில் வெறிபிடித்த ஞானக் கூற்றுக்களும் உள்ளன. 'பயாமே-மஷ்ரி'கிலுள்ள பாட்டொன்றுக்கு இக்பால் எழுதியுள்ள குறிப்பில் நீட்சேயைப் பற்றிச் சொல்லுவதாவது: "இவர் அறிவு ஒரு காபிர் (நிராகரிப்பவன்); ஏனெனில், இவர் கடவுளை மறுக்கிறார்; எனினும், இவருடைய போதனைகளிலுள்ள சில நீதி

போதனை அம்சங்கள் இஸ்லாத்தின் அத்தகைய நீதி அம்சங்களைப் போலவே தோன்றுகின்றன. இவர் இதயம் மூமின்தான்; ஆனால், இவர் அறிவு காபிராய் இருக்கிறது.'' நபி பெருமான் (ஸல்) அவர்கள் தம் காலத்தில் வாழ்ந்த அரபிக் கவிஞர் உமய்யா-இப்னுஸ்-ஸலாத் என்பவரைப் பற்றிப் பேசுகையில், "அவர் நாவு நம்பிற்று; எனினும், அவர் இதயம் நிராகரித்தது'' என்று கூறியுள்ளதை இது நினைவூட்டுகிறது.

"அஸ்ராரே குத்இ''யைப் படித்த மேல்நாட்டு அறிஞர்களில் முக்கியமானவர்கள்கூட இக்பால் நீட்சேயின் கருத்துக்களை அதிகமும் கடன் வாங்கியிருக்கிறார் என்று கருதினார்கள். ஆனால், அது சரியன்று. இக்பால் சம்பூர்ணமாக இஸ்லாமிய அடிப்படையின்மீதுதான் தமது தத்துவஞானத்தை எழுப்பினார். சில சில்லரை விஷயங்களில் இவ் விருவருக்கும் கருத்து ஒற்றுமை இருக்கலாம். முக்கியமான விஷயங்களில் இக்பாலின் கருத்து, நீட்சேயுடையதிலிருந்தும் வேறுபட்டுத்தான் இருந்தது. இதற்கு நல்ல உதாரணம் லக்ஷிய மனிதனைப் பற்றி இருவரும் தரும் மாறுபட்ட கருத்துக்களாகும். நீட்சே தமது லக்ஷிய மனிதனைச் சர்வ சக்தன் (Ubermensch) என்றே அழைக்கிறார். இவனுடைய தன்மைகள் வருமாறு: "மாபெரும் லக்ஷியங்களுக்காக நீதிநெறிகளால் வரும் கட்டுப்பாடுகளை விட்டும் சுதந்திரமடைந்தவன்; செயலாற்றுவதில் சுறுசுறுப்புடன் சிருஷ்டித்தன்மையில் நிகரற்று விளங்குபவன்; கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுப் பிறர் அதிகாரங்களை மறுப்பவன்; இவ்வுலக வாழ்க்கை பயங்கரமாக இருப்பினும் - நல்லதாக இருப்பினும் - இது ஒன்றே உண்டு, வேறு வாழ்க்கையே கிடையாது என்று நம்புகின்றவன்; உயரிய நிலையையும் அதிகாரத்தையும்,

அழுகையும் அடையத் தடையாக உள்ள யாவையும் அழித்துவிடுபவன். பாவம், நரகம், மரணம், மனச்சாட்சி முதலியவை பற்றிய அச்சங்களையே அப்புறப்படுத்தியவன்; உடலின்றி ஆத்மா இல்லாததால், உடல் நோயுற்றால் ஆத்ம மகத்துவமில்லை. எனவே, தேகாரோக்கியத்தை மிக மிகப் போற்றிக் காப்பவன்; இரக்கப்படுவது ஒரு பாவம், அல்லது சுயநலம் என்று கருதுபவன்; இரக்கம் செயல்முறைக்குத் தடையாகிவிடுகிறது; இரக்கப்படுபவனுக்கு அது மோசமான இன்பத்தைத் தந்துவிடுகிறது என உணர்ந்து மிகவும் கடினமான இதயம் படைத்தவனாக இருப்பவன் - இவனே சர்வ சக்தனான மனிதனாக இருக்க முடியும்.''

நீட்சேயின் சம்பூர்ண மனிதன் தாக்ஷண்யமற்றவனும், பலாத்காரவாதியாயும், 'சக்தி'யின் உருவாயும் இருப்பதை மேலே காண்கிறோம். யாவையும் அழிப்பதே இவனுடைய ஒரே லக்ஷியமாகத் தோன்றுகிறது. அழகிய உணர்ச்சிகள் எதையுமே இவனிடம் காணோம். இக்பாலின் சம்பூர்ண மனிதனோ, இறைவன் ராஜ்யத்தைப் பூமியில் நிலை நாட்டுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவனாகவும், பிறரிடம் சகிப்புத்தன்மை காட்டுவதில் தலைசிறந்தவனாகவும் இருக்கிறான். இறைவன் ராஜ்யத்தைப் பூமியில் நிலைபெறச் செய்வதற்காகவே இவன் மாபெரும் பலம் அடைகிறான். அதற்கு இடையூறாக வருபவைகளையெல்லாம் களைந்தெறிய அப்பலத்தைப் பயன்படுத்துகிறான். நீட்சேயின் சம்பூர்ண மனிதனைப் போல் இவன் வெறும் லோகாயதவாதியாக, இவ்வுலகோடு எல்லாம் முடிந்துவிட்டது என்று எண்ணுபவனாக இல்லை. இவன் அழிப்பதோ, நீட்சேயின் சம்பூர்ண மனிதனைப் போல் யாவற்றையுமன்று; தான் சீர்திருத்த முடியாததை மட்டும்

தான். அன்பே உருவான இக்பாலின் சம்பூர்ண மனிதனும், வெறும் உடல் சக்தியுள்ள நீட்சேயின் சம்பூர்ண மனிதனும் எப்படி ஒத்த குணத்தினராக இருக்க முடியும்? இக்பாலின் லக்ஷிய மனிதன் சத்தியத்தை முன்னிறுத்தியவனாகவும் பலஹீனர்களுக்காகப் போராடுபவனாகவுமன்றோ விளங்குகிறான்! இது போலவே சகல அடிப்படை விஷயங்களிலும் நீட்சேயிடமிருந்து இக்பால் கருத்து வேற்றுமையுடையவராய்த்தான் விளங்குகிறார்.

நம் அருகாமையில் புதுவையில் இருந்த யோகியான அரவிந்த கோஷும் ஒரு சம்பூர்ண மனிதனைப்பற்றிப் பேசுகிறார். இக்பால் சம்பூர்ண மனிதனைப்பற்றிய தம் கருத்துக்களை வழங்கிய அதே சமயத்தில் யோகி அரவிந்தர் இதுபற்றித் தன்னுடைய 'பூர்ண மனிதன்' என்ற நூலில் இவ்விதம் எழுதியுள்ளார்: "உன்னத மனிதத்துவம் என்பது மனிதனிடம் அவசியம் இருக்க வேண்டிய சகலமும் நிறைந்த் தெய்வீகத்தன்மைதான். அவன் கடவுளின் உருவிலிருந்து படைக்கப்பட்டவன். ஆனால், தெய்வீக சத்தியத்துக்கும், அதன் மானிடப் பிரதிநிதிக்கும் இந்த வித்தியாசமுண்டு; அதாவது, எவை எவை ஒன்றில் எல்லையற்றதாய், இயல்பாய் எழுவதாய், சம்பூர்ணமானதாய், தன்னுள் அடங்கியதாய் உள்ளனவோ, அவை யாவும் மற்றதில் வரம்புக்குட்பட்டதாய், கஷ்டத்தின் பேரில் உண்டாவதாய், பூரணமற்றதாய், போராட்டத்தினாலேயே எய்தப்படுவதாய், தவறான உடைமை காரணமாக நிரந்தரமற்றதாய் ஆகியுள்ளன. ஆனால், இந்த ஓயாத பூரணத்துவமற்ற நிலையிலே, சம்பூர்ண மடையவேண்டும் என்ற ஆசையும், வெறியும் சதா இருந்தேவரும்."

யோகி அரவிந்தரின் தத்துவார்த்தங்கள் நம் நாட்டிலும், வெளியிலும் பலருடைய கருத்தைக் கவர்ந்திருக்கின்றன. இந்தியத் தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு

சிந்தனை செய்து உன்னத மனிதனைப்பற்றி இவர் வழங்கிய கருத்துக்கள், இக்பால் தெரிவிக்கும் கருத்துக்களுடன் சில முக்கிய விஷயங்களில் ஒற்றுமைப்பட்டுள்ளன. உன்னத மனிதத்துவம் எந்த ஒரு வகுப்புக்கும் மட்டும் விசேஷமாக உள்ள உடைமையன்று, சிலருக்கு மட்டுமே விசேஷமாக உரியது என்றில்லை, யாவருக்குமே சாத்தியமானதுதான் என்கின்றனர் இருவரும். இறைவனிடமிருந்து அவை சக்திபெறுபவை என்பதையும் இருவரும் காட்டுகின்றனர். ஆனால், இருவருடைய கருத்துக்களிலும் ஒரு முக்கிய வேற்றுமை காணப்படுகிறது. அரவிந்தரின் பூர்ண மனிதன் ஆத்மீக சக்திகளின் உற்பத்தியை மட்டுமே லக்ஷியமாகக் கொண்டவனாக விளங்குகிறான். ஆனால், இக்பாலின் லக்ஷிய மனிதனோ, ஆத்மீகச் சக்திகளுடன் உடல் வளர்ச்சியையும் மறக்கவில்லை. லக்ஷிய மனிதனுக்குச் சமுதாய நோக்கம் வேண்டும் என்று இரு பெரியார்களும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், அரவிந்தர் அதைக் குறிப்பிடுவதுடன் மட்டும் நிறுத்திக்கொள்கிறார். இக்பாலுக்கோ சமுதாயமே முக்கிய லக்ஷியமாக இருக்கிறது. அதில் லக்ஷிய மனிதன் கொள்ளவேண்டிய உயர்வைப்பற்றிய எந்தச் சிறு தகவலையும் விடாது அவர் தருகிறார். யோகி அரவிந்த கோஷ் தனது கட்டுரையொன்றில் தனி மனிதன் சமுதாயத்தோடு கொண்டிருக்க வேண்டிய தொடர்பைப்பற்றி எழுதியுள்ளதாவது:

“தனி நபர் தன் சமூகத்துடன் கொள்ளவேண்டிய சரியான உறவுமுறையில், தன் சமூகத்திலுள்ளவர்களின் நலன்களைப் புறக்கணித்துத் தனது லௌகீக, அறிவு, ஆத்மீக வளர்ச்சியில் மட்டும் சுயநலத்தோடு ஈடுபடுபவனாகவோ, சமூகத்துக்காகத் தன்னுடைய வளர்ச்சியை ஹீனப்படுத்திக் கொள்பவனாகவோ இருக்கக் கூடாது; ஆனால், தன் சமூகத்தின் சிறந்த சம்பூர்ணமான சாத்தியப்பாடுகளைத் தன்னுள் அபிவிருத்தி செய்து, சிந்தனையாலும் செயலாலும் மற்றும் தன் சூழ்நிலையிலுள்ள

சகல வகைகளாலும் அதை வெளியே பொழிந்து, அதன் உன்னதமான இயல்புகளைத் தன் சமூகம் பூராவுமே நெருங்க வகை செய்பவனாக இருக்க வேண்டும்.'' யோகி அரவிந்தர் குறிப்பிடும் இந்த லக்ஷியம் மிகவும் பாராட்டுதற்குரியது. ஆனால், இந்த லக்ஷியத்தை எய்தும் மார்க்கத்தை அவர் கூறவில்லை. எந்தவிதமான சமுதாயத்தில் உன்னத மனிதன் உண்டாகி வளர முடியும் என்று அவர் சரியான விபரம் தரவில்லை.

இன்றுள்ள லோகாயதக் கட்சிகளோ தனிமனிதனின் முன்னேற்றத்துக்கான சமுதாய அமைப்பைத் தாங்கள் தாம் உண்டாக்க முடியும் என்று சப்தமிட்டுக் கத்தி வருகின்றன. இக்கூச்சலின் இடையே இக்பால் காட்டும் சமுதாயம் உண்டாவதும், தனி நபர் வளர்ச்சியடைதலும் எத்தனை அவசியமானவை என்பதை உலகின் வருங்கால நலனில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இக்பால் மனிதன் சம்பூர்ணம் பெறும் மார்க்கத்தையும், சமுதாயம் முன்னேற்றமடைந்து லக்ஷிய வாழ்க்கை நடத்தத் தேவையான வழிவகைகளையும் காரியசாத்தியமான முறையில் எடுத்து இயம்பியுள்ளதை இன்று உலகச் சிந்தனையாளர்கள் பலர் ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே, ஆத்மீகம், சமுதாயம் பற்றிய இக்பாலின் கருத்துக்களுக்கு வருங்காலத் தத்துவ ஞானச் சிந்தனைகளில் முக்கிய இடம் உண்டு என்பது நிச்சயம்.

அன்பும் அறிவும்

'நான் இருக்கிறேனா இல்லையா?' என்று ஐயுற்றது அறிவு; 'நீ இருக்கிறாய்!' என்றது அன்பு.

இன்பம் வேண்டுமா? அதற்கு அன்பு நீர் பாய்ச்சி அறிவெனும் ஏர் கொண்டு உழவேண்டும், இன்பப் பயிர் விளையும் என்றார் பாரதியார். அன்பை நீராகவும் அறிவை ஏராகவும் அவர் பாவித்தார். இன்றைய உலகம் அறிவுக்கே முதல் இடம் தருகிறது; அறிவையே பெரிதாகக் கருதுகிறது. பகுத்தறிவை முதல் படியாகக் கொண்டே எதையும் ஆராய வேண்டும் என்று விவாதிக்கிறது.

மதம் என்பது அன்பை அடிப்படையாகக் கொண்டது. அன்புக்குப் பின்பே அறிவு என்கின்றன சமயங்கள். இறைவன் அன்புருவானவன் என்று சமயப் பெரியார்கள் பேசுகின்றனர். ஆனால், அறிவை முதற் படியாகக் கொண்டு ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்று கூறும் பகுத்தறிவுவாதிகள் எனப்படுவோர் அன்பை மூடத்தனம் என்கின்றனர். அறிவுக்கு மேலான அடிப்படை, அறிவுக்கு முந்திய படி அன்பு என்பதை இவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்.

இஸ்லாம் அறிவுக்குப் பெரும் மதிப்புத் தருகிறது; அறிவு தேடுவதைக் கடமையாக வலியுறுத்துகிறது. எனினும், இஸ்லாம் அன்பை அடிப்படையாகக் கொண்ட சமயம்; மனிதனுக்கு மனிதன் அன்பு காட்ட வேண்டும் என்று போதிப்பது. ஒருவன் துன்பத்தால் துயருறும்போது மற்றவன் அவனுக்கு ஆறுதல் கூற வேண்டும் என்று கூறுகிறது இஸ்லாம்.

அன்பையும் அறிவையும் சேர்த்துப் பேசும் கவிஞர்களில் இக்பாலுக்கும் முக்கியமான இடமுண்டு. வாழ்க்கையில் உயர்ந்த சக்தியாக விளங்குவது அன்பு என்பது அவர்

நம்பிக்கை. இக்பால் குறிப்பிடும் அன்பு மிகப் பரந்தது. இறைவனோடு நாம் சம்பந்தப்படுத்தும் கருணை முதலிய குணங்களை நம்முள் வளர்த்தலே அன்பை வளர்ப்ப தாகும் என்கிறார் இக்பால். வாழ்க்கைக்கு உண்மை உயிர் வேண்டுமானால், அதை அன்பின் அருங்கரம் தொட வேண்டும்; அன்பு ஆத்மாவைப் பரிசுத்தமாக்கும் என் கிறார் அவர்.

மனிதனுக்கு அறிவு அவசியமானது. ஆனால், அஃது அவன் ஏவியதைச் செய்வதாக இருக்க வேண்டும். தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், பேய் மனத்தின் சபலத்தைக் கட்டுப்படுத்தவும் அறிவு வேண்டும். அன்பு தன் பாதையில் முன்னேற்றமுற அறிவின் துணை வேண்டியதுதான். ஆனால், அன்பற்ற அறிவு அபாயகர மானதாக ஆகிவிடுகிறது. அது சில சமயங்களில் மோசடி செய்துவிடுகிறது. அதன் போராட்டம் தவறான வழியில் கொண்டு செல்கிறது. மனிதனுக்கு வழிகாட்ட வேண்டிய அதுவே மனிதனை மயக்கிவிடுகிறது. இதற்கு அறிஞர்களின் சரித்திரங்கள் பல சான்றுகளாக் உள்ளன.

மேல்நாட்டுத் தத்துவஞானி நீட்சே அறிவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, 'இறைவன் இருக்கிறானா?' என்று துழாவியதாலேயே அவருடைய 'சிற்றறிவு' இறை வன் இல்லை என்ற முடிவுக்கு வந்ததாம். பாரஸீகத் தத்துவஞானியான இமாம் கஸ்ஸாலி ஓரிடத்தில் இது பற்றி எழுதியிருப்பதாவது: "அறிவின் அடிப்படையில் உலகப் பொருள்களை ஆதாரமாகக்கொண்டு இறைவன் ஒருவன் உண்டா என்று ஆராய்ந்தேன். இல்லை என்ற பதில் தந்தது அறிவு. பின் அன்பை அடிப்படையாகக் கொண்டு இறைவன் ஒருவன் உண்டா என்று ஆராய்ந் தேன். அன்பு ஆம் என்று பதிலிறுத்தது. எப்படி என்று வினவினேன். "குல் ஹுவல்லாஹு அஹது"

(சொல்லும், அவன் அல்லாஹ் ஏகன் - ஒருவன்.) என்ற அத்தியாயத்தை அன்பு ஓதிக் காட்டிற்று."

இவ்விதம் வேலி பயிரை மேய்வதைப் போல, அறிவே சில சந்தர்ப்பங்களில் மனிதனை வழிதவறச் செய்வதனால்தான் இக்பால் சொன்னார்,

போராடும் அறிவின் ஏமாற்றை இலகுவாய் உணரலாம்.
அது பிரயாணிகளின் தலைவன் ;
எனினும், பிரயாணிகளை வழிப்பறி செய்துவிடுகிறது

என்று. உண்மையான அன்பை உள்ளத்திலே கொண்டவனின் தன்மை ஏது என்பதற்கு இக்பால் ஓர் அதி அற்புதமான உதாரணந்தருகிறார். கர்பலாக் களத்தில் வீரச் சமர் புரிந்து வீரமரணமெய்திய இமாம் ஹுஸைன் (ரலி) அன்பைக் கடைப்பிடித்து உயிர்விட்ட லக்ஷிய புருஷர் என்பது இக்பாலின் நம்பிக்கை. அதிகாரத்தை அபகரித்த மூர்க்கன் எஸீது திரு குர்ஆன் கட்டளைக்கு முரணாக நடந்தான். இஸ்லாத்தின் அடிப்படையையே அசைத்தான். அதர்மவானான அவனிடம் படைபலம் அதிகம். பல நாடுகள் அவனுக்கு உதவி புரிந்தன. எனினும், அக்கொடியோனை இறைவன் திருமொழியைப் போற்றும் ஹஸ்ரத் அவர்கள் எதிர்த்துப் போராடத் துணிந்தார்கள். ஆனால், அவர்களிடம் இருந்ததோ எழுபத்திரண்டு தொண்டர்களே. எஸீதின் வெள்ளம் போன்ற படையின் முன் இவ்வெழுபத்திரண்டுபேர் எம்மட்டு? எனினும், அவர்கள் போராடினார்கள். கொன்றுயிர் மாய்ந்தார்கள்; அவர்கள் புகழை உலகம் பாடுகிறது. ஏன்? தாங்கள் அழிந்துபடுவோமே என்ற அறிவு அவர்களுக்கு இல்லாது போய்விட்டதா? எண்ணற்ற படையினரை எழுபத்திரண்டு பேர்களைக் கொண்டு எதிர்ப்பது மதியீனம் என்பான் அறிவுவாதி. ஆனால், அத்தகைய முறையில் பெருமானார் போர் நிலையை ஆராய்ந்தார்களில்லை. நியாயம் என்ற கொடியை

நிலைநாட்டினார்கள். அப்போரில் அவர்கள் மாண்டு போனாலும் தான்தோன்றி ஆட்சிக்கு இஸ்லாத்தில் இடமில்லை என்றாக்கினார்கள். லக்ஷியத்துக்காகப் போராடு கையில் அறிவின் சக்தியை அடக்க வேண்டும் என்பதை யும் இது காட்டுகிறது.

அன்பு நம்ரூதின் நெருப்பில் தயங்காது குதித்தது;
அறிவோ உச்சிக் கொம்பிலிருந்து
தயக்கத்தோடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தது.

இவ்வரலாற்றினை விவரிக்கும் இக்பால் அன்பு, அறிவு என்ற இரு சக்திகளையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்:

ஒரே இறைவனுக்கு அடிபணிவோர்
பிறவற்றைத் தொழுவதினின்றும் விடுதலை யுறுகின்றனர்.
ஈமானும் அன்பும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதவை.
நாம் 'இயலாது' என்பதைச் சாதிப்பது அன்பு;
அறிவு கடூரமானது;......
அன்போ புனிதமானதும் பயமற்றதுமாகும்.
அறிவு வீண் வம்பில் மாட்டிக்கொள்கிறது;
செயல்முறையில் தலை தூக்கி நிற்கிறது.
அன்பு ஆயுதங்கொண்டு தன் இரையைத் தேடினால்
அறிவு தந்திரமாக அதற்கு வலை விரிக்கிறது.
அறிவின் சாரம் ஐயமும் அச்சமுமே;
அன்பின் சாரம் உறுதியும் நம்பிக்கையுமாம்.
அறிவு அழிப்பதற்காக வளர்க்கிறது;
அன்பு வளர்ப்பதற்காக அழிக்கிறது.
அறிவு மலிவானது,
காற்றைப் போல் பொதுவானது.
ஆனால், அன்பு அருமையானது, விலைமதிப்பற்றது.
அறிவு, 'ஏன்?' 'எப்படி?' என்று துழாவுகிறது.
அன்போ அவ்விதம் மயங்குவதில்லை.
அறிவு சொல்கிறது, 'சுயமாக முன்னேறு' என்று;
'நீயே முயற்சி செய்!' என்கிறது அன்பு.
'உண்டு, களி!' என்கிறது அறிவு;

'அடிமையானால் நீ விடுதலை யுறுவாய்' என்கிறது அன்பு.
சுதந்திரமே அன்பின் இன்பம்;
அஃது அன்புக்கு ஒட்டகைப் பாகன்.

இவ்விதமாக அன்பின் பெருமையை அழகாக வெளியிடுகிறார் இக்பால். அவர் பாடல்களெங்கும் இக்கருத்துக்கள் மிளிர்கின்றன.

பிளேட்டோ என்ற தத்துவஞானி 'குடியரசு' என்றொரு நூல் எழுதினார். அதில் ஒரு நாட்டிற்கு அரசன் ஒருவன் இருக்க வேண்டுமென்றும், அவன் சர்வ வல்லமையும் திறமையும்படைத்தவனாக இருக்க வேண்டுமென்றும், அவனுக்கு உதவி செய்யும் ஒருவனும் அவன் அருகில் இருக்க வேண்டும் என்றும் எழுதினார். இக்பால் விவரிக்கும் அன்பையும் அறிவையும் பற்றிக் குறிப்பிட வந்த அறிஞர் ஒருவர் பிளேட்டோவின் குடியரசை நினைவில் கொண்டு இவ்விதம் எழுதினார்: "இக்பாலின் அன்பு என்பது பிளேட்டோ குறிப்பிடும் அரசன்; அவனே சர்வமும். அறிவு என்பது பிளேட்டோ குறிப்பிட்ட அரசனின் உதவியாளனாகும். அவன் வேலை அரசனுக்குக் கீழ்ப்படிந்து அவன் சொன்னபடி கேட்பதே."

அன்பையும் அறிவையும் பற்றிய இக்பாலின் கருத்தைக் காட்டும் சிறிய கவிதை ஒன்றுண்டு. அன்பின் இருப்பிடம் உள்ளம்; அறிவின் உறைவிடம் சிந்தை. உள்ளமும் சிந்தையும் ஒரு தடவை உரையாடல் நடத்தின. சிந்தை அறிவின் திறத்தை வானளாவ உயர்த்திப் பேசிற்று. உள்ளம் அதற்கு அமைதியாகப் பதில் தந்தது:

சிந்தை சொல்லிற்று:
வழி தவறியோர்க்குக் கலங்கரை நான்,
ஜகத்திலே உழன்றாலும் விண்ணுலகும் ஏகுவேன்.
பார், என் பெருமையை!
நான் முடவன், எனினும்; கிஸரைப் போன்றவன்.

மக்கள் மயங்குகையிலே, எது நன்று என்று அறியாது
தயங்குகையிலே நான் நல்வழி காட்டுவேன்.
உலகம் என்ற உயரிய நூலை
விளக்கித் தந்து, வேற்றுமை யுணர்த்தி
இறைவன் பெருமை இலங்கச் செய்வேன்.
நீயோ ஓர் துளி குருதி ;
நான் மதிப்பிலா மாணிக்கம் !
உள்ளம் விளம்பிற்று :
உண்மை சொன்னாய் நண்ப,
உலகின் உள்ளம் நீ உணர்வாய்,
நானோ அதனைக் கண்களாலேயே காண்கிறேன்.
உலகின் அளவை உனக்குத் தெரியும்;
ஆத்மீகத்தின் அளவையோ என் கையிலே.
நான் தெய்வ ஞானம் அருள்வேன்.
இறைவன் உறைவிடம் நாடுவாய் நீ ;
நானோ அவன் குடிகொண்ட பீடம்.
கல்வியில் நீ அதிருப்தியளிப்பாய் ;
நானோ அதில் திருப்தியுண்டாக்குவேன்.
உண்மையென்ற ஸதஸிலே
விளக்கொளியாய் விளங்குவாய் நீ ;
கவினுரு உலகுக்கு ஒளி நான்.
கால எல்லையும் இடவரம்பும் உனக்கே ;
எனக்கு அவை இல்லை.
நான் உலகப் பறவை.
சொல், யார் உயர்ந்தவன்?

இவ்விதமாக அன்பையும் அறிவையும் ஒப்புநோக்கி அன்புக்கு அரியாசனம் அளிக்கிறார் மகாகவி இக்பால். மக்கள் வாழ்வைக் குலைக்க உதவும் பைசாச அறிவு, மக்கள் வாழ்வை உயர்த்தவரும் தெய்வீக ஞானமாகவேண்டுமானால், அன்போடு அறிவு இழைந்துதானே போக வேண்டும்!

அன்பினால் ஆத்மா பலப்படுத்தப்பட்டதும்,
அது உலகை ஆளுவதாகி விடுகிறது.

ஆத்ம வளர்ச்சிக்கு அன்பும் அறிவும் இணைய வேண்டுவது மிகவும் அவசியம் என்பதை இக்பால் பன்முறை வலியுறுத்தியுள்ளார்.

அறிவினால் அகம் பலப்படுத்தப்பட்டதும்
அது ஜிப்ரயீலின் பொறாமையையே தூண்டி விடுகிறது ;
அன்பினால் அது பலப்படுத்தப்பட்டதும்
அஃது இஸ்ராபீலின் 'சூர்' (கொம்பு) ஊதலாக ஆகிவிடுகிறது.

இன்றைய நவீன நாகரிக மனிதன் அறிவில் விருத்தியாகிக்கொண்டு வரினும், அவன் இதயத்தில் அன்பு உலர்ந்து வருவதைக் கண்ட இக்பால் இவ்விதம் மனம் நொந்து பாடினார் :

அன்பு வரண்டுவிட்டது ;
அறிவு நாகம் போல் அவனைக் கொத்துகிறது.
அறிவை அன்பின் ஆட்சியில் கொண்டு வர
அவன் தவறிவிட்டான்.
நக்ஷத்திரங்கள் இயங்கும் பாதையை அவன் கண்டான் ;
ஆனால், தன் சிந்தனையின் ஆதிக்கத்தால்
தன் பாதையை இழந்துவிட்டான் !
லாபத்தையும், நஷ்டத்தையும் அறிய இயலா வண்ணம்
அவன் தன் அறிவுத் திறன் எனும் வலையிலே
அகப்பட்டுக்கொண்டுள்ளான்.
சூரியனின் கதிர்களையும் சிறைப்படுத்திய மனிதன்
தன் வாழ்க்கை எனும் இருண்டு கிடக்கும் இரவுக்கு
வெளிச்சமுண்டாக்க இயலாதிருக்கிறான் !

எனவே, இவ்விதமான துயர நிலை இக்பால் மனதைப் பெரிதும் வருத்திற்று. அவர் இறுதியாக எழுதிய, "கிழக்கு நாடுகள் என்ன செய்ய வேண்டும் ?" என்ற மஸ்னவியின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளதாவது :

அன்பின் ராஜ்யத்திலிருந்து
நான் ஒரு புதிய சைன்யத்தை எழுப்புகிறேன்.
ஏனெனில், புனித ஹரமில்
மனம் கிளர்ச்சி செய்யும் என்ற

ஆபத்து உண்டாகியுள்ளது.
நான் உயரத்திலே ஏறி அறிவை அடக்கினேன்;
இப்போது என்னை அது வலம் வருகிறது.
அறிவைக் கண்காணிக்க எதுவுமில்லையோ
என்றெண்ண வேண்டாம்!
ரூமியின் பார்வை சதா அதை நோக்கித்
தீர்ப்பு வழங்க ஆயத்தமாய் உள்ளது.

அன்பின் மூலம் கிடைக்கும் அறிவுக்கும் அறிவின் மூலம் கிடைக்கும் அறிவுக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்பதை விளக்கும்படி ஓர் அறிஞர் கேட்டபோது இக்பால் அவருக்கு எழுதியுள்ள பதில் அன்புக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பை நன்கு தெளிவுபடுத்தும். அதில் இக்பால் எழுதுகிருர்:

> "புலன்களால் உண்டாகும் அறிவு மனிதனுக்குச் சக்தியைத் தருகிறது. அது சமயத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இவ்விதம் அந்தச் சக்தி சமயத்துக்குக் கட்டுப்பட்டதாக இல்லாவிட்டால், அது சாத்தானிய சக்தியாகிவிடும். உண்மை ஞானத்துக்கு இந்த அறிவு முன்னுரை போன்றது. சத்தியத்தின் ஞானம் முதலில் புலன்களின் மூலமும், பின்னர் நேரடியான உணர்வின் மூலமும் அடையப் பெறுகிறது. அதன் இறுதியான நிலைகளை உணர்வினுள் அடக்க முடியாது. தன்னுணர்வினுள் அடக்க முடியாததும், உண்மை ஞானத்தின் இறுதியான நிலையுமானதே அன்பு எனப்படுவது. அன்பிலிருந்து அப்பாலாகிய அறிவு (சைத்தானைப் போல) கலகம் விளைப்பது. அன்போடு இணைந்த அறிவு தெய்வீகக் குணங்களைப்

பெறுகிறது. ஒரு முஸ்லிம் புலன்களை அடிப்படையாகக் கொண்டதும், எல்லையிலா அதிகாரத்தின் மூலஸ்தானமானதுமாகிய இத்தகைய அறிவை இஸ்லாத்தைத் தழுவுமாறு செய்ய முயல வேண்டும். அதாவது இந்த (காபிர் ஆன) அபூ-லஹபை, (சம்பூர்ண மனிதரான) அலீயாக மாற்ற வேண்டும். சுருங்கச் சொல்வதெனின், இந்தச் சக்திக்குச் சமயம் உணர்ச்சி யூட்டுமானால், மானிட வர்க்கத்துக்கு அது மகத்தான வரப்பிரஸாதமாகி விடும்.”

பெண்களைப் பற்றி

இக்பால் மேல்நாடு சென்றிருந்த சமயம் ஓர் ஆங்கில மாது அவரிடம் வந்து, அவர் கையொப்பத்தைப் பிரபலஸ்தர்களின் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் தன் குறிப்புப் புஸ்தகத்தில் போடும்படி கேட்டாள். உடனே இக்பால், “மலர்களும், பெண்களும், தொழுகைக்காக அழைக்கும் ‘அதான்’ எனும் குரல் ஒலியும் நான் மிகவும் நேசிப்பவை” என்ற நபி பெருமான் (ஸல்) அவர்களின் திருமொழியை எழுதித் தமது கையெழுத்தையிட்டார். இதைப் படித்த அந்தப் பெண் பெரிதும் வியப்படைந்தவளாய், பெண்களுக்கு ஆத்மா உண்டு என்று இஸ்லாம் நம்புகிறதா என வினவினாள். “பெண்களுக்கு ஆத்மா உண்டென்று நம்புவதுடன் நில்லாது, பெண்மையைப் பேணிப் பாதுகாக்கும் மகத்தான மதமாகவும் இஸ்லாம் விளக்குகிறது” என்று இக்பால் பதிலளித்தார்.

இஸ்லாம் பெண்களுக்குத் தந்த ஸ்தானத்தை இக்பால் மிகவும் அருமையாக விளக்கியுள்ளார். பெண்ணின் பெருமையை அவர் பேசத் தவறியதில்லை. கவி மரபுக்காக மட்டும் பெண்மையின் பெருமையைப் பாடியவரல்லர்

அவர். பெண்கள் ஒரு சமுதாயத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்; சமுதாயத்தின் உயர்வோ வீழ்ச்சியோ அவர்களைப் பொறுத்தது என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே, பெண்கள் தங்கள் உரிமைகளோடு நேரிய பாதையில் நடக்க வேண்டும் என்று எண்ணி அவர்களைப் போற்றுகிறார்.

பெண்கள் எந்தத் துறையிலும் முன்னேறுவதை இஸ்லாம் தடுக்கவில்லை. நபி பெருமானாரின் மனைவியர்களுள் ஒருவராகிய ஹஸ்ரத் ஆயிஷா நாயகியவர்களே சிறந்த அறிஞராய் விளங்கி இருக்கிறார்கள். ஒரு போர்க்களத்தில் சேனைத் தலைவராகவும் நின்று போர் செய்திருக்கிறார்கள். கிராத்துல் அயின் போன்ற புரட்சிப் பெண்களும், சுல்தானா ரஸியா போன்ற அரசிகளும், ஷாஹந்தா போன்ற பேராசிரியைகளும், பாத்திமா அல்புதாலியா போன்ற சட்ட நிபுணர்களும் இருந்திருக்கிறார்கள். ஆனால், உலகப் பெண்கள் யாவரும் பின்பற்றக் கூடிய முன்மாதிரியாக இவர்களில் யாருமில்லை. பெண்கள், சமுதாயத்தில் தங்களுக்கென உள்ள பங்கை நிறைவேற்ற வேண்டுவது அவசியமன்றோ? மெல்லியலார் என்ற தம் பெயருக்கேற்ப அவர்கள், சமுதாயம் உயர்வதற்கான தம் கடமைகளை நிறைவேற்ற வேண்டாவா? இயற்கைக் கொப்பவும், இயற்கை தமக்குத் தந்துள்ள உடலமைப்புக்கு ஏற்பவும் அவர்களுக்கென அளிக்கப்பட்டுள்ள தொழில்களை அவர்கள் செய்வதே முறையாகும். இதே அபிப்பிராயமுடையவர் இக்பால்.

பெண்மையைப் புறக்கணித்து ஆண்மை மேலோங்க நாரியர், சிலர் கற்றோம் என்று கூறி மார்தட்டி அலைவதை இக்பால் வெறுத்தார். கண்ணாடி உடையும், முகப்பவுடரும், உதட்டுச் சாயமும் உயரிய பெண்ணை ஆக்கிவிட முடியாது. கணவனைத் தான் இஷ்டப்பட்டால் ஒதுக்கவோ ஏற்கவோ செய்யலாம் என்று எண்ணுபவள்

பெண்ணல்லள் என்று இக்பால் கூறுகிறார். ‘ஜாவீது நாமா’வில் ஓர் அமிதநாகரிக மங்கையை அவர் வருணிப்ப தன் நோக்கமே இதுதான். பெண்ணானவள் தன் கடமையை உணர்ந்து நடந்தால் சிறந்த சமுதாயம் பிறந்து விடும் என்ற தன் ஆழ்ந்த நம்பிக்கையை அவர் அடிக்கடி தெரிவிக்கிறார்.

தாய்மை என்ற சுவர்க்கத்திலே
உற்பத்திகள் என்ற பூக்கள் மலர்கின்றன.
தீக்ஷண்யமான பார்வையுள்ளவளே,
ஒரு சமுதாயத்தின் செல்வம்
பணமோ, பொன் வெள்ளியோ அல்ல;
அதன் சொத்து
தேகதிடமும் மனபலமுங்கொண்ட மக்களே.
தாய்மார்கள் தாம்
சமுதாய வளர்ச்சியை ஆக்குபவர்கள்;
திரு குர்ஆனுக்கும் சமுதாயத்துக்கும்
தூண் போன்றவர்கள்

என்று தாய்மையைப் போற்றுகிறார் இக்பால். பெண்கள் சிறந்த புதல்வரை வளர்க்காது, அநாகரிகங்களில் மூழ்கித் தம் மக்கள் தாய்ப்பால் அறியாது, தாதியின் மடியில் நெளியும்படி விட்டுவிட்டால், பிற்காலச் சந்ததி ‘ஹோட்டல்களில் வாழ்ந்து, ஆஸ்பத்திரிகளில் சாகும்’ நிலைமைதான் ஏற்படுமென்று அவர் எச்சரிக்கை செய்கிறார். ஆகவே, ‘தாய்மை வாழ்க!’, ‘ஆண்மை சேர்ப்பது தாய் முலைப் பாலடா!’ என்று இக்பாலும் போற்றுகிறார். ஈன்று புறந்தருதலோடு அமையாது மக்களைச் சான்றோராக்கவும் வழிகோலுதல் தாய்மார் கடன் என்று அவர் கருதுகிறார். மாதர்க்கு அவர் தரும் மதிப்பை இக்கவிதையிலே காணலாம்:

பெண்மையின் ஸ்பர்ஸத்தால்
ஆண்மைத் தந்தி நாதமெழுப்புகிறது.
அவள் அடிபணிதல்

அவளை அதிகப் பலவானாக்குகிறது.
ஆணின் மானங்காக்கும் ஆடை அவள்.
இறை அன்பு அவள் மடியிலே வளர்க்கப்படுகிறது.
உலகம் பெருமை கொள்ளும் ஒருவர்
அவளை மரியாதையோடு குறிப்பிடுகிறார்.
அவளை அடிமையாய் எண்ணும் முஸ்லிமான்
திரு குர்ஆனால் பயனடையாதவனாவான்.
சரியான தாய்மையைக் காண்பதும் நன்றே.
தாய்மை நபித்துவத்துக்கு அடுத்ததெனலாம்.
தாயின் அன்பு மொழிகள்
நபியின் இதமொழிகள் போன்றவை.
அவள் நம் இனத்தின் மதிப்பை உயர்த்துபவள்.
நபி பெருமான் (ஸல்) சொன்னார்கள்:
'சுவர்க்கம் மாதாவின் பாதத்தடியிலே' என்று.
பெண்மைக்கு அளிக்கும் பெருமையே
நம் சமுதாய வளர்ச்சியை ஆக்குவிக்கும்.
வாழ்க்கையின் மர்மங்கள் வெளியாவது அவளால்.
மெல்லியலார் மூலமே நாம் உணர்ச்சியும்,
செயலாற்றும் திறமையும் பெறுகிறோம்.
அவள் நம் உள்ளமெனும் வாவியில்
அலையும், குமிழியும்,
தெளியும் நீர்ப்பரப்பும் எழுப்ப வல்லவள்.

இக்பால் பெண்களைப்பற்றிப் பொதுவாக இவ்வளவு பெருமையாகப் பேசினாலும், ஒரே ஒரு பெண்மணியைத் தான் லக்ஷியப் பெண்மணியாய்க் கொண்டுள்ளார். இக்பால் பல சரிதைகளையும் நன்கு கற்றவர் என்ற முறையில், இடுக்கண் இடையிலும் கடமையைத் தட்டிக் கழிக்காது கஷ்டப்படும் பெண்மையை வரவேற்பவர்; கடமைக்கு முதலிடந் தந்து, அன்பு பூண்டொழுகும் அரிவையரைப் போற்றுபவர். அவருடைய லக்ஷியப் பெண்மணி யார்?

அவருடைய லக்ஷியப் பெண்மணி பெண்களுள் ரத்தினமாகும். இல்லற வாழ்க்கையில் எதிர்ப்பட்ட

எண்ணற்ற இடர்களையும் தம் பொறுமையால் வென்றவர். விருந்தினரைக் கண்டபோது வறுமையையும் மறந்து விருந்திட விரைந்தவர். வீட்டில் குறைகள் பல வெனினும், கணவனைச் சற்றுங்கடியாத் காரிகையர். வீர மக்களைப் பெற்றெடுத்த வனிதாமணி. தந்தையார் எண்ணினால் பொன்னையும் பொருளையும் புத்திரி முன் குவித்துவிடலாம். காரணம் தந்தையின் கையசைப்பிற் காகக் காத்திருந்தனர் ஆயிரக்கணக்கானோர். ஆயினும், நியாயம் என்பதன் பக்கம் இருவரும் நின்றதன் பயனாய் தினமும் கை கொப்பளிக்கக் கோதுமை அரைத்த பெண்கள் நாயகம்; ஆமாம், பெருமானார் (ஸல்) அவர்கள் திருப் புதல்வியார் பாத்திமுத்து ஸொஹரா என்ற பாத் திமா நாயகியே அந்த லக்ஷியப் பெண்மணி; வீரர் அலியின் அருமை மனைவியார்; இமாம் ஹஸன் ஹுஸைனின் ஆருயிர் அன்னையார்; உலகப் பெண் களுக்கே முன்மாதிரியான பெண்மையின் சிகரம். அத் தகைய அன்னையைப்பற்றிப் பேசும் கவிஞர் காட்டுகிற மதிப்பையும் மரியாதையையும் பாருங்கள்.

பதூல் (பாத்திமா) பணிவென்ற வயலின் பொற்கதிர்,
தாய்மார்கள் பின்பற்றுவதற்கு உரிய லக்ஷியப் பெண்மணி.
ஓர் ஏழையின் தேவைக் கிரங்கித்
தன் கம்பளியை யூதனுக்கு விற்ற மாதுசிரோமணி.
நெருப்பும், ஒளியும் அவர்கள் உத்தரவுக்குப் பணிந்தன.
அவர்கள் கணவரின் இஷ்டமே, அவர்கள் இஷ்டமும்.
அவர்கள் வளர்ந்ததே பொறுமையோடும் பணிவோடுந்தான்.
கோதுமை அரைத்தபோது குர்ஆன் திரு மொழிகள்
அவர்கள் நாவில் நிலவின.
அவர்கள் கண்ணீர் தலையணையில் விழுந்ததில்லை;
அவர்கள் தொழுகை முஸல்லாவிலேயே
அக் கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன.

இக்கருத்துக்கொண்ட அசல் கவிதையிலே இக்பாலின் இதய வேகம் முழுவதுந் துடிக்கிறது.

அன்று பெருமானர் திருமகள் பாத்திமா (ரலி) அவர்களின் அன்பும் தாய்மையும், நீதியை உலகிலே நிலை நாட்டிய ஒரு ஹுஸைனைத் தந்தன. இன்று தாய்மார்க ளெல்லாம் அந்தப் பெருமாட்டியின் முன்மாதிரியைப் பின்பற்றத் தொடங்கினல், எத்தனையோ ஹுஸைன்கள் தோன்ற முடியும்; உலகமும் உன்னத நிலையடையும். இதைத்தான் மகாகவி இக்பாலும் எண்ணிப் பார்த்து, இன்றைய மாதருலகை விளித்துக் கூறுகிறுர்:

தெய்வீக நியதியைத் தன்னகத்தே கொண்டவளே,
உன் பராமரிப்பு எங்கள் நடத்தையைச் சமைக்கிறது.
அது எங்கள் சிந்தனையை, பேச்சை, செயல்களை
உருவாக்குகிறது.
உன் உயிர்ப்பிலே தெய்வீகம் வீசுகிறது.
நீயே சமுதாயச் செல்வத்தைப் பாதுகாப்பவள்.
உன்னகத்தே உயரிய, சிறந்த சிந்தனையுண்டு.
பாத்திமுத்து ஸொஹரா என்ற
லக்ஷியப் பெண்கள் நாயகத்தை மறந்துவிடாதே!
உன் கிளையிலிருந்தும்
ஒரு ஹுஸைன் குதித்தெழட்டும்;
அவன் பூங்காவின் வஸந்தத்தை மீட்டு வரட்டும்.

இவ்விதமாக இக்பால் பெண்களைப்பற்றி மிக மதிப்பு வாய்ந்த முறையில் பேசுகிறுர். சமூகத்தில் இஸ்லாமியச் சட்ட திட்டங்கள் தரும் சுதந்திரங்களோடு, பெண்கள் இருக்க வேண்டிய இடம் எது என்பதையும் அவர் காட்டு கிறுர். பெண்கள் தம் இனத்தை உயர்த்த என்ன செய்ய வேண்டும் என்பதற்கு வழி கூறுகிறுர். இன்றைய மாத ருலகம் கவிஞரின் இச்சிறந்த கருத்துக்களை உற்று நோக்கட்டும்! சிந்தித்துச் சீர் பெற்றுச் சிறந்த சமு தாயத்தை உண்டாக்கட்டும்!

மலர்களைப்பற்றி

கவிஞன் ஹிருதயம் மிருதுவானது; மனிதனது துயரத்தை மட்டுமன்று, ஜடப்பொருள்களின் துயரையும் தன் துயராகக் கருதுவது. மலர்கள் பூத்துக் குலுங்கும் செடிகளைக் கண்டால் கவிஞனது மனமும் துள்ளும்; காற்றிலசையும் கிளைகளும், இன்னிசை எழுப்பி ஓடும் நீரோடையும் கலகலவென மழலை மொழி பேசித்திரியும் மைனாவும் கவிஞனது உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றன.

இவ்விதம் இயற்கையோடு ஒன்றி ஈடுபடுகின்ற சக்தி படைத்த கவிஞர்களுள் இக்பாலும் ஒருவராகவே விளங்கியிருக்கிறார். அவரும் இயற்கையைப் புதிய கண்கொண்டே நோக்குகிறார். இயற்கையில் காணும் அழகுப் பொருள்களை இன்னும் அதிகமான அழகு சிந்துபவையாக வருணிக்கும் திறம் அவரிடமும் இருந்தது.

> கவிஞனின் இதயத்தில் அழகு சிறை விரிக்கிறது.
> அவன் உள்ளச் சிகரத்திலிருந்து
> அழகாகிய பகலவன் கிரணங்கள் சிந்துகிறான்;
> அவன் பார்வை, எழிலுக்கு
> அதிக எழிலைக் கொணர்கிறது.
> அவன் மந்திர சக்தியால்
> இயற்கை அதிகம் விரும்பத்தக்கதாகிறது

என்று இக்பாலே கூறியுள்ளார். இந்த மந்திர சக்தி, ரஸவாதம், அவரிடமும் சிறப்புப் பெற்று மிளிர்ந்தது. இயற்கைக் காட்சிகளில் மலர்களுக்கு இக்பால் முதல் இடம் தருகிறார். மலர்களை அவர் தன் நேசர்களாகவே கருதுகிறார். தன் பெரிய காவியங்களிலெல்லாம் பூவரசம் பூப்போன்ற மலர்களைக் கொண்டு மகத்தான தத்துவங்களை விளக்கிவைக்கிறார். எனவே, அம்மலர்களை வைத்து அவர் தரும் சில இயற்கை வருணனைகளை மட்டும் இங்கே பார்க்கலாம்.

வசந்தம் வந்துவிட்டது என்பதைக் காட்டுவன மலர்கள்தாம் என்கிறார் இக்பால். அவை மலர்வதனாலேயே குயில்களும், புறாவும் குதூகலித்துப் பாடுகின்றனவாம். ஏராளமாகக் குன்றுதோறும், சுனைக் கரை தொறுகிலும் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குவது கண்களுக்கு இன்பம் தருவதோடு, மணம் தந்து நாசிக்கும் நல் விருந்தளிக்கின்றன. மலர்கள் பூத்துக் குலுங்குவதால், வசந்தத்தின் வருகையை உணர்ந்துவிட்ட கவிஞர் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறார்.

எழுங்கள் !
அதோ குன்றுகளின்மீது வசந்தம் மலர்கிறது !
குயில்களும் புறாக்களும் பிற புள்ளினங்களும்
வெறியோடு கீதமிசைக்கின்றன.
ரோஜாவும் காட்டு மலர்களும்
ஓடையின் ஓரத்திலே குலுங்கிச் சிரிக்கின்றன.
எழுங்கள், வாருங்கள்,
அதோ வசந்தம் வந்துவிட்டது !

வசந்த காலத்தில் மலர்மரங்களில் பூக்கள் வண்ண நிறந்தந்து நிற்கின்றன. மரங்களின் அடியிலே பளிங்கு போன்ற நீர் ஓடும் ஓடை. மலர்மரத்தைக் கவிஞர் பார்க்கிறார். கீழே ஸ்படிக நீரில் அம்மரங்களின் கிளைகள்—ஓடையின் மேலே தொங்கிக் கொண்டிருக்கின்ற கிளைகள் பிரதிபலிப்பதையும் பார்க்கிறார். இக்பாலின் கற்பனையுணர்ச்சியை, மலர்மரமும், நீரோடையில் தெரியும் அதன் பிரதிபிம்பமும் தூண்டிவிடுகின்றன. வண்ணப் புடைவையுடுத்திய அழகிய வனிதையொருத்தி கண்ணாடியினுள்ளே தன் கவின் உருவை உற்று நோக்குகிறாள். அதுபோலல்லவா இருக்கிறது வண்ண மலர்கள் தொங்கும் மரக்கிளைகள் நீரோடையில் பிரதிபலிப்பது!

அழகி கண்ணாடியில் தன்னைப் பார்ப்பது போல,
மலர்கள் குலுங்கும் மரக்கிளைகள்
ஓடையின் மேலே தொங்கிக்கொண்டிருந்தன.

அதுமட்டுமன்று. அம்மரக்கிளைகளிலிருந்து வண்ண மலர்கள் உதிர்ந்துகொண்டும் இருந்தன. குழந்தை யொன்று தான் அன்பாகப் போற்றி அணைத்துக் கொள்ளும் பொம்மையை விடாப்பிடியாகத் தன் நெஞ்சோடு சேர்த்தபடியே தூங்குகிறது. அது அயர்ந்து நித்திரை செய்யத் தொடங்கியதும் அந்தப் பொம்மை நழுவிக் கீழே விழுந்துவிடுகிறது. மலர்கள் மரத்திலிருந்து உதிர்வது இக்பாலுக்கு இக்காட்சியை நினைவூட்டுகிறது. அவர் சொல்கிறார்:

தூங்கும் குழந்தையின் கரத்திலிருந்து
நழுவி விழும் பொம்மைகளைப் போல
வண்ண மலர்கள் உதிர்ந்தன.

இவ்விதமான கற்பனைகளை எழுப்பும் மலர் வனங்களைக் கண்டால் இக்பாலுக்கு ஒரே கொண்டாட்டந்தான். தானும் மலர் வனத்திலுள்ள மலர்களுள் ஒருவன் என்ற உணர்ச்சி உண்டாக வேண்டுமாம். அப்போதுதான் மலர்களில் நவநவமான காட்சிகள் தோன்றுமாம். இக்பால் சொல்கிறார் :

அன்னியனுடைய கண்களோடு
நந்தவனத்தை நோக்காதே !
அது பார்க்கத் தகுந்தது.
மீண்டும் மீண்டும் அதைப் பார் !

" நந்தவனத்திலுள்ள மலர்களைப் பார் ; அம்மலர்களைக் கண்டு உளங் குளிர்ந்து பாடும் பறவைகளையும் பார் ! பறவை தானும் அந்நந்தவனத்தின் ஓர் அம்சம்-மலர்களைப் போல் என்று எண்ணிக்கொள்கிறது. அதைப் பின்பற்றி நீயும் அந்த நந்தவனத்தின் ஓர் அம்சமாகிவிடு. அங்குள்ள மலர்களோடும் பறவைகளோடும் ஒன்றியவனாக வாழப் பழகிக்கொள் ! "

மலர்களுக்கிடையே வாழ் !
கீதமிசைக்கும் புட்களிடமிருந்து
சோகக் குரலைக் கற்றுக்கொள்

என்று உபதேசமும் செய்கிறார்.

"உனக்கு ஆண்டவன் கண்களை அருளி இருப்பது எதற்காக? அவன் படைப்பின் பெருமையைக் கண்டு அவனைப் போற்றுவதற்காகத் தானே! வா, இயற்கையோடு கூடி மகிழலாம். அடைந்து கிடக்கும் அறையைவிட்டு வெளியே வா! உன் கண்ணொளியைகொண்டு புதியதொரு காட்சியை நீ சிருஷ்டி செய். சும்மா சோம்பிக் கிடக்க வேண்டாம். இயற்கையின் இனிய காட்சிகளைக் கண்டு அவற்றில் உன் உள்ளத்தை ஈடுபடுத்து!" என்று வேண்டும் இக்பால் இதோ பேசுகிறார் :

வா, இயற்கையெனும் காதலியின்
கண்ணோடு கண்ணிணை நோக்க வா !
என் தனிமை எனும் மூலையிலே சாம்பிக்கிடக்கிறாய் ?
இறைவன் உனக்குப் பரிசுத்த நயனங்களை
அருளியுள்ளான்.
அதன் ஒளியைக் கொண்டு
புதியதொரு காட்சியைச் சிருஷ்டி செய்ய வா !

இத்தனை உருக்கமாகப் பிறரை அவர் அழைப்பதற்குக் காரணம் இயற்கையிடம் அவருக்குள்ள பற்றுதல்தான். இயற்கையில் தானும் ஓர் அம்சமாக ஒன்றிவிட்டதாக உணரும் இக்பால், பூங்காவிலுள்ள பறவைகள் கூடத் தன்னிடம் நட்புரிமை பாராட்டித் தன் மடியில் வந்திருந்து விளையாடுகின்றன என்று கூறுகிறார்.

பறவைகள் குதூகலிப்பதற்குக் காரணம் மலர்கள் விரிந்து தம் உள்ளத்தைக் காட்டுவதுதானும். அப்பறவைகள் வாயற்ற மலர்களின் மகிழ்ச்சியைத்தான் தம் கீதத்தின் மூலம் வெளியிடுகின்றனவாம். இதே வேலையையே கவிஞரும் செய்கிறாராம். அவர் சொல்கிறார் :

நானும் மலர்வனப் பறவையும்
ஒரே கதையைத்தான் கூறுகிறோம்.
நானும் வாயற்ற மலர்களின்
குரலாகத்தான் விளங்குகிறேன்.
நான் மரித்து, என் உடல் மண்ணானதும்
அந்த மண்ணை மந்தமாருதத்தோடு கலந்துவிடுங்கள் !
மலர்களைச் சுற்றிவருவதைத் தவிர
வேறு எனக்கு வேலை எதுமில்லை.

தான் உயிரோடிருக்கும்போது மலர்களைச் சுற்றி வருவதைப் போல, இறந்த பின்னரும், தன் உடல் மண்ணான பின்னரும், அவற்றைச் சுற்றி வர வேண்டுமாம்.

மலர்களைக் குழந்தையின் கழுத்தைத் திருகுவது போல் திருகிப் பிடுங்காது, செடிகளோடேயே விட்டு வைத்துப் பார்த்துப் பார்த்து மகிழ வேண்டும் என்ற கொள்கையுடையவர் அவர். மலர்களைத் தான் பார்த்து மகிழும்போதே, தன்னை அவை தமது நண்பனாகவும் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டுமாம். யாரோ தம்மைத் திருகி எடுப்பவன்தான் தோட்டத்துள் வந்து விட்டானோ என்று மலர்கள் துடிதுடிக்கக் கூடாதாம். ஆஹா, மலர்களின் பாஷை மட்டும் தெரிந்திருந்தால் அதை அவற்றிடம் கூறி அச்சமகற்றி இருக்கலாமே என்று எண்ணுகிறார் அவர். எனினும், தன் பாஷையிலேயே அதை அவர் மலர்களிடம் சொல்லத்தான் செய்கிறார்:

அந்தோ நான் மலர் பறிப்பவனல்லன் என்பதை
எங்ஙனம் நீங்கள் அறியும்படி செய்வேன் !
ஹே மலர்களே, இக்கரம்
அத்துணைக் கொடியதன்று ;
புல்புலின் கண்கொண்டு
நான் உங்களை நோக்குகிறேன்.

கவி ஹிருதயம் எத்தகைய வைரம் படைத்ததெனி னும், உறுதிவாய்ந்ததெனினும் அதில் அளவிட முடியாத மென்மைக்கும் இடமுண்டு என்பதை இதில் காண்கிறோ மல்லவா? அதுமட்டுமன்று, மலர்களைக் காற்று அசைப் பதுகூட அவருக்கு வருத்தத்தைத் தருகிறது. அவர் சொல்கிறார் :

ஒரு மலர் இதழையாவது தென்றல் அசைத்தால்
அதற்கு ஏற்படும் அதிர்ச்சி
என் உள்ளத்திலே எதிரொலித்துக்
கண்ணீர்த் துளியாக வெளிப்படுகிறது.

இவ்விதம் மலர்களிடம் அனுதாபங்காட்டுவதோடு மட்டும் இக்பால் அமைந்தாரில்லை. இவ்வுலகிலே துன்ப மும் துயரமும் எத்தனையோ அவருக்குண்டு. அவற்றை யெல்லாம் வாய்விட்டு வெளியே சொல்ல அவரால் இயல வில்லை. தன்னைப் போல் சுக துக்கங்களைப் பாவிக்கின்றன என்று அவர் கருதும் மலர்களிடையேயும் இது-தன் வாழ்க்கை நிலைபிரதிபலிப்பதாக அவர் காண்கிறார். தன் கஷ்டங்களைப் போல் மலர்களுக்கும் துயரங்கள் பல என்கிறார் அவர். மலர்களின் நாவாகிய இதழ்களுக்கு இறைவன் பேசும் சக்தியை மட்டும் தந்திருந்தால், அவை தம் சோகக் கதைகளைச் சொல்லி இருக்குமாம். தனது உள்ளத்தை ஒத்தவை மலர்கள் என்று எண்ணும் இக் பால் கூறுகிறார் :

இவ்வழகிய மலர்
என்னைப் போலவே கஷ்டப்படுகிறது.
சமுதாயத்தின் இந்திரஜாலத்தில்
அதுவும் சிறைப்பட்டே கிடக்கிறது.
அதன் இதழ்களின் நாவுக்கு
இறைவன் பேசும் சக்தியைத் தந்தானில்லை.
அவ்விதம் தந்திருந்தால்,
அதன் உடைந்த இதயத்தின் குரலை எழுப்பியிருக்கும்.

இதைப் பார்க்கும்போது அவர் இங்கே வருணிப்பது சாதாரண மலரின் துன்பத்தையா, அல்லது இவ்வுலகின் போக்கோடு ஒத்துச் செல்ல இயலாது துன்புறும் அவர் இதய மலரின் துன்பத்தையா என்பது சிந்திக்க வேண்டுவதாகிறது.

வாழ்க்கையில் துன்பமின்றி இன்பமில்லை என்பதை விளக்கவும் அவர் மலரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மலரோடு முள்ளும் சேர்ந்துதான் இருக்கிறது. மலரும் முள்ளும் கூட்டாளிகள். இது போலவேதான் வாழ்க்கையிலுள்ள சுகத்துடன் துன்பமும் கலந்தே இருக்கிறது. அவர் சொல்கிறார் :

இனிய மலரின் ஆடையிலே
வேதனை தரும் முள்ளும் இருக்கிறது.
அது முள்ளானாலும் மலரின் கூட்டாளி,
அதன் வெறிபிடித்த காதலன்.
காதலியோடு ஒன்றி நிற்கும் அதன்
உற்பத்திக்கு வசந்தமே காரணம்.

சாதாரண மலரையும் அதன் முள்ளையுங் காட்டி மானிடரின் இதய மலரையும் அதனுடன் ஒன்றிய துன்பத்தையுமல்லவா கவிஞர் சுட்டிக் காட்டுகிறார்!

இக்பால் இயற்கையை வெறும் வருணனைத் திறனைக் காட்டுவதற்கு ஏற்ற துணைக் கருவியாக மட்டுமோ வெறும் இன்ப உணர்ச்சியைத் தூண்டிவிடுவதாக மட்டுமோ கருதவில்லை என்பதை அவர் மலர்களிடங்காட்டுகின்ற அன்பிலிருந்து ஓரளவு அறியலாம். மனிதனுடைய இன்பமும் துன்பமும் இயற்கையில் பிரதிபலிக்கக் காண்கிறார் அவர். மக்களிடம் எத்துணை அன்பு கொள்ளவேண்டும் என்பதை அவர் மலர்களிடம் அன்பு கொள்கின்ற முறையில் பாடுகிறார். ஆகவே, அவருக்கு இயற்கையிடம் உள்ள

ஈடுபாடு தன் துக்கங்களை மறக்க முயல்கின்ற ஒரு கவிஞனுடைய ஈடுபாடன்று; உலகை உணர்ந்த ஒரு கவிஞனுடைய பற்றுதலாகும்.

கலையைப் பற்றி

நாம் இயற்கைக் காட்சிகளில் காணும் அழகு என்பது நிரந்தரமானதன்று. அதில் தென்படுகின்ற அழகான பொருள்களெல்லாம் அழியுந் தன்மை யுடையன. இன்று சிரித்து உள்ளங் காட்டி நிற்கும் முல்லை மலர் நாளை வாடிவிடுகிறது. அந்தி மாலையில் அற்புதக் காட்சி தந்து நிற்கும் மேகம் சற்று நேரத்தில் மறைந்துவிடுகிறது. முல்லை நகை பயிற்றி உள்ளம் பறித்து நிற்கும் அழகி பல்லற்று, தோல் சுருக்கு விழுந்த கிழவியாகி மறைகிருள். முல்லையிலும், மாலை மேகத்தி லும், அழகியிலும் நாம் காண்பது அழகு. ஆனால், அது நிரந்தரமற்ற - அழியுந்தன்மையுள்ள அழகு. இந்த அழகை நிரந்தரமாக்க முடியாதா? முடியும். இதை நிரந்தரமாக்குவதுதான் கலை. மலர்க் கொத்துக் குலுங்க நிற்கும் செடியைச் சித்திரமாகத் தீட்டிவிடலாம்; அதைப்பற்றிக் கவிதை புனைந்துவிடலாம். அச்சித்திரத் திலோ கவிதையிலோ அம்மலர்ச் செடி அமரத்துவம் பெற்றுவிடுகிறது. மாலை மேகமும் அழகிய சித்திரத் திலோ, சிற்பத்திலோ கவிதையிலோ உருப் பெற்றுவிட் டால் அமரத்துவமடைந்துவிடுகிறது. இவ்வாறு அழியும் அழகை அழியாததாக்குவதுதான் கலை.

ஆனல், அழகை அழியாத தன்மையுள்ளதாக்கும் போது அங்கே ஒரு லக்ஷியம் ஒளிர வேண்டும். கலையின் ஆத்மாவில் லக்ஷிய உயிர் துடிக்க வேண்டும். அந்த ஆத்மா வெளிப்படையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. கலையின் உயிர்நாடியை ரசிகன் கண்டுபிடித்துவிடுவான்.

கலையின் உண்மைக் குறிக்கோள், வாழ்க்கையை வளமுள்ளதாகவும் அழகானதாகவும் ஆக்குவதாக இருக்க வேண்டும். இதுதான் உண்மைக் கலைஞன் லக்ஷியமாகக் கொள்ள வேண்டியது என்கிறார் இக்பால். "வாழ்க்கையை அமரத்துவமுள்ளதாக்குவதே கலையின் நோக்கம். பொருள்களின் உண்மையை உணர்த்தத் தவறுவது கலையன்று. மூஸா நபியின் தடியைப் போல் சக்தியுள்ளதாகக் கலை விளங்க வேண்டும்"-இந்து இக்பாலின் அபிப்பிராயம்.

வாழ்க்கை வளம் பெறுவதற்காகவே, மக்கள் சமுதாயம் புத்துயிர் பெறுவதற்காகவே கலை பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை இக்பால் இவ்விதம் கூறுகிறார்:

தீர்க்கதிருஷ்டியுள்ளவர்களே,
கலா ரஸனை மதிப்புமிக்கதே ;
ஆனால், சத்தியத்தை (ஹகீகத்)க் காணாத திருஷ்டி
பயனற்றது.
கலையின் லக்ஷியம்
அமரத்துவ வாழ்க்கையின் நெருப்பாக விளங்குவதுதான்;
ஒரு பொறியைப் போலெழுந்து சட்டென மறையும்
இந்த நிலையற்ற மூச்சன்று (அதன் லக்ஷியம்).
ஹே வஸந்தத் தூற்றலே,
அவர்கள் ஆற்றின் இதயத்தைக்
கொந்தளிப்புக்குள் அகப்படுத்தவில்லையானால்,
சிப்பியும் முத்தும்-இரண்டுமே பயனற்றவையே.
அற்புதங்கள் நிகழ்த்தப்படாமல்
சமூகங்கள் புத்துயிர் பெறுவதில்லை;
மூஸாவின் அற்புதமின்றி,
கலையும் செத்ததுதான்.

உண்மைக் கலைஞன் தன் சூழ்நிலையோடு ஓயாது போராடுகிறான். வெற்றிபெற முயல்கிறான். இதன் பயனாக அவனுடைய அந்தரங்க சக்தி பலம் பெறுகிறது. பின்னர் அவன் வெறும் இன்பம் மட்டும் பயக்கும் கலா சிருஷ்டியை ஆக்குபவனாக இருக்கமாட்டான்.

இறைவன் இயற்கையைப் படைத்தான். மனிதன் கலையைச் சிருஷ்டிக்கிறான். இறைவன் உலகை உண்டாக்கினான்; மனிதன் அதை அழகுபடுத்தினான். மனிதனின் திறனிலுள்ள தெய்வீகத்தைப் பாருங்கள்!" மனிதன் இறைவனை நோக்கிக் கூறுவது போல இக்பால் சொல்கிறார்:

நீ இரவைப் படைத்தாய்,
நான் விளக்கைச் சமைத்தேன்.
நீ மண்ணைச் சிருஷ்டித்தாய்,
நான் பாத்திரத்தை ஆக்கினேன்.
நீ பாலையை, மலையை,
காட்டை உண்டுபண்ணினாய்,
நான் தோட்டத்தை, தோப்பை, சோலையை
அமைத்தேன்.
கல்லிலிருந்து கண்ணாடி செய்தவன் நான்.
நானே விஷத்தை மூலிகையாக்கியவன்.

இறைவன் தந்ததை மனித உபயோகத்துக்கு மாற்றியவனே கலைஞன். இறைவன் வசதிகள் தருகிறான்; கலைஞன் வழிகாட்டுகிறான்.

கலை, வாழ்க்கை உண்மைகளை வெளியிட முயல்வதாக இருக்க வேண்டும். சிறந்த கலைஞர்கள் அறிவுக்கு விருந்து தரும் கலை போதும் என்று திருப்தி அடைந்தார்களில்லை. தங்கள் கலா சிருஷ்டிகள், தூங்கிக் கிடக்கும் மானிடர்க்கு உணர்ச்சி தந்து மக்கள் விதியை மாற்றியமைக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்கள் மனத்தில் உறைந்து கிடந்தது. இத்தகைய உயரிய கொள்கை நிறைவேற அவர்கள் சில முறைகளைக் கையாண்டனர். தமது முறையைப்பற்றி இக்பால் கூறுவதாவது:

குருதியிலே கரைந்த நெருப்பைப் போலக்
காதல் தாகம் கவிதையை நிறைக்க வேண்டும்.
லக்ஷியமற்ற கவிதை உயிரற்றது.
அதன் வேகம் அணையும் நெருப்பையொத்தது.

சிறந்த கலைஞன் இயற்கையைப் பயன்படுத்தித்
தன் லக்ஷியத்தை வெளியிடுகிறான்;
அவன் புது உலகைச் சிருஷ்டிக்கிறான்;
நமக்குப் புத்துணர்ச்சி யூட்டுகிறான்.

ஹிந்துப் பண்பாட்டில் கலையை ஒரு தெய்வமாக்கியுள்ளனர். அதற்குக் கலைமகள் என்று பெயரிட்டனர். அழகுள்ள இடத்திலெல்லாம், பொருள்கள் எல்லாவற்றிலும் அவளைக் கண்டனர். அழகுதானே கலையின் அடிப்படை! அவற்றில் அழகு இருக்கிறது என்று சொல்லாது, கலைமகள் இருக்கிறாள் என்றனர். அழகிலும் இனிமையிலும் அவள் இருக்கிறாள் என்று பாரதியைப் போலப் பாடினர். மாதர் தீங்குரல் பாட்டிலும், மக்கள் பேசும் மழலையிலும், கீதம் பாடும் குயிலின் குரலிலும், கிளியின் நாவிலும், குலவு சித்திரம், கோபுரம், கோயில் ஈதனைத்திலும் அவள் இருக்கிறாள் என்றனர். இக்பாலும் பனித்துளியிலும், மலையின் மௌனத்திலும், பகலவன் கதிர்களிலும், அருணனின் மங்கிய ஒளியிலும், அழிந்த சின்னங்களிலும் அழகைக் கண்டார். ஆனால், இக்பாலுக்கும் ஹிந்துப் பண்பாட்டில் ஊறிய கவிஞர்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசமுண்டு. அவர்கள் கலையைத் தெய்வமாக்கினர்; வாணி என்றனர்; வழிபாடு செய்தனர். ஆனால், இக்பாலோ அவ்விதம் எண்ணவில்லை. அவர் கலையை மதித்தார். உண்மைக் கலையின் உயர்வை உணர்ந்திருந்தார். ஆனால், அவர் "கலையென்பது வாழ்க்கையின் பணியாள்" என்றே நம்பினார். மனித வாழ்க்கையை உயர்த்த உதவும் சாதனமாகவே அதை அவர் கருதினார். வாழ்க்கைக்குப் பயன்படாத எதையும் நல்ல கலையென்று அவர் ஒப்புக்கொள்ள இணங்கவில்லை.

ஆகவே, கலைஞனுக்கு மனத்தினில் உண்மை ஒளி உண்டாகவேண்டும். அது உண்டாகிவிட்டால் அவன் சிறந்த கலைஞனாகிவிடுவான். அந்த ஒளி வளர வளர

வாழ்க்கையின் இரகசியங்களெல்லாம் அவனுக்குப் புலனாகி வரும். அந்த இரகசியங்களுக்குக் கலையுருக் கொடுக்கும்போது அது கருதிய பயனைத் தருவதாக அமையும். இதைப்பற்றி இக்பாலே தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்: "தங்கள் கால அரபிக் கவிதைகளைப்பற்றி நமது நபி பெருமான்" என்ற தலைப்பில் இக்பால் எழுதியுள்ள கட்டுரையில் கூறுவதாவது: "மானிடரின் செயல்முறைகள் அனைத்தும் வாழ்க்கையை உயர்த்த வேண்டும் என்ற இறுதி நோக்கங்கொண்டனவே. இதே நோக்கத்திற்கு உட்பட்டதாகத்தான் எல்லாக் கலைகளும் விளங்க வேண்டும். ஒரு பொருள் வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் பயன்படுமோ அவ்வளவே அதன் மதிப்பும். நமக்கு நம்பிக்கையைத் தந்து வாழ்க்கையின் சோதனையை ஆண்மையோடு சகிக்கச் செய்யும் கலை எதுவோ அதுவே மிகச் சிறந்த கலையாகும்.

"நமக்குக் கோழைத்தனத்தைத் தரும், உண்மையை மறைக்கும் கலை, நாசத்தை விளைவிப்பதாகும். கலையில் அபினி கலத்தல் கூடாது. கலைக்காகவே கலை என்று சொல்லுவது வெகு தந்திரமான ஏமாற்று வித்தை; அது நம் சக்தியையும் வாழ்க்கையையும் விரயமாக்குவது."

இதிலிருந்து இக்பால் கலையைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தின் சிறப்பை உணரலாம். இக்பாலுடைய கவிதைகளையேயாயினும் சரி, தமிழ் இலக்கியத்திலுள்ள கவிதைகளையாயினும் சரி—கவிதைதான் கலைகளுள் சிறந்தது—வேறு கலா சிருஷ்டிகளையாயினும் சரி, இக்பால் தந்துள்ள இச்சோதனையைக் கையாண்டு அளந்து பார்க்கலாம். இந்நூலிலுள்ள அவர் கவிதைகளும், அவற்றில் சிலவற்றுக்குத் தரப்பட்டுள்ள விளக்கங்களும் அவர் இந்த லக்ஷியத்தை மனத்தகத்தே கொண்டவராகத்தான் அவற்றை எழுதினார் என்பதை அருமையாகத் தெளிவுபடுத்துகின்றன.

மகாகவி இக்பால்

அல்லாமா இக்பாலின் வாழ்க்கை, கவிதை, தத்துவம் முதலியன பற்றிய பல முக்கியமான விவரங்களைப் பார்த்த பின்பு கடைசியாக, அவருடைய மகாகவி அந்தஸ்தைப்பற்றியும் சிறிது பார்க்கலாம். ஒரு மகாகவியிடம் இருக்க வேண்டிய தகுதிகள் எவை என்பதில் அறிஞர்களிடையில் அபிப்பிராய பேதமுண்டு. ஒரு கவிஞன் யார் என்பதை நிர்ணயிப்பதிலேயே அபிப்பிராயபேதங்கள் எழுகையில் இதில் ஒன்றும் வியப்பில்லை. கவிதை படித்துப் படித்து அனுபவிப்பதற்கு மட்டுமேயுரியது, அது வெறும் பொழுதுபோக்குத்தான், அது இன்பம் பயக்க வேண்டும், அது எந்த லக்ஷியத்தையும் சுட்டிக் காட்டத் தேவையில்லை என்று இக்கால இலக்கிய விமர்சகர்கள் பலர் கூறுகின்றனர். அத்துடன் நிற்காது, கவிஞன் ஏதாவது ஒரு கருத்துக்குள்ளோ கொள்கைக்குள்ளோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவனாக ஆகக்கூடாது. அவ்விதக் கட்டுப்பாட்டுச் சிறைக்குள் அவன் தன்னை அடைத்துக் கொண்டால், அவன் கற்பனையோட்டம் வானில் வட்டமிடும் பருந்தைப்போல உயரே செல்ல முடியாது, கூண்டுப் பறவையின் சுதந்திரம் போல்தான் ஆகிவிடும் என்றும் இவர்கள் கருதுகின்றனர். கவிஞன் ஏதாவது ஒரு கருத்தை மட்டுமே பிரசாரம் செய்தால், அவன் கவிஞனாக இருக்கமாட்டான், வெறும் பிரசாரகனாக ஆகிவிடுவான் என்று இவர்கள் கூறுகின்றனர். இக்காரணத்தால் ஒரு கவிஞனுடைய கவிதா சிருஷ்டிகளில் ஒரு வாழ்க்கைத் தத்துவத்தையோ, போதனையையோ தேடுவது பொதுவாக நியாயமன்று என்பது இவர்கள் கூற்று.

இத்தகைய விமர்சனங்களைக் கேட்ட இக்பால், தன்னால் லக்ஷியமற்ற இன்பத்தையும், கிளுகிளுப்பையும் மட்டும் உண்டாக்க முடியாது என்றும், படிப்பவர்களை

வெறுமனே பரவசப்படுத்தும்படியான கவிதைகளைத் தான் எழுதவில்லை என்றும், எனவே, தன்னை இந்த லக்ஷணத்தை முன்னிறுத்தி மதிப்பிட வேண்டாம் என்றும் கூறியுள்ளார்.

இஸ்லாத்தில் சகலவிதக் கவிஞர்களுக்குமே இடமில்லை என்று ஒரு பக்கம் சிலர் நினைத்துக்கொண்டுள்ளனர். கவிஞர்கள் வழிகெடுப்பவர்கள் என்ற திரு குர்ஆன் வாக்கியத்தை இதற்கு இவர்கள் ஆதாரம் காட்டுவதுண்டு. ஆகவே, இக்பாலின் 'மகாகவி'த் தன்மையைப் பற்றிப் பேசுமுன், இஸ்லாம் கவிதையைப் பற்றி என்ன சொல்கிறது என்பதை அறிந்துகொள்வதும் அவசியமாகும். நபி பெருமான் (ஸல்) அவர்களை அவர்களுடைய எதிரிகள் சில சமயங்களில் 'கிறுக்கன்' என்றனர்; வேறு சில வேளைகளில் அவர்கள்மூலம் வெளிப்படும் வேத வாக்கியங்களின் வேகத்தைக் கண்டு அவர்களை ஒரு 'கவிஞன்' என்றனர். இவ்விரு குற்றச்சாட்டுகளையும் திரு குர்ஆன் மறுத்தது. ஒரு கிறுக்கனுடைய சொல்லும் செயலும் பொருத்தமற்றும், முன்னுக்குப்பின் முரணனதாகவும் இருக்கும். ஆனால், நபி பெருமான் (ஸல்) அவர்களோ தம் சொல்லிலும், செயலிலும், அகத்தும் புறத்தேயும் இணைந்த ஒற்றுமை காட்டி, வருங்காலம் உணர்த்தி வந்த தீர்க்கதரிசியாய் இருந்தார்கள். அவர்களைக் 'கிறுக்கன்' என்பது தவறு என்றது திரு குர்ஆன். ஒரு கவிஞனே தான் சொன்னபடி நடப்பது அபூர்வம்; அவன் இதயத்தே உதித்தெழும் அபிப்பிராயங்களோ சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் ஒட்டிய அவன் மனநிலைக்கேற்ப வெளிவருபவையாகும். உதாரணமாக வசந்த காலத்தின் மகிழ்ச்சியில் அவன் கவிதை எழுதுகையில் வாழ்க்கையே ஒரு முடிவற்ற வசந்தம்தான் போலும் என்றெல்லாம் கூறிவிடுகிறான். யாவுமே மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் திளைப்பதாகத் தெரிவிக்கிறான். குளிர்

காலத்தை அவன் வருணிக்கப் புகும்போதோ, யாவுமே மரணப்பிடியில் அகப்பட்டிருப்பது போல் உணர்கிறான். அவ்வித வருணனையையே தருகிறான். ஆனால், நபி பெருமான் (ஸல்) அவர்களோ தமது சூழ்நிலை களால் பாதிக்கப்பட்டவர்களாகவோ, மன நிலைக்கு ஏற்பக் கருத்துக்களை வெளியிட்டவர்களாகவோ விளங்க வில்லை. மக்களுக்குத் தீமையை விலக்கி நன்மையைக் காட்டித் தாமே அதன்படி ஒழுகியவர்கள் அவர்கள். இத்தகையவர்களைக் கவிஞன் என்பதும் தவறு என்றது திரு குர்ஆன்.

வாழ்க்கையின் வழிவகைகள் எண்ணற்றவை. ஆனால், கவிஞனோ அவற்றில் எதிலும் நிலையாது சுற்றியலை வான். இதனால்தான், "அவர்கள் (கவிஞர்கள்) ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் நோக்கமின்றி அலைந்து திரி கின்றனர்" என்கிறது திரு குர்ஆன் (26:225). இதனால், ஒருவன் வெறும் கவிஞன் என்ற முறையில் மட்டும் மக் கள் கூட்டத்துக்கு வழிகாட்டியாக இருக்க இயலாது என்றாயிற்று. ஆனால், சகல கவிஞர்களும் வழிகேடர்கள் தாம் என்று திரு குர்ஆன் கூறியதாக நாம் அர்த்தப் படுத்த இடமில்லை. கவிஞர்களிலும் பரிசுத்தமான ஒழுக் கமும், ஈமான் என்ற அசைக்க முடியாத கடவுள் நம்பிக் கையும் உள்ளவர்கள் மக்களுக்கு வழிகாட்ட முடியும் என்றே இஸ்லாம் கூறுகிறது. ஏனெனில், இவர்கள் தாம் ஒரு நல்ல மார்க்கத்தைப் பற்றிப் பேச இயலும்.

இதே கருத்தை நம் காலப் பெரிய அறிஞர்களில் சிலர் ஒப்புக்கொண்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். ஆங் கிலக் கவிஞரான கோலரிட்ஜ், "ஆழ்ந்த தத்துவ ஞானி யாக இல்லாத எவனும் இதுவரை ஒரு மகாகவியாய் இருந்ததில்லை" என்றார். தத்துவ ஞானந் தராத கவிதையை எழுதிய எவரையும் அவர் மகாகவியாக ஏற்கத் தயாராய் இல்லை. இதன்படி இக்பாலின் தத்துவ

ஞான விளக்கங்கள், அவரை ஒரு சிறந்த மகாகவியாக மிகவும் தெளிவாக நிரூபிக்கின்றனவல்லவா! சிறந்த இலக்கிய விமர்சகரான மேத்தியூ ஆர்னல்ட் சொல்கிறார்: "வாழ்வது எப்படி என்ற கேள்விக்குப் பதில் தரும் முறையில், தன் கருத்துக்களை வாழ்வை வளம்படுத்துவதற்காகத் தீவிரமாகவும் அழகாகவும் கூறுவதில்தான் கவிஞனின் பெருமை இருக்கிறது" என்று. தீவிரமாகவும் அழகாகவும் வாழ்க்கை வழியைக் கவிதையில் கூறுவதற்கு அறிவுத் திறனும் கவித்துவ சக்தியும் மிகவும் அதிகமான அளவில் தேவைப்படுகின்றன. வெறும் கவித்துவ சக்தி மட்டுமோ, அறிவுத்திறன் மட்டுமோ எத்தனையோ கவிஞர்களிடம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், இரண்டும் இழைந்த கவிதைகள் இயற்றியவர்கள் உலகத்திலேயே ஒரு சில மகாகவிகள்தாம். இவர்களுள் இக்பால் ஒருவர் என்பது அறிஞர் பலரின் அபிப்பிராயம்.

ஒரு குறிப்பிட்ட லக்ஷியத்தை மனத்தகத்தில் நிறுத்திக்கொண்டு தமது கவிதாசக்தியையும், அறிவுவன்மையையும் காட்டிக் காவியம் எழுதிய மகாகவிகள்தாம் நமது மதிப்புக்கு உரியவர்களாய் இருக்கின்றனர். 'அறம் வெல்லும் பாவந்தோற்கும்' என்ற லக்ஷியத்தை முன்னிறுத்திக் கவிதை எழுதிய கம்பரையும், 'இறைவனின் வழிகள் நேர்மையானவை; அவற்றின் நேர்மையை மனிதனுக்கு நியாயமென உணர்த்துவேன்' என்று காவியம் புனைந்த மில்டனையும் மகாகவிகள் என்று இலக்கிய உலகம் போற்றுகிறது. இதுபோல் தனக்கே உரிய புதிய பாதையில், உலகம் உய்ய, தனி மனிதன் நிலை சீர்படவும், அவனைத் தன்னகத்தே கொண்ட சமுதாயம் சீர்படவும், அவற்றின் மூலம் உலகிலேயே பொன்யுகம் மலரவும் மார்க்கஞ்சொன்ன இக்பால் சிறந்த கவிவளனும் அறிவுத் திறனும் உடைய கவிதைகளை நல்கினர். அவர் ஒரு போதனையாளராகவோ, சிந்தனையாளராகவோ மட்

டும் இருந்துவிடவில்லை; அவர் மானிட வர்க்கத்துக்கே நேர்வழியைக் காட்டி ஒரு தீர்க்கதரிசியின் வேலையையும் செய்தார்.

மானிடனுக்கு வரம்பிலா வளர்ச்சியடையும் வாய்ப்புண்டு என்றும், இவ்வகிலத்தில் அவன் நிலை நிகரற்றது என்றும் அவர் நம்பினார். எனவே, அருடைய போதனைகள் யாவருக்கும் பொதுப்படையானவையாக விளங்குகின்றன. மேலும் அவர் எழுதிய நூற்றுக்கணக்கான கவிதைகளில் எத்தனை எத்தனையோ விஷயங்கள் – குர்துபாவின் பாழடைந்த கட்டடங்கள் தொட்டு நெப்போலியனின் சமாதிவரை, ஷேக்ஸ்பியர் முதல் நீட்சே, காலிப், கெத்தே, லெனின்வரை எத்தனையோ விஷயங்கள் பேசப்படுகின்றன. இவ்வகிலத்திலுள்ள விஷயங்கள் போதாததற்குத் தனது 'ஜாவீது நாமா'வில் வானுலகங்களையும் அவர் கொண்டு வருகிறார். நாடக வகைக் கவிதைகள் தவிர மற்றச் சகல வகைக் கவிதைகளையும் அவர் ஆக்கியுள்ளார். உணர்ச்சியைக் கொட்டும் பாடல்கள், தத்துவார்த்தக் கவிதைகள், எளனப் பாடல்கள், இறங்கற்பாக்கள், பள்ளுகள், ருபாயியாத்துகள் ஆகிய பலவகைப் பாடல்களை அவர் எழுதியுள்ளார். இவை ஒவ்வொன்றிலும் அவர் உலகின் மாபெரும் கவிஞர்களோடு ஒப்புநோக்கத் தக்கவர். அவருடைய தத்துவார்த்தக் கவிதைகள் மௌலானா ரூமியையும், பாரகாவியம் கம்பனையும், மில்டனையும், அவர் உணர்ச்சிவெறிப் பாடல்கள் ஹாபிஸையும், ஷெல்லியையும், பாரதியையும், அவர் கையறு நிலைக் கவிதைகள் டென்னிஸனையும், முதந்நபியையும், அவருடைய இயற்கை வருணனைகள் காளிதாஸனையும் நமக்கு நினைவூட்டுவன.

இவ்விதம் அவர் தன் மகத்தான திறமையைக் காட்டி, உலகம் நல்வழி பெற வழிகாட்ட முன்வந்ததாலேயே அவர் ஒரு தீர்க்கதரிசியின் வேலையைச் செய்தார் என்

கிறோம். இக்பால் தன் ஷேகு ஆகப் பாவித்த மௌலானா ரூமியும் இக்பாலைப் போல ஒரு குறிக்கோளைத் தமது முன் நிறுத்திக் கொண்டு கவிதை எழுதினார். இக்பாலைப் போலவே அவரும் எத்தனையோ வகை வகையான விஷயங்களைப் பற்றியெல்லாம் எழுதினாலும், தமது லக்ஷியக் கருத்தை வெளியிட மட்டும் மறப்பதில்லை. எனவே, அவருடைய கவிதைகளைத் தீர்க்கதரிசனத்துக்கு அடுத்த படியில் வைத்து மதிப்பிடும் முஸ்லிம்களும் உண்டு. "அவர் ஒரு தீர்க்கதரிசியல்லர், எனினும், அவரிடம் வேத நூல் இருந்தது" என்று அவரை அவர் ரஸிகர்கள் புகழ்ந்தனர். இதுபோலவே இக்பாலையும், "அவரை ஒரு தீர்க்கதரிசி என்று அழைக்க முடியாதாயினும் அவர் ஒரு தீர்க்கதரிசியின் வேலையைச் செய்திருக்கிறார்" என்று அவருடைய நண்பரும் கவிஞருமான குலாம் காதிர் பில்கிரமி பாராட்டியுள்ளார்.

இக்பாலின் கவிதைகள் செய்த அற்புதங்களில் ஒன்று ஒரு குறிப்பிட்ட சில வார்த்தைகளுக்கு ஏற்பட்டிருந்த தவறான கருத்துக்களை மாற்றியதுமாகும். உதாரணமாக 'குத்இ' (அகம்) என்ற பதம் இடைக்கால இஸ்லாமிய இலக்கியத்தில் ஒரு துர்நாற்றமடிக்கும் வார்த்தையாகிவிட்டிருந்தது. பிற்கால சூஃபியாக்கள் இவ்வார்த்தைக்கு மோசமான அர்த்தத்தைக் கற்பித்திருந்தனர். அதனால் ஷரீஅத்தின்படி (மார்க்க நியதியின் படி) ஒழுகிய பெரியார்கள் அவற்றை வெறுத்து ஒதுக்கினர். செயலற்று மூலையில் குந்திக்கிடக்கும் நிலைமையில் ஆத்மீக எழுச்சி பெறமுடியும் என்று பாரஸீகக் கவிஞர்களில் பலர் கருதினர். இதை விளக்க 'குத்இ' பயன்பட்டது. ஆனால், இக்பால் இவ்வார்த்தையின் பொருளையே மாற்றி, இதை மிகவும் கண்ணியமானதாக ஆக்கியிருப்பதை அவருடைய ஆத்மீகத் தத்துவார்த்தத்தைப் பற்றிய விளக்கத்தில் கண்டோம். இவ்விதமே 'தக்தீர்'

(விதிவசம்) என்ற பதத்தின் அர்த்தமும் கெட்டுக் கிடந்தது. கீழ்நாட்டு மக்களின் வீழ்ச்சிக்கே இந்த விதிவச நம்பிக்கைதான் காரணம் என்லாம். யாவும் இறைவனுல் முன்னமேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளன, அதன்படிதான் ஒவ்வொன்றும் நடந்து வருகிறது; எனவே, நாம் என்ன செய்தாலென்ன, செய்யாவிட்டால்தான் என்ன என்று 'தக்தீ'ருக்கு விளக்கம் கொடுத்தனர். மனிதனின் செயலாற்றும் திறத்தைச் சாம்பி மட்கிப்போகச் செய்தனர். இக்பாலோ, திரு குர்ஆனைப் பின்பற்றி, விதிவசம் என்பது தானுகவே ஏற்படுவது அன்று, ஒருவனுடைய சாதனைகளுக்கேற்பப் பலன் தருவது அது என்றும், எனவே, ஒவ்வொரு தனி நபருக்கும் அது வருங்கால சாத்தியப்பாடுகளை நினைவூட்டுவதுதானேயன்றி, ஏற்கனவே ஸ்திரமாக நிர்ணயிக்கப்பட்டுவிட்ட சம்பவங்களல்ல என்று விளக்கிவைத்தார். இது போலவே மூமின், இஸ்லாம், மனிதன் முதலிய பதங்களின் அர்த்தங்களிலும் புதிய மதிப்பை அவர் உண்டாக்கினுர்.

இதனுல்தான், இக்பாலைப் போன்று ரக ரகமான கற்பனையோட்டத்தையும், விதவிதமான கருத்துக்களையுங் காட்டி, இக்காலத்திற்கேற்பக் கவிதை எழுதிய முஸ்லிம் கவிஞர் வேறு யாருமே இல்லை என்கிறார் பேராசிரியர் ஆர்பரி. அரபி இலக்கியத்தில்கூட ஓர் இக்பால் இனித்தான் தோன்ற வேண்டும் என்று இந்த மகா அறிஞர் கூறுவதில் வியப்பொன்றுமில்லை.

“இந்த யுகத்தின் மகாகவிகள் வரிசையில் இக்பால் முதன்மையானவர்” என்கிறார் சட்ட மேதையும், உர்து, பார்ஸி, அரபு இலக்கிய அறிஞருமான ஸர் தேஜ் பஹதூர் ஸப்ரூ. “கற்பனை யோட்டத்திலும், கருத்தாழத்திலும், சொல்லழகிலும், அப்பழுக்கற்ற கருத்துக்கள் நல்குவதிலும், இக்பாலைவிடச் சிறந்த (வேறு உர்து, பாரஸீகக்) கவிஞர்கள் யாருமில்லை; இவற்றில்

அவரோடு சமமாகக் கருதப்படக்கூடியவர்களுங்கூட இல்லை எனலாம்.'' என்று ஒரு கட்டுரையில் மகாகவி இக்பாலைப் பாராட்ட வந்த ஸர். ஸப்ரூ அக்கட்டுரையின் முடிவில் தந்துள்ள கீழ்க்காணும் கடைசி வாக்கியத்துடன் இதை முடிக்கிறேன்:

“கிழக்கு மேற்கு நாடுகளின் உன்னதமான பண்பாடுகளில் பலவற்றைத் தன்னகத்தே கொண்டிருந்த ஒருவருக்கு, பாரஸீக மொழியிலும், உர்தூவிலும் எழுதப்பட்ட கவிதைகளான பெறற்கரிய பிதுர்ராஜ்ஜிதச் சொத்தை நமக்கு விட்டுச் சென்ற ஒருவருக்கு, பல துறைகளிலும் நமது தேசிய வாழ்க்கையை வளப்படுத்திய ஒருவருக்கு, நவ இந்தியாவின் மகத்தான ஓர் இலக்கியக் கர்த்தாவாகவும், தெளிந்த கருத்துக்கள் உள்ள சிந்தனையாளராகவும் வருங்காலத்தில் மதிக்கப்படவிருக்கும் ஒருவருக்கு என் மரியாதையைத் தெரிவிப்பதற்காகவே இச்சில வார்த்தைகளை நான் எழுதத் துணிந்தேன்.''

ஒரு கலந்தரின் (பற்றற்றவரின்) தத்துவத்தை
நான் வெளியிட்டுள்ளேன் ;
அதன் மூலம் மதரஸாக்களிலும்
காங்காஹ் எனும் தியான மடங்களிலும்
சிந்தனை தன் விலங்குகளிலிருந்து
விடுபடுமாக !

—இக்பால்.

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.

அடுத்து வருபவை

மாபெருந் தபோதனர், தன் உபதேசத்தின் மூலம் இஸ்லாத்தைப் புதுப்பித்த மகான், உலக முஸ்லிம்களின் இதயத்தில் உன்னதமான இடம் பெற்றுள்ள பெரியார் குத்புல் அக்தாப், கௌதுல் அஃலம் செய்யிதினா ஹஸ்ரத் முஹிய்யித்தீன் அப்துல் காதிரு ஜீலானி (ரலி) அவர்களின் ஜீவியம், உபதேசங்கள், அவற்றின் தத்துவங்கள் திக்று முறைகள் பற்றிய விரிவான நூல் "**கௌதுல் அஃலம்**" அச்சாகிறது.

காதிரிய்யா தரீக்காவில் விசேஷப் பயிற்சியும் ஞானமும் பெற்ற பெரியார் அறிஞர் மு. கரீம் கனி அவர்கள் இதை எழுதியுள்ளார்.

ஆர். பி. எம். கனி பல ஆண்டுகள் இலக்கிய ஆராய்ச்சிசெய்து எழுதிய,

பாரஸீகக் கவிஞர்கள்

பற்றிய பெரிய நூலும் அடுத்து வெளிவருகிறது.

ஆர். பி. எம், கனி, பி. ஏ., பி. எல்,
128, மூர் தெரு, சென்னை - 1.

சிந்தனையைப் பண்படுத்தும் சிறந்த சன்மார்க்க நெறி நூற்கள் !

இன்று மிக மிக அவசியமான மார்க்க ஞான நூற்கள்.

தென்கிழக்கு ஆசியாவின் பிரபலமான முஸ்லிம் அறிஞர் **மு. கரீம் கனி** எழுதியவை.

ஜோதி

அற்புதமான தத்துவஞான விளக்கங்களை அள்ளித் தரும் சிறந்த நூல். ஹதியா **15-அணா.**

சந்நிதானம்

அல்லது முஃமினின் மிஃராஜ்

தொழுகையின் ஆத்மத் தத்துவங்களை இத்தனை தெளிவாகவும், யாவருக்கும் பயன்படும்படியும் எழுதப்பட்ட வேறு தமிழ் நூல் இல்லை எனலாம். ஹதியா **ரூ. 1—2—0.**

பிரளய சகாப்தம்

இன்று நாம் வாழும் சகாப்தத்தில் ஏற்படவிருக்கும், ஏற்பட்டுவரும் வேகமான மாறுதல்களை விளக்கிக்காட்டி, பாதுகாப்பு வரம் பெறும் வழியைக் காட்டும் நூல். ஹதியா **ரூ. 1—0—0.**

சன்மார்க்கத் தத்துவார்த்தங்கள்

நூற்றுப்பதினேரு அருமையான தாத்துவார்த்த விளக்கங்கள் கொண்ட சிறந்த நூல். **ரூ. 1—4—0**

இவை நான்கும் ஒவ்வொரு முஸ்லிம் வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியவை.

கிடைக்குமிடம் :

ஆர். பி. எம். கனி, பி. ஏ., பி. எல்.,

128, மூர் தெரு, சென்னை—1.